# ஆனந்த போதினி

44 5-6

நவம்பர் — டிசம்பர், 1958

N58.44,5-6
209057

# ளந்தபோதினி



## மதிமோச விளக்கம்

(தூசி இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமியாகிய நவ பரத கண்டத்தில், கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர் காலவயப்பட்டு, மன மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அதர்மத்தில் செலுத்தி வருவதால் அறநெறி குறைந்து மறநெறி வளர்ந்து வருகின்றது. அதற்கேற்ப வஞ்சமும் சூதும், பஞ்சமாபாதகமும், அவற்றிற் கஞ்சா நெஞ்சமும் படைத்த மனிதரே நாள்தோறும், நாடுகள்தோறும், ஊர்தோறும், வீடுகள்தோறும் மலிந்து விநோதம், விநோதமான படுமோசம், மதிமோசம், நிதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்துவருகின்றனர். காலம் செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந்த மோசா நாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன்றி அதியற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் செய்யும் மனிதர்களுப் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எடுத்து விழுங்குவோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவன்போல வளர்ந்து சிறந்து ஜெகஜாலப் புரட்டர்களாயும், அண்டப் புரட்டராயும், திடீர்ப் புளுகர்களாயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மகாமோசச் செயல்களால் சூது வாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்டங்களுக் களவேயில்லை. வியாபாரத்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாயத்திலும் மோசம்; உத்தியோகத் துறைகளிலும் ஒப்பில்லா மோசம்; வித்தையிலும் மோசம்; வேடிக்கையிலும் மோசம்; வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீகத்திலும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக் கடையிலும் மோசம், கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோசம்; தேசச்சேவையிலும் மோசம்; நோயிலும் மோசம்; குளத்திலும், வீட்டிலும் மோசம்; காட்டிலும் மோசம்; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோசம். இப்படியே மனிதர் தலைநீட்டுமிடங்களெல்லாம் மோசமாகவே யிருக்கின்றன. இப்படிப்பட்ட மோசங்களிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கான நீதிமதிகள் இதில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0

## இரத்தினபுரி இரகசியம்

இதில் மிக்க ஆச்சரியமும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வமாக நிரூபிக்கப்படுகின்றன. நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இல்லறநீதி ஆசார விஷயங்களைப் பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. 9-பாகங்கள்

விலை ரூ. 18—87 nP.

ஔவையார் அருளிச்செய்த

## பெட்டகம்

விலை 25 nP.

31 nP. போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்புவோருக்கு போஸ்டில் ஒரு பிரதி அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167 மதராஸ்


1828

# ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.


தொகுதி 44 | விளம்பி௵ கார்த்திகை௴ ௧௳ 1958௵ நவம்பர்௴ 16௳ | பகுதி 5


உள்ளுறை.


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | 142 |
| 2. | குதிரைப் பந்தயத்தை ஒழிக்க முடியாதா? (தலையங்கம்) | 143 |
| 3. | "மனைவியின் முன் காதலன்" | 146 |
| 4. | நாற்று நட வந்தவள்...? | 257 |
| 5. | பொய்கை (கவிதை) | 266 |
| 6. | தவப்பேறு | 267 |
| 7. | காதல் நெஞ்சம் | 269 |
| 8. | வள்ளுவர் எடுத்தாண்ட உவமை | 273 |
| 9. | நன்னீரே! (கவிதை) | 280 |
| 10. | மங்களத்தின் சுயம்வரம் | 282 |
| 11. | யானைப் பரிசு! | 289 |
| 12. | பாரதி நெஞ்சு பதறும்! (கவிதை) | 291 |
| 13. | ஞாலம் (தொடர் கதை) | 292 |
| 14. | பஞ்சாங்கம் | 300 |

ஆனந்த போதினி

சென்னை 600 033

## கடவுள் வணக்கம்

எனையும் பொருள்என எண்ணிஎன் உளத்தே
அன்னையும் அப்பனு மாகிவீற் றிருந்து
உலகியல் சிறிதும் உளம்பிடி யாவகை
அலகில்பே ரருளால் அறிவது விளக்கிச்
சிறுநெறி செல்லாத் திறன்அளித்து அழியா(து)
உறுநெறி யுணர்ச்சிதந்து ஒளியுறப் புரிந்து
சாகாக் கல்வியின் தரமெலாம் உணர்த்திச்
சாகா வரத்தையும் தந்துமேன் மேலும்
அன்பையும் விளைவித்து அருட்பே ரொளியால்
இன்பையும் நிறைவித்து என்னையும் நின்னையும்
ஓர்உரு வாக்கியான் உன்னிய படியெலாம்
சீருறச் செய்துயிர்த் திறம்பெற வழியா
அருளமுது அளித்தனை யருள்நிலை யேற்றினை
அருள்அறிவு அளித்தனை அருட்பெருஞ் ஜோதி
வெல்க நின்பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
அல்கலின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி.
உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும்ஐந் தொழிலையும் யான்செயத் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி
மூவருந் தேவரும் முத்தருஞ் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல்எனக்கு அளித்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி
சித்திகள் அனைத்தையுந் தெளிவித்து எனக்கே
சத்திய நிலைதனைத் தயவினில் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி
உலகினில் உயிர்களுக்கு உறும்இடை யூறுஎலாம்
விலகநீ அடைந்து விலக்குக மகிழ்க
சுத்தசன் மார்க்கச் சுகநிலை பெறுக
உத்தம னாகுக ஓங்குக என்றனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி.

# குதிரைப் பந்தயத்தை ஒழிக்க முடியாதா?

உலகந் தோன்றிய காலத்திலிருந்து, மனித இனம் மலர்ச்சியடையத் தொடங்கியதிலிருந்து, மக்களைச் சில தீய குணங்கள், பழக்க வழக்கங்கள் இயற்கையாகவே பற்றிக் கொண்டிருக்கின்றன. காமம், கோபம், மோகம், லோபம், மதம், மாற்சரியம் ஆகிய தீய குணங்களால், பொய், காமம், கள், களவு, கொள்ளை, கொலை முதலிய தீய செயல்கள் நிகழ்ந்துகொண்டு வருகின்றன. மக்கள் அறியாமையாலும் ஆணவத்தாலும் புரிந்து வரும் ஐம்பெரும் பாவங் (பஞ்சமா பாதகங்)களிலிருந்து விடுவித்து அவர்களை நன்னெறிப்படுத்துவதற்காக, எத்தனையோ மகான்கள், பெரியோர்கள் அவ்வப்போது தோன்றி இதோபதேசம் புரிந்து வருகின்றனர். அந்த ஆன்றோர்கள் திருவாய் மலர்ந்து அருளிவரும் அறவுரைகளையும் நல்லறிவுரைகளையும் கேட்டுப் பலர் திருந்தியிருக்கின்றனர். சிலர் எப்போதும் நல்வழிப்படாமலே மேலும் மேலும் குற்றங்கள் பலவற்றைப் புரிந்து வருகின்றனர். காலக்கோளாறினால் பாதகம் புரிவதில் சிலராயிருந்தவர்கள் பலராய் விடுகின்றனர். ஆனாலும், ஞானிகளும், மகான்களும் தாங்கள் கருணையினால், செய்யும் நல்லுபதேசங்களை மக்கள் கேட்டுப் பயன் அடையவில்லையே என்று எண்ணி ஆயாசங் கொள்வதில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் மக்கள்மீது பரிதாபங் கொண்டு எப்படியாயினும் நல்வழிப்பட மாட்டார்களா என்ற பரிவுணர்ச்சியோடு பணி புரிந்து வருகின்றனர். மக்கள் திருந்தாமலிருந்து வருவதால், அவர்களுக்கு உபதேசஞ் செய்வது உபயோகமில்லை; தொண்டு புரிவது பயனில்லை என்று பெரியோர்கள் வாளா இருந்து விடுவதில்லை.

ஆனால், இன்று தேசப்பணிக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதாகத் தம்பட்டம் அடித்துவரும் தேசத்தலைவர்களும் மனித சமுதாய மேன்மைக்காகவே அனவரதமும் சேவை செய்து வருவதாகப் பறை சாற்றி வரும் மந்திரிமார்களும், மக்களுடைய மனமாறுதலில் நம்பிக்கை கொள்ளாமல் பேசி வருகின்றனர். பிரசாரத்தினாலோ சட்டத்தினாலோ அவர்களைத் திருத்திவிட முடியாது என்றும் தங்கள் கருத்தை வெளியிட்டு வருகின்றனர்.

சமீபத்தில் சென்னைச் சட்டசபையிலும், மேல் சபையிலும் குதிரைப் பந்தய ஒழிப்பு சம்பந்தமாகப் பிரஸ்தாபம் வந்து மக்களைக் கெடுக்கும் சூதாட்டங்களில் இன்று மிக முக்கியமானதாக இருக்கும் குதிரைப் பந்தயத்தைக் கட்டாயம் ஒழித்தாகவேண்டும் என்று உறுப்பினர் சிலர் வற்புறுத்தியபோது, மந்திரிமார் அளித்துள்ள பதில்கள் வேடிக்கையாகவும் இருந்தன; வருத்தத்தைத் தருவதாகவும் இருந்தன.

சட்ட சபையில் சர்க்கார் கட்சித்தலைவரா யிருக்கும் நிதிமந்திரி திரு. சுப்பிரமணியம், "மனிதர்கள்பால் இயற்கையாக அமைந்துள்ள தீமைகள் அனைத்தையும் ஒழித்துவிடுவதென்பது எளிதில் இயலாத காரியம். சூதாட்ட மனப்பான்மையை மக்கள் உள்ளங்களிலிருந்து முதலில் நீக்கவேண்டும். குதிரைப் பந்தயச் சூதாட்டத்தைச் சட்டம் போட்டு நிறுத்திவிட்டால் மட்டும் அமையாது. மக்கள் மனோபாவம், சமுதாய சூழ்நிலை மாறும்போதுதான் இவ்விதத் தீயப் பழக்கங்கள் ஒழியும்" என்று விடையளித்திருக்கிறார்.

மேல் சபையில், சர்க்கார் கட்சித் தலைவராயிருக்கும் உள்நாட்டிலாகா அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் குதிரைப் பந்தயச் சூதாட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதற்குக் கூறியுள்ள காரணம் இதைவிட விந்தையானதாகும்.

"இராணுவத் தேவையை யுத்தேசித்துக் குதிரைகளைப் பாதுகாத்துப் பராமரித்து வருவது மிக இன்றியமையாததாகும். இவ்விதம் பேணி வளர்ப்பதற்குக் குதிரைப் பந்தயத்தைத் தவிர வேறு புகலில்லை. எனவே, மேலும் சில வருஷங்களுக்கு குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டியதில்லை என்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்" என்று அவர் அளித்துள்ள பதில் சூதாட்டம் எந்த உருவத்திலிருந்தாலும் அது ஒழிக்கப்பட்டேயாகவேண்டும் என்று தீவிரமாய் இருப்போருக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணும். நிதி மந்திரி சட்ட சபையில் தெரிவித்த சமாதானத்தையாயினும் ஒருவிசத்தில் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், போலீஸ் மந்திரி மேல்சபையில் கூறிய பதிலை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இராணுவத்துக்கு நல்ல சாதிக் குதிரைகள் வேண்டும் என்பதற்காக, குதிரைப் பந்தயங்களை நடத்தி வருவதாக, கனம். பக்தவத்ஸலம் சொல்லிய காரணம் எவ்வளவு ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தாலும் சரியாகத் தோன்றவில்லை. மக்களைக் குடி கெடுக்கும் குதிரைப் பந்தயச் சூதாட்டத்தை நடத்தித்தானா இராணுவத்துக்கு நல்ல சாதிக் குதிரைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? வேறு வழியே அரசாங்கத்துக்குத் தோன்றவில்லையா? உயர்ந்த சாதிக் குதிரைகளை நல்ல முறையில் வளர்த்துக் கொடுப்பவர்களுக்குத் தக்க பரிசு வழங்கப்படும் என்று தெரிவித்து, குதிரை வளர்ப்புப் போட்டி நடத்தினால் ஆயிரக்கணக்கான சாதிக் குதிரைகள் அணியணியாக வருமே! அதிலும், இன்றைய இராணுவத்துக்கு நவீன படை பலம்தான் முக்கியமே யொழிய, யானை, குதிரைப்படைகள் அவசியமேயில்லை. அணுகுண்டு, நீர்வாயுக்குண்டு போன்ற மிகப் பயங்கர ஆயுதங்களுக்கு விமானப்படை, கப்பல் படைதான் முக்கியமேயொழிய, காலாட்படை கூட முக்கியமில்லாமல் போய்விட்டது. இந்நிலையில் இராணுவத்துக்கு வேண்டிய குதிரைகளைத் தேர்ந்தெடுப்பதற்காகக் குதிரைப் பந்தயத்தை நடத்துகிறோம் என்பது போலிச் சமாதானம் என்றே நாம் எண்ணுகிறோம்.



இனி, நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறியுள்ள சமாதானத்தை ஆராய்வோம். "மனிதர்கள்பால் இயற்கையாக அமைந்துள்ள தீமைகளனைத்தையும் நீக்கிவிட முடியாது...............மக்கள் மனோபாவம், சமுதாய சூழ்நிலை மாறுகையில்தான் இதுபோன்ற தீய பழக்கங்கள் அகலும்" என்கிறார் அவர். குதிரைப் பந்தயச் சூதாட்டம் மனிதர்கள்பால் இயற்கையாய் அமைந்துள்ள தீமைகளில் ஒன்று என்றால், கட்குடி, விபசாரம் முதலிய தீமைகள்கூட மக்களிடம் இயற்கையா யுள்ளவைதாம். அவைகளையொழிக்க, அரசாங்கம் சட்டங்களை இயற்றி அமல் நடத்தி வருகையில், குதிரைப் பந்தயச் சூதாட்டத்தைப்பற்றி மட்டும் சட்டத்தால் ஒழித்துவிட முடியாது என்று கூறுவது எந்த நியாயத்தில் சேர்ந்தது என நாம் கேட்கிறோம். சூதாட்ட வகைகளில், சீட்டாட்டம், பருத்திவிலைச் சூதாட்டம் முதலியவைகளைச் சட்டஞ் செய்து தடுத்து நிறுத்தவில்லையா! குதிரைப்பந்தயச் சூதாட்டத்தில்கூட, குதிரைப் பந்தய மைதானங்களில் அன்றி வெளி யிடங்களில் தனியார் 'பக்கெட் ஷாப்கள்' அமைத்துக் குதிரைகள்மீது பணங் கட்டும்படியாகத் தூண்டி வாங்குவதைச் சட்டத்தால் தடை செய்யவில்லையா? அப்படியிருக்க, குதிரைப் பந்தயத்தை நிறுத்த வேண்டுமென்பதை மட்டும் சட்டத்தால் ஒழிக்க முடியாது என்று சொல்லுவதற்குக் காரணமென்ன? "சூதாட்ட மனப்பான்மையை மக்கள் மனத்திலிருந்து நீக்கவேண்டும். மக்கள் மனோபாவமும் சமுதாய சூழ்நிலையும் மாறுகையில்தான் இதுபோன்ற தீய பழக்கங்கள் நீங்கும்" என்று நிதி மந்திரி சொல்லுவது நொண்டிச் சமாதானமேயொழிய வேறில்லை. சூதாட்ட மனப்பான்மையை மக்கள் மனத்திலிருந்து எப்போது எவ்விதம் நீக்குவது? மக்கள் மனோபாவமும் சமுதாயச் சூழ்நிலையும் எப்போது மாறுவது? கடல் அலை ஓய்ந்தால் தான் நீந்திக் குளிப்பேன் என எவனோ ஒருவன் சொன்னானாமே, அது போன்றது தான் நிதிமந்திரி மக்கள் மனோபாவமும் சமுதாயச் சூழ்நிலையும் மாறும்போது தான் குதிரைப் பந்தயம் சூதாட்டம் நீங்கும் என்பதுமாகும். மனித சமுதாயத்தில் இயற்கையாகச் சில தீமைகள் இருந்துகொண்டுதான் இருக்கும். அவைகளை இதோபதேசங்கள் செய்தும், சட்டங்கள் செய்து அமல் நடத்தியும் குறைக்கத்தான் வேண்டும். சில தீயகுணங்கள் மனிதர்களுக்கு இயற்கை என்று சும்மா இருந்துவிடுவது மனித சமுதாயத் தலைவர்கள் என்பவர்களுக்குச் சிறிதும் அழகல்ல. மக்களுக்கு நல்வழி காட்டவேண்டிய மந்திரிமார்கள் குதிரைப் பந்தயம் போன்ற சூதாட்டங்களை ஒழிக்க ஒல்லும் வகையாலெல்லாம் முயல வேண்டும். அவசியம் என்று மக்கள் பிரதிநிதிகள் வற்புறுத்துகையில் சட்டங்கள் செய்து அமல் நடத்தி அகற்ற முற்படுவதும் அத்தியாவசியமாகும் என்று நாம் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

# மனைவியின் முன் காதலன்

**சீ. ரங்கநாதன்**

*

உண்மைச் சம்பவத்தைக் கற்பனைச் சுரங்கத்தில் உருட்டிப் புரட்டிக் கதை எழுதப் பழக்கப்பட்ட எனக்கு, இன்று கதை எழுத எந்தச் சம்பவமும் கிடைக்கவில்லை. எப்படியும் கதை எழுத வேண்டுமென்ற முயற்சியுடன் சிந்தனையைக் கற்பனைச் சுரங்கத்தில் தள்ளி வெகுநேரம் கதைக்குக் கருத்துகளைத் துழவிக் கொண்டிருந்தேன். ஒன்றுமே தோன்றவில்லை. வெறுப்பில்லாமல் இருக்குமா? பேனாவை வீசிவிட்டு எழுந்து கொள்ள முயன்றேன். "முயற்சி திருவினையாக்கும்" என்ற எண்ணத்தால் மீண்டும் அமர்ந்தேன்.

"என்னங்கோ, என்ன கதை எழுதுகின்றீர்?" என்று கூறிக் கொண்டே என் மனை மேகலை வந்தாள். மேஜைமேல் இருந்த காகிதத்தைப் பார்த்துக் 'கொல்' என்று சிரிப்பைக் கொட்டினாள்.

"என்னாங்கோ, இவ்வளவு நேரமா பேனாவைப் பிடித்திருந்தீர் இந்தக் காகிதத்தில் கருமை விழவில்லையே! ஏன்? உங்களுக்குக் கருத்து உதிக்கவில்லையா? அல்லது உங்கள் பேனா இன்னு காகிதத்துடன் உறவாட மறுக்கின்றதா?" என்றாள் குறும்பாகச் சிரித்துக்கொண்டே. எனக்கு வெறுப்பு இருந்தாலும் சிரித்துவிட்டேன்.

"மேகலை, குறும்பு பேச இது நேரமில்லை; நீ போ."

"இங்குப் பேசாமல்கூட இருக்கக் கூடாதா?"

"ஆமாம்."

"ஏன்?"

"அட என்னடா, மேகலை, சொன்னா கேட்க்கமாட்டே? இன்று எப்படியும் ஒருகதை எழுதவேண்டும். ஒன்றுமே கற்பனை தோன்றாமல் இருக்கின்றேன். உன் தொல்லை வேறே."

"உங்களுக்கு ஏன் கற்பனை? நடந்தநிகழ்ச்சியை வைத்து எழுதுபவர்தானே நீங்கள்."

"அப்படி எழுத ஒரு சம்பவமும் தெரியவில்லையே!"

"அவசியம் கதை எழுத வேண்டுமென்றால், நான் ஒரு கதை சொல்கின்றேன்; எழுதுகின்றீரா?"

"என்ன கதை, அல்லியரசாணி மாலைதானே?"

"இல்லை, நடந்த சம்பவம்."

"உனக்கு என்ன நடந்த நிகழ்ச்சி தெரிய போகின்றது? தெரிந்தாலும் அது அவ்வளவு முக்கியமானதாக இருக்காது" என்றேன் வெறுப்பாக.

"நான் சொல்லப் போவது என் வாழ்வில் நடந்த சம்பவம். இதுவரை உங்களிடம் மறைத்தேன்" என்றான் மேகலை. அவள் சொல் எனக்கு ஒரே திகைப்பாக இருந்தது.

"மேகலை, என்ன உன் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியா? ஏதோ சொல்லு, இதுவரை இந்த உண்மையை என்னிடம் உரைக்காமல் தானே இருந்தாய். சொல் மேகலை, எனக்கு நடந்த நிகழ்ச்சியை வைத்துதான் எழுதமுடியும்" என்றேன். அவள் முகத்தில் அச்சத்



தின் சாயல் நெளிந்தது. எனக்கு ஒன்னும் புரியவில்லை. "என்ன மேகலை" என்றேன்.

"ஒன்னுமில்லை. உங்களுக்குத் தெரியாது. உங்களை மணக்கும் முன்நடந்த நிகழ்ச்சி. சொல்வதற்குப் பயமாக இருக்கின்றது. நீங்கள் என்னைவித்தியாசமாக எண்ணிவிட்டால்" என்றாள். எனக்கு மேலும் திகைப்பாக இருந்தது. "ஏதோ மேகலை வாழ்வில் நடந்திருக்கின்றது" என்று எண்ணாமலில்லை.

"மேகலை, என் குணம் உனக்குத் தெரியாமல்தானே உரைக்கின்றாய்? நான் உன்னை வித்தியாசமாக நினைப்பேனா?"

"இப்போது சொல்கின்றீர். சொன்ன பிறகு......"

"அப்போது உனக்கு ஆயிரம் முத்தம்" என்று கூறி அவளை இழுத்து அருகே உட்கார வைத்தேன், சொல்லும்படி வற்புறுத்தினேன்.

"என்னை உங்களுக்குக் கொடுக்க என் பெற்றோருக்குப் பிடித்ததா?"

"இல்லை மேகலை. உன் பிடிவாதத்தால்தான் என்னை மணந்தாய்."

"நான் ஏன் உங்களையே மணக்கப் பிடிவாதம் செய்தேன், தெரியுமா?"

"தெரியுமே, என்மேலுள்ள காதல் என்றுதானே கூறியிருக்கின்றாயே?"

"காதல் என்றால், உங்களைக் கண்டதும் உடனே தோன்றி பக்குவ காதல் முற்றிவிடுமா? காரணம் அதுவல்ல"

"என்ன மேகலை, புதிர் போடுகின்றாய்? என்மேல் உனக்குக் காதல் அன்பு இல்லையா?" என்றேன் வெறுப்பாக."

"பார்த்தீர்களா? இப்போதே வெறுப்படைகின்றீர். வேண்டாம். சொன்னால் வேதனையாக முடியும் உண்மையை" உங்களிடம் கூற இன்று முயன்றேன். ஆனால், அது என் வாழ்க்கைக்கே முற்று புள்ளியாகும்."

"இல்லை மேகலை. நீ என்மேல் அன்பு இல்லை என்றாயே? அதற்காகதான்"

"ஆராயாமல் இப்படிப் பேசாதீர்கள். நான் கூறியது மணப்பதற்கு முன்னே. இப்போது உங்கள்மேல் காதல் அன்புமட்டுமல்ல. எல்லா அன்பும் கருத்தில் நிறைந்திருக்கு."

"அதை விட்டுதள்ளு மேகலை, நடந்த கதையைச் சொல்"

"ஊ ஊ."

"சொல் மேகலை. என்னிடம் உண்மையை மறைக்கலாமா? இதுதான் உன் அன்பா?"

"இந்த இரகசியத்தை உங்களிடம் கூறாமல் உள்ளத்தில் சுமந்திருந்து வேதனைதான், இன்று சொல்ல......"

"நான் வித்தியாகமாக நினைக்கமாட்டேன் மேகலை, நீ சொல். சொல் மேகலை" என்றுகூறி வற்புறுத்தி அவள் உதட்டை உலுக்கினேன். சிரித்துக்கொண்டே மேகலை கூறினாள். அவள் கூறியதை அப்படியே கூறுகின்றேன் என் தமிழில்.

அப்போது, எனக்குப் பதினன்கு வயதிருக்கும். அதாவது பருவமடைவதற்கு முன் வருடம் பொங்கல் நாளில் நடந்த சம்பவம் தான் நான் கூறப்போவது.

பொங்கல் கழிந்து மைலார் வரை ஆங்காங்கு மாடுவிடும் திருவிழா நடக்கின்றதல்லவா? அதேபோல் எங்கள் ஊரிற்கடுத்த கிராமத்தில் மாடுவிடும் விழா நடந்தது. எனக்கு அதைப் பார்க்க ஆசைதான். என்றாலும், அன்று பள்ளிக்கூடம் இருந்தது. அதுவும் பள்ளியில் பரிட்சை நடக்கும் முதல் நாள். இந்தச் சமயம் மாடுவிடும் விழாவைப் பார்க்க போக முடியுமா?

உங்களுக்குத்தான் தெரியுமே! என் வீட்டிற்குப் பள்ளிக்குக் இரண்டு கல் தூரம் இருப்பது? மாலையில் பள்ளி முடிந்ததும், நான் வீட்டை நோக்கி நடந்திருந்தேன். இருபுறமும் மரங்கள் அடர்ந்த பாதையில் செல்லும்போது துலையில் ஒரு காளை மிரண்டு துள்ளி பாய்ந்து வருவது தெரிந்தது. அந்தக் காளை எருது கழுத்தில் நீண்ட வடகயிறு இருந்தது. "கொமாரிவிட்ட மாடு மருண்டு வருகின்றது" என்று தெரிந்து கொண்டேன். எனக்கு மாடு என்றாலே பயம். அதிலும் இந்தக் காளை எருது வருவதைப் பார்த்தால், என் உள்ளமும் உடலும் நடுக்க முற்றது. சிறிது நேரம் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றேன். காளை விரைவாக வருவதைக் கண்டு பயந்து பாதையை விட்டுப் புன்செய் நிலத்திற்காக ஓடினேன். ஐயோ என்ன செய்வேன்? அந்தக் காளையும் நான் ஓடின பக்கமே பாய்ந்து பின்னே ஓடிவந்தது. எனக்கு எப்படி இருக்கும்? அந்தக் காளையைப் பிடிக்க அங்கு யாருமே இல்லை. கண்ணிற்குத் தெரியாத துலையில் காளையைப் பிடிக்க ஆட்கள்வரும் கூச்சல்தான் கேட்டதே ஒழிய, ஆட்கள் தென்படவில்லை. மேலும் நான் அலறிக் கொண்டே ஓடினேன். அந்தப் பாழும் காளை என்னையே விடாமல் பின்தொடர்ந்து வந்தது. எதிரே தெரிந்த மாந்தோப்பில் நுழைந்து ஓடினேன். அந்தத் தோப்பிற்குள்ளேயும் காளை நுழைந்துவிட்டது. என்னல் மேலும் ஓடமுடியாமல் கால் சிக்கி, "ஐயோ அம்மா" என்று அலறி விழுந்தேன். அவ்வளவுதான் என்மேல் வெள்ளை வேட்டியையாரோ போர்த்தினர். யாரது என்று சிறிது நேரம் கழித்து மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! இருபது வயது இளைஞனொருவன் அந்தக் காளையை கற்களைக் கொண்டு தாக்கிக் கொண்டிருந்தான். வெகு நேரம் தாக்கினன். காளை திரும்பி தோப்பைவிட்டு வந்த வழியே ஓடியது. பிறகு அந்த வாலிபர் என்னை நோக்கி ஓடிவந்தார். இடையே ஒரு மரத்தடியிலிருந்து புத்தகங்களை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்தார். அவர் அரைக்கால் நிக்கரும் நீலச் சட்டையும் அணிந்திருந்தார். விரிந்த புருவம், பரந்த நெற்றி, சுருண்டு மடிந்த சிகை. சுருக்கமாகச் சொன்னல், உங்களைப் போலவே அந்த இளைஞரின் தோற்றம் அழகு எல்லாம் அமைந்திருந்தது.

"உங்களுக்கு அடிபட்டதுங்களா?" என்றார் பரப்பரப்பாக அந்த வாலிபர்."

"அப்படி ஒன்றுமில்லை, நீங்கள் இத்தருணம் இல்லாவிட்டால், அந்தக் காளை என்னை என்ன செய்திருக்குமோ? என்மேல் அதற்கு என்ன பகையோ ஒரு மைல் தூரம் துத்தி வந்ததுங்கோ" என்றேன். அந்த இளைஞர் சிரித்தார்.



"ஏன் சிரிக்கின்றீர்?"

"உனக்கும் மாட்டிற்கும் என்ன பகை இருக்கின்றது? நீ அடித்தால்கூட மறுகணமே மறந்து விடுமே! மனிதன் போல், பகையை மறக்காமல் வைத்திருக்கும் பண்பு மாட்டுக்கு ஏது? காளை உன்னைத் துரத்தியதற்குக் காரணம் எது தெரியுமா? நீ கருப்புத் தாவணி அணிந்திருப்பதுதான்;" என்றார். அப்போது தான் எனக்குப் புரிந்தது. மாட்டிற்குக் குடையைக் காட்டினாலும் மிரண்டு பாயும் பண்புதானே? மாடுவிடும் விழாவிலும் முன் கருப்புத் துணியைக் காட்டித்தானே மருளச் செய்கின்றனர்.

"நீங்கள் கூறுவது உண்மைதான். இதற்காகத்தான், நீங்கள் வேட்டியை அவிழ்த்து என்மேல் போர்த்தினீர்களா? ஆமாம் நீங்கள் இங்கே எங்கிருந்தீர்கள்" என்றேன் வியப்பாக.

"அதோ அந்த மரக்கிளைமேல் உட்கார்ந்து படித்திருந்தேன். துலைவிலே நீ கதறியதையும் காளை துரத்துவதையும் கண்டு விரைவாக இறங்கினேன். காளையை எப்படித் தடுப்பது என்று திகைத்தேன். திடீரென்று "நீங்கள் அணிந்திருக்கும் கருப்புத் தாவணியைக் கண்டுதான் காளை துரத்தி வருகின்றது" என்று எண்ணம் எழுந்தது. அதற்குள் நீங்கள் இங்கு விழுந்துவிட்டீர். உடனே வேட்டியை அவிழ்த்து உங்கள்மேல் போர்த்திவிட்டுக் காளையைத் தாக்கினேன்." என்றார் புன்னகை தவழும் உதட்டுடன்.

"உங்கள் உதவியை என்றுமே மறக்க மாட்டேன். இந்தச் சமயம் இந்தக் காளை வராவிட்டால் அந்தக் காளை என்னை விட்டிருக்குமா? உங்களுக்கு இப்போது இப்படிப்பட்ட எண்ணம் உதித்தது வியப்பாக இருக்கின்றது. நான் வருகின்றேன்" என்று மேலே போர்த்திருந்த வேட்டியை விலக்கி எழுந்தேன்.

"நீங்கள் படிக்கின்றீர்களா?"

"என் புத்தகமே பதில் சொல்லுமே?"

"ஏது குறும்பு பேசுகின்றீரே, இந்தக் காலத்தில் அரிச்சுவடி தெரியாதவன்கூட பேனவும் புத்தகமும் வைத்திருப்பது நாகரிகம் என்று எண்ணுகின்றனே" என்றார் அந்த இளைஞர் சிரித்துக் கொண்டே.

"ஆமாம்; என்ன படிக்கின்றீர்?"

"பிப்த் பாரம்"

"ஐந்தாம் படிவம் என்று சொல்லுங்கள்" அவர் இப்படி பேசியதைப் பார்த்தால் அவர் ஒரு தமிழ்ப் பித்தன் என்பதைக் காட்டியது.

"நீங்கள் என்ன படிக்கின்றீர்?"

"நான் சென்ற ஆண்டு எஸ். எஸ். எல். ஸி. முடித்தேன்."

"இப்போது என்ன படிக்கின்றீர்?"

"இப்போது பள்ளிப்படிப்பொன்றும் படிக்கவில்லை, பொதுவாக இங்கேதான் தனியே படிப்பது வழக்கம்"

"இந்தாங்கோ, இந்த வேட்டியைக் கட்டிக் கொள்ளுங்கள். இந்தத் துணியும் எனக்கு உதவியது நான் அணிந்திருக்கும் இந்தக் கருப்புத் தாவாணியைக் கட்டவே மாட்டேன்" என்று கூறி எழுந்தேன்.

"அப்படி ஒன்றும் துணியின் குற்றமில்லை. உங்கள் சிகப்பு உடம்பிற்கு இந்தக் கருப்புத் தாவணி அழகைக் கொட்டுகின்றது" என்றார். எனக்கு வெட்கம் பிடுங்கியது.

"நான் வருகின்றேன். நாளை தமிழ் பரிட்சை. இலக்கணம் என்றாலே என் மண்டையில் ஏறாது. எப்படிதான் எழுதப் போறேனோ? படிக்கவேண்டும். நான் வறேங்கோ" என்றுகூறி தெற்கு பக்கம் நோக்கி நடந்தேன்.

"நானும் இப்படிதான் வரவேண்டும். அதோ தெரிகின்றதே அதுதான் என் வீடு", துலைவிலிருந்த வீட்டைக் காட்டினார். நான் அதைத் தாண்டிதான் என் வீடு செல்லவேண்டும். இருவரும் நடந்தோம். அவர் என் பின்னாலே வந்தார். கொஞ்சநேரம் எங்கள் இருவரிடம் மௌனம் நிலவியது. பிறகு அவர் பேசினார்.

"உங்களுக்கு இலக்கணம் அவ்வளவு கடினமா? தாய்மொழி தானே?"

"தாய்மொழிதான் என்று சுலபமாகக் கூறுகின்றீர். அதில்தான் நான் தோல்வி எண் வாங்குவது" என்றேன் வெறுப்பாக.

"அப்படியா! எதோ உனக்கு இலக்கணத்தில் என்ன சந்தேகம் கேள். நான் நடந்துகொண்டே விளக்குகின்றேன்"

"எல்லாம் சந்தேகம்தான்!"

"எல்லாம் விளக்குகின்றேன் தெளிவாக" என்றார்.

"உவமை ஆகு பெயர் எப்படி? ஒரு உதாரணத்துடன் விளக்குங்கள்?" என்றேன்.

"அதற்கு உதாரணம் நான் கூறவேண்டியதில்லையே. நீங்கள் சற்று முன் என்னை உவமையாகு பெயரில் கூறினாயே!"

"என்ன!"

"இந்தக் காளை வராவிட்டால், அந்தக் காளை விட்டிருக்குமா?" என்றாயே அது உவமையாகு பெயர்தானே?"

"இல்லையே! அது அன்மொழி தொகைதானே?"

"அப்படித்தான் தெரியும். ஆகு பெயருக்கும் அன்மொழி தொகைக்கும் அதிகம் வேற்றுமை இல்லை. என்றாலும் அதன் நுணுக்கமான, வேற்றுமையை நன்கு உணரவேண்டும். "இந்தக் காளை வராவிட்டால்......" என்பது காளையைப் போன்ற வண்மையும் வாயும் தன்மையும் இருக்கும் என்னைக் குறிப்பிட்டாய் அல்லவா? இப்போது தெரியும். உவமானத்தின் பெயர் உபமேயத்திற்கு ஆகி, உபமேயத்தில் அதுபோன்ற என் சொல் மறைந்து வருவது உவமை ஆகு பெயர்."

"ஆமாம் ஆமாம்; மறந்து விட்டேன். இதற்குச் சொல்லுங்கள். என்று மேலும் என் சந்தேகத்தையும் புரியாத இலக்கணத்தையும் கேட்டேன். அவர் கூறும் விளக்கம் எனக்கு விரைவாகத் தெளிவாக விளங்கியது. வழியில் நின்று கொண்டே கேட்டிருந்தேன்.



"இப்படி உட்கார்ந்து கேளுங்கள்" என்று அவர் வழியிலுள்ள பாறைமேல் உட்கார்ந்தார். நானும் அமர்ந்து, எனக்குப் புரியாதவைகளை எல்லாம் கேட்டேன். அவர் பள்ளி ஆசிரியரைவிட தெள்ளத் தெளிவாக விளக்கிக் கூறினார். சூரியன் மேற்கு மலைவாயின் கதவைத் தட்டிக்கொண் டிருந்தான். இருள் எப்போது நமது ஆட்சி செலுத்தலாம் என்று எட்டிப்பார்க்க ஆரம்பித்தது.

"இருட்டாகி விட்டது. நான் வருகின்றேன். நாளை காலையில் கொஞ்சம் சொல்லித் தாருங்கள். நீங்கள் இப்படி விளக்கமாகச் சொல்வதை முன்னே தெரிந்திருந்தால் உங்களிடமே பிரைவேட் வைத்துக் கொண்டிருப்பேன்" என்று கூறிக்கொண்டே நடந்தேன் அவர் சிரித்துக்கொண்டே,

"நான் அப்படி ஒன்றும் நன்கு கற்றவன் அல்ல. இதுதான் என் வீடு. நீங்கள் நாளைக் காலையில் வாருங்கள். நான் இன்றிரவு இலக்கணத்தில் எப்படிக் கேள்வி வரும் என்று யோசித்து வினா விடை எழுதி வைக்கின்றேன்", என்றார்.

"வறேனுங்க, வணக்கம் உங்கள் உதவியை மறக்க மாட்டேன்" என்று கூறிவிட்டு நடந்தேன்.

• • •

மறுநாள் காலை வீட்டில் இருந்து சீக்கிரமாகப் பள்ளிக்குப் புறப்பட்டு, அவர் வீடு வந்தேன். அவர் எழுதி வைத்திருந்த வினா விடையை நன்கு படித்தேன். "இந்த முறையில் கேள்வி வரும்" என்று அவர் உறுதியுடன் கூறினார். பள்ளி சென்றேன். என்ன ஆச்சரியம்? அவர் எழுதிய வினா விடையே பெரும்பாலும் அதே கருத்துள்ள கேள்வியாகவே இருந்தது. மணி அடித்த பிறகும் பரிட்சை எழுதின தாளைக் கொடுக்க முடியாத எனக்கு இந்த முறை எல்லோருக்கும் முன் எழுதி முடித்துவிட்டு வெளியே வந்தேன்.

மீண்டும் அவரைச் சந்தித்தேன். அவர் எல்லா பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பதை அறிந்தேன். எல்லாவற்றையும் அவரிடமே பாடம் கேட்டுப் பரிட்சை எழுதினேன். அந்தப் பரீட்சையில் நான் எதிர்பார்த்த மார்க்குக்கு மேல் ஏராளமாக வந்தது.

நான் இந்த இடத்தில் உண்மையை மறைக்காமல் கூறுகின்றேன். கோபப்படாதீர்கள். எங்கள் இருவரிடையே அன்பு வளர்மதியுடன் போட்டி இட்டு வளர ஆரம்பித்தது. தினம் நான் பள்ளி செல்லும் போதாவது வரும் போதாவது எப்படியாவது அவரைச் சந்திப்பேன். அவரும் என்னை எப்படியாவது சந்திப்பார். எங்கள் இருவருக்கும் இவ்வளவு அன்பு வளர்ந்தது என் பெற்றோர்களுக்குத் தெரியாது. "எனக்குப் பள்ளி விடுமுறையாகி விட்டால் எப்படிச் சந்திப்பது?" என்று அவர் என்னிடம் அடிக்கடி கூறுவார். நான் வெளியே சொல்லா விட்டாலும் மனதில் நினைக்காமல் இல்லை.

எனக்கு விடுமுறை விடுவதற்கு முன்னே அவருக்கு அயலூரில் வேலை கிடைத்து விட்டது. இதனால் அவர் அதிகம் வருந்தினார். கடைசியாக அவர் என்னிடம் கூறியது இதுதான்.

"மேகலை, நான் இறக்கும் வரை உன்னை மறக்க மாட்டேன். என் வாழ்விலே உன்னை இணைத்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வறுமையால் தொழில் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தமான சூழ்நிலை என்னை நீ இருக்கும் இந்த ஊரை விட்டுத் துரத்துகின்றது. போகின்றேன். மேகலை, என்னை மறக்காதே" என்றார். அவர் பேச்சிலும் முகத்திலும் துயரம் சொரிந்தது. வருத்தமுடன் விடையளித்தேன்.

★ ★ ★

அவர் சென்ற மறுமாதமே நான் மங்கைப்பருவ மடைந்தேன். அப்போது எஸ். எஸ். எல். சி. வகுப்பு படித்திருந்தேன். "மேகலை வயதிற்கு வந்து விட்டது. இனி பள்ளிக்கூடம் அனுப்பத் தகுதி இல்லை" என் தாய் தந்தையிடம் வற்புறுத்திக் கூறினாள். என் தந்தைக்கு என்னைப் படிக்க வைக்க மிகவும் ஆசை. என் தாய்க்கு ஏதேதோ சமாதானம் கூறி என்னைப் பள்ளிக்கு அனுப்பினார்.

பள்ளிக்கூடம் விட்டதும் நேராக வீட்டுக்கு வரும்படி என் தந்தை வற்புறுத்திக் கூற ஆரம்பித்தார். அதற்கேற்றாற்போல், என் பள்ளித் தோழி ஒருத்தி என் வீதியிலே குடி வந்து விட்டாள். இதனால் நானும் அவளும் பள்ளிச் சென்று இணைபிரியாமல் வர வேண்டிய நிர்ப்பந்தமானது.

வேலைக்குச் சென்ற அவர் ஆறுமாதம் கழித்து ஊருக்கு வந்தார். அன்று நான் பள்ளி விட்டதும் என் தோழியுடன் வந்து கொண்டிருந்தேன். அவர் பாதையோரம் நின்று என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். எனக்கு ஆசையும் அச்சமும் ஏற்பட்டது. என் தோழி அறிந்தால் என்னவாகும்? பேசாமல் தலை குனிந்து வந்து விட்டேன். அவர் என்னைச் சந்திக்க அன்று எவ்வளவோ முயன்றார். நானும் முயன்றேன். முடியவில்லை.

அடுத்த நாள் பள்ளி விட்டு வரும்போது, அவர் பாதையோரம் நின்றிருப்பதைக் கண்டேன். நான் அவரைப் பார்த்ததும், அவர் ஏதோ கண்களால் பேசி ஒரு சீட்டைக் கசக்கி பாதையில் எறிந்தார். "எனக்கு அவர் ஏதோ எழுதியிருக்கின்றார்" என்று திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டேன். ஆனால், எப்படி அந்தச் சீட்டை எடுப்பது? என் தோழி பார்த்தால் எள்ளி நகைப்பாள். பெற்றோருக்குத் தெரிந்து வித்தியாசமாக எண்ணி விட்டால் என்று அஞ்சினேன். "எப்படி அவர் போட்ட சீட்டை எடுப்பது?" என்ற தீரா சிந்தனையுடன் மெதுவாக நடந்தேன். திடீரென்று ஒரு தந்திர எண்ணம் குதித்தது.

நானும் என் தோழியும் அவர் சீட்டுப் போட்ட இடத்தருகே சென்றதும், நான் என் கையிலிருந்த புத்தகங்களைத் தவறி விட்டது போல் விட்டேன். புத்தகமெல்லாம் பாதையில் சிதறி விழுந்தது. "என்னடி மேகலை" என்று கூறி என் தோழி சிதறி விழுந்த புத்தகங்களை எடுத்தாள். நானும் புத்தகத்தை எடுப்பது போல், அவர் போட்ட சீட்டைத் தேடி சேர்த்து எடுத்துக் கொண்டேன். சற்று தூரத்தில் பின்னால் நின்றிருந்த அவர் உதட்டில் புன்னகை உருள்வதைக் கடைக் கண்ணால் கண்டேன். "கமலம், இன்னிக்கு என்னம்மா சீக்கிரம் வரச் சொன்னா, வா" என்று என் தோழிக்குக் கூறி விரைவாக வீட்டுக்கு வந்தேன். அந்தச் சீட்டைப் பிரித்து விரைவாக விழியை உருட்டிப் படித்தேன்.



"என் காதல் உள்ளத்தில் அன்போவியமாக விளையாடும் மேகலை. உன்னைக் காணவே நான் துடிதுடித்து விடுமுறை எடுத்து வந்தேன். ஆனால், உன் போக்கு இந்த ஆறு மாதத்தில் மாறி விட்டது.

மேகலை, நீ மங்கைப் பருவம் அடைந்திருப்பதை இன்றுதான் அறிந்தேன். ஆஹா, மேகலை, என் மகிழ்ச்சியை எழுத எந்த எழுத்துமே இல்லை. கண்ணே, நீ இப்போது அழகுத் தெய்வமாகக் காட்சியளிக்கின்றாய்! மேகலை, உந்தன் அழகைக் கண்டேனே ஒழிய உன் அன்பான அமுத மொழியைக் கேட்கவில்லை. உன் உள்ளத்தின் உண்மை நிலையை உணர முடியவில்லை.

மேகலை, நான் நாளையே வேலைக்குப் போக வேண்டும். உன்னைச் சந்திக்கவே வந்தேன். என் ஆசை இன்னும் தீரவில்லை. இன்றிரவு பதினொரு மணிக்கு உன் வீட்டின் பின் புறமுள்ள புங்க மரத்தருகே காத்திருப்பேன். தயவு செய்து என்னைச் சந்திக்கவும். மறக்க வேண்டாம். நமது சந்திப்பு பயனற்றதல்ல. நம் இருவர் உள்ளத்தை உணர்வது. நம் எதிர்கால வாழ்வின் உறுதியான திட்டம் தீட்டுவது தான் இந்தச் சந்திப்பு. மேகலை. மீண்டும் மீண்டும் கேட்கின்றேன். மறக்காமல் சந்திக்க வேண்டும்.

இப்படிக்கு
**மணிவேல்,**

இதைப் படித்ததும் என் மனதில் ஆசையும் அச்சமும் ஒன்றோடொன்று முட்டி மோதி கட்டிப் புரண்டன. சிறிது நேரம் கழித்து, "அவரை நாம் எப்படிச் சந்திப்பது" என்ற எண்ணத்தை எடுத்துக் கொண்டு சிந்தனைச் சுரங்கத்தில் மெதுவாக இறங்கினேன்.

"டாங் டாங்" என்று கடிகாரம் இரவு பதினொன்று என்று கத்தியது. என் வீட்டிலெங்கும் தூக்கம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. மெதுவாகப் படுக்கை விட்டு எழுந்து சென்று தோட்டக் கதவைத் திறந்தேன். அப்போதுதான் கிழக்கு அடிவானத்தைக் கிழித்துக் கொண்டு, சந்திரன் உலகத்தை எட்டிப் பார்த்திருந்தான்.

"மேகலை, மேகலை" என்ற குரல். என் தோள் பட்டையை யாரோ பிடித்தனர். திரும்பி பார்த்தேன். வேறு யாருமில்லை. மணிவேல்தான்.

"மணிவேல் விடுங்கள். துணிச்சல்காரராக இருக்கின்றீரே! இப்போது நீங்கள் தொடலாமா? இதெல்லாம் மணந்த பிறகு வைத்துக் கொள்ளுங்கள்" என்றேன். என் குரலில் வெறுப்பும் சிறிய சினமும் வழிந்தது.

"மேகலை, அன்பாக வரவேற்பாய் என்று மனக்கோட்டை கட்டினேன். ஆத்திரமாக வரவேற்கின்றாயே, ஆமாம் இப்போது நீ மங்கையர்க்கரசியாய் விட்டாய் அல்லவா? மேகலை, இந்த ஆறு மாதத்தில் உனக்கு இவ்வளவு அழகு எப்படி அமைந்தது? நீ அழகு தெய்வத்தை வணங்கினாயா?" என்று மணிவேல் மேலும் அன்புடன் வருணித்துக்கொண்டே சென்றார்.

"மணிவேல், விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்: யாராவது பார்த்தால் வித்தியாசமாக எண்ணுவார்கள். சீக்கிரம் சொல்லுங்கள்" என்றேன். என் குரலில் அச்சமும் விரைவும் உடைந்திருந்தது.

"மேகலை, என்னைக் கடைசிவரை மறக்கமாட்டாயே. என் வாழ்வில் இணைவதற்குச் சம்மதம் தானே?"

"மணிவேல், இதைக் கேட்கவா இந்தச் சந்திப்பு. மணிவேல், என் காதலில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"அதற்கில்லை, மேகலை. நமது மணம் எப்போது?"

"உங்கள் பெற்றோர் என் பெற்றோரைச் சந்திக்கும்போது."

"அப்படியா! என் பெற்றோர்களை நாளையே நான் தந்திரமாக அனுப்புகின்றேன். ஆனால் உன் பெற்றோர் சம்மதிப்பாரா, மேகலை?"

"சம்மதிக்கச் செய்வது என் பொறுப்பு, மணிவேல்! என் தாய் மறுத்தாலும், என் தந்தை என் விருப்பத்திற்கு எதிராக எதையும் செய்யமாட்டார்!"

"உண்மையாகவா, மேகலை? உண்மையாகவா?" அவர் உணர்ச்சியுடன் என் கரத்தைப் பற்றினார்.

"மணிவேல், கையை விடுங்கள். காலம் வந்தால் நானே உங்களிடம் கழுத்தைத் தருகின்றேன். மணிவேல், மன்றென்று ஏமாற்றமடையாதீர்கள். நம் மணம் என் படிப்பு முடித்த பிறகுதான்" என்றேன். அவர் முகத்தில் திடீரென்று ஏமாற்றக் கீற்றுகள் விழுந்தன.

"மேகலை, எஸ். எஸ். எல். சி தானே?"

"ஆமாம், மணிவேல், அதற்குமேல் நம் மண வாழ்க்கைப் படிப்புதான்!" என்றேன். அவர் முகத்தில் அன்பு வழிந்தது. உணர்ச்சியுடன் ஏதோ பேசி என் கரத்தைப் பற்றினார்.

"மணிவேல், நிலவு பட்டப் பகலாய் காய்கின்றது. யாராவது பார்த்தால்......, நான் வருகின்றேன்" என்று கூறிவிட்டு விரைவாகத் தோட்டக் கதவைச் சாத்திக்கொண்டு வீட்டுக்குள் வந்துவிட்டேன்.

* * *

மறுநாள் காலை நானும் என் தோழி கமலாவும் பள்ளிக்குச் சென்றிருந்தோம். வழியிலே மணிவேல் மனை முன்றில் சாப்பறை அறைந்திருந்ததைக் கண்டேன். எனக்கு அச்சம் ஏற்பட்டது. திடுக்கிட்டேன் 'யார் இறந்து விட்டது' என்று வருந்தினேன். மணிவேல் வீட்டிலிருந்து இரண்டு வாலிபர்கள் கண்களைத் துடைத்துக்கொண்டு வந்தனர்.

"மனிதன் வாழ்வைப் பார். இரவு நன்றாக இருந்தான். விடியற் காலையிலே பிணமா?"

"அவ்வளவுதாம்பா! ஆர்ட் பெயில் ஆனால் என்ன இருக்கு?"

"என்ன இருந்தாலும் மணிவேல்போல், நல்ல நடத்தையுடையவர் எனக்குத் தெரிந்து யாருமே இல்லை. அவன் நல் வாழ்வு இன்றோடு முடிந்தது."

இதைக்கேட்டதும் எனக்கு ஏற்பட்ட நடுக்கம் சொல்லொணாது. "மணிவேல் மடிந்தாரா?" என்ற கதறல் என் தொண்டையை உடைத்தது. ஆனால் சொல் வெளியே வரவில்லை. என் தலை சக்கரத்துடன் போட்டி இட்டது. மண்ணை நோக்கி முத்தமிட்டது என்னுடல். "மேகலை மேகலை" என்று என் தோழி அலறும் குரல் மெதுவாக காதில் பாய்ந்தது. அவ்வளவுதான். எனக்குத் தெரியும். கண்விழித்துப் பார்த்தபோது, நான் என் வீட்டில் படுக்கையில் கிடந்தேன். என்னைச் சுற்றி டாக்டரும் என் பெற்றோரும் மற்றவர்களும் இருந்தனர்.



"மணிவேல் என்னை மறந்தாயா? இறந்தாயா?" என்ற வேதனையும் ஏமாற்றமும் பிசைந்த எண்ணம் ஓயாமல் என் மனதில் எதிரொலி செய்திருந்தது. இந்த வேதனையே என்னை நீண்டநாள் படுக்கையுடன் உறவாடச் செய்தது. அப்போதும் என் மனவேதனை யாருக்குமே தெரியாது. இதுவரை தெரியாமல் இருந்ததுபோல் இனியும் தெரியாமல் இருப்பதுதான் நல்லது. தெரிந்தால் வித்தியாசமாக எண்ணிவிடுவார்கள் என்று என் வேதனையை வெளியே காட்டாமல் வருந்தினேன். இந்நாளில் பள்ளிக்குக்கூட மாதக் கணக்கில் செல்லவில்லை என்றால், எப்படி எஸ். எல். எல். சி. தேர்ச்சியடைய முடியும்? மீண்டும் படிக்க விருப்பமின்றி, பள்ளிப் படிப்பை விட்டேன்.

மணிவேல் மறைந்து வருடமாகியும் அவர் நினைவு மறைய இல்லை. யாரிடமும் பேசாமல் மௌனமாக இருக்கும் என் நிலையைக் கண்டு என் பெற்றோர் எனக்குப் பேய் பிடித்திருப்பதாக எண்ணி பரிகாரங்கள் செய்தனர். "பேயுமில்லை ஒன்றுமில்லை. வயது பெண் மணமானால் எல்லாம் சரியாகும். முன்னே மணத்தை முடியுங்கள்" என்று என்னுறவினர் வற்புறுத்தினர். பிறகு என் பெற்றோர் எனக்குப் பிள்ளை தேட ஆரம்பித்தனர். சுமார் பத்து பிள்ளைகள்வரை பார்த்துத் தோல்வியுற்றனர். காரணம் என்னால்தான் வந்த பிள்ளைகளை எல்லாம், "எனக்குப் பிடிக்கவில்லை" இந்த பதில்தான் அளிப்பேன். என் தந்தைதான் எனக்கு எதிராக எதையும் செய்பவர் இல்லையே? "எனக்குப் பிடித்தவனையே" மணக்க வேண்டுமென்று மேலும் பிள்ளை தேடும் படலத்தைப் புரட்டினார்

அந்த நாள் என்னைப்பார்க்க நீங்களும் உங்கள் உறவினர்களும் வந்தனர். எனக்கு அப்போது வழக்கம்போல் வேதனையாகத்தான் இருந்தது. என்னை அலங்கரித்தனர். இந்தக் காலம் பெண் பிள்ளையைப் பார்த்து, பிள்ளைப் பெண்ணைப் பார்த்து மணக்கும் காலம் தானே? அந்த முறையில் நீங்கள் என்னைப் பார்த்தீர்கள். நான் வருத்தம் தோய்ந்த உள்ளத்துடன், வெறுப்புப் பாயும் முகத்துடன், உங்களைக் கடைக்கண்ணால் கண்டேன். என்ன; என் கண் இமைகள் அகல விரிந்தன. புருவம் நெற்றியை நோக்கி ஓடியது. கூச்சத்தை மறந்து நன்றாகத் தலை நிமிர்ந்து உங்கள் முகத்தை ஊற்றுப் பார்த்தேன். சில விநாடியில், பலநாள் சுற்றிக்கொண்டிருந்த வேதனை இருக்கும் இடம் தெரியாமல் ஓடியது. என்னையும் அறியாமல் என் அகத்திலும் முகத்திலும் இன்பம் வழிந்தது. இதுவரை வந்த பிள்ளைக் கண்ணெடுத்தும் காணுவதில்லை. கண்டால் வெறுப்பும், வேதனையும் கக்கும் கண்களுடன்தான் காண்பேன். ஆனால் இன்று உங்களை விருப்பமுடன் நோக்கக் காரணம்? இல்லாமல் இல்லை.

மாண்ட மணிவேல்தான் என்று எண்ணும்படி உங்கள் முக ஜாடை இருந்தது. மணிவேலுக்கும் உங்களுக்கும் ஒருவித வேறு பாடும் இல்லை. சிறிது நேரம் மணிவேல் தான் என்று எண்ணி விட்டேன். இதனால் எனக்கு உங்களை மணக்க உள்ளம் துடித்தது. அன்பு ஏற்பட்டது.

திருமணம் முடிப்பதாக முடிவு செய்த பிறகு, உங்கள் குடும்பத்தில் யாரோ கெட்ட நடத்தையாக நடந்துவிட்டார்கள் என்ற பூசல் கிளம்பியதல்லவா? இதனால் என் தந்தை முதல் எல்லோரும் உங்களுக்கு என்னைக் கொடுக்க மறுத்தனர். அப்போது என் தந்தையிடம் உங்களையே மணப்பேன் என்று உறுதியாகக் கூறினேன். என் தந்தை மறுத்தார்; கண்டித்தார். முடிவில் என்போக்கு மணத்தையே வெறுப்பதை அறிந்துவிட்டார். என்ன செய்வார்? பிறகு உங்களுக்கே என்னை மணம் செய்துவைத்தார்.

இவ்வாறு மேகலை கூறி முடித்தாள். எனக்கு அவள் மேல் வெறுப்பும் வேதனையும் ஏற்பட்டது.

"மேகலை, நீ என்னுடன் உள்ளன்போடு வாழ வில்லையா? முதலில் காதலித்தவனை நினைத்துதான் என்னுடன் வாழ்கின்றாய். அப்படிதானே?" என்றேன் என் குரலில் அருவருப்பும் ஆத்திரமும் பிசைந்திருந்தன. என் முகத்தில் வேதனைக் கீற்றுகள் விழுந்தன.

"நீங்கள் இப்படித் தப்பாக நினைப்பீர்கள் என்று தான் இது வரை மறைத்தேன். சத்தியமாகச் சொல்கின்றேன். மணந்த மறுமாதமே அவருடைய நினைவை அறுக்கும் வாளாக அமைந்தது உங்களுடைய அன்பு. நான் அவர்மேல் காதல் கொண்டேன். மற்றப்படி ஒன்றுமில்லை. என் மேல் வெறுப்படைய மாட்டீர் என்று நம்பி கூறினேன். அதுவும் நீங்கள் கதை எழுத கருத்தில்லாமல் தவிக்கின்றீரே! இந்தச் சமயம் சொன்னால் இதுவரை மனம் சுமந்திருந்த இரகசிய சுமை தளரும். உங்களுக்கும் கதை எழுத கருத்துக் கிடைக்கும் என்று கூறினேன் ஐயோ, உண்மையைக் கூறியது வேதனையாக முடிந்ததே" என்றாள் மேகலை. அவள் குரலில் அச்சம் வேதனை ததும்பியது. கண்கள் மலையருவியுடன் போட்டி இட்டன. அவள் கண் கலக்கம் என் மனக் கலக்கத்தைப் போக்கியது.

"மேகலை, தப்பாக நினைக்க அஞ்சாதே. சும்மா சொன்னேன். மணமாகுமுன் பெண்கள் உன்போல் காதலிப்பதுண்டு. அந்தக் காதல் கைகூடாமல் ஏமாற்ற மடைவதும் உண்டு. இதையாரும் கூறமாட்டார்கள். ஆனால் நீ கூறிவிட்டாய். இதற்கு உனக்கு என்ன தண்டனை தெரியுமா? உன் இரண்டு கன்னத்திலும்" என்று புன்னகையுடன் கூறிக்கொண்டே அவள் கண்கோடியில் உருண்ட கண்ணீரைத் துடைத்து மெதுவாக அவள் உதட்டை உலுக்கினேன். "கொல்" என்று சிரிப்பைக் கொட்டினாள்.

"விடுங்கள்; விளக்கேற்றும் நேரமாகிவிட்டது," என்று கூறி விட்டு விரைந்தாள் மேகலை.

மேகலைகூறிய சம்பவத்தைக் கற்பனைச் சுரங்கத்தில் தள்ளி உருட்டி புரட்டினேன். "மனைவியின் முன் காதலன்" என்ற தலைப்பில் கதை எழுதினேன். அதுதான் இது.

# நாற்று நட வந்தவள்...?

**வெண்ணெய்வேலன்**

★

நாட்டுப்புறச் சூழ்நிலையில் பழகி அங்குக்கிடைத்த செவி விருந்தின் பாடல் படைப்பை ஒன்று திரட்டிக் கதை வடிவில் காட்டும் கிராமீய இலக்கியம் இது. நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் நல்ல அம்சங்கள் ஏராளம். இங்கு கீழே தரப் படுவது ஒரு கிராமக் காதல் சித்திரம்.

வைகறை—வானம் கதிரவனின் வண்ணக்கதிர்களை வரவேற்பதற்கு முன் இருக்கும் நிலை—பறவைகள் தன் கூடுவிட்டுக் கிளம்பி அம்சிறகடித்துக்கொண்டு வானத்திதிலே செல்லும் நேரம்—செங்கைவளைப் பெண்கள் வாசலைத் துங்குமுறச் செய்யும் நேரம். அந்த நேரத்திலே சுறுசுறுப்புடன் இயங்கும் வேலைகள் பல. அந்தந்த வீடுகளிலே விளக்கொளி மின்பூச்செனச் சொல்லும் வகையில் சிறிய சுடருடன் எறிந்து கொண்டிருந்தது. உழவர்கள் கலப்பைத் தூக்கிக்கொண்டும், நரம்பெழுந்து உடல் வற்றிய காளைமாடுகளை ஓட்டிக்கொண்டு கழனி வெளிப்பக்கம் செல்லுகின்ற காட்சி காண்போர்க்கெல்லாம் கவின்மிக்கக் காட்சியாக இருந்தது என்று சொன்னால் அதிலொன்றும் வியப்பில்லை. இந்நிகழ்ச்சிச் சித்திரத்தின் விளக்கத்தைப்பற்றிக் கிருமங்களில் வழங்கும் பாடலைப் பாருங்கள்.

"உழவர்கள் கலப்பைத் தூக்க
உழவுமாடு ரெண்டு ஓட்டி
கழனிபக்கம் செல்லுங் காட்சி
கண்கவரும் காட்சியாமே பாரு—இந்தக்
கதையைக் கொஞ்சம் கேட்டுவிட்டு சேரு......

அந்த நேரத்தில் தான் மாணிக்கமும் தன் நாவுவளைந்த கலப்பை யொன்றையும், ஒட்டியுலர்ந்த மாடுகளையும் ஓட்டிக் கொண்டு சென்றான். மாணிக்கம் இளமுறுக்கான வயது, கருக்கான மீசையுடையவன். ஆளைப்பார்த்தாலே ஆசையால் மயக்கம் போட்டு விழுவார்கள் அந்தப் பக்கத்துப் பெண்கள்.

தன்னந்தனியாக மாடுகளை ஓட்டிக்கொண்டு நடந்துகொண்டே அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டு சென்றான். ஊரின் கோடியிலே புளியமரத்தின் அடியிலே ஓர் உருவம் நின்றுகொண்டிருந்தது. அந்தப் பக்கந்தான் மாணிக்கம் வருவானென்று அவனுடைய காதலி ரத்தினம் எப்படித்தான் அறிந்தாளோ? அவள் அறிவாள்தான். ஆனால் மாணிக்கந்தான் அதை அறிந்து கொள்ளவில்லை. காதலித்த ஒருவரைக் கருத்திலேற்றி மணமாகும் வரையில்—ஏன் இன்ப இல்லறத்தில் இணையிலா வானம்பாடிகளாக உலவி இவ்வையகத்தைக் கடக்கும் வரையில் ஒரு பெண்ணிற்கு இதைவிட

அறிந்து கொள்வதற்கு—எண்ணுவதற்கு வேறு ஒன்றும் இருக்கிறதோ?

கிராமத்திலே வளர்ந்த கிளிமொழியாள் ரத்தினம் புளியமரத்தின் கீழ் நின்று கொண்டிருந்தாள். இதை மாணிக்கம் அறியாது "ஆ! இது என்ன புளியமரத்தடி பூதமோ?" என்று சந்தேகத்துடன் சென்றான் மாடுகளை ஓட்டிக்கொண்டு. சுற்றும் முற்றும் பார்த்தான் ஒருவரையுங் காணோம். என்னசெய்வான் ஒரே பயம். கிட்டே நெருங்க நெருங்க அந்த உருவம் தன்னைநாடி வந்துகொண்டிருந்தது. "இது என்னடா சங்கடமாய்ப் போச்சு" என்று பயத்தைப் போக்குவதற்காகப் பாட்டு ஒன்றைப்பாட ஆரம்பித்தான். அதைச் சிறிது கவனிப்போம். இத்தகைய கிருமீயப் பாடல்கள் என்றும் அழியாத தொரு பாங்கினைப் பெற்றுவிட்டதைப் பாருங்கள்:

"ஏரு உழும்போது ஏருமாடு உழுந்துப்போச்சி
ஏரு உழும் அண்ணன்மாரே இங்கே கொஞ்சம்
ஓடிவாங்க ஐய—எந்தன்
மாட்டைக் கொஞ்சம் எழுப்பிவிட்டுப் போங்க!"

என்று முடித்ததுதான் தாமதம், புளியமரத்தடியிலே பேய்போல் நின்றிருந்த உருவம் திடுதிடுவென்று ஓடிவந்து மாணிக்கத்தின் வாயை மூடியது. மாணிக்கத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. திருதிருவென்று விழித்தான். ஒரே இரைப்பு மேல் மூச்சு கீழ்மூச்சு சென்று வாங்கியது.

"நீ......யா......ர்?" என்றே நாக்கைக் குழறினான். இதற்குள் ரத்தினம் 'நான்தான் ரத்தினம்' ஏன் இப்படி பேந்த பேந்த முழிக்கிறே? ஒன்னைப் பாத்துக்கினுதான் இங்கே இம்புட்டு நேரம் நின்னேன். நீ என்னடா இண்ணைக்கா ஒரேமட்டா பயந்து சாவறியே."

"அட! ஏம் பொட்டி மவளே என்ன இங்கே இந்த நேரங் கெட்ட நேரத்திலே பயம் கியம் இல்லாமே வந்திருக்கே புள்ளே?" என்று கேட்கும் பாவனையிலே அமைந்திருக்கும் பாடலைப் பார்ப்போம். இத்தகையப் பாடல்களைத்தான் உயிர் நிரம்பிய ஊட்டமுள்ள பாடல்கள் என்கிறோம். பின் கீழே செல்வோம். இதோ பாடல்

"சேலை சிவப்புக் கட்டி
செவுத்தஉடல் நீ மறைத்து
காலையிலே இங்குவந்த
காரணந்தான் என்னவோ?"

இப்படிக் கேட்டதுதான் தாமதம். ரத்தினம் உடனே சொல்ல ஆரம்பித்தாள்—"அழகு மச்சான் உன்னாலே நான் ஏங்கித் தவிக்கிறது எத்தினி நாளு? ஏம்பொட்டி மவன் நீ வேலைக்குப் போனினு என்னை—ஏன்! இந்த உலகத்தியே கூட இல்ல மறந்துடுவே! இது எனக்குத் தெரியாதா என்ன? அங்கேபோய் நீ வேலை செய்யும் போது என்னை எங்க மறந்துடப் போறீயேண்ணு ஓடி வந்தேன். மச்சான், நீ என்னை மறந்துடமாட்டியே. சத்தியமாச் சொல்றேன் மச்சான், ஒன்னை அண்ணடம் நேர்லேயே பார்த்துக்கினே இருக்கணும்ணு தோணுது மச்சான். ஒருநாளு போறது ஒருயுகமா இருக்குதுண்ணு இதை, நீ எங்க மச்சான் ஒணரப்போறே. ஒங்க நெனைவாவே இருக்கற எனக்கு எதைப் பார்த்தாலும் ஒம் மூஞ்சிதான் தான் மச்சான் தெரியுது. இதை யெல்லாத்தியும் நெனைச்சிப் பாத்துட்டுதான் மச்சான் ஓடி வந்தேன். என்னை மறந்துடாதேண்ணு சொல்லிட்டுப் போவ" இதைக் கூறுகின்ற தோரணையிலமைந்த நாட்டுப்புறப் பாடலைப் படித்துணர்வோம்.



"காலையிலே கலப்பைத் தூக்கிக்
கழனிப்பக்கம் போறமச்சான்
வேலையைநீ செய்யும்போது
வேல்விழியை மறந்துடாதே ஆமாம்—எந்தன்
வேதனையைத் தீர்க்கவேணும் மாமா."

"அடி புள்ளே ரத்தினம் இதைச் சொல்லவா இம்புட்டுநாழி இங் கிட்டு நிண்ணிருந்தே அடே! என் அழகே! உமைக் கோட்டான்மாதிரி யெல்லாம் முழிச்சிக்கிட்டா இவ்வளவு சோடிப்பையும் செய்ஞ்சிக் கிட்டே? அட எம்பகர், 'மப்புகொப்பை மறைக்குது, மயிர்மாட்டி கண்ணை மறைக்குது' இப்படி யெல்லாம் நீ வருவேண்ணு எனக்கு தெரிஞ்சிருந்தா இன்னுங் கொஞ்சநாழி முன்னயே வந்திருப்பேனே! சரி நானு ஒண்ணு சொல்றேன் அதுபோல செய்வியா ரத்தினம்."

"என்ன சொல்லேன். நீ என்ன சொல்றீயோ அதுபடி செய்ய நான் காத்துக்கிட்டு இருக்கேன். சொல்லு பார்ப்போம்." என்றாள் ரத்தினம்.

"சரிபுள்ளே இதோ சொல்றேன். அதுக்குள்ளே கொஞ்சம் கரண்டவத்த காட்டேன் கொஞ்சம் வேணும். அப்படியே ஒஞ் சுருக்குப் பையைத்தான் எடேன்."

"ஊம், பாழாப்போன வெத்திலையைப் போட்டுப் போட்டு எந்தான் இப்படிக் கொழைக்கிறியோ? இந்தா போட்டுகிட்டு என்னமோ சொல்லப் போறேண்ணியே அதைச் சொல்லு" என்றாள் மிக ஆவலுடன்.

"ஏ புள்ளே, எங்க அத்தை மவரத்தினமிண்ணு ஒருத்தி இருந்தாக்கூட ஒன்னைப்போல ஏம்மேலே இவ்வளவு கொள்ளாத ஆசை, அக்கரை வச்சிருக்க மாட்டாடி. அது என்னமோ நீயும் இவ்வளவு ஆசையைக் கொட்டி ஏங்கற, நானும் சொல்ல முடியா மோகத்தால் வாடி வதங்கறேன். இது எண்ணைக்கித்தான் நம்ம ரெண்டுபேரையும் சந்தோசத்தில் கொண்டுபோய் விடுமோ? ஏ ரத்தினம் நான் சொல்றேன் நீ ஒண்ணும் மலைக்கமாட்டியே. அப்படிண்ணு சொல்றேன். இல்லாட்டா சொல்லி என்ன பிரயோசனம்?"

"என்ன மச்சான் ஏமேலே இவ்வளவு சந்தேகம். சொல்றது நல்லாருந்தா ஒத்துக்காத என்ன மச்சான். சொல்லு, நான் ஒண்ணும் ஒன்னட்டம் பயந்தாங்குள்ளி இல்லே, நீ கொஞ்சம் மனசைத் தைரியப்படுத்திக்கொண்டு சொல்லு" என்றாள் ரத்தினம்.

"அட ஏம் பொம்பள சிங்கமே, அப்படிச் சொல்லு. இதோ சொல்றேன் ஆடாம அசையாம காதைத் தீட்டிக்கேளு" என்றான் மாணிக்கம்.

கீழ்க்காணும் பாடல்தான் மாணிக்கத்தின் உள்ளுணர்ச்சியில் எழுந்த கருத்தைச் சித்தரிக்கிறது,

"அறியாப் பொண்ணு எந்தன் கண்ணு
ஆசைப் பொண்ணு ரத்தினமே
தெரியாம நீயும் நானும்
தேசம் சுத்தப் போவலாமா?"

பாட்டைக் கேட்டாள். கருத்தை யுணர்ந்தாள். "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என் பார்களே அதை யொத்தவாறு அவளது முகத்திலே ஒரு திகைப்புக் குறி காணப்பட்டது. அவள் சொல்கின்றாள்.

"ஐயோ! அடி ஆத்தே இப்படியெல்லாம் ஓடரது நம்ம சாதிக்கே—நம்ம குலத்துக்கே அவமானமாச்சே, அதுவும் கன்னிகழியாத நானு ஒரு வயசுப்பொண்ணு; நீயும் கல்யாணம் ஆகாதவரு. நம்ம இப்படிச் செய்தால் நாலுபேரு நாலுவிதமாச் சொல்லுவாங்க. எனக்கென்னமோ இப்படி ஓடரது புடிக்கவேயில்லே. இந்தமாதிரி செய்யரது நல்லதா மச்சான், ஒங்களாலே என்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுண்ணு சொல்றதுக்குப் பதிலா இப்படி ஒருபோடு போடர. இது எண்ணிக்குப் போட்ட திட்டமோ? மச்சான் இது ஆகற காரியமா? வேற ஏதாச்சும் சொல்லு மச்சான்."

"சரி ஒண்ணும் வேணும், விடிஞ்சிப் போச்சி, நீ வீட்டுக்குப் போ. இன்னிக்கு நம்ப கழனி நடவு நடப்போவுது. நீயும் நடறதுக்கு வாரியாபுள்ளே ரத்தினம்?"

"ஊம் மச்சான் நான் வேற ஒரு இடத்தில் நடறதுக்குக் காசி வாங்கிட்டேன். அதை அவுங்கக்கிட்டே கொடுத்துட்டு எனக்கு ஒடம்பு சரியில்லேண்ணு சொல்லிப்போட்டு வந்துடறேன் மச்சான்."

"சரி ஊம் நடத்து. நம்பாடு இன்னிக்கி வேட்டைதான். கட்டாயம் வரணும். ஒன்னையே பாத்துக்கிட்டு இருப்பேன். வரும்போது ஏதாச்சும் தின்றதுக்கு எடுத்து வா ரத்தினம்" என்று சொல்லிக்கொண்டே ஏரை ஓட்டிக்கொண்டு கழனிக்குச் சென்று விட்டான்.

கதிரவனும் கடலில் குளித்தெழுவதைப் போன்று கீழ்த்திசையில் எழுந்தான். மாணிக்கமும் நாற்று நடுவதற்கான வயலைப் பண்படுத்திவிட்டு நாற்றுகளைக் கழனியிலே தயாராக வைத்திருந்தான்.

கண்ணுக்கெட்டிய தொலைவிலே நாற்று நடுகின்ற பெண்கள் வந்து கொண்டிருந்தனர். ஏன் தானோ அவனது கண்கள் அவர்களையே பார்த்து எதிர்நோக்கியிருந்தனவோ? எதற்குமில்லை அவளின் முத்துப் பல்லழகி தித்திக்கும் பேச்சழகி ரத்தினத்திற்காகத் தான்.



ரத்தினம்—அவளுக்கு எங்கெந்தச் செடிகள் பூத்துக் கொடுத்ததோ அவ்வளவு வண்ண மலர்களையும், பூக்காடென அவள் கூந்தலில் வைத்துக்கொண்டு வந்தாள். வண்டுகள் பார்த்தால் அவளையல்லவோ சூழ்ந்துகொண்டு விடும். இத்துணை அலங்காரமும் யாருக்காக? எல்லாம் அவள் ஆசை மச்சான் கண்டு களிக்கவேண்டும். அந்தக் களிப்பின் எதிரொலியாய் அவன் உள்ளம் குளிரவேண்டும்—மகிழ்ச்சியால் கூத்தாடவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான்.

மாணிக்கம்—கன்னியவளின் கடை விழிப்பட்ட கட்டிளங்காளை. கிராமியப் புறத்தின் நுட்பம் தெரிந்த பாட்டாளி. ரத்தினத்தின் வரவுக்கு காத்திருக்கும் உழவாளி; எண்ணமெல்லாம் அவள் குறித்தே எழுகின்றது. பார்வை யெல்லாம் அவள் உருவையே பார்க்கின்றது. இப்படி மாணிக்கம் பார்ப்பதெல்லாம் ரத்தினம் வருவாள், சத்தானமொழி கூறுவாள். அவள் செந்தாமரை முகங் கண்டு சிந்தையினில் பூரிப்புக் கொள்ளலாம் என்று ஏங்கியவாறு வயல் வெளியில் வேலை செய்தான்.

ஒரே சிரிப்பொலி, இடையிடையே பேச்சுக்கள்—வயலின் வரப்பின் மீது வரும் பெண்களின் கூட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சி இது.

நாற்று நடவரும் பெண்களெல்லாம் ரத்தினத்தையே பார்த்து சிரித்துக்கொண்டு வந்தார்கள். யாருக்காக இவ்வளவு அலங்காரமும் என்று அவர்களுள் நினைப்பவர்கள் பலர். ரத்தினந்தான் அந்த நாற்று நடும் பெண்களுக்கு முன்னோடியாக வந்தாள். மாணிக்கம் பார்த்துவிட்டான், பார்த்துப் பாட ஆரம்பித்தான்.

"கொண்டையிலே பூ முடித்து
கழனிபக்கம் போறபெண்ணே—உன்
கெண்டைவிழி காட்டியென்னை
கொன்றுவிட்ட மாமயிலே வாராய்—இங்கு
காத்திருக்கும் என்னையும் நீ பாராய்."

இப் பாடலை மாணிக்கம் நாற்று இறைத்துக்கொண்டே பாடினான்.

ரத்தினத்தோடு வந்த பெண்களெல்லாம் வேறு வேறு இடத்திற்கு நாற்று நட சென்று விட்டார்கள். ஆனால் ரத்தினம் மட்டும் தனியாக மாணிக்கம் கழனிபக்கம் சென்றாள். மாணிக்கம் பாடிய பாட்டானது ரத்தினத்திற்கு என்னதான் மகிழ்ச்சியைத் தந்தது தெரியுமா? உள்ளுக்குள்ளிருக்கும் சந்தோஷத்தை வெளிக்காட்டாதவளாய் மாணிக்கத்தின் அருகில் வந்து,

"பார்த்துப் புளிச்சிப் போச்சி
பாராங்கல்லோ. ஓம்மனசி
வேர்த்து விருவிருக்க
வேலைசெய்யும் எந்தன் மச்சான்—வந்தேன்
உன்பாட்டைக் கேட்டு வேதனையுங் கொண்டேன்."

என்று பாடினாள் எதிர்பாட்டாக, பிறகு மாணிக்கத்தை நெருங்கிக் கிட்ட வந்து "போ மச்சான், ஏங் கூடவந்த அவ்வள பொம்பளைங்க

மத்தியிலே என்னைக் கொண்டையிலே பூ முடித்துன்னு சொன்னியே அவளுங்க எல்லாம் ஏதாவது நெனைக்கமாட்டாளுவ. ஒனக்கு ஒண்ணுமே தெரியலையே, இதுக்கெல்லாம் நேரம் காலம் கிடையாதா?'' என்றாள்.

“ஏண்டி குட்டி ஒரே வழியா அளக்கறே. பாத்தாப்போராளுவளே என்ன சொல்லுவாளுவ. நானு ஏர் பாட்டுப் பாடனேண்ணு சொல்றேன். இப்ப என்ன சொல்றபுள்ளே சரி, அது இருக்கட்டும் எனக்கு ஏதாச்சியும் கொண்டாந்திருக்கியா ரத்தினம்?''

“ஆமாம் மச்சான், நீதான் பேச ஆரம்பிச்சா என்னுமோ கூட்டத்துலே பேசறவங்களப்போல இல்லே பேசறே. அந்தப பேச்சிலே மறந்தே புட்டேன். இதோ பாரு மச்சான் இந்தா.''

‘கொடுடீ, ஆ! அதிரசம். ஏது ரத்தினம்? தீபாளிக்குச் சுட்டதா? எனக்காகவா இத்தினிநாள் வச்சிருந்தே? இந்தா நீ கொஞ்சம் கடிச்சிக்கோ.''

“ஊஹூம் நீ தின்னு மச்சான்.''

“ஊஹூம் நீ தின்னால்தான் நான் தின்பேன். இந்தா ஒன் பங்கைக் கடிச்சிக்கோ'' என்றான். இதோ அந்த செய்தி ஓவியம்.

“தீவாளி அதிரசத்தைத்
தேடியிங்குக் கொண்டுவந்து
நாவினிக்கத் தின்னச் சொல்லி
நின்றிருக்கும் பெண்மயிலே நங்காய்—இதை
நீகடித்துத் தின்னு கொஞ்சம் பங்காய்.''

என்றான்.

உடனே ரத்தினம் பாடத் தொடங்கினாள்.

“தின்னுத் தெவிட்டிப் போச்சி
தேன்பாவும் கசந்துபோச்சி
கன்னி யென்னைக் கரம்பிடிக்கா
காரணத்தால் எல்லாம் போச்சி மாமா—என்னைக்
காக்கப் போட்டுக் காலம் ஓட்டலாமா ?''

என்று,

பாட்டிலே லயித்திருந்த மாணிக்கம் உடனே கவனத்தை வேறு பக்கம் மாற்றினான். தன் கழனியை நோக்கிப் பெண்கள் பலர் வந்து கொண்டிருந்ததைக் கண்டான். “ஊரு கதை, ஊட்டுக் கதை பேசிகிட்டு வம்பளக்கற பொண்டுங்களா.

“வாங்கடி வாங்கடி பெண்டுகளா—எங்க
வாத்தியாரு சட்டாம்பிள்ளையைக் கண்டீங்களா?''

என்று கேலியாகப் பாடிக்கொண்டே, “ஏ பொண்டுவளா சூரியன் மொளச்சி எம்புட்டு நேரம் ஆவது? வெளிவூரில இருந்து வந்து காலங் கோலமா நடவுபுடிச்சி நடறாங்க, நீங்க என்னடாண்ணா ஆடி அசைஞ்சிக்கிட்டு வாரீங்களே. கொஞ்சம் நடையை எட்டிப் போட்டு வாங்கடீ!'' என்று ரத்தினத்திற்கு பத்தடிதூரம் நின்று கொண்டே சொன்னேன்.



நடவு நடும் பெண்கள் வந்து அவரவர்கள், தன் தன் மெனையைப் பிடித்துக் கொக்கான் வைத்துக் கொண்டு நட ஆரம்பித்து நட்டார்கள். அந்தக் கூட்டத்திலே ஒருத்தி பாட ஆரம்பித்தாள். அப்பாட்டின் நிலையைப் பாருங்கள். பாடுகின்ற பெண்ணோ கன்னிப் பெண். புருடனின் லட்சணமறியாதவள் போலும்! கொண்ட கணவனைச் சாக வேண்டும் என்று எந்த மகராசியும் சொல்ல மாட்டாள். ஆனால் இவள் ஆணின் உடலுறவு ஒட்டாத ஒண்தொடீ திரட்சி பெற்ற மார்பினையுடைய இளந்தளிர் மென்கரத்தாள். ஆகையினால் தான் அவளால் இப்பாட்டைப் பாட முடிந்தது. திருமணம் ஆகியிருந்தால் பாடுவாளா புருஷன் இறக்க வேண்டும் என்று. இத்தகைய பாட்டுக்களின் உள்ளேதான் கிராம இலக்கியங்கள் ஊறிக் கிடக்கின்றன. சிறிது பாடலுக்கு வருவோம்.

“ஏத்தம் எறைக்க வேணும்
ஏம்புருசன் சாவ வேணும்
கள்ள புருசனோடே—குட்டி கிளியாம்பா
கைகோத்துப் போக வேணும் போடு திறைக்கு''

என்று. இந்தப் பாட்டைக் கேட்டுவிட்டு எல்லாப் பெண்களும் கொலேரென்று சிரித்தார்கள். இந்தப் பாடல்களை யெல்லாம் அவர்கள் வேலையின் கடின தோற்றம் தெரியாது மறைப்பதற்குத் தான் பாடுகிறார்களே ஒழிய மற்றெதற்குமில்லை. நடவு வேலை பாட்டிலேயே போகிறது. உடனே இன்னொருவள் பாட ஆரம்பிக்கிறாள். என்ன அந்தப் பாட்டு? எல்லாம் நாட்டுப்புறங்களிலே கேட்டுக் கேட்டுத் தெவிட்டாத இன்னமுதப் பாடல்கள்தான். ஏன் இவ்வளவு அவசரம், இதோ பாடலையே பாருங்களேன்.

“ஓட்டடா ஓட்டடா பஞ்சத்திலே
உட்டுட்டு போனியே ராசாவே
புள்ள பொறந்ததும் பல்லு மொளச்சதும்
பாக்க வந்தியா ராசாவே''.

என்று பாடி முடித்தாள். நடவு நடும் பெண்கள் வேலைதான் செய்கிறோமா? அல்லது பாட்டுக் கச்சேரிதான் கேட்கிறோமா என்ற நிலையில் எண்ணும் வகையிலே வேலை கிடுகிடென நடந்தது.

இதுதானா பாட்டு, இதோ இன்னொருவள் பாடுகின்ற பாட்டிலே எத்துணைப் பரந்த நோக்கமும், அதே நேரத்தில் எமும் சொந்த நோக்கத்தையும் அமைத்துப் பாடுகின்றாளே. எத்துணைக் கருத்துக்கள் இருக்கின்றது பாருங்கள். பாடுகின்ற நங்கை யார்? யாராயிருக்கலாம்? பாட்டைக் கேளுங்கள், பிறகு பாடினவள் யார் என்று உங்களுக்கே புரிந்து விடும்.

“நாத்து நடவும் வேணும்
நல் விளைவு காண வேணும்
பூத்துக்குலுங்க வாழ்வு
பொன் வெளைச்சல் காணவேணும் மாமா—இந்தப்
பூவையை நீ போற்ற வேணும் ஆமாம்''

எல்லாப் பெண்களும் என்ன பாடினார்கள்? இந்தப் பெண் என்ன வென்று பாடினாள் பாருங்கள்! மாணிக்கத்தின் மீது அவ்வளவு சந்தேகம் அந்த உத்தமிக்கு. பெண்களுக்கிருக்கும் இயற்கை குணத்தைத்தான் இப்பாட்டுப் பாடியவளிடமும் நாம் காண்கிறோம். பாட்டுப்பாடியவள் கொஞ்சுமொழி அஞ்சுகத்தாள் ரத்தினம்தான்.

தன் அழகு மலர்ப் பாவை—அழித்தெழுதா சித்திரம் ரத்தினமா பாடியது என்று அவனுக்கே ஐயம். அந்த ஐயத்தைக் கடைசி இரண்டு அடி தீர்த்து விட்டது.

"ஆ! ஆ! என்னபாட்டு! என்னபாட்டு" என்று கொல்லென்று வாய்விட்டுச் சிரித்து விட்டான். பெண்களெலாம் அவனோடு சேர்ந்து சிரித்தார்கள். ரத்தினமும் ஒப்புக்குச் சிரித்தாள். உள்ளுக்குள் வெதவெதப்பு; எங்கே அவளுங்களுக் கெல்லாம்தான் மாணிக்கத்தின்மீது ஆசைவச்சிருக்காள் என்பது தெரிந்து விட்டதோ என்ற வீண் பிரமையால் பயப்பட்டாள்.

மாணிக்கம் தன் வேலையை இத்தகைய் பாட்டுகளுக்கிடையே காலம் போவதே தெரியாது செய்து வந்தான். இப்படியே பாட்டுங் கதையுமாக நடவு நடும் பெண்கள் ஒரு காணி நிலத்தையும் தோற்றம் தெரியாமல் நட்டு விட்டார்கள். நட்டவர்கள் எல்லோரும் தன் தன் மெனையை முடித்துவிட்டு காலங்கோலமாக வீட்டுக்குச் சென்றுவிட்டனர்.

ரத்தினம் மட்டும் மொழமெனையை மூன்றுமணி நேரமாக நட்டாள் பெண்களெலாம் போய்ச் சேரும் வரையில், மாணிக்கத்தை அப்பொழுதுதானே தனியாகச் சந்திக்கமுடியும், ஏதாவது பேசமுடியும்! எல்லா பெண்களும் கண்ணுக்கெட்டிய தூரம் சென்று மறைந்தனர்; வயல் வெளிகளிலே யாருமில்லை. அவரவர்கள் தத்தம் வேலைகளை முடித்துக் கொண்டு வீடு சென்று விட்டனர். மாணிக்கம் ரத்தினம் இவர்களைத் தவிர்த்து. பெற்றோர்களில்லாத இரண்டு இளம் உள்ளங்கள் எவ்வளவு நாழி கழித்து வீடு வந்தால்தான் யார் கேட்கப் போகின்றார்கள். ஏழை ரத்தினத்தின் தாய் தந்தையர்கள் இறந்து விட்டார்கள். மாணிக்கத்தின் தாய் இறந்து ஒரு ஆண்டுக் காலந்தான் ஆகிறது. தந்தையை அவனுக்குத் தெரியவே தெரியாது, அத்துணை ஆண்டுகள் ஆகிவிட்டன அவர் இறந்து. ஆகையினால் தான் மாணிக்கமும் ரத்தினமும் கலந்து வயல்வெளியிலே ஒளிவீசிக் கொண்டிருந்தன. நடவை முடித்து விட்டு கரையேறினாள் ரத்தினம்.

உடனே மாணிக்கம் "அடி புள்ளே ரத்தினம் நீ நடவு நடும் போது என்னமோ பாட்டுப் பாடி என் மனசையே கரைச்சிட்டியே இன்னுமா புள்ளே என்மேலே சந்தேகம். அப்பப்பா ஏந்தான் இந்த சந்தேகம் ஒன்னைப் புடிச்சி ஆட்டுதோ? இந்தா பாரு புள்ளே "இனிமே நானு ஒன்னைத் தவிர வேற யாரையும் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன். அடி ஏங்கண்ணே, அதிரசத்தின் ருசியே, நெல்லு பயிரின் வளமே, நீசத்தண்ணி மணமே. ஓணாங்கொடி ஓயிலே நீதாண்டி எம்மனைவி, நீதாண்டி எம் மனைவி, இது உண்மை, நாம பேசற பேச்சி மீது சத்தியம் செய்யறேண்டி.



என்னை நம்பு. இன்னிக்காவாது நம்பறியா இல்லியாண்ணு பார்ப்போம். இரு இதோ வந்துட்டேம் புள்ளே" என்று ஓடி அங்குமிங்கும் கிடந்த கொடிகளை முறுக்கி மாலையாக்கிக் கொண்டு வந்தான்.

ரத்தினம் நான் ஒன்னைக் கட்டிக்கிறேன். இண்றதுக்கு அடையாளமா இந்தப் பச்சைக்கொடியை ஒங்கழுத்திலே தாலி மாதிரி நெனைச்சிகிட்டுப் போடறேண்டி இதுவே போதும் நாம் ரெண்டுபேரும் புருசன் பெண்சாதி இன்றதுக்கு சரிதானே." என்றான்.

ரத்தினம் நாணிக்கோணி நிண்ணு மண்ணைப்பார்த்துப் புன்னகை செய்துகொண்டிருந்தாள். அதைப்பார்த்த மாணிக்கம்.

"ஆமாம்! ரத்தினம் என்ன புது நகை ஒண்ணு போட்டிருக்கியே?"

"ஊம்! எங்கே?"

"அதோபாரு ஒன் வாயண்டை"

"எங்கே" என்று தடவுகிறாள்.

"இல்லேடி. நீ இன்னேரம் மண்ணைப்பார்த்து நாணிக்கோணி சிரிச்சியே. அந்தச் சிரிப்பை புன்னகை இன்னு சொல்லுவாங்க. அந்த நகை இருந்தாப்போருண்டி ரத்தினம் நம் வாழ்க்கையிலே குறையாத இன்பம் நெறைஞ்சி இருக்குண்டி."

"ஆமாம் மச்சான் நான் கூட கேட்டிருக்கேன் ஒரு பொண்ணுக்கு பயம், மடம், வெட்கம், பயிர்ப்பு இருந்தால் அதுவே அந்தப் பொண்ணு அணிஞ்சிருக்க நகைகளுக்கு சமான மிண்ணு, சரிதானா மச்சான். இதைத்தான் நம்ம ஊரிலே ஒரு வாத்தியாரம்மா வந்திருக்காங்களே அவுங்க அடிக்கடி சொல்லுவாங்க. அவுங்களுக்கு நான் படிக்கணும்ணு ஆசை மச்சான். ஊம் அந்த பாக்கியம் எனக்கு எங்கே இருந்தது, இனிமே இருக்கப் போவுது! என்றாள்.

"ஏழைக்கு ஏத்தது இந்த நகைகள் தாண்டி. அந்த வாத்தியாரம்மா ரொம்ப நல்லவுங்கதான்போல தெரியுது. சரி அது இருக்கட்டும் நீ கொஞ்சம் நல்லா சிரி பார்ப்போம்."

"போ மச்சான் எனக்கு வெட்கமா இருக்குது" என்றாள்.

"அட ஏஞ் சொக்ரா! வெக்கத்தை கக்கத்துல வச்சிக்கிட்டு சும்மா சிரி இன்னா..........."

"திடீரென்று எப்படி வரும் மச்சான் சிரிப்பு? நீ கொஞ்சம் சிரியேன் அதைப்பாத்துட்டாவது நானும் கூட சிரிக்கிறேன்."

"அட போபுள்ளே நீ சிரியின்னா என்னியே சிரிக்கச் சொல்றே" என்று சொல்லிக்கொண்டே சிரிக்கிறான். உழுந்து உழுந்து சிரிக்கிறான். ரத்தினமும் உழுந்து உழுந்து சிரிக்கிறாள்.

"மாமா இனிமே நம்ப இரண்டு பேரும் புருஷன் பெண்சாதி தானே."

"அட புள்ளே நீ பெரிய ஆளு. தாலி கட்டிட்டேன் இன்னுமா சந்தேகம். அட பெண்களே சந்தேகந்தானா? ஆமாம் புள்ளே ரத்தினம். மாணிக்கமும் ரத்தினமும் ஒண்ணுசேர்ந்துட்டுது. அது வீசற-

ஒளி நம்ம வாழ்வின் புதுப் பாதையைக் காட்டும். நம்ம கண்களுக்கு முன்னோடியாகச் சென்று வழி வகைகளைக் காட்டும். இனிமேல் நம்ம வாழ்விலே இருட்டே காணமுடியாது குட்டி ரத்தினம்."

"என்ன மச்சான்"

"பின்னே, நீ ரத்தினம்; நான் மாணிக்கம். ரெண்டும் பள பளத் தான் கல்லு. மாணிக்கமும் ரத்தினமும் சேர்ந்து வீசற வெளிச்சம் நம்ம கிருமத்தையே அலங்கரிச்சுடுண்டி. சரி நீ போயி வேலை யோடே எதாச்சியும் நம்ம ஊட்ல இருக்க தானியத்தை எடுத்து காச்சிவை. இதோ ஓம் பின்னாலியே மாடுகளைக் குளுப்பாட்டிக் கினு ஏரு கலப்பையை எடுத்துக்கினுவந்து சேரரேன். போறியா புள்ளே ரத்தினம். நான் வர்ரதுக்குள்ளே ஊடு பொன்னுமாதிரி இருக்கணும். ஏன்னா இத்தேசகாலம் பொம்பளை இல்லாத ஊடா இருந்துது. இப்போ மவராசி நீ போயி கைவச்ச எடமெல்லாம் பொன்னா இருக்கணும்."

"சரி மச்சான் நான் வாரேன் நீ சுருக்கா வந்து சேரு"

---

# பொய்கை ★

நா. தேசிகன்

*

வருவிருந்தைக் கைகூப்பி முகமலர்ந்து போற்றி
வரவேற்று விருந்தூட்ட அவர்சென்ற பின்னும்
பெருவிருந்தை எதிர்நோக்கிக் காத்திருந்து வந்தால்
பெருமகிழ்வாய் விருந்தூட்டி மகிழ்கின்ற இல்லம்
தருகின்ற காட்சியதாம்; தாமரையும் பூத்துச்
ச்ாம்பியுள்ள அல்லிநிறை பொய்கையிலே, பெண்கள்
வருகின்ற காட்சியுடன் நீர்மொண்டு செல்ல
மகிழ்முகமாம் தாமரையே! குவிகையாம் அல்லி!! 1

வட்டித்த மரகதத்தின் மரையிலையில் கொற்கை
வழங்குகின்ற நன்முத்தைக் கொட்டிவைத்த தொப்ப
ஓட்டிச்செல் நீர்த்துளிகள் காட்சிதரும் மீன்கள்
ஒளிச்சொக்க வெள்ளியெனத் தாவியங்கு வீழ்ந்தே
எட்டிச்சென் றேயங்கு மலர்வெள்ளிப் பேழை
ஏறிப்பின் நீர்தாவும்; மீன்குத்தி நோக்கித்
தட்டிச்செல் லக்கருதும்; தவளைதனைப் பற்ற
சாரைவழி பார்த்திருக்கும் மலர்நிறைந்த பொய்கை! 2

விரிந்தமலர்ப் பொய்கையிலே பெருவாத்தி ரண்டு
விளையாடி மலர்சுற்றி வருகின்ற காட்சி
அரிவையரை இல்லிருத்திப் பருவத்தைக் காக்கும்
அன்னையரைத் தோழியரை நினைவூட்டும்; ஆனல்
வரிவண்டு புகுந்தங்கு தேனுண்ணும் காட்சி
பழந்தமிழர் மணமுறையில் கருத்தொத்துக் களவு
புரிந்தொழுகும் அகவாழ்வை நினைவூட்டும்; தவளை
அருகிருந்தும் பூவையர்கள் விரும்பாதான் போலாம்! 3

# தவப் பேறு

ம. க. செயலெட்சுமி

*

என்றும் இல்லாத் தனித்தெம்பு அன்று அவளிடம் குடிகொண்டிருந்தது. முகத்திலே மகிழ்ச்சியின் சாயல் மூட்டம் போட்டது. வாயிதழ்க் கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் வெண்பற்கள் ஒளியை அள்ளி வீசின. கண்கள் மலர்ந்து காணப்பட்டன. அம்மலர்க் கண்களில் உள்ள கண்மணிகள் மொய்க்கும் வண்டெனத் தோற்றம் தந்தன. மிக்க ஆர்வத்தோடு மிளிரும் அக் கன்னிதான் முயன்று செய்யும் வேலைகளுக்கு இடையே மெல்லிய குரலில் தெள்ளிப் பாட்டை முணுமுணுத்தாள். இவ்விதம் இன்ப ரமான சூழ்நிலையில் இருந்த அப் பெண்ணின் இதயம் ஏதோ ஒரு குறிப்பிட்ட நாளை எதிர்பார்ப்பது போலத் தோன்றியது.

இந்நிலையில் இரவும் வந்தது. உணவு முடிந்தவுடன் சிலருடன் உரையாடி உவகைவானில் உலவும் உல்லாசச் சிட்டாகத் திரிந்து உண்ட களைப்பைப் போக்கிக் கொண்டாள். பிறகு தன் தோழிய ரிடம் விடை பெற்றுக் கொண்டு வந்து துயிலத் துவங்கினாள்.

சற்றேறத் தாழப் பதினொருமணி இருக்கும். உத்தரக் கட்டை யின் கீழே ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். இமைக் கதவுகள் மூடிய நிலையில் உள்ளே அவள் மனம் எதையோ கண்டுகொண்டு இருந்தது.

வீட்டில் இருந்த அவளுடைய பெற்றோர்கள் மண்ணகத்தை மறந்து உழைப்பின் அலுப்பினால் உயரிய தூக்க இன்பம் துய்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த வேளையில் தான் அனைவரையும் அதிர்ச் சிக்குள்ளாக்கும் அலறல் கேட்டது.

அடுத்த அறையிலே தமது பெண்தான் பிதற்றுகிறாள் என்று பெற்றோர் எண்ணிச் சென்று பார்த்தனர். அவர்கள் நினைத்தது போலவே அவர்கள் பெண்தான் ஓலமிட்டது. தூக்கத்திலிருந்து எழுந்து உட்கார்ந்து பெற்றோர் வந்ததையும் பாராது,

"ஐயோ! நான் செவிடா? ஒன்றுமே காதில் கேட்கவில்லையே! என் காதில் செம்பூரான் நுழைந்து விட்டதே! இனி நாளை என்னைக் காணவரும் மணவாளன் என்னை எவ்விதம் மணப்பான்? செவிடெனத் தெரிந்தால் என் எண்ணம் தவிடெனத் துகள்போல் தூள் படுமே! எண்ணாதை எண்ணம் எண்ணி எட்டாத கோட்டை கட்டிக் கொட்டாவி விட்ட என்னைக் கொன்று விட்டதே ஒரு சிறு புழு! இனிமேல் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் சரிபாதி சுவைக்க முடியாதே! காதிருந்தும் கேளாத மண் மாண் புனைபாவை யாய் மாறி விட்டேனே! இப்போதுதானே காதின் அருமை தெரி கிறது! ஐயோ... ஐயோ!" என்று அரற்றி அழுது அலமந்தாள்; ஆர்த் தாள்; வேர்த்தாள்.

அனைத்தையுங் கேட்ட பெற்றோர்கள் அருகிற் சென்று அவளை எழுப்பிவித்துப் படுக்கையை இடம் மாற்றி நெற்றியிலே திருநீறு

நீட்டி விட்டுப் "பகல் முழுதும் பூங்காவில் விளையாடி வருகிறாள். 'போகாதே' என்றால் கேட்டால் தானே! எங்கேனும் பயந்து கொண்டு வந்து கெட்ட கனாக்கண்டு பிதற்றுகிறாள்" என்று பலவாறாக வசைமாரி பொழிந்து விட்டுப் படுக்கச் சென்றார்கள்.

தேன் குடிப்பது போன்ற தெள்ளிய துயில் கலைத்த கதறலாகிய தேள் கொட்டிய நிகழ்ச்சியை அவர்கள் உள்ளங்கள் ஏசித் துயின்றன. அவர்களால் கட்டாயமாக வேற்றிடத்தில் படுக்கச் செய்யப்பட்ட பாவைக்கு அவர்கள் சொற்கள் காதிலேயே விழவில்லை. செவியே மரத்து விட்டாற் போன்ற ஒரு உணர்ச்சி ஏற்படவே தன்னிரு கைகளாலும் சூடேறக் காதுகளைத் தேய்த்தாள். காது சிவந்ததே தவிர தான் பேசிப்பார்த்த சொற்கள் தன் காதில் கேட்டபாடில்லை!

ஆம்! அவள் செவிடாகிவிட்டாள். அவள் கண்டது கனவல்ல! ஒரு செம்பூரான் காதில் நுழைந்து செவிப் பறை என்னும் மெல்லிய தோல் உறுப்பைக் கிழித்துக் கொண்டு சென்று விட்டது, இனி அவள் வாழ்வு இருண்டுவிட வேண்டியதுதானா? அவளுடைய வாழ்வுச் சோலை வரண்டுவிட வேண்டியதுதானா? அழுத கண்கள் அன்றிரா முழுதும் அழுது சிவந்தன.

மறுநாட் காலை வேளை. இராமுழுதும் கண்விழித்துக் கலங்கியதால் அதிக நேரத்திற்குப்பின் அவள் எழுந்தாள். அவளுடைய பெற்றோர்களுக்குத் 'தன் செவிகேளாது' எனத் தெரிவித்தாள் சொல்லொணாச் சோகத்தோடு! பிடிபட்ட பாம்பால் கடிபட்ட கையைப்போல் உதறியுதறிப் பிசைந்தார்கள். என்ன செய்வது என்று எண்ணி ஏங்கினார்கள். ஏன் எனில் மாலை இடப்போகும் மணவாளன் தம் மகளைக்காண வேண்டிய அழகிழ இன்ப நாளில் ஆற்றற்கருந் துன்பம் அடைந்துவிட்டார்கள். ஆனால் வழக்கம்போல் மாலையும் வந்தது. மாலை இடும் மணவாளனும் வந்தான். முறைப்படி எல்லாம் நடந்தது. மணம் பேசி முடித்தார்கள். அன்றைய நிகழ்ச்சி முற்றிற்று.

திருமணத்திற்கு முன் மணவாளன் யாரும் இல்லாத் தனியிடத்தே பூங்காவில் மணமகளை எதிர்ப்பட்டான். அந்தப் பெண்ணின் வாயிலாகச் செய்தியனைத்தையும் அறிந்து கொண்டான். ஆனாலும் அவன் வைர நெஞ்சு அவளை வாட்டும் முடிவை மொழியவில்லை! கைதேர்ந்த சிறந்த மருந்தறிஞர் துணைக்கொண்டு காப்பாற்றுவதாகவும் உறுதி தந்தான் 'கவலல் வேண்டாம்' என்று ஆறுதலும் சொல்லி யகன்றான்.

முழவுகள் முழங்க, முரசுகள் தழங்க, இன்னியம் இயங்க, வாத்தியம் விளங்க நன் முறையில் மண விழா நடந்தேறியது. மைப்பிடித்த கண்ணாளைக் கைபிடித்தான் கட்டிளங்காளை. மட்டில் மகிழ்வில் மதுமறைந்து உண்டோர் மனக்களிப்புப்போல் மங்கை நெஞ்சு, தன் தாழ்ந்த இருண்ட வேளையிலும் தன் வாழ்விற்கு ஒளியூட்டிய கணவனை எய்தச்செய்த தவப் பேற்றை வாழ்த்திப் போற்றியது.

---

# காதல் நெஞ்சம்

மு. உலகநாதன்

"ஆயிரம் முறை எடுத்துச் சொன்னேன். அத்தனையும் கேட்டுக்கொண்டு பேயரைந்தவன் போல் பேசாமல் இருந்தீர்கள்! சொன்னால் கேட்டால்தானே? சொல்லும்போது வாயை மென்றுகொண்டிருந்தீர்கள்! இன்று ஐயோ! அப்பா!" என்று அடித்துக் கொள்ளுகிறீர்கள்!

பெண்ணைப் பெற்றால் பேணிக் காக்க வேண்டும். பணத்தைப் பெட்டியிலே போட்டு பூட்டாது விட்டு விட்டுப் பின் பணம் 'திருடு போய்விட்டதே திருடு' என்று கூவிப் பயனென்ன? எதனையும் வைக்கவேண்டிய இடத்தில் வைக்க வேண்டும்! தெரியாமலா அந்தக்காலத்தில் எங்களை யெல்லாம் ஐந்து ஆறு வகுப்போடு நிறுத்திவிட்டார்கள்.

அடுப்பூதப் போகிறவள்தானே? என்ன அணுகுண்டையா கண்டு பிடிக்கப் போகிறாள்? கல்லூரியாம் கல்லூரி! கல்லூரி என்ன வேண்டிக் கிடக்கிறது. கல்லூரியில் படித்துத்தானா சமைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்?

கல்லூரியில் கற்றது இதுதான்! இப்பொழுதுதாவது புரிந்து கொண்டீர்களா? காதலாம் காதல்! என்ன காதல் வேண்டிக் கிடக்கிறது? ஏதோ இங்கு அடித்து உதைத்தாலும் பெண்ணுரிமை என்று வாய் கிழியப் பேசினீர்கள். பாரதியார் கூறியுள்ளார். பாரதிதாசன் கூறியுள்ளார் என்று எனக்கு விளக்கம் தந்தீர்கள்.

அதன் விளைவுதான். நீங்கள் கொடுத்த செல்லம்தான் இன்று இவ்வளவு தொலைக்கு வளர்ந்திருக்கிறது. 'ஒரே பெண் ஒரே பெண்' என்று அடித்துக் கொண்டீர்கள். அந்த ஒரே பெண் நமக்குத் தேடித் தந்திருக்கும் புகழ் இதுதான். ஊரில் நடமாட முடியவில்லை நாலுபேர் முன் தலைகாட்ட வெட்கமாக இருக்கிறது. நாலுவிதமாகப் பேசுகிறார்கள். 'ஓடுகாலி' என்ற பட்டம். ஐந்து தலைமுறையாய் எனக்குத் தெரியும். இதுபோன்று அயலார் பேசக் கேட்டதில்லை.

குலம் என்னவோ? கோத்திரம் என்னவோ? ஊரென்னவோ? உற்றார் பெற்றார் யாரோ? ஒன்றுமே தெரியாது. 'அறியாத பிள்ளை' 'அறியாத பிள்ளை' அவளுக்கென்னடி தெரியும்! என்றீர்கள். இன்று அவளுக்குத் தெரிந்தது எனக்குக்கூடத் தெரியாது போலிருக்கிறதே!

அவனோடுதான் இன்று இவள் சுற்றினாளாம். கல்லூரிக்குச் செல்லவில்லையாம். ஏதோ புதுப் படமாம். கண்கரட்சிக் கொட்டகையில் 'இவளை' 'அவனோடு' கண்டதாக அடுத்தவீட்டு 'அலமு' சொன்னாள். ஆண்டவனுக்குக்கூடத் தெரிந்திராது. அவளுக்குத்

தெரிந்து விட்டது. இனி அவளுக்குத் தெரிந்தது அவள் வாயோடு நின்றுவிடவா போகிறது? என் மானத்தை வாங்குவதற்குத்தான் இவள் என் வயிற்றில் வந்து பிறந்துள்ளாள். இனி என்ன செய்வேன்? இவ்வூர் வாயை மூடுவதற்கு உலை மூடி இல்லை! எல்லாம் என் தலை எழுத்து" என்று தலையில் அடித்துக்கொண்டு இன்றைய ஒரு தாய் தன் கணவனிடத்துச் சொல்லிச் சொல்லிப் புலம்புகின்றாள்.

ஊரில் பேசுவது அவள் காதிலே நஞ்சு பிழிந்தது போலிருக்கிறது. காதைப் பொத்திக் கொள்கிறாள். வருந்துகிறாள், புலம்புகிறாள்.

இவ்வாறு **கலித்தொகையிலே** ஒரு தலைவி தூற்றப்படுகிறாள். ஊர் பல பேசுகிறது. அஞ்சவில்லை. உற்றார் பலர் பேசுகின்றனர் பொருட்படுத்தவில்லை. ஆனால் அவள் **தோழி** அதுபற்றி வினவுகிறாள். அது தலைவிக்கு வருத்தத்தைத் தருகிறது. உண்மையை உரைக்க அஞ்சுகிறாள். இருந்தாலும் நடந்ததை நடந்தவாறு கூறுகிறாள்.

"நீயும் நானும் சேர்ந்து ஆடியபோது அவனும் தானே உடன் இருந்தான். நாம் புனலாடினோம். புனலாடியபோது நமக்குத் துணையாக வந்து அவன் நம் அணிகளைத் திருத்தவில்லையா? பின் நம் தோளில் அழகிய செம் பஞ்சுக் குழம்பினாலே தீட்டப்பட்ட தொய்யில் எழுதியும் நாம் கட்டிய மணல் வீட்டிற்கு வந்து நாம் இட்ட பணிகளையெல்லாம் விரைந்து விரைந்து செய்தானே? உனக்கு நினைவு குறைந்ததோ? இவ்வளவு பணிகளைச் செய்தும் நம் காதலைப் பெறமாட்டாது அவன் ஏங்கி ஏங்கி நின்றானே நினைவிருக்கிறதா? நினைவிருக்கும் என்றே நினைக்கின்றேன். அப்படிப் பட்டவனோடு நான் எவ்வாறு உறவு கொண்டு ஊரில் உள்ளார் பழி தூற்றும் அளவுக்கு நடந்துகொள்கின்றேன் என்றுதானே நீயும் ஐயமுற்று கேட்கின்றாய்! சொல்லுகின்றேன் கவனமாகக் கேள்!"

"உலகத்திற்கு உண்மை நிகழ்ச்சி என்றுமே தெரிவதில்லை. உலகம் அடுத்தவரைப் பழித்தும் இழித்தும் குறை கூறுவதிலேயே தன் காலத்தைக் கடத்துகிறது. ஒன்றுமறியாத என்போன்ற பேதையரைப் பல மன்றிலேயும் பழிதூற்றி அவமானப்படுத்தும் ஒரு பெரும் நோயாலேயே இவ்வுலகம் பலகாலமாகப் பிடிக்கப் பட்டிருக்கிறது. என் செய்வேன்? என் ஒழுக்கத்தின்பால் நீயும் ஐயம் கொண்டு அவர் கூறியதையே கூறுவது ஒன்றே ஒன்றுக்குத் தானா? உண்மைதான்! "ஏடி! பெண்ணே! இயல்பாகவே உன் கைகள் சிவந்திருக்கிறது. மேலும் நீ நீரிடத்தே வலிதாக வேறூன்றியிருக்கும் கோரையைப் பிடுங்க விழைவது மேலும்மேலும் உன் கை சிவந்து போவதற்குத்தானா? எவ்வளவு நேரமாக இக்கோரையைப் பிடுங்குவது" என்று கூறியவாறே வந்து அவ்வலிய கோரையைப் பிடுங்கிக் கிழித்து எனக்கு விளையாடி மகிழும்படி பொம்மை செய்து கொடுத்தான். மறுக்கவில்லை! இதற்குத்தானா இவ்வளவு பேச்சு?"



இந்த ஒரு செயலுக்குத்தானா இத்தனை அலர் தூற்றல்? நீயும் சேர்ந்து கொண்டது இவ்வொரு செயலுக்காகவோ?

"என்னைப் பழிதூற்றும் மகளிர் ஊரரால் கொடியர் என ஒதுக்கப்பட்டார். அவர்கள் என்னைக் கூறுவது பின்பு தன்னைச் சாறும் என்பதை அறியாமல் அறிவழிந்து கூறிய பழிச்சொல்லாகும். அதனை நீ கடிந்து உரைத்து மறுக்காது நீ என்னை இங்கு கோபிக்க வந்தது முன்பு நாம் மலர் பறிக்கச் சென்றபோது அக்குளத்தின் ஆளம் கண்டு நாம் அஞ்சி வறிதே மீண்டோம். அப்போது அவன் தோன்றி அம்மலரைப் பறித்து அதன் புற இதழ்களை அகற்றி நாம் நுகருமாறு தந்தான். அதனை நீயும் கண்டாய். அந்த ஒரு செயலுக்காகவோ நீயும் இவ்வாறு வந்தாய்"

"நம் ஒழுக்க நிலை கெடாதவாறு விழிப்பாய் நின்று நம் ஆயத்தார் நம்மைக் காத்தனரே: அவரின் செய்கையை பயன் அற்றதாகும்படி அவர் கூறித் திரியும் ஊராரின் உரையை மறுத்து நிற்காமல் அது எனக்கு ஏற்றதே என எண்ணி இங்கு என் முன் வந்து நிற்கின்றாய். முன்னாள் "தொய்யில் எழுத நீ அறியாய் போலும்" என்று அவன் நம் தோள்தொட்டு நின்றதும் கைகளைப்பற்றித் தோளில் கரும்பு வடிவைத் தீட்டியதும் உண்மைதான். அது உனக்கும் தெரிந்ததொன்றே. அதனாலோ அந்த ஒரு செயலாலோ ஐயமுற்று என்பால் நீ ஈண்டு வந்தாய்?

"உன் நெஞ்சில் ஐயம் நிகழ்ந்துவிட்டது. இனி நான் அதைப் போக்குவது கடினமே. என் திருமணத்தின்போது அவனோடு ஒன்றுசேர்க்க என் சுற்றத்தார் எடுத்துக்கொள்ளும் முயற்சியை இவ்வூராரே செய்ய விரும்பி நிற்பாரானால் அதற்கு நான் என்ன முடியும்? அதுவும் நன்றே" என்கிறாள்!

அப்பாட்டு

"புனையிழை நோக்கியும் புனலாடப் புடைசூழ்ந்தும்,
அணிவரி தைஇயும் நம்இல்வந்து வணங்கியும்,
நினையுபு வருந்தும் இந்நெடுந்தகை திறத்திவ்வூர்
இனையளென் றெடுத்தோதற் கனையையோ நீஎன
வினவுதி ஆயின் விளங்கிளாய்! கேள் இனி:

செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்றாய் என்றவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந் தனைத்தற்கோ
கௌவைநோய் உற்றவர் காணாது கடுத்தசொல்
ஒவ்வாவென் றுணராய்நீ ஒருநிலையே உரைத்ததை?

ஒடுங்கி யாம்புகல் ஒல்லேம் பெய்தர அவன்கண்டு
நெடும் கயமலர் வாங்கி நெறித்துத் தந்தனைத்தற்கோ
விடுத்தவர் விறகின்றி எடுத்தசொல் பொய்யாகக்
கடிந்ததும் இலையாய்நீ கழறிய வந்ததை?

வரிதேற்றாய்நீ என வணங்கிறை அவன்பற்றித் [கோ
தெரிவேய்த்தோள் கரும்பெழுதித் தொய்யில் செய்தனைத்தற்
புரிபுநம் ஆயத்தார் பொய்யாக எடுத்தசொல்
உரிதென உணராய்நீ உலமந்தாய் போன்றதை?

எனவாங்கு

*அரிதினி ஆயிழாய் அதுதேற்றல் புரிபொருங்கு*
*அன்றுநம் வதுவையுள் நமர்செய்வ தின்றீங்கே*
*தான்நயந்து இருந்த திவ்வூராயின் என்கொலோ*
*நாம் செயற்பால தினி"*

(மருதக்கலி. 11.)

[வரி-தொய்யில்; இளையள்-இன்ன உறவுடையாள்; அளையையோ-அவ்வியல்புடையையோ, சேண்-நெடும்போது, பௌவம்-கடல்சாய்-கோரை, கொழுதி-கோதி, கௌவைநோய்-அவர் உரைக்கும் நோய். விரகு-அறிவு, உலமந்தாய்-வருந்தினாய்.]

இப்பாட்டில் ஊர்பேசும் அவருக்கு அஞ்சும் தலைவியின் மென்மைத் தன்மை உரைக்கப்பட்டது. ஊர், உலகம், பேசிய தூற்றுதலுக்குக்கூட அஞ்சாத தலைவி தன் தோழியே அதற்கு உடந்தைபோல் இருப்பதுகண்டு எனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு என்னால் ஆகாததை அவன் செய்து காட்டி என்னை மகிழப் பண்ணிய ஒன்றே அல்லாது வேறொன்றும் இல்லை. என்று நயம்படக் கூறித் தன் காதலைப் புலப்படுத்துகின்றாள்! என்னே அவளின் காதல் நெஞ்சம்!

## சந்தா நேயர்களுக்கு

ஆனந்த போதினிக்கு ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சந்தாத்தொகை எப்பொழுது செலுத்தப் பட்டாலும், நடைமுறை ஆண்டின் ஆடி முதற்கொண்டே கணக்கு வைக்கப்பட்டு, இதழ்கள் அனுப்பப்படும். மாத நடுவே அனுப்பப்படும் சந்தாத் தொகைகளுக்கு அடுத்து வரும் தமிழ் மாதத்தின் முதல் தேதி அன்றுதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்; தபால் கட்டணச் சலுகை சம்பந்தமான புது விதிகள் காரணமாக பத்திரிகை வெளி வரும் தேதியைத் தவிர, இதர நாட்களில் இதழ்களை அனுப்ப இயலாதவர்களாய் இருக்கிறோம் என்பதை நம் பத்திரிகை அன்பர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

சந்தா நேயர்கள் நமது காரியாலயத்திற்கு எழுதும் கடிதங்களில் அவரவர் சந்தா இலக்கத்தைத் தவறாது குறிப்பிட்டு எழுத வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

**மானேஜர்.**

# வள்ளுவர் எடுத்தாண்ட உவமை

மு. இராமலிங்கம்

*

எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என எண்ணப் பட்ட முறையில் அணி என்பது செய்யுட்குரியதோர் அழகு. "பல சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" எனச் செப்புவர் அறிஞர். அவ்வணி பல்வேறு வகைப்படும். அவ்வணிக்கெல்லாம் தலைசிறந்த தாய்க் கருதப்படுவதும் புலவர்களால் பெரிதும் போற்றப்படுவதும் உவமை யணியேயாம். இவ்வணியைக் காவியவாசிரியர் முதல் ஓவிய ஆசிரியர் ஈறாக எடுத்தாளுவர். சுருங்கக் கூறின் இவ்வுவமை அணியை எடுத்தாளாத புலவர் இல்லை எனக் கூறலாம். தோலா நாவின் மேலோராகிய சங்கச் சான்றோர் முதல், இக்காலப் புதுமைக் கவிஞர் வரை அதனுள் அடங்குவர்.

இம்முறையில் உலகுக்கு ஒப்புயர்வற்ற நூல் செய்த வள்ளுவத் தோன்றல் எடுத்தாண்ட உவமைகளைச் சிறிதளவு ஆராய்வாம்.

இந்த அலைகடல் சூழ்ந்த உலகில் பிற பிற நூல் ஆசிரியரும், உரையாசிரியரும், போதக ஆசிரியரும் எடுத்தாண்ட உவமையணி வேறு; நம் பொய்யில் புலவராகிய வள்ளுவப் பெருந்தகை எடுத்தாண்ட உவ்மையின் நயம் வேறு. இவ்வுவமையை பயில்தொறும், பிறர்க்கு நவில்தொறும் இன்பந் தருவன; இனிமை பயப்பன. முக்கனிச் சுவையினும் மிக்குடையன.

பிறரெல்லாம் கண்ணுக்குப் புலப்படாததையும் மக்கள் இனத்தில் ஒற்றுமையில்லாப் பொருளையும் சொல்லையும் எடுத்துக் கூறுவர். காணப்படுகின்ற இக் கண்ணகல் ஞாலம் தோற்றமே அன்றி மெய்யல்ல என்பதற்கு, எடுத்துக்காட்டிய உவமையாவது 'ஆகாயத் தாமரை,' 'மலடி சேய்,' எனக் கூறுவர். ஆகாயத்தில் தாமரையையும், மலடியின் மைந்தனையும், யாவரும் கண்டிலர். ஆகவே இல்லாப் பொருளை உவமையாகப் பேசுவது இல் பொருள் உவமையணி என்று அறிவரண் மிக்கவர் கூறுவர்.

இனித் தற்குறிப்பேற்றமா வும் உயர்வு நவிற்சி அணியாகவும் கூறுவர். அவற்றுள் தற்குறிப்பேற்ற வணியாவது. உலக நடையைக் கடந்து கூறுவது. மலர் இயல்பாகக் காற்றின் துணைக் கொண்டு அசையும் 'அவ்வழியில் அரசரும் புலவரும் வரின் உடனே கவியரசர் புவியரசரை நோக்கிக் கூறுவர்: புவியரசரே! அதோ நோக்குங்கள் நுங்கள் வருகை கண்டு, வருக, வருக என மலர் மலர்ந்து அசைகின்றது' எனக் கூறுவர். குறளில் இதுபோன்ற அணிகளிலும் எடுத்துக்காட்டுவமை அணியை நிறையக் காணலாம்.

**எழுத்துவமை:**

*"அகர முதல வெழுத்தெல்லா மாதி*
*பகவன் முதற்றே யுலகு,"*

என்ற முதற் குறளின் பொருள்தான் என்னை? அதன் விளக்கம் தான் யாது? இவ்வுலகத்தில் இறைவன் எங்ஙனம் உளான்!

எனப் பேசப் புகுந்த விடத்தில் வள்ளுவர் எழுத்தைப் பற்றிக் கூறுகின்றார். இக்குறளுக் குரை யெழுதிய உரையாசிரியர் பரிமேலழகர் "இது தலைமை பற்றிவந்த எடுத்துக்காட்டுவமை அணி" என விளக்கியுள்ளார். இந்தத் தமிழகத்தில் அன்றி எவ்வுலகிலும் வழங்கும் மொழிக்கெல்லாம் முதலாக இருப்பது 'அ' எனும் ஒலி இதுவே நாதமுமாம். உலகத்திற்குக் கடவுள் எங்ஙனம் முதற் காரணமோ அதுபோலவே எழுத்திற்கெல்லாம் அகரம் முதற் காரணம். உலகம், உயிர், மாயை என்ற இம் மூன்றினுக்கும், ஆதிகாரணம் இறைவன் என்பது வெள்ளிடை மலையன்றே? முதற் குறளில் உவமை பயின்றுள்ளதை நோக்குக. 'அகரம்' என்றவுடன் தமிழ் நெடுங்கணக்கில் வழங்கும் உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் இவை கூடிப் பிறந்த உயிர்மெய் இருநூற்றுப் பதினறும் வேறு பல விகற்பங்களும் கற்றார்க்குத் தெற்றென நினைவில் தோன்றுமாறுபோல்,

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

என்றவுடன் விறகில் தீ போல், பாலில் படுநெய் போல் எள்ளுக்குள் எண்ணெய் போல் அங்கும், இங்கும், எங்கும் பிரகாசமாய் ஏகபரமாக நிறைந்து நிற்கும் இறைவனின் எண்வகைக் குணங்களும் மாசு மறுவற்ற உண்மை யடியார்க்குத் தோன்றும் என்பது குறிப்பு மொழியாகக் கொள்ளக் கிடக்கின்றன. இனி படிக்காதவர்களினும் கற்றுப் பட்டம் பெற்றவர்க்கே கடவுள் பற்றிய ஐயம் உண்டாகின்றன ஆதலினால் முதற் குறளில் அவர் கற்ற எழுத்தை எடுத்துக்காட்டி இறையினது நிலையை விளக்கிவிட்டு அடுத்த குறளில் அதை வணங்கவேண்டும் எனக் கூற வந்தவர் "கற்றதனால் ஆய பயனென்கொல்?" எனவுங் கூறியுள்ளார்.

## காக்கை யுவமை :

இனி காக்கையை யுவமையாகக் காட்டிய இடத்தைக் காண்பாம். செல்வத்தை மிகுதியுஞ் சேர்த்து தானும் உண்ணமல், உடுக்காமல் வறியர் முதலிய ஏழைக்கும் ஈயாமல் கொன்னே பொருள் காத்துப் பின் இழக்கும் இரக்கமற்ற அரக்கர் கூட்டம் வள்ளுவத் தோன்றல் காலத்தில் இருந்திருக்கும்போல் தெரிகிறது. நில்லாத்தன்மையினையும் அழியும் இயல்பினையும் தன்னகத்தே கொண்டு மிளிரும் பொருளைக் கொடுத்து வையத்தைச் சூழலும் இசையினைப் பெறுக. செல்வம் பெற்றுழி ஊரின் கண்ணிருந்துதவும் குளம் போல் பிணிக்குதவும் மருந்து மரம் போல் வறுமையெனும் நோய்க்குச் செல்வம் எனும் மருந்தைக் கொடுக்க வேண்டும் செல்வர். இவ்வாறு ஈந்து வாழ்வதுதான் உலகின்கண் பிறந்த உயிர்க்குற்ற உதவி, உலக நடையை ஐயமற அறிந்து செல்வ முடையாரெல்லாம் அது அற்றவர்க்குக் கொடுத்து மகிழ்கின்ற இன்பம் இமையவருலகிலும் இல்லை. பொது மன்றத்தில் மக்கள் ஒவ்வொருவராகக் கூடிப் பின்னர் ஒரே காலத்தில் அவ்விடத்தை



விட்டு நீங்குவதுபோல் சிறுகச் சிறுக வந்து திடீரென்று செல்வம் சென்றுவிடும். ஆகலான் செல்வம் பெற்றுழிப் பிறர்க்குத் தந்து இன்புறுக. வண்டியின் சகடம் போல் சுழலும் பெற்றியது செல்வம். உடைமையும், வறுமையும் ஒரு வழியே நிற்கும் இயல்பு இல்லை எனக் கூறுகின்றார். பின் செல்வம் பெற்றவர் என் செய்தல் வேண்டும் எனக் கேட்பார்க்குக் கூறுகின்றார்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள"

காக்கையானது எங்ஙனம் உண்ணும் பொருள் கண்டுழித் தன்னினத்தை அழைத்து (கரைந்து) உண்ணுகின்றதோ அதுபோல செல்வம் பெற்றவர் தன்னினத்தவர் நாட்டவர்கட்கெனக் கொடுத்து மகிழும் இயல்புடையார்க்கே செல்வம் உடைத்து ஆம், எனக் கூறுகின்றார். ஈதலே செல்வத்துப் பயன் எனவும் பிறர்க்கென முயலும் பெருந்தகையாளர்க்குமே செல்வம் உரிமையினை உடைத்தாம். பறக்கும் பறவை பல இருக்கக் காக்கையை எடுத்துக் காட்டியதின் நோக்கம் யாதோ? எனின் பருந்து, கழுகு, கொக்கு, கிளி முதலிய வெல்லாம் தன்னினம் அழைக்கும் தன்மை பெற்றில. இவையன்றி ஏனைய விலங்குகளிடமும் இப்பண்பு காண்பதரிது. காக்கை ஒன்றே இயல்பாக அப்பண்பைப் பெற்றுள்ளது. ஆகலான்றான், வள்ளுவ நம்பி "காக்கை கரவா கரைந்துண்ணும்" என்ற பண்புவமையைக் காட்டிச் செல்வம் உள்ளவரும் அப் பண்பைப் பெறவேண்டும் எனக் கூறவந்தவர் "அன்னநீ ரார்க்கே யுள" எனவும் செப்பியுள்ளார். ஒரு பொருளும் இல்லாமல் ஏற்றார்க்கு மாற்றாது கொடுக்கும் பண்பில் ஒரு தனி இன்பம் உண்டெனவும் காட்டுகின்றார். ஈத்துவக்கு மின்பம் என்றுங் கூறுகின்றார்.

## நீருவமை :

நீரை யுவமையாகக் கூறிய குறளைக் காண்பாம். மனஞ் சென்ற விடத்தில் செலவிடாமல் எதிரதாக் காக்கும் அறிவினர்க்கு தீதொரீஇ நன்றின்பால் செலவிடுவது நல்ல அறிவு எனக் கூறலாம். மனமென்ற குதிரைக்கு அறிவென்ற கயிறு வேண்டும். இவ்வறிவுக் கயிறு இல்லையேல் பாகனில்லா யானை நெறிதவறிச் செல்லுமாப் போல் மனம் சென்றுவிடும். மனம் போன போக்கெல்லாம் போவது கூடாது. கண்ணில் கண்ட பொருளெல்லாவற்றையும் அடைய எண்ணுவது மனத்தின் இயல்பு. அதை மறுத்து நன்றெது? தீதெது என வும் செய்வன தவிர்வன எது எனவும் ஆராயத் தூண்டுவது அறிவு. இதை மறுத்துத் தீய வழியில் செல்வது தீயவறிவு. பழி, பாவம், பகை, அச்சம், என அஞ்சவேண்டிய வற்றிற்கு அஞ்சுவது நல்ல அறிவின் சால்பு. அவ்வாறு அஞ்சத்தக்க செயலும் அருவருக்கத் தக்க செயலுக்கும் அஞ்சாதது தீய அறிவான் பண்பு. இங்ஙனம் நல்ல அறிவும், தீய அறிவும் பெறுவது எதனால்? நல்ல அறிவுடையவனகவும் தீயவறிவுடையவனகவும் இருப்பது எதனால்? என்பன போன்ற வினவுக்கு தேவர் திருவள்ளுவர் கூறும் விடை

"நிலத்தியல் பால்நீர் திரிந்தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு."

சுவை, நிறம், தன்மை முதலிய பண்புகள் எல்லாம் நிலத்தின்கண் மழை வீழ்ந்த விடத்து மாறி, மாறி வேறு, வேருகத் தோன்றுவது போல உலக அறிவே இல்லாமல் உலகத்தில் பிறந்த இடத்தின் கண் உள்ள கூட்டத்தின் அறிவே தனக்காம். நல்ல அறிவிற்கும், தீயவறிவிற்கும் காரணம் இனத்தியல்பாகும் எனக் கூறுகின்ருர். "மாந்தர்க்கு இனத்தியல் பதாகும் அறிவு" எனக் கூற வந்தவர் "நிலத்தியல்பால் நீர் திரிந்தற்ருகும்' என்ற உவமையைப் பெய்துள்ளார். நீரில்லேயேல் வரையாது வழங்கும் வள்ளண்மை இல்லே. மழை இல்லேயேல் விளேபொருள் இல்லே. அவ்விளேபொருள் இல்லாக்கால் உயர்திணை, அஃறிணை என்ற இரண்டும் இல்லே. உலகத்திற்கு மிக வேண்டுவது நீர். விசும்பிலிருந்து துளி வீழ வில்லேயேல் பசும்புல் நுனி காண்பது மரிது. உலகத்தில் பெரும் பகுதி நெடுங்கடலால் சூழப்பட்டது. மழையில்லாவிடத்து அப் பெருங்கடலும் தன்னீர்மை குன்றும். தேவர்கட்கென நிகழும் சிறப்பாகிய பூசனேயும் நிகழாது. தன்பொருட்டுச் செய்யும் தவமும், பிறர்க்கென வழங்கும் தானமும் இவ்வியனுலகத்தில் செவ்வனே நடவா. காலத்தில் பெய்து உணவு முதலிய ஆக்கித் தானும் ஓர் உணவாகவு மிருந்து உதவுவது நீர். அந்நீர் எடுப்பதூஉம், கெடுப்பதூஉமாகும். நல்ல மழை இல்லேயேல் உயிரினுஞ் சிறந்த ஒழுக்கமெனும் விழுப்பமில்லே. இன்னும் இம் மழையினது பெருமையினே ஆசிரியர் திருவள்ளுவர் "நீரின் றமையாது" எனவும் "வானேக்கி வாழு முலகெல்லாம்" எனவும் துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே என விதந்துள்ளார். இத்தகைய மாண்புமிக்க நீரை எடுத்துவமையாகக் காட்டியுள்ளது எத்தகைய ஒப்புமை என்பதை உள்ளத்தில் ஓர்க. நீரின் மாட்சிமையை ஆய்ந்துணர்ந்த தமிழ்த் துறவி இளங்கோ வடிகள் "மாமழை போற்றுதும். மாமழை போற்றுதும்" என உள்ளத்தைக் கவரும் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளார். அருளுக்கும் வரையாது வழங்கும் வள்ளண்மைக்கும் (மாரிபோல் வழங்கும் பாரி) தலேவன் தலேவி (செம்புலம் பெய்நீர் போல் அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே) அன்பிற்கும் எடுத்துவமையாகக் கூறியுள்ளதையும் ஈண்டு நினேவிற்கொணர்க. முத்தமிழ்க் கற்ற வித்தகர்க்காக முதற் குறளில் எழுத்தை எடுத்துக்காட்டி இனி அவர்கட்கும் அறிவு ஏழைக்கும் விளங்குவான் பொருட்டு காக்கையையும், நீரையும் எடுத்து மொழிந்துள்ள செந்நாப்போதாரின் மதிநுட்பத்தின் வளத்தை விளக்க வல்லவர் யாவர்?

## குறளில் ஆமை:

ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன, விலங்கு, தாவரம், மக்கள், தேவர் என்றெண்ணப்பட்டவற்றுள் நீர்வாழ் இனத்தைச் சேர்ந்த ஆமையைப்பற்றிக் கூறிய விடத்தைக் காண்பாம். மனமொழி மெய் என்ற இவற்றைத் தீ நெறிச் செல்லா வண்ணம் அடக்குதல் வேண்டும். இதை எங்ஙனம் அடக்குதல் வேண்டும் என வினவின் கூறுகின்ருர் வள்ளுவர். மறந்தும் மனத்துள் அறமல்லாதவற்றை நினேயாமலிருப்பது மனவடக்கம். நினேப்பின் செய்தலோ டொக்கும் ஆதலால் நினேயற்க எனவும் யாவர்க்கும்கேடுதரும் செயலினே நாவால் வழுக்கியும் கூறுதல் கூடா. எதைக் காவாதொழியினும் குற்றமில்லே. நாவை மட்டும் காத்துக்கொள்க எனக் கூறுவது மொழி அடக்கம் எனவும் உடலால் துன்பஞ் செய்யாதது மெய்யடக்கம் எனவும் கூறுகின்ருர். "மனத்துக்கண் மாசிலனுதல் அனேத்தறன்" என மன வடக்கத்தையும் "யாகாவாராயினும் நா காக்க என (மொழி) நாவடக்கத்தையும் கூறி அடுத்து மெய் (உடம்பு) அடக்கத்தையும் விளக்க வந்த பெரு நாவலர்க்கு உவமை கூருதுகூற மனம் ஒவ்வவில்லேபோலும். ஆதலான்ருன்,

> "ஒருமையு ளாமைபோ லேந்தடக்கல் ஆற்றின்
> எழுமையு மேமாப் புடைத்து"

எனக் கூறியுள்ளார். ஒருவன் ஒரு பிறப்பில் ஐம்புலன்களேயும், பொறிகளேயும் அடக்கின் பின்வரக்கடவதான ஏழு பிறவிக்கும் அரணும் என விளக்க வந்தவர் ஆமையை எடுத்துவமையாகக் காட்டியுள்ளார். நீருள் வாழ்கின்ற பல உயிர்க் கூட்டங்கள் இருக்க ஆமையை மட்டும் ஏன் எடுத்துக் காட்டவேண்டும்? என நாம் ஆராயவேண்டும். தேவர்கள் பதினறு லட்சம், மனிதப் பிறப்புக்கள் ஒன்பது லட்சம், ஊர்கின்ற உயிர்க்கூட்டம் பதினெரு லட்சம், நீருள் வாழ்கின்ற கூட்டமும், பறவைக் கூட்டமும் மிருகக் கூட்டமும் தனித்தனியே பத்துப் பத்து லட்சம் என்று தொல்லறிஞர் ஒருவர் கணித்தறிந்து கூறுகின்ருர். இவற்றுள் நீருள் திரிவது பத்து லட்சம் என்பதைக் கண்டோம். பத்து லட்சம் நீர் வாழ்வனவற்றுள் வள்ளுவக் குரிசில் ஆமையை மட்டும் எடுத்துக் காட்டியதை நோக்கின் உண்மை வெள்ளிடைமலே ஏனேய நீர் வாழ்கின்ற கூட்டங்கள் இவ்வாமையைப்போல் உறுப்படக்கம் உள்ளதல்ல. மீன் முதலியன நாவின் சுவைக்காக வாளா அலேந்து திரிந்து தூண்டில் போன்ற கருவிகளிற் பட்டுத் தன்னுயிரையே அழித்துக்கொள்ளுகின்றன. ஆமையோ உணவின் பொருட்டும் தம்முறுப்புக்களே வெளியில் விடாது என்ற உண்மையை அறிந்த வள்ளுவர் ஆமையை உவமையாகக் காட்டியுள்ளார். இதிலிருந்து மெய்யடக்கத்துக்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டக் கூடியதில்லே என்பதையும் உணர்க.

> "ஆமைதன் னுறுப்புப்போல் ஐந்தும் தன்னுள்ளே அடக்குமாப்போ
> தீமைசெய் புலன்கள் ஐந்தும் தன்னுள்ளே செறியச்சேர்ந்தின்" [ல்

என்ற பிறர் வாக்கையும் உணர்க. ஐந்தாவன மெய், வாய், கண், மூக்கு, செவி என்று கொள்க. இவ்வைந்து மடக்கின் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நில உலகத்திலும் இனிச் செல்லக்கடவதான மேலுலகம் அண்மைக் கண்ணுடைத்தாம். உரனென்னும் திண்மையால் பொறி புலன் வழி மனத்தைச் செலுத்தாது இம்மை, மறுமை என்ற இரு திறத்தையும் ஆராய்ந்து வெகுளியை வெகுளச் செய்து குணம் எனும் பெருங்குன்றில் ஏறி எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்ட நிறைமொழி மாந்தர் பெருமையினேயே இவ்வுலகம் ஏத்தும் தொல்லேப் பனுவலின் துணிவுமதுவேயாம்.

புறப்பகையினும் அகப்பகையினை வெல்லுதல் வேண்டும். அகப்பகை யாவன அழுக்காறு, அவா முதலியவையும் காமமும், குரோதமும், மதமும் போன்றவையாம். ஆமை எங்ஙனம் தன்னுறுப்பை வோட்டுக்குள் மறைத்துக் கொள்ளுகின்றதோ அதுபோல உலகப் பொருள்களின் சிறுமையினை ஆராய்ந்த துறவி அகக் கருவிகளையும், புறக்கருவிகளையும் அடக்க வேண்டும். உடல் அழுக்கை நீராலும், நாவழுக்கை பாராயணத்தாலும், மன அழுக்கை தியானத்தாலும் கழுவவேண்டும். இவ்வாறு கழுவி அடக்கும் அறனறிந்த மூத்த அறிவுடைய பெரியாரைப் பார்க்க அறம் முதலிய நல்லவை யெல்லாம் வழியில் காத்துக்கொண்டு நிற்கும் அவரைக் காண்பதற்கு.

## திருக்குறளில் கொக்கு :

திருவள்ளுவர் திருக்குறளில் கொக்கை யுவமையாகக் காட்டிய இடமாவது பொருட்பாலில் காலமறிதல் என்ற அதிகாரத்தில் அரசியல் வாழ்வில் ஈடுபடும் அறிவுடையவர்க்குக் கூறுகின்ற போழ்து இந்தக் கொக்கை யுவமையாய்ப் பெய்துள்ளார். அவர் அங்குக் காட்டிய தொழில் உவமையின் நயத்தை எத்தகைய உயர்வு மொழியில் கூறினும் அடங்கா! எண்ணுகின்ற ஞான்று உள்ளம் உவகையில் பூரிக்காமல் இரா. தூயவினை செய்யும் ஒருவர் கல்வியில் தேர்ந்தவராகவும், கருமத் துணி வுடையவராகவும் கல்லாமையைக் கடிந்தவராகவும் செல்வத்துள் செல்வமாகிய கேள்விச் செல்வத்தில் வல்லவராகவும் செறுவார்க்கும் அழிக்க ஆகாத அறிவுடையவராகவும் தான் சில சொல்லி பிறர் வாய் நுண் பொருள் கேட்டு நல்ல சொற்களும், ஒரே வேளை வருதல்கூடும். ஆதலான் முற்ற ஆயும் அறிவுடையவராகவும் தன்பால் நிகழும் செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லாமல் தன் குற்றத்தை மறைத்துப் பிறர்க் குற்றத்தைப் பாராட்டிப் பேசாமல், தினைத்துணையாக் குற்றம் தன்பால் அறியாமல் நிகழ்ந்த விடத்து அதைப் பனைத்துணையாகக் கொண்டு பழிக்கஞ்சி. எப்பொருள்பற்றி யாவர் பேசினும் அவர் வாய்க் கேட்பினும் அப் பொருளின் மெய்மை யாது! என ஆராய்ந்து தெளிந்து வருமுன் காக்கும் தேர்ந்த அறிவுடைய பெரியாரைத் துணையாகக் கொண்டு இந்த நல்வினைத்தினும் வேறு துணை இல்லை என்று சிறுமை செய்யும் சிற்றினஞ் சேராமல் செய்கின்ற வினையின் திறத்தையும் தன் வலியையும் அதை எதிர்க்கும் பகைவரின் ஊக்கத்தையும் தனக்கும் பகைவர்க்கும் துணையாக வருகின்றவர்களின் பலத்தையும் தெற்றென ஆராய்ந்து செய்கின்றவர் மூன்றை முதலிடமாகக் கொள்ள வேண்டும். இடம், பொருள், காலம், என்பனவே அம்மூன்று. அவற்றுள் இடமும், பொருளும் கிட்டினாலும் காலம் கிட்டுவது அரிது, காலம் கிட்டாது போயின் அவ்விரண்டினாலும் முற்றும் பயனில்லை. காலம் மிக இன்றியமையாதது என்பதை விளக்க வந்த தேவர் திருவள்ளுவர்,

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து."



என மொழிந்துள்ளார். வினையை அகத்தெண்ணி மேற் செல்லாது இருக்கும் காலத்தில் உறுமீனுக்காக காத்திருக்குமாறுபோல் காத்திருக்க வேண்டும். காலம் வாயத்து வினை மேற் செல்லுங் காலத்து உறுமீன் கண்டுழிக் குறி பிழையாது கொக்கு குத்துவது போல் காலம் கிட்டியபோழ்து வினையை முடிக்கவேண்டும் என காலத்தின் செவ்வியை விளக்குகின்றார். வினை செய்யத் தொடங்குகின்றவர்க்கு இடம் பொருள் வாய்த்தாலும் காலமும் வாய்க்கவேண்டும். முதலாக வேண்டிய காலத்தை அது கிட்டுவது அருமை என அகத்தெண்ணிய நான்முகனார் இறுதியாகக் கூறுகின்றார்; கொக்கை வைத்து அதன் இருக்கையையும் செயலையும் உவமையாக விளக்கியுள்ளார். ஞாலத்தையே ஆளவேண்டும் என்று திட்டம் போட்டு படை, அமைச்சு, குடி, அரண், துணை முதலிய வெல்லாம் சேர்த்துக்கொண்டாலும் காலம் உதவவேண்டும். காலமில்லையேல் உறுபடையுள்ள வரும் ஊக்கம் அழிய நேரிடும். கொக்கை எடுத்துக் காட்டி 'வினையே ஆடவர்க்குயிர்" எனப்படும் வினைசெய்வதற்கு காலம் இன்றியமையாமை என விளக்கியுள்ளார். நாமும், காக்கை, நிலத்தில் நீர் வீழ்வது, ஆமை, கொக்கு, முதலியவற்றை யெல்லாம் பல்கால் கண்டிருப்போம். ஆயினும் இத்தகைய நுண்மாண் நுழைபுலம் புலனாகவில்லை. எழில் நலத்தையே அறிவாகப் பெற்ற செந்நாப் போதார்க்கு எளிதில் உண்மை விளங்கிற்று. கூற்றுவன் என ஒருவன் இருப்பின் அவனும் உயிர்களைப் பிடித்துச் செல்ல காலம் பார்ப்பான்.

"காலனுங் காலம் பார்ப்பான்' என்று கோவூர் கிழார் புறநானூற்றில் கூறியுள்ளதையும் நோக்குக. சென்ற நாள் இன்று வாரா. நாளை என்பது (அன்றறிவாமெண்ணாது) நம்முடையதல்ல என உணர்ந்தவர். சென்ற காலத்தையும், இனி வருங்காலத்தையும் நோக்காமல் அருஞ் செயல்களை அன்றே செய்வர். இது நோக்கிய இலக்கண நூல் செய்த ஆசிரியர் பவணந்தியார் காலம் இவை எனவும் இத்துணை எனவும் உணர்த்த வந்தவர் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்று காலங்களை முறையில் கூறாது "இறப்பெதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே" என இறப்பையும் எதிர்வையும் ஒரு பொருளெனக் கொள்ளாது ஒன்றாகக் கூறி நிகழ்காலத்தை இறுதியாகத் தெரிவிக்கின்றார் என்று கோடலும் ஒன்று.

---

## அட்டைப்படப் பாடல்

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு."

என்ற பாடல் வரியை அழகிய ஓவியமாகத் தீட்டியிருக்கிறார் நம் சைத்ரீகர்.

---

# நன்னீரே!

சு. மீனாட்சிசுந்தரன்

*

உலகமெலாம் நீரேயுன் நிலையைக் கண்டால்
உனைப்பற்றி உரைத்திடவும் முடியா தன்றோ
நலமில்லாப் பயிர்களுக்கிந் நானி லத்தில்
நற்கருணை நீசுரக்கில் நல்வாழ் வெய்தி
பலமுடனே பக்கபலம் சேர்க்க என்னும்
பாங்கினிலே பலகிளைகள் சூழ நின்று
கலகமெலாம் ஒழித்துநற் காட்சி யெய்தி
களிப்புடனே திகழ்ந்திடநீ கருணை செய்தாய். 1

கண்ணுக்குத் தெரியாமல் நீரே நீபோய்
காற்றுடனே கதிரவனின் காய்த லாலே
விண்ணுக்கு விரைந்தேகிக் கருமை பூண்டு
வெகுவான மேகங்கள் உருவம் கொண்டே
மண்ணுக்கு மலையுடனே சேர்ந்து மோதி
மழையாகச் சிறுதுளியாய்த் தோன்றி மேலும்
எண்ணாத பெருவெள்ள மாக வந்தே 2
ஏழைகளுக்(கு) ஏரிகுளம் நிரம்ப நின்றாய்.

நாசியொடு நாவுலரும் பசியுள் ளோர்தாம்
**நன்னீரே** உனைப்பருகின் பசிதான் எங்கே?
மாசுடைய அவர்முகமும் தெளிவு கொண்டே
மணமிகுந்த சுவையுணவு உண்டார் போலத்
தேசுடைய உடலாகத் திகழக் கண்டேன்
தேவருல கமுதுந்தான் நிகரோ உன்கால்
தூசுக்கும் நிகரில்லைச்; சொல்வேன் உண்மைத், 3
தூநீரே உன்றனது தொண்டு தானே.

உருகாதார் உள்ளத்துக் குவமை கூற
உலகினிலே ஓர் சான்று தரநீ யெண்ணி
"கருதாதே காயத்தின் நிலையை மக்காள்
கருங்கல்லும் கரைந்திடுதே பாரில்" என்றும்
"நிருதாதிகள் செய்யும்ஓர் செயலை யெல்லாம்
நினைத்திடிலே யான்செய்வேன்" என்றும் காட்டி
பெருகி வரும் வெள்ளமெனச் சென்று நீயும்
பெருமலையைச் சிறுமணலாய்ச் செய்தா யன்றோ. 4



இன்றுள்ளோர் நாளைக்கு இல்லா ராக
இவ்வுலகில் மாறுவரந் நினைவை யெல்லாம்
நன்றாக விளக்கிநீ காட்ட வேண்டின்
நானிலத்தில் நதியாகத் திரண்டு வந்துக்
குன்றாக விளங்குகின்ற இடத்தை யெல்லாம்
குழியாகச் செய்தேநீ ஏகு கின்றாய்
நின்றங்கு நோக்கிடிலே பள்ளந் தன்னை
நீணிலத்தில் மேடாகச் செய்கின் றாயே 5

இவ்வகையால் பலநன்மை புரித லாலே
இவ்வுலகோர் என்றுமுனை இனிமையாக
செவ்வியநல் லிசைச்சொல்லால் தினமு முன்றன்
சேவைதனைப் புகழ்ந்துசெந் தமிழ்ச் சொல்லாலே
திவ்வியமாய்ச் சிவன்சிரசில் 'கங்கை' என்னும்
திருப்பேராய்ச் சேர்த்தாரெம் பெரியோ ரன்றோ
எவ்வகையால் உனைநீப்பார் சிவனார் தாமும்
எண்ணிடிலுன் தொண்டுமிகப் பெரிய தாலே. 6

ஸ்ரீமத்

**விவேகானந்த சுவாமிகள்**

**விரிவான திவ்ய சரித்திரம்**

**(3-ம் பதிப்பு)**

சுவாமிகளின் அதியற்புதமான சரித்திரமும் அரிய உபதேசங்களுடன் அநுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் பிரசஞ்சாரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் இதுவரை எவராலும் வெளியிடப்படவில்லை.

கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 5. தபாற் செலவு வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, சென்னை-1

# மங்களத்தின் சுயம்வரம்

கே. சாம்பமூர்த்தி

*

**"சீச்சீ, என்ன வீடுடா இது!"**

...............

"சுசீலா......ஏய்...சுசீலா! இவளும் தொலைஞ்சுட்டாளா;" வீட்டில் வச்ச சாமான் வச்ச இடத்திலே இருக்கிறது இல்லை. கருமம்!" என்று தலையிலடித்துக்கொண்டு, 'விழுந்து விழுந்து' எதையோ தேடிக்கொண்டிருந்தான் மணி.

"ஏண்ணா, கூப்பிட்டியா?" என்று கேட்டுக்கொண்டே அவன் தங்கை சுசீலா வந்தாள்.

"ஆமாம், இங்கே வச்சிருந்தேனே ஒரு நீலக்கவர், அது எங்கே போச்சு?"

"ஓகோ, அதுவா! யாரோ மங்களம் என்கிற பொண்ணு உனக்கு எழுதின அந்த காதல் கடிதம்தானே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

அவ்வளவு கோபமும் அசடாக மாறி, "அதுதான். நீ அதைக் கூட எடுத்துப் பார்த்துட்டியாக்கும்...சரி, சரி."

"அதை தயவுசெய்து என்னிடமே கொடுத்துடு; நான் உனக்கு கோடி நமஸ்காரம் வேணும்னாலும் பண்றேன். யார் கிட்டேயும் சொல்லிடாதே" என்று கெஞ்சினான்.

"சரி, அப்படின்னா நான் சொல்றபடி செய்வியா? அந்த நீல கலர் ஸாட்டின் சாரி வாங்கித் தந்தால் நான் ஒருவர் கிட்டேயும் சொல்லலே!" என்றாள்.

"சரி, சரி, கொடு" என்று கடிதத்தை வாங்கிக்கொண்டு ஒரே தாவாக வாசல் பக்கம் தாவி எழும்பூர் செல்லும் பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றான்.

★ ★ ★

மணியும், சுசீலாவும், அண்ணன் தங்கை. இளம் வயதிலேயே தந்தையை இழந்த அவர்களை அவர்கள் தாயார் கௌரி அம்மாள் கஷ்டப்பட்டு வளர்க்க வேண்டியிருந்தது. ஒரு வழியாக மணி பி. காம் பாஸ் செய்துவிட்டு, ஒரு கம்பெனியில் அக்கௌண்டண்டாக வந்து சேர்ந்தான். குழந்தைகளை வளர்க்கக் கஷ்டப்பட்டிருந்த கௌரி அம்மாள், இப்போது அவர்களின் கல்யாணத்தைப் பற்றி சிந்திக்கலானாள். மணியோ தன் தங்கையின் கல்யாணத்திற் கப்புறம்தான் தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

மங்களம் மணியின் ஆபீஸில் டைப்பிஸ்டாக வந்து சேர்ந்தாள். நாளொரு ஆடையும், பொழுதொரு அலங்காரமும் செய்துகொண்டு 'கலகல'வென்று சிரித்துக்கொண்டு அப்ஸரசைப்போல அவள் ஆபீஸிற்கு வந்து போய்க்கொண்டிருந்தாள். அவள் வேலை செய்ய வந்த அன்றைக்கே அவளிடம் தன் மனதைப் பறிகொடுத்து விட்ட மணி, அவள் அழகையே பருகிக்கொண்டிருந்தான். சிறிது நாட்கள் கழித்து ஆபீஸ் விஷயங்களைப்பற்றி அவளிடம் பேச ஆரம்பித்த மணி, அவளிடம் அடிக்கடி ஏதாவது கேட்டுக்கொண்டிருந்தான். மங்களமும் களையான முகத்தையும், எப்பொழுதும் வேடிக்கையாகப் பேசும் சுபாவத்தையும் கொண்ட அவனிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தாள். அவளும் அடிக்கடி ஏதாவது சந்தேகம் கேட்க அவனை அணுகிக்கொண்டே இருந்தாள்.

அன்று சனிக்கிழமை அரை நாள்தான் ஆபீஸ். அவனை தனது வீட்டிற்குக் கூட்டிச் செல்ல அவள் பிரியப்பட்டாள். அவனுக்கு ஒரு கடிதம் எழுதி அதில் தன் வீட்டு விலாசத்தையும் எழுதி அவனுக்கொரு அழைப்பிதழை அனுப்பியிருந்தாள். ஆனால் அன்றைக்கென அவன் மானேஜர் பம்பாய் செல்லவேண்டியிருந்ததால் முக்கியமான சில கணக்குகளை அவனிடம் கேட்டிருந்தார். ஏமாற்றமடைந்த மணி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை வருவதாக மங்களத்தினிடம் சொல்லி விட்டான்.

★ ★ ★

"தலையெழுத்து, இந்த பஸ்களுக்கு என்ன வந்து தொலைத்து விட்டது, சேச்சே..."என்று முணுமுணுத்துக் கொண்டான் மணி.
"ஏண்டா, டேய் சினிமாவுக்கா அல்லது ஏதாவது மோகினியை தரிசிக்கவா?" என்று கேட்டுக்கொண்டே வந்து சேர்ந்தான் மணியின் சிநேகிதன் ரகு.

"அட, கருமமே! இவன் எங்கே வந்து தொலைஞ்சான்?" என்று அலுத்துக்கொண்டே "எக்மோரில் எனக்குத் தெரிஞ்சவர் ஒருத்தரைப் பார்க்கப் போகிறேன்" என்றான்.

"அடேடே, நானும் எக்மோருக்குத்தாண்டா போகிறேன்! எக்மோரிலே நீ எந்தத் தெருவிற்குடா போறே? சபாஷ்! இங்கிருந்து தனியா போகணும்னு நினைச்சேன்..." என்று நீட்டி நிறுத்தினான் ரகு.

தூக்கி வாரிப்போட்டது மணிக்கு "இது ஏதுடா இது! இன்றைக்கு நம்ம புறப்பட்ட வேளை சரியில்லை போலிருக்கு" என்று மன
தில் அலுத்துக்கொண்டு "நாசமாப் போச்சு" என்று ஆத்திரத்
துடன் கத்தியே விட்டான்.

"டேய், என்னடா நாசமாப் போச்சு? பர்ஸை கோட்டை விட்
டுட்டியா? ஏண்டா இப்படிக் கத்தினே?" என்றான் ரகு.
"ஒன்றுமில்லை; சனியன் பிடித்த பஸ்ஸுக்காக நின்னு, நின்னு
கால்வலி, கண்டு போச்சு!" என்றான் குழறியபடியே.
அப்பாடா! கடைசியாக. ஒரு பஸ் வந்தது. மணியும், ரகுவும்
முண்டியடித்துக்கொண்டு அந்த பஸ்ஸில் தொத்திக்கொண்டனர்.
"டேய் மணி, எனக்கும் சேர்த்துக் காசு கொடுத்திடு" என்றான்
ரகு.

"சரி, சரி" என்று ஸ்வரமில்லாமல் பதிலளித்தான் மணி.

ஒரு வழியாக எழும்பூர் வந்து சேர்ந்தவுடன் மணி, ரகுவைப் பார்த்து, "டேய், எனக்கு ரொம்பவும் நேரமாகி விட்டது; நான் வரேண்டா" என்ருன்.

"சரிதாண்டா 'இடியட்,' நீ எந்தத் தெருவிற்குடா போறே? நான் உன்னைக்கொண்டு விட்டுட்டு போறேன்."

"அட கடவுளே" என்று தலையில் அடித்துக்கொண்டு "வீரா சாமி பிள்ளை தெருவுக்குப் போகனும்" என்ருன்.

"என்னடா! வீராசாமி பிள்ளை தெருவுக்கா! அங்கே எந்த வீடு?"

"வீராசாமி பிள்ளைத் தெருவில் ஒண்ணும் நம்பர் வீடு" என்ருன் மணி.

"அடப்பாவி, இதை அப்பவே சொல்லித் தொலைச்சிருக்கக் கூடாதா? நானும் அங்கேதான் இப்போ போகிறேன்."

"கெட்டதுபோ, நீ இப்போ அங்கே என்னத்துக்குடா போறே?"

"அட, முட்டாள், எழும்பூரிலே எனக்கு ஒரு சித்தப்பா இருக்கார்னு உனக்குத் தெரியுமில்லையா, அவர் வீடுதாண்டா அது!" என்ருன் ரகு.

கடைசியில் பேசிக்கொண்டே ரகுவின் சித்தப்பா வீட்டை அடைந்தனர் ரகுவும், மணியும். வாசலில் மணியின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மங்களம், ரகுவையும், மணியையும் பார்த்துவிட்டு, "என்ன அண்ணு, இவரை நீயே எதிர்கொண்டு அழைத்துக்கொண்டு வந்துட்டயா?" என்ருள். பின் மணியைப் பார்த்து, "ஏது, எங்கண்ணுவை உங்களுக்கு முன்னுலேயே தெரியும் போலிருக்கே!" என்று வரவேற்ருள்.

"ஏய், மங்கி! நான் உனக்கு சொல்லி யிருந்தேனே, என் கூட ஒரு சோம்பேறி படிச்சான்னு, அந்த சோம்பேறிதான் இவன்."

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மணிக்கு ரகுவின் பேரில் கோபம் வந்தது.

"டேய், முட்டாள், உன்னுடைய சுறுசுறுப்புக்கு இங்கே ஒரு வரும் குறைஞ்சு போயிடலே" என்ருன் கோபமாக. காதலிக்கும் ஒரு பெண்ணிற்கு எதிரில் அவமானப் படுத்தப்பட்டால் ஒருவனிட மிருந்து கோபத்தைத் தவிர வேறென்ன எதிர்பார்க்க முடியும்?

"உனக்குக் கோபம் வேறே வருமா! சரி சரி; உள்ளே வா, எங்க சித்தப்பா கிட்டே அறிமுகம் செய்து விடறேன்" என்று அழைத்துக்கொண்டு உள்ளே போனுன்.

★ ★ ★

ரகுவின் சித்தப்பா சுந்தரம் சென்னையில் ஒரு பெரிய கடை வைத்திருந்தார். அதில் நல்ல லாபம் கிடைத்தது. எழும்பூரில் ஒரு வீடு வாங்கிக் கட்டிக்கொண்டார். மங்களம் அவரது இரண்டாவது பெண். மூத்த பெண்ணை நல்ல இடமாகப் பார்த்து கல்யாணம் செய்து கொடுத்துவிட்டார். தன் இரண்டாவது பெண்



மங்களத்தை அவளது இஷ்டப்படியே இண்டர் வரைக்கும் படிக்க வைத்தார். மேலும் டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்டு முதலிய குறுக்குப் பரீக்ஷைகளெல்லாம் பாஸ் செய்த பின் சோம்பேறியாக வீட்டில் இருக்க இஷ்டப்படாமல், மணி பார்த்து வந்த ஆபீஸில் டைப்பிஸ்டாக வந்து சேர்ந்தாள்.

இயற்கையாகவே நல்ல அழகுடைய மங்களத்தைப் பருவத்தின் குறிப்புகள் மேலும் மேலும் அழகியாக்கின. அவளுக்கும் கல்யாணத்தைச் செய்து முடித்துவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த சுந்தரம் இரண்டு மூன்று வரன்களைப் பார்த்துப் பிடிக்காது விட்டுவிட்டார்.

• • • •

ஹாலில் போடப்பட்டிருந்த ஸோபா ஒன்றில் உட்கார்ந்து ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார் சுந்தரம். "அப்பா" என்று அழைத்துக்கொண்டு ஓடிவந்த மங்களம் தன் தகப்பனரின் பக்கத்தில் நின்று கொண்டாள்.

'என்னம்மா' என்று தலைநிமிர்ந்த அவர் கூடத்தில் வேறு யாரோ வரும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். தன் அண்ணனின் பையன் ரகுவுடன் வேருெரு பையன் வருவதைக் கண்டு "வாருங்கள்" என்ருர்.

"அப்பா, நான் சொன்னேனே எங்கள் ஆபீஸ் அக்கௌன்டென்ட் மணி, அது இவர்தானப்பா" என்று தன் தகப்பனருக்கு மணியை அறிமுகம் செய்து வைத்தாள்.

"ஓகோ, ரொம்ப சந்தோஷம். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"மைலாப்பூர் பிராடீஸ் ரோடில் இருக்கிறேன்."

இப்படியே உலக விஷயங்களைப்பற்றி பேசின பின்னர் மங்களம் கொடுத்த காப்பியைப் பருகிவிட்டு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டான் மணி.

"நம்ம ஆத்துக்கு அடிக்கடி வந்து போயிண்டிருங்கோ" என்ருர் மங்களத்தின் தந்தை.

"ஆகட்டும்" என்று ரத்ன சுருக்கமாகப் பதிலளித்து விட்டு வீட்டைப் பார்த்து நடந்தான்.

* * *

மணி வீட்டை அடைந்தபோது இரவு மணி எட்டாகியிருந்தது. அவனுடைய தாயார் கோவிலுக்குப் போயிருந்தாள். சுசீலா மட்டும்தான் இருந்தாள். மணி வருவதைப் பார்த்த சுசீலா,

"என்ன அண்ணு, மன்னியைப் பார்த்தாகிவிட்டதா?" என்ருள் கிண்டலாக.

"ஏய் சுசீ, இந்தமாதிரி யெல்லாம் பேசினல் எனக்குக் கெட்ட கோபம் வரும்" என்று அசடு தட்ட அவளை அதட்டிவிட்டு சாப்பிட உள்ளே போனுன். மறுநாள் அவன் காரியாலயத்திற்கு ரொம்ப

'டீக்காக' டிரஸ் செய்துகொண்டு போனான். ஆனால் அங்கு என்றைக்கும் சுருக்காக வரும் மங்களம் வெகு நேரமாகியும் வரவில்லை.

மணி மனதைத் திடப்படுத்திக்கொண்டு அன்று பூராவும் இருந்து பார்த்தான். அதன் பயன் மங்களம் அன்று காரியாலயத்திற்கு வரவே இல்லை. மணிக்கு இருப்பே கொள்ளவில்லை. அன்றுமாலை அவன் வீட்டிற்குச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ரகு வந்தான்.

ரகு மணியைப் பார்த்ததும், "ஏண்டாப்பா, இன்னிக்கு உன் தங்கை ஆபீஸுக்கு வரவில்லை?" என்று ஆவலை அடக்கமாட்டாது கேட்டான். ரகு மிகவும் வருத்தத்துடன் காணப்பட்டான்.

"டேய் மணி, உன்னுடன் சில விஷயங்களைப்பற்றி பேச வேண்டி இருக்கிறது. கொஞ்சம் மெரினா வரைக்கும் வருகிறாயா?" என்றான்.

"அதென்னடா, அப்படிப்பட்ட விஷயம்? சரி, கொஞ்ச நேரம் பொறு; இதோ வந்துவிட்டேன்." என்றான். சிறிது நேரத்தில் மணியும் ரகுவும் மெரினாவுக்கு வந்து சேர்ந்தார்கள்.

"ஏண்டா, என்னமோ சொல்லவேண்டுமென்றாயே, என்னடா அது?" என்றான் மணி.

"ஒன்றுமில்லேடா...மங்களம் உன்னைக் காதலிக்கிறாள் என்று இன்றைக்குத்தான் எனக்குத் தெரிந்தது. ஆனால் உனக்கு அதிர்ஷ்டம் இல்லேடா" என்றான் ரகு.

"டேய், என்னடா அது திடீரென்று ஒரு வெடிகுண்டை எடுத்துப் போடுகிறாய்? சீக்கிரம் சொல்."

"கலவரப்படாதே! மணி! இன்னிக்கி எங்க சித்தப்பா மங்களத்தினுடைய கல்யாணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அதாவது அவருடைய சிநேகிதர் ஒருவர் தன் பிள்ளைக்கு மங்களத்தைக் கேட்டு எழுதியிருக்கிறாராம். ஆகையால் மங்களத்தை அந்தப் பையனுக்குத்தான் கொடுக்கப் போகிறாராம். எவ்வளவோ மங்களம் சொல்லியும் அவர் கேட்க மறுத்துவிட்டார். அந்தப் பையன் வருகிற வெள்ளிக்கிழமை பெண் பார்க்க வருகிறானாம்" என்றான் ரகு.

"யாரடா அந்தப் பையன்? அவன் எங்கேயிருக்கிறானாம் தெரியுமா, உனக்கு?" என்று அழமாட்டாத குறையாகக் கேட்டான், மணி.

"எல்லாம் நம்ம வெங்கிட்டுதான்; அவன்தான், நம்மகூடப் படித்தானே அந்த சோனி வெங்கிட்டுதான். அவன் எங்கேயோ பனாரஸில் ஒரு காலேஜில் லெக்சரராக இருக்கிறானாம்" என்று சொல்லியபடியே மணலில் உட்கார்ந்தான். மணி எதுவும் புரியாது அவன் பக்கத்தில் உட்கார்ந்தான். இருவரும் சிறிதுநேரம் ஒன்றும் பேசவில்லை.

"டேய், நம்ம வெங்கிட்டுவாடா? ம்......" என்று அலுத்துக் கொண்டான் மணி.

• • •



அன்று வியாழக்கிழமை மாலை மணி ஐந்திருக்கும். மணி தன் ஆபீஸை விட்டு வெளியே வந்தான். வெளியில் தனக்காக மங்களம் காத்துக் கொண்டிருந்ததைக் கண்டான்.

"ஏன் மங்களம், நீ இன்னும் வீட்டுக்குப் போகவில்லையா? நீ ஏற்கனவே தலை வலிக்கிறதென்று ஒருமணி நேரம் முன்னதாகவே போனாயே?" என்று விசாரித்தான் மணி.

"இல்லே, இன்றைக்கி நான் உங்களுடன் ஒரு விஷயம் பேச வேண்டும். அதற்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன்."

"அப்படி என்ன விஷயம்? நானே நிச்சயதார்த்தத்துக்கு என்னையும் வரச் சொல்லுவே, அவ்வளவுதானே!" என்றான் கேலியாக.

"நான் எதையோ சொல்ல வந்தால் நீங்க ஒரு அர்த்தம் எடுத்துண்டு பேசறீங்களே?" என்று வருத்தத்துடன் கூறினாள்.

பின் அவ்விருவரும் மெதுவாக நடந்து ஹைக்கோர்ட் பீச் பக்கத்தில் ஒரு மணல் பரப்பில் உட்கார்ந்து கொண்டனர். இருவரும் பல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தனர்.

இருள் கவியத் தொடங்கியது. மணியும் மங்களமும் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தனர். எழும்பூர் பஸ்ஸில் மங்களத்தை ஏற்றிவிட்டு, மணி மைலாப்பூர் செல்லும் பஸ்ஸில் ஏறிக்கொண்டான். நடைப்பிணம்போல அவன் வீட்டை அடைந்ததும் வேண்டா வெறுப்பாக இலையின் முன் உட்கார்ந்து விட்டு எழுந்து கை அலம்பச் சென்றுவிட்டான்.

மறுநாள் வெள்ளிக்கிழமை. மணி காரியாலயம் சென்றான். அன்று முழுவதும் மங்களத்தின் மேஜை காலியாக இருந்ததைக் காணத் தவறவில்லை. வீட்டில் அவள் தலைவிதியை நிர்ணயித்துக் கொண்டிருக்கும்போது அவளை ஆபீஸில் எப்படி எதிர்பார்க்க முடியும்? வீட்டிற்குச் செல்ல மனமில்லாமல் மெதுவாகக் கடற்கரையை நோக்கி நடந்தான்.

"டேய் மணி, நில்லுடா; இதோ வந்துட்டேன்", என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டு நின்று திரும்பிப் பார்த்தான். தனக்கு முன் ரகு எதிர்ப் பிளாட்பாரத்திலிருந்து ஓடி வருவதைக் கண்டான்.

"மணி, தெரியுமா சங்கதி? அந்தப் பயல் வெங்கிட்டு, மங்களத்தை கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியாதென்று சொல்லிவிட்டான். எங்க சித்தப்பா ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்" என்று இரைக்க இரைக்கச் சொன்னான்.

"டேய், என்னடா கலாட்டா பண்றே?" என்றான் மணி, பாதி கோபத்துடனும் பாதி மகிழ்ச்சியுடனும்.

"ஆமாண்டா, உனக்கு எதுவும் கேலியாகத்தான் இருக்கும் நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே, சித்தப்பா ஆத்துப் பக்கம் வா சொல்றேன்" என்று கூறிவிட்டு அவன் போய்விட்டான்.

* * *

அன்று இரவு ரகு, மங்களம், சுந்தரம் மூவரும் சாப்பாட்டிற்குப் பின் நடுஹாலில் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருந்தனர்.

"ம்...என்ன பண்றது, இனிமே நம்ம மங்களத்துக்கு வெளியிடத்திலே தான் பிள்ளைபார்க்கணும்" என்றார் கவலையுடன்.

"சித்தப்பா, நான் ஒண்ணு சொல்றேன் கேக்கறேளா? அன்றைக்கு வந்தானே ஒரு பையன்—நம்ம மங்களம் ஆபீஸ் அக்கௌண்டன்ட்—அவனையே நம்ம மங்களத்துக்குப் பார்த்துட்டா என்ன? அவன் கூட நல்ல வேலையில்தான் இருக்கான். பார்க்கவும் நன்றாக இருக்கிறான்; அது தவிர, நம்ம மங்களத்துக்குக்கூட இஷ்டம் தான்" என்றான் மெதுவாக ரகு.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த மங்களம் கன்னங்கள் சிவக்க ரகுவைப் பார்த்து முறுவலித்தாள்.

"சரி, பிராப்தம் எப்படி யிருக்கோ அப்படியே முடியட்டும்" என்றார் சுந்தரம். மறுநாள் சுந்தரம் வீட்டிற்குப் போயிருந்த மணி மங்களத்தின் மூலம் முதல்நாள் நடந்தவற்றை அறிந்து கொண்டான்; மணி முகத்தில் அசடு வழிய அவள் கைகளைப் பற்றப் போனாள்.

* * *

கல்யாணமாகி மங்களம் புக்ககம் போகும்போது, அவர்களை வழியனுப்ப வந்த சுந்தரம் பக்கத்து அறையில் பேச்சுக்குரல் கேட்டு நின்று கவனித்தார்.

"மணி, நடந்த விஷயம் உனக்குத் தெரியாதே! உங்கள் கல்யாணமே என்றால் தாண்டா நடந்தது."

"என்னடா கயறு திரிக்கிறே?"

"நிச்சயதார்த்த தினத்திற்கு முதல் நாள் நீயும் மங்களமும் ஹைக்கோர்ட் பீச்சிலே உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, வெங்குட்டுவைப் பார்க்கும்படி செய்து அவனிடம் உள்ளதைச் சொல்லி பெண் பிடிக்கலேன்னு அவனைப் பேசும்படி வச்சுட்டேன்" என்று விளக்கினான் ரகு.

"டேய், உனக்கு நான் எந்த விதத்தில்டா நன்றி கூறுறது" என்று சந்தோஷத்துடன் கட்டிப் பிடித்துக்கொண்டான், மங்களம் பெருமூச்சு விட்டாள்.

"இதுலே என்னப்பா இருக்கு, எப்படி நடக்கணுமோ அப்படி நடந்திருக்கு" என்று வேதாந்தம் பேசினான் ரகு.

"ஆமாம்பா, நீ சொல்றது சரிதான்" என்று ரகுவை ஆமோதித்துக்கொண்டே உள்ளே வந்தார் சுந்தரம்.

---

# யானைப் பரிசு!

பாரதிநேசன்

*

தேன் தமிழிலுள்ள சில சொற்கள் பல பொருட்களைக் கொடுக்கின்றன அல்லவா? அப்படிப்பட்ட சில சொற்களை மையமாகக் கொண்டு பாடல் புனைந்து ஒரு சிறு நகைச்சுவை நாடகம் நடத்துகிறார் புலவர்.

அது இது,

ஒரு சிறிய குடில்! அந்தச் சிறிய குடிலைச் சுற்றி ஒரு சிறிய பொழில்! பொழில் சிறிதெனினும் பூத்து புதுமணப் பெண்போல் தலையிறங்கி நிற்கும் பூஞ்செடிகளின் எழில் பெரிது! பெரிது!!

விரி மலர்கள் வாசம் காட்டி பறித்தன பார்ப்போர் மனதை! சாலை வழிபோவோரை சோலைமலர்கள் ஈர்த்தன!

அத்தகு பூங்காவின் நடுவில் அமைந்திருந்த சிறிய குடிலின் முற்றத்தின் மூலையில் யாழொன்று கிடந்தது. அதன் பக்கத்தில் பாணி கவலைபடர் முகமேந்தி அமர்ந்திருந்தாள். ஆம்; அந்தச் சிறு குடில் சீர்மிகு செந்தமிழ் பாணனுடையது.

அவள் கண்கள் அடிக்கடி வாசலை நோக்கின. மெள்ள கண் இமைகள் ஒன்றோடொன்று நெருங்கிய உறவு பூண்டன. ஆம்; அவள் அயர்ந்து தூங்கிவிட்டாள். ஆனால் அவள் மனம் சிலிர்த்தெழுந்தது!

'பாணன் போய் நாட்கள் பல ஆயின. இன்னும் திரும்பவில்லை. யாது காரணமோ? என்ன நேரிட்டதோ? பரிசில் பொருள் கிட்டியதோ? கிட்டிய பொருள் தட்டியதோ? யாதொன்றும் தெரியவில்லையே?' என்று எண்ணியெண்ணி பாணியின் உள்ளம் தளர்ந்தது.

நேரம் நீண்டது!

திடீரென்று "அன்பே" என்று ஒரு குரல் குழைவுடன் அழைத்தது. பாணி திடுக்கிட்டு கண்விழித்தாள். சரேலென்று எழுந்தாள். எதிரே பாணன்-தன் இல்லக் கிழவன் நிற்பதைக் கண்டாள். ஆர்வத்துடன் அவனை நெருங்கினாள். அவனைப் பார்த்தாள்.

அழகிய புத்தம் புதிய புத்தாடை அணிந்து கம்பீரமாக நின்று கொண்டிருந்தான். பாணியின் செவ்விதழ்கள் மெள்ள விரிந்தன. இளம் பாணனும் பாணியுமல்லவா அவர்கள். பாணனும் "அன்பே" என்று கூறி அவளை அணைத்துக் கொண்டான்.

அவள் கேட்டாள், "அன்பரே, நீண்ட நாட்களாகி விட்டனவே என்னைப் பிரிந்து. ஆமாம், உலகம் புகழும் இராமனைப்பாடி என்ன கொண்டு வந்தீர்கள்?"

அவன் சொன்னான்; "அன்பே, உனக்காகவே ஒரு பரிசு வாங்கி வந்திருக்கிறேன். சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள் அத்தான்." அவன் மார்பில் சாய்ந்தபடியே குழைவுடன் கேட்டாள் பாணி.

"புதுமையான **களபம்**" என்றான் பாணன்.

ஆனால் அவளோ 'சந்தனம்' என்று நினைத்துக் கொண்டு "பூசுங்கள்" என்றாள்.

பாணன் சிறிது யோசித்தான். பிறகு, "**மாதங்கம்**" என்றான்.

'சிறந்த பொன்' என்று நினைத்துக் கொண்டு, "அத்தான், பெண்கள் விரும்பும் பொருளாக வாங்கி வந்தீர்களே, நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். "யாம் வாழ்ந்தோம்" என்றாள்.

உடனே பாணன் "இல்லை இல்லை; வலியில் சிறந்த **வேழம்**" என்றான்.

'கரும்பு' என எண்ணிக் கொண்ட பாணி, "தின்னும்" என்று கூறி ஊடினாள்.

இது என்னடா இப்படி வந்து முடிந்து விட்டதே என்று எண்ணிய பாணன், "**பகடு**" என்றான்.

பாணி ஊடல் தீராமல் 'காளை' என்று நினைத்துக் கொண்டு "உழும்" என்றாள்.

பாணியை எப்படி சமாதானப்படுத்தலாம் என்று எண்ணிய பாணன் உடனே "**கம்பமா**" என்றான்.

ஆனால் அவளோ 'கம்பு மாவு' என்று நினைத்துக் கொண்டு "நற்கவியாம்" என்றாள்.

பாணனுக்கு ஒன்றும் பிடிபடவில்லை. பின் திடீரென்று பாணனின் முகத்தில் ஒளி படர்ந்தது. இந்தத் தடவை எப்படியும் தெரிந்து கொள்வாள் என்று எண்ணி "**கைம்மா**" என்றான்.

அதே நேரத்தில், வெளியேயிருந்த யானை துதிக்கையை மேலே உயர்த்தி பிளிறிற்று. பாணி அந்த ஒலியைக் கேட்டாள். சும்மா கலங்கி நின்றாள்.

தமிழ்ப் புலவர்கள் சொல்நயம் பொருள் நயம்பட கவி பாடுவதில் வல்லமை படைத்தவர்கள் என்பதற்கு மேற் சொன்ன நிகழ்ச்சி நிலைக்கலனாக உள்ளது.

இதோ அந்தப்பாடல் :

'இம்பர்வான் எல்லை இராமனையே பாடி
 என்கொணர்ந்தாய், பாணா! நீ' என்றாள் பாணி
'வம்பாதம் **களபம்**' என்றேன்; 'பூசும்' என்றாள்;
 '**மாதங்கம்**' என்றேன்; 'யாம் வாழ்ந்தோம்' என்றாள்;
'பம்புசீர் **வேழம்**' என்றேன்: 'தின்னும்' என்றாள்;
 '**பக(டு)**' என்றேன்; 'உழும்' என்றாள்; பழனந்தன்னை
'**கம்பமா**' என்றேன்; 'நற்களியாம்' என்றாள்;
 '**கைம்மா**' என்றேன்; சும்மா கலங்கினாளே!

[களபம்—யானை, சந்தனம்; மாதங்கம்—யானை, சிறந்த பொன்; வேழம்—யானை, கரும்பு; பகடு—யானை, காளை; கம்பமா—யானை, கம்பமாவு; கைம்மா—யானை.]

இந்த அழகான பொருள் நயம் அமைந்த பாடலின் ஆசிரியர் இரு நாட்டமும் இழந்த நாவீறுடைய பாவலர் அந்தகக் கவி வீரராகவ முதலியார் அவர்கள்!



# பாரதி நெஞ்சு பதறும்!

அருளரசன்

வீர உணர்ச்சி யெழுப்பிய பாரதி
 விந்தை மகாகவியாம்!—எங்கள்
 வெற்றி மகாகவியாம்!—அவன்
வீரத் தமிழ்ச்சுவை உண்டு களிக்கும்
 வியன்புவி யேபுவியாம்!—இன்றேல்
 விளங்கிடும் வீண்புவியாம்!

அச்சமழிந்தது; துச்ச மொழிந்ததே!
 ஆண்மை வளர்ந்ததையே!—புல்
 அடிமை தளர்ந்ததையே!—உடல்
பச்சைக் குருதியில் பச்சைத் தமிழ்வளர்
 பண்பு பிறந்ததையே!—விடுதலைப்
 பற்றுப் பிறந்ததையே!

வாலைக் குமரியர் சேலை நிகர்விழி
 வண்ணம் புனைந்தாச்சு!—மேனி
 வாகு நினைந்தாச்சு!—வானச்
சோலையி லேபூத்த சொக்க நிலாவொளி
 சொக்கித் திரிந்தாச்சு!—கவி
 சொல்லிப் புரிந்தாச்சு!

ஆலையி லேஇளங் காலையிலே செல்லும்
 அன்புடைப் பாட்டாளி—எங்கள்
 ஆண்டகைப் பாட்டாளி—அந்தி
மாலையிலே முக வாட்டத்துடன் வரும்
 வாழ்வு படிக்கவில்லை—பா
 வண்ணம் வடிக்கவில்லை!

பாரதி பாரம் பரிய மெனில்இன்று
 பாடிடும் பாவாணர்—தமிழ்
 பாடிடும் நாவாணர்—அட
பாரதி நெஞ்சமும் பஞ்சு படாத்துயர்
 பட்டுத் துடித்திடுமே!—உடை
 பட்டு வெடித்திடுமே!

தொடர் கதை:




49

வானமெல்லாம் இறைந்து கிடக்கும் வெண்ணொளி முத்துக்களும், வைரக் கற்களும் கண்ணடித்துக் கொண்டிருந்தன. அங்கு மிங்குமாகப் படர்ந்துள்ள கருமுகில்கள் நிலவொளியினால் வெண்பூச்சு பூசிக்கொண்டு நின்று கொண்டிருந்தது. அமைதியாக வீசும் காற்று, பகலின் வெயில் நோயின் கொடுமையைத் தணித்து ஆறுதல் கூறும் மருத்துவப் பணிப் பெண்ணாகத் தொண்டாற்றியது.

பலகணியினருகில் நாற்காலியிலமர்ந்து கொண்டு வானவெளியை நோக்கிக் கொண்டிருந்தான் பாரி. அவன் கைகளில் "உலகில் அமைதி நிலவ...!" என்ற மணிமேகலை எழுதிய ஆங்கிலநூல் இருந்தது. தோய்ந்த நிலவில் மெல்லிய ஒளி வண்ணம் அவன் மீது வெண்பூச்சு பூசிக்கொண்டிருந்தது. அவன் நினைவுகள் விண்வெளியூடே பல்லாயிரம் கல் தொலையைத் தாவிக் கடந்து அங்கே உறவாடிக் கொண்டிருந்தது. இளவேனிலின் இன்பத்துடிப்பின் மெல்லிய உணர்ச்சி அவனகத்தில் தவழ்ந்து கொண்டிருந்தது. அவனோடு வேறு யாரோ ஒருவர் உடனிருப்பது போலுணர்ந்தான். அதனைச் சுற்றிலும் யாழின் இசை போன்ற இளம் மகளின் இனிய சிரிப்பு ஒலிப்பது போலிருந்தது. அவன் தோளை யாரோ தொட்டு வருவதுபோல உணர்ந்தான். அவன் காதருகில் 'கலித்தொகைப் பாடலை யாரோ பாடுவதாக உணர்ந்தான். அவனை யறியாது ஓர் இளஞ் சிரிப்பு மலர்ந்தது.

"இப்பொழுது அமெரிக்காவில் பகற்பொழுதாக இருக்கும். மணிமேகலை எங்கு இருக்கிறாளோ? என்ன செய்கிறாளோ? ஏதேனும் பொதுக் கூட்டத்திற்காகப் புகைவண்டியிலோ, வானவூர்தியிலோ பயணம் செய்து கொண்டிருக்கலாம்! இல்லையெனின் ஏதேனும் பொருட்காட்சி சாலைக்கோ, கண்காட்சி சாலைக்கோ, கல்லூரிகளுக்கோ, வானொலி நிலையங்களுக்கோ, தொலைக்காட்சி நிலையங்களுக்கோ, நூலகங்களுக்கோ பல பணிகளுக்காகச் சென்று கொண்டிருக்கலாம். அன்றி, அறிஞர்கள், தலைவர்கள், கலைஞர்கள் யாருடனாவது உரையாடி ஆக்க முயற்சியில் தலைப்பட்டிருக்கலாம்..." எனப் பலவாறு எண்ணிய வண்ணம் அமர்ந்திருந்தான் பாரி.



அவன் நினைவுக் கூடத்தில் வண்ண வண்ண ஓவியங்கள் பொலிந்தன. மணிமேகலை அவனைப் பிரிந்து சென்ற அந்தநாளை—அந்த நிலையை அவனால் மறக்கவே முடியவில்லை.

..."மேகலையு எழிலரசியும் மணிக்கணக்காகப் பேசிக்கொண்டிருந்தனர். நோயின் வலிய பிடியில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கும் எழிலரசி உடல் குறையையும் பொருட் படுத்தாமல் தன் தோழியோடு பேசிக்கொண்டிருந்தாள். அன்பும் உணர்வும் பெருக்கெடுத்த அந்த நட்பின் திருவிழாவை நெஞ்சுணர்வுள்ளவர்களால் எளிதில் மறக்க முடியாது. ஆண்டுகள் பல பிரிந்திருந்த அன்பு நெஞ்சங்களல்லவா!...

"புற உலக வாழ்வு நம்மை நாடாதிருக்கின்ற வரை ஒருவர் கவலையின்றி அமைதியாக வாழலாம்; ஆனால், புற உலகம் காணும் நிலையினையுடைய வாழ்வுடையவர்கள் தங்கள் அக உலகின் உறவில் காதல் கொள்ளுவது இயலாததாகி விடுகிறது!"

மேகலைக்குப் பாராட்டுக்களும், விருந்துகளும் சொல்ல வியலாப் புகழ் மாலைகளும் குவிந்தன. அவள் நெஞ்சம் மலர்ச்சியோடு அவற்றைப் பெறவில்லை! நயத்தக்க நாகரிகம் பேணிப் பொறுமையோடு 'பாவை'போல இயங்கினாள்.

மறுநாள் வானவூர்தி வழியாகச் செல்லவேண்டும்!

ஏற்பாடுகள் எல்லாம் முடிந்தன.

கலங்கும் கண்ணீரோடு தன் தோழிகளிடமும்; எழிலரசி, பூம்பாவை, கண்மணி, அன்பொளி ஆகியவரிடமிருந்து விடைபெற்றாள். பாரியும் கண்ணனும் அவளோடு சென்னை சென்றனர். மணிமேகலை பேசவேயில்லை. அமைதியாக இருந்தாள். உள்ளத்தில் உணர்வெழுச்சி இருந்தால் வாய் ஊமையாகி விடுவது இயல்புதானே!

இரவெல்லாம் தனிமையாகச் சிற்றொளி பரப்பி எரியும் 'விடிவிளக்கைப்'போல மேகலையின் நெஞ்சம் தனித்துப் போராடிக் கொண்டிருந்தது. அவள் நிறைந்த 'தலைவி'யாகி விட்டாள்!

பாரி பெருமித உணர்வில் தன்னை மறந்திருந்தான். எங்கோ சென்று விட்டு மாலையில் வீடு திரும்பிய பாரி, மணிமேகலை சோர்ந்து படுத்துக் கொண்டிருந்ததைக்கண்டு நெஞ்சம் இடிந்து விட்டான். 'அவளுடல் நிலைக்கு ஏதேனும்...' எனப் பதறியது அவன் உள்ளம். நெருங்கினான்.

மேகலை விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள்! கண்கள் மூடியபடி இருந்தன. அவன் நெஞ்சுருகியது. தனக்குத்தானே உள்ள முருகுகிறாளே என நைந்தான். அவள் அழுவது அவன் நெஞ்சை வாள் கொண்டு அறுப்பதுபோலிருந்தது.

"மேகலை..."

அவளுடைய தண்மை வாய்ந்த கரியகுழலைத் தடவியபடி பக்கலிலமர்ந்தான். கண்ணைத் திறந்தாள். கண்கள் தாமரையாகிவிட்டிருந்தது. மணிக்கண்களிலே நீர்த்திரை படர்ந்து அவள் அழகு முகத்திலே துன்பக்களத்தைப் படைத்தது. பாரியின் தாய்மைப் பார்வை அவள் துயரை ஆற்றுவதற்குப் பதில் மிகுதியாக்கியது.

"மாமா!" எனக் கூவியபடி அவன் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு பொருமினாள். இணைபிரியா இரு காதல் பேட்டுகளிலொன்றை

வேடன் பிடித்து விட்டால் துணையிழந்த சிட்டு துடிப்பதுபோல துடித்தாள்! அவன் என்ன செய்யமுடியும்?

ஆட்டனத்தியைப் பிரிந்த ஆதி மந்தியைப்போல; ஆருயிர்க் காதலனைப் பிரிந்த வெள்ளி வீதியைப்போல மணிமேகலை கலங்கித் துன்புற்றாள்.

காலம் மாறினும் காலத்தால் மாறாத 'தமிழ்ப்பண்பு—பெண்மை உணர்வு இது' என நிலை நாட்டுவதுபோல இருந்தது அந்தக் காட்சி.

"மேகலை!......என்னம்மா இது?......ஏன் அழுகிறாய்?...யாராவது பார்த்தால் என்ன எண்ணுவார்கள்?...ஐயோ! சின்னக் குழந்தைபோல... அழலாமா?...கண்ணைத் துடைத்துக்கொள்."

எனக் கூறி, தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவள் கண்ணீரையும் மாற்றினான்!

தாய் அடித்த பின்பு. தன் சினம் தணியாமல் விலகி நின்று விம்மித் தேம்பும் சிறு பெண் குழந்தையைப்போல; துணையற்று ஏங்கிக் கிடந்த பறம்புமலை முல்லைக்கொடிபோல, மணிமேகலை ஆற்றாது அல்லலுழன்றாள்.

குடத்து விளக்கு போலக் குமுறிக் கொண்டிருந்த கொடுந்துயரம், அவன் ஆறுதல் மொழியாலும், அன்பு வருடலாலும் குமுறி எழுந்தக் கடலின் கொழிச் சீற்றம் போலப் பெருகிவிட்டது! சிலந்தி வலைப்பட்டச் சிற்றுயிர்போல் துடித்தாள். வீடு பற்றி எரியும்போது ஒரே ஆருயிர்க் குழந்தை அத் தீயில் அகப்பட்டு அல்லலுறும்போது, அது ஆற்றாது அலறித் துடித்து அழும் அவலக்குரல் அக் குழந்தையின் தாயின் காதில் விழ, குழந்தையைக் காக்க எரியும் வீட்டினுள் ஓட வெறியோடு முயலும் தாயை, உறவினர்கள் வலிய தடுக்கப் போராடி அல்லலுறும் தாய்மை உணர்வு மிகுந்த தாயைப்போலத் துடித்தாள்!

வாயில்லா ஊமை, கிணற்றில் விழுந்து தத்தளிக்கும் நண்பனைப் பார்த்துத் துடிப்பதைப்போல, நன்றியில் செழித்த நன்னெஞ்சமுள்ள மேகலையின் துயரைக்கண்டு உணர்வழிந்திருந்தான் பாரி.

காலமெனும் அரிய மருந்து தன் அமிழ்தக் கலையை வீசியது. துவண்டு கிடந்தாள் மேகலை. அவள் விரல்கள் துணியைப் பிசைந்து கொண்டிருந்தது.

"மேகலை,...ஏன் அழுகிறாய்?..."

விடைகாண முடியாத கேள்வியை—பலமுறையும் கேட்க வேண்டுமென்றெழும், அடக்க இயலாத ஆவலெழுப்பும் கேள்வியை,—அடக்க முயன்றும் முடியாது வெளிவந்த கேள்வியை, முடிவில் கேட்டு விட்டான்.

அவள் என்ன விடை சொல்லுவாள்?
ஒரு பார்வை பார்த்தாள்!
போதாதா?...

அவளுதடுகள் ஒருமுறை குவிந்தன.
முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

* * * *

பிரிவுக்கு ஆற்றாது துடிக்கும் அந்தப் பிஞ்சுப்பெண்மை நெஞ்சை உணர்ந்த பாரிக்கு உள்ளம் பாகாய் உருகியது. அன்போடு அவள் தோள்களைப் பற்றினான். அவள் அழுதுகொண்டிருந்தாள்.

"மாமா, நான்...போ...க...வி...ல்...லை...!..."—அவள் பேதைமை நெஞ்சம் ஆற்றாது கூறியது. பேசாச் சிலையாகி விட்டாள் அவள்.



அன்றிரவு முழுதும் அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றினான்.

நண்பர்கள் வானவூர்தி நிலையம் சென்றனர். மேகலை செல்லவேண்டிய வானவூர்தி பறப்பதற்குக் காத்துக் கொண்டிருந்தது. புகைப்படமெடுத்த பின்பு மற்றவர்கள் வானவூர்தியிலேறினர். மணிமேகலை, கண்ணன் முதலியவர்களிடம் வணக்கம் செலுத்தி விடைபெற்றாள். பாரியின் பக்கம் திரும்பவே இல்லை. சிரித்துத்தான் பழகினாள் என்றாலும் அது பொய்ச்சிரிப்பு என்பது நன்றாகத் தெரிந்தது.

பிரியும் கடைசி மணித்துளி வந்தது.

தான் நின்றிருந்த இடத்திலிருந்து பாரியைப் பார்த்தாள். பாரி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். காற்றில் அலைப்பட்டு கலைந்து நெற்றியில் புரண்டு விழுந்துள்ள குஞ்சு அவள் நெஞ்சில் பதிந்தது. மெல்ல நடந்து அவன் முன் வந்தாள். கண்களில அவளையும் மீறிக் கண்ணீர் பொங்கலாயிற்று.

"மணிமேகலை!" என மெல்ல அழைத்தான்.

"பாரி!..." என்ற முணுமுணுப்போடு அவன்கைகளைப் பற்றிக் கொண்டாள். அவள் கைகள் நடுங்கின

சிறிது நேரம் அமைதி.

"வருகிறேன்!..." மெல்ல தேம்பும் குரலில் பொங்கும் துன்பத்தை அடக்கிக்கொண்டே விடை பெற்றாள்.

அவள் வளைக்கையை விடாது பற்றிய பாரி, "மேகலை! நீ, நான் விரும்பிய இனிப்பை அளித்துவிட்டாய்! மேகலை, போய் வா! வெற்றியோடு வா! காத்துக்கொண்டிருக்கிறேன்......" எனக் கூறினான் உணர்ச்சி நடுங்கும் குரலில்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். ஒரு முறை இருவர் பார்வையும் ஒன்று தழுவி நிலைத்தது. அவள் தோளைத் தட்டினான். அவனோடு சிறிது தொலைவு நடந்து சென்று, பிரிந்தாள். வானவூர்திப் படியிலேறி, திரும்பிப் பார்த்தாள். புன்னகை பூத்தாள். வணக்கம் செலுத்தினாள்.

சற்று நேரத்தில் வானவூர்தி பறந்தது.

வானில் எழும்பி சிறு பறவைபோல அருகியது. பின்னர் முகிற் கூட்டத்தில் கண்ணுற் காணமுடியாதபடி மறைந்துவிட்டது.

★ ★ ★ ★

"அந்தப் பிரிவுக் காட்சி பாரியின் நினைவில் ஓர் இமைப்பொழுது தான் தோன்றியது. அவன் கண்களில் கண்ணீர் நிலவின் தூய ஒளியில் நல்முத்தைப் போலப் 'பளீர்' என மின்னியது. உடனே உதிர்ந்தது.

ஒரு நீண்ட நெட்டுயிர்ப்பு விடுதலை பெற்றது.

அமைதியாகச் சிந்திய 'நிலவு நீர்வீழ்ச்சி' தன் அழகு குன்றாத, மணமாகாத இளம்பெண்ணின் அழகுபோல நிறைவோடிருந்தது!

தன் பையிலிருந்த மணிமேகலையின் புகைப்படத்தை எடுத்தான்.

'கண்ணே, கண்களால் காணமுடியாத தொலைவில் நீ இருக்கிறாய். ஆனால், உண்மையில் என் நினைவில்—உள்ளத்தில்; உயிர் வாழ்கிறாய்! என் கனவுகளை நினைவாக்கிய தமிழ் மகளே! என்று என்னிடம் வருவாய்?' மேகலை, உன் வாழ்வுதானம்மா கலித்தொகை வாழ்வு"

அந்தப் புகைப்படத்தைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டான். கண்கள் அவனை யறியாமல் மூடிக்கொண்டன.

நிலவு சிரித்துக்கொண் டிருந்தது!

## 50

"திருவள்ளுவப் பெருந்தகை எண்பது குறட் பாக்களில் 'உலகம்' என்னும் சொல்லை எடுத்தாண்டிருக்கிறார். அந்த எண்பது திருக்குறள்களும் உலக மக்களனைவருக்கும் பொதுமையான அழுத்தமான அறிவுரைகளை, உலகியல் உண்மைகளை, இயற்கை அறத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அக்குறள்களில் நயமும், அறிவும் மிக்க குறள்களில் சில வற்றினை மக்கள் உணர்ந்தொழுகுவது உலக வளர்ச்சிக்கு அரிய வழியாகும்.

ஊன் உண்ணும் தீய ஒழுக்கத்தை ஒழிக்க வழி கூறும் வள்ளுவர்,

"தினற் பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப் பொருட்டால் ஊன்தருவார் இல்." என்று கூறுகிறார்.

"புலால் உண்ணும் பொருட்டு உலகத்தினர் உயிர்களைக் கொல்லாதிருப்பின் புலாலை விலைக்கு விற்பவரும் இல்லாது போவர்." என்கிறார். உயிர்களிடத்து அன்புகொண்டு வாழ்ந்து, அருளுணர்வு மிக வேண்டுமெனின் புலால் உண்ணாமை தலையாயது. ஐயோ! தன்னைப்போல் உயிர்த்து வாழும் இன்னொரு உரிமை உயிரைக் கொன்று தன் வயிறு நிரம்பத் தின்னும் தன்மை எவ்வளவு கொடியது! மக்கள் உயர்திணையினர் என்று கூறிக்கொள்கின்றனரே! விலங்குக்கும் பக்களுக்கும்—பகுத்தறிவு உள்ளவர்களுக்கும் என்ன வேறுபாடு? ஓர் உயிரைக் கொன்று உண்ணுவது கொடிது. என்? வயிறு சுடுகாடாகலாமா? மக்கள் வயிறு, சிற்றுயிர்களின் பிணங்களைப் புதைத்துக்கொள்ளும் புதை குழியாகலாமா? அறிவிற்கு ஏற்குமா? மனிதர் மனிதரைக் கொன்று உண்டால், அது கொலை—மன்னிக்க முடியாத குற்றம்! கொடுமை! இதற்கு வழக்காடவும் துவங்குவர்! ஆனால் வாயற்ற சிற்றுயிர்கள், காவலற்ற இரக்கத்தக்க நல்லுயிர்களைக் கொன்று, கொல்வதோடு தாமே தின்று உயிர் வாழல் கொடிதன்றோ! கொலையன்றோ? இஃது அறமாகுங் கொல்? ஊண் விற்பது கொல்வதினும் கொடியது, கொடியது. ஊனுண்ணாமையே உலக அறங்களில் சீரியது. நல்லது, நனிநல்லது! இயற்கை நெறி முறையை ஆய்ந்து நோக்கினால், ஊனுணவு மக்கட்கு ஏற்றதல்ல என்பது நன்கு தெளிவாகிறது. இதனைத்தான் 'புலால் மறுத்தல்' என்னும் தலைப்பில் பத்து குறட்பாக்களில் வள்ளுவனார் வலியுறுத்துகிறார்.

"பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அது உலகத்து
எப்பால் நூலோர்க்கும் துணிவு."

மறதி அறிவின் மயக்கத்தில் தலை சிறந்தது. மறதியால் சோர்வுற்று வாழ்பவருக்குப் புகழ்த்தன்மை இல்லை; இவ்வுண்மை உலகத்தில் எப்படிப்பட்ட நூலோருக்கும் ஒப்ப முடிந்த முடிவு என்கிறார். அறிவு ஆட்சி செய்யும் இக்காலத்தில் மறதியைப் போன்ற பெருநோய் வேறு ஏதேனும் இருக்க முடியாது. இது அரசியலார்க்கு ஓர் ஒப்பற்ற அறிவுரை.

அரசியலுக்கு அடுத்த அறிவுரையாக நேர்மை ஆட்சியைக் கூறுகிறார்.

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்."

"உலகை அரசு காப்பாற்றும் முறை கெடாத ஆட்சி செய்யும் அரசை, அந்த முறை (அறம்) காக்கும்." உண்மைதானே! நேர்மை ஆட்சிக்கு எதிர்ப்போ பகையோ இருக்க முடியுமா?......"



அன்பொளி அறையினுள் வந்தான். படித்தவாறிருந்த எழில் திரும்பிப் பார்த்தாள். அவளிதழில் மென்னகை மலர்ந்தது. அவளருகிலிருந்த நாற்காலியில் புன்னகை பொலிய அமர்ந்தான்.

"என்ன எழில்?......"

எழிலரசி தன் கையிலிருந்த அன்பொளி எழுதிய, "திருக்குறளில்
உலகம்" என்ற நூலைப் படுக்கை மீது வைத்துவிட்டு நெட்டுயிர்த்தாள்.
"உங்களைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது. ஏன்? உங்கள் நூலைப் படித்
துக்கொண்டிருந்தேன்!"

"என்? என்னைப் பார்த்துச் சிரிக்கும்படியாகவா தோன்றுகிறது?..."

"ஆம். அன்பு வாழ்வின் இருமை உணர்வு எய்திய பின்பு எதைக்
கண்டுதான் சிரிக்கத் தோன்றாது? அன்பு வாழ்க்கையை எவ்வளவோ
கடுமையானதாக ஆக்கிக்கொள்கின்றனர் மக்கள். உண்மையில் வாழ்க்கை
எவ்வளவு எளியது! அந்த வாழ்வு உண்மை உணர்ந்தபின் எப்பொழுதும்
சிரித்து மகிழ்வோடு தானே வாழ முடியும்! நீங்கள் பண்புள்ளவராக வாழ்
வதைக் கண்டு என் உணர்வு பொங்குகிறது. உங்கள் "திருக்குறளில்
உலகம்" என்ற நூலில் கூறிய கருத்துக்கள் என் நெஞ்சினின்றும் நீங்கவே
இல்லை அன்பு! அந்த ஒவ்வொரு அறிவுமொழியும் செயலுருவாக—நீங்க
ளாக—வாழ்வது போல உணர்கிறேன்." உண்மையான இலக்கியம் அறிஞ
னின் சொந்த உணர்வைத் தன்னகத்தே முழுமையாகக் கொண்டு, கற்பா
ருக்கு அவனையே அறிமுகப்படுத்தி அவனுணர்வையே ஊட்டுவதுதான்
என்று நான் கருதுகிறேன்." அப்படிப்பட்ட என் எண்ணம் உங்களிடம்
இருக்கிறது. உங்கள் நூலோடு பயிலும்போது, உங்களோடு, உறவாடும்
உணர்வு நிறைவு, அமைதி, இன்பம் காண்கிறேன். உங்களோடு பழகும்
போது உங்கள் இலக்கிய மேன்மையை உணர்கிறேன்."

எழிலரசி நெட்டுயிர்த்தாள். மிகுதியாகப் பேசியதால் களைத்துவிட்
டாள்.

இளம் புன்னகை விளையாடிய அன்பொளியின் திருமுகம் அருள் பொங்கும் அமைதியோடு காட்சி நல்கியது.

"எழில்," அறிவில்லாமைதான் இல்லாமைகளில் மிகத் துன்பம் மிக்க,
கொடிய இல்லாமை. பிற இல்லாமைகளை உலகம் அவ்வளவாகக் கரு
தாது." என்னும் குறள் உண்மையை உன்னை அறியும்போது தெளிவடைய
முடிகிறது.

"அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு."

என்ற குறள் எவ்வளவு உண்மை பொதிந்தது. எழில், உன் ஆற்றல்
முன்னைவிட இப்பொழுது மிகுதியாகிவிட்டது. துன்பம், மக்களை உயரச்
செய்கிறது. ஆற்றலைப் பெருக்குகிறது. உணர்வை ஒன்றச் செய்கிறது.
அறிவை ஒளி பெறச் செய்கிறது. "எழில், வாழ்வு மிகச் சிறியது. மெய்
தான். ஆனால், சிறிய வாழ்வில் பெருமை தேடிக்கொள்வதுதான்
அரியது! அந்தப் பெருவாழ்வு நமக்குக் கிட்டியிருக்கிறது!......"

"அன்பு, அப்பா!......என்னுடலெல்லாம் 'ஏதோ' பொங்குகிறதே!...
ஆ!......"

சற்று அமைதி நிலவியது. அமைதியிரவில் முழுநிலவின் ஒளி பரவிக்கிடப்பதுபோல் அமைதி நிலவி யிருந்தது.

"மக்கள்—உயிர்கள், எல்லோரும் வாழ விரும்புகிறார்கள். அவர்கள் அனைவரையும் நான் காதலிக்கிறேன் அன்பு வாழ்வின் துன்பங்களை விடச் சிறந்த 'கல்வி' ஒன்றுமில்லை பூஞ்செடியிலே மலரும் பூவைப்போல வாழ விரும்புகிறேன். குற்றமற்ற பூவைப்போன்ற உள்ளம் வேண்டும். பூவைப்போன்ற வாழ்வு வேண்டும், ஏன், யாரையும் நாம் வெறுக்க வேண்டும்? புறநானூற்றுப் புலவர் பூங்குன்றன் பூவைப்போல வாழ்ந்த பேரறிஞர், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடினாரே! எத்தகைய சிறந்த ஒளி உள்ளம் அது!

"நகல் வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற் பட்டன்று இருள்."

என்னும் வள்ளுவர் உள்ளம் இந்நுண்மை உண்மையைப் பெரிதும் உணர்ந்திருக்கிறது. பிறரோடு கலந்து பழகி மகிழ்ந்து வாழ முடியாதவர்களுக்கு மிகப்பெரிய ஞாலம் ஒளிமிக்க-விளக்கம் மிக்க-பகலிலும் இருள் சூழ்ந்த உலகமாக இருப்பதாகும். "ஆம். உலகம் உண்மையில் பெரியதுதான். அதனால்தான் "பெரிதே உலகம் பேணுநர் பலரே" என ஓர் உயர்ந்த புலவர் பாடுகிறார். பெரிய உலகில் சிறிய வாழ்வு வாழ்வதா? பெரிய உலகில் பெரிய வாழ்வல்லவா வாழ வேண்டும்!......"

"அதற்குப் பெரிய உள்ளம் வேண்டுமே, எழில்! பூங்குன்றனாரைப் போல, ஔவையாரைப்போல, வள்ளுவரைப்போல, நக்கீரரைப்போல, பிசிராந்தையாரைப்போல, உயரிய பெரிய உள்ளம் வேண்டுமே! அந்த உள்ளம் பண்புள்ளம்! அதுதான் உண்மையான 'மக்கள் தன்மை' உள்ள உள்ளம்! அந்த உள்ளம் பிறருக்கு வரும் பழிக்காகவும், தனக்கு வரும் பழிக்காகவும் நாணுகின்றவர், நாணத்திற்கு உறைவிடமானவர்" என உலகம் போற்றும் உள்ளமாக இருக்கும்!

"பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு."

என்ற குறள் நெஞ்சமாக விளங்கும். எழில், உயர்ந்த உணர்வுகளில் தலை சிறந்தது நாணம். நாணம்!—அதுதான் என்னை மிக மிகக் கவர்ந்த உணர்வு. உண்மையான நாணம் அழகின் சிறப்பு! அழகின் அணிகலம். அந்த நாணம் அறிவும் அமைதியும் அன்பும் மிகுந்த நெஞ்சில்தான் விளையும். பண்புள்ள உள்ளத்தில்தான் அந்தப் பயனுள்ள நாணம் செழித்திருக்கும்.

உலக அறிஞர்களின் அக—புற வாழ்வியலில் நாணம் எவ்வளவு உயர்ந்த முறையிலமைந்திருந்த தென்பதை வரலாறு கற்றவர் நன்கு உணரமுடியும். "நாணம் என்னும் வேலியைத் தம் காவலாகச் செய்து கொள்ளாமல் மேன்மையானவர்கள் பெரிய ஞாலத்தில் வாழும் வாழ்க்கையை விழைந்து ஏற்க மாட்டார்கள்.

"நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

என்ற குறள் எவ்வளவு தெள்ளிய உணர்வழகுடையது! கண்ணே! அந்த உயர்ந்த 'அழகு நாணத்தை' உன்னிடம் தான் நான் கண்டேன்! அதில் என் நெஞ்சம் பறிகொடுத்தேன். அதன் பிறகுதான் நாணத்தின் பெருமை உணர்ந்து நானும் அதை வளர்த்துக்கொண்டேன். மேன்மக்களுக்கிருக்கும் ஒரே உயர்வு—சிறப்பு—நாணம் தான்! அதனால்தான் பெண்மைக்கு நாணம் சிறப்பானதாக அமைந்ததோ! ஆம், அப்படித்தான் இருக்கும்,



எழில், நெஞ்சு வளர்ந்தால் அஞ்சுதல் அழியும், அன்பு செழிக்கும். ஆனால், சூழ்நிலை நம்மை எள்ளி நகையாடும்! தோட்டக்காரனுக்காகப் பயிர் வளர்வதில்லை எழில். அது தனக்காக வளர்கிறது. அதனால்தான் அது யாரையும் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால், தனக்காக வாழ்ந்து, பிறர்க்காகப் பயன்படுகிறது, அதுபோல் நல்லவர்கள்—சான்றோர்கள், தங்களுக்காக வாழ்ந்து, பிறருக்காகப் பிறர் நலனுக்குப் பயன்படுகிறார்கள். அப்படிப் பட்டவர்கள் தன்மை எளிமையானதாக, இனிமையானதாக, இன்பம் நிறைந்ததாக இருக்கும். அவர்களுக்குப் 'பகைமை' என்ற உணர்வே இருக்காது, அந்த உள்ளம் "யாவரும் கேளிர்" என்று அன்புகொண்டாடும்! பகைவர்களையும் நண்பர்களாக, உறவினர்களாக அன்பு செய்து நடக்கும் சீரிய பண்புடையவனின் பெருமை மிக்க தன்மையில் உலகம் தங்கி வாழும்."

"பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
தகைமைக் கண் தங்கிற்று உலகு."

என்ற குறளமிழ்தம் கூறும் பேருண்மையை உணரல் வேண்டும். பண்பட பண்படத்தான் பண்பாட்டின் அருமையும் இன்பமும் தெரியும், "பண்புடையவர்களிடத்தில் அமைந்திருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகிறது. அதில்லை என்றால் மண்ணில் பாய்ந்து போகும்,"

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்."

எனப்பாடும் வள்ளுவர் உண்மை உணர்ந்தே வாழ்வை—உலகைப் புரிந்து, வாழவேண்டும்!" என்றான் அன்பொளி.

"இதனால்தான் உங்களைப் பார்த்துச் சிரித்தேன். அன்பு, பேசப்பேச எனக்குச் சொல்ல முடியாத உணர்ச்சி பெருகுகிறதே! என் கைகளைப் பிடித்துக் கொள்ளுங்களேன்!......"

(அடுத்த இதழில் முடிவுறும்)

"ஆனந்த போதினி"
(மாதப் பத்திரிகை)
சந்தா விவரம்

| | |
|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலியுள்பட இந்தியா, சிலோன் | ரூ. 2—00 |
| வருடம் 1-க்கு வெளிநாடுகளுக்குச் சந்தா | ரூ. 3—00 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை | ரூ. 0—20 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை | ரூ. 0—25 |

ஜீவிய சந்தா ரூ. 30—00

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.
எப்பொழுது சேர்ந்தாலும் ஆடிமீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

# ஜீவானந்த ரஸாயனம்

இதில் சுக்கில சுரோணிதப் போஷணைக்கு உரிய அரிய பெரிய மருந்துகளும் மலையாள மூலிகைகள், பழ ரசங்கள், புஷ்பச் சத்துக்கள் முதலிய பல மூலிகைகளும் சேர்த்துச் சாப்பிடுவதற்கு மிக இனிய லேகிய பதமாய் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

'ஜீவானந்த ரஸாயன'த்தை ஒரு மண்டலம் நீடித்துச் சாப்பிடுவதினால் ஜீவ நரம்புகளில் பற்றிவரும் மேகவிஷ துர்நீர்களைப் போக்கும். கெட்ட சகவாச தோஷத்தினால் ஏற்பட்ட வெள்ளை, கிரந்தி மேகவியாதி, மேகச் சொறி, பித்தப்பாண்டு, துர் அப்பியாசம் முதலியவற்றால் ஏற்பட்ட பலஹீனம், தாது நஷ்டம், சொற்பன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், உடல் நடுக்கம், பசியின்மை, குன்மம், தூக்கமின்மை, மேக நாக்கை, மூலச்சூடு, மார்பு வலி, இடுப்பு வலி, மலச்சிக்கல், இருமல், மூத்திரத்துடன் இந்திரியம் நீர்த்துப் போகுதல், கைகால் ஓச்சல், ஞாபகமறதி, கண்மங்கல் முதலிய பல வியாதிகளையும் போக்கும். வீரிய விருத்தி, தாதுபுஷ்டி, இரத்தவிருத்தி, போகசக்தி முதலியவைகளை அபாரமாய் உண்டாக்கும். தளர்ந்து துவண்டுபோன ஆண் நரம்புகளை முறுக்கேற்றும். தசைகளை வளரச் செய்யும். உடைந்து போன இந்திரியத்தை இறுகச் செய்யும். இல்லற வாழ்க்கையில் இணையற்ற இன்பத்தை அளிக்கும். பெண்களுக்குக் காணும் சூதகச்சிக்கல், பெரும்பாடு போகுதல், அதிகப் பிள்ளைகளைப் பெற்றதனால் ஏற்பட்ட தளர்ச்சி, பலஹீனம், மர்மஸ்தானத்தில் நமை, எரிச்சல், வெள்ளை, வெட்டை முதலிய பல வியாதிகளையும் கண்டிக்கத் தக்கது. பத்தியமில்லை.

டின் 1-க்கு ரூ. 2—75 nP. தபாற் கூலி ரூ. 1—12 nP.

**லீலா அதிசயன்** புட்டி 1-க்கு ரூ. 2-50nP. தபாற்கூலி ரூ. 1-12nP

## மாலதி முகவசீகர மருந்து (முகப் பருக்களுக்கு)

முகத்தில் ஏற்படும் பருக்கள், தழும்புகள், வெயிலில் சுற்றுவதால் உண்டாகும் கருமை, வேர்க்குருக் கட்டிகள் முதலிய முக அழகைக் கெடுத்து விகார ரூபத்தை யுண்டாக்கும் சர்வ பருக்களையும் போக்கி முகத்திற்கு நல்ல தேஜஸையும், பளபளப்பையும், காந்தியையும் கொடுக்கவல்ல மருந்து. விலை டின் 1-க்கு ரூ. 1. தபாற் கூலி ரூ. 1—12 nP.

## நயன பிந்து (EYE DROPS)

கண் சம்பந்தமான வியாதிகளுக்கு மிகவும் சிறந்தது.

கண்ணோய், கண்ணில் பீளை கட்டுதல், கண் எரிச்சல் கண்களில் சதை வளருதல், கண் வீக்கம், கண் சுருங்குதல், கண்களிருந்து சதா நீர் வடிதல், கண் பார்வைக் குறைவு, கண்ணில் பூ படுதல், மாலைக்கண், கண் புளித்தல் கண் புகைதல், கண் கொதிப்பு, கண் சிவப்பு கண்ணுக்குள் தூசு துரும்பு முதலானவை விழுந்ததுபோல் கண் அருகுதல் முதலிய கண்ணைச் சார்ந்த எல்லா நோய்களும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். கண்ணுக்கும் நல்ல ஒளியைக் கொடுக்கும். கண்ணோய் பரவும் காலத்தில் இம்மருந்து கையிருப்பிலிருந்து விட்டால் மேற்படி நோய்கள் வராமல் தடுத்துக் கொள்ளலாம். சிறு குழந்தை முதல் கிழவர் வரையாதொரு பயமுமில்லாமல் கண்ணில் விடலாம். 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ.1-25nP. தபாற்கூலி ரூ.1-12nP.

---

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1376

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

## கல்யாணி கிருதம்

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஸ்திரீகளின் கர்ப்பாஸய சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் அமிர்தத்திற்கு ஒப்பான திவ்விய ஔஷதம். மாதவிலக்கு காலங்களில் உண்டாகும் வயிற்றுவலிக்கு இது ராஜா. கர்ப்பம் கலைதல், கர்ப்ப அழிவு, கருக்குழியில் உண்டாகும் கோளாறுகள், பெரும்பாடு போகுதல், சூதகவயிற்றுவலி முதலியவைகளைக் குணப்படுத்தி கர்ப்பாசயத்தைப் பலப்படுத்தும். இம்மருந்தால் குழந்தைப்பாக்கியம் பெற்றவர்கள் அனேக ஆயிரம். மாதாந்த ருது பேதப்படுவதால்தான் ஸ்திரீகளுக்கு எண்ணிக்கையில்லாத பல வியாதிகள் உண்டாகின்றன. சரீரம் ஸ்தூலித்தல், உளைதல், குத்தல், கைகால் சோர்வு, இடுப்புநோய், சூதகத்தின் நிறம்மாறுதல். இரத்தம் கட்டி முட்டையாகவும் கறுத்தும் வெளிப்படுதல் மாதா மாதம் சூதகம் வரத் தடைப்படுதல், சூதகம் சிறிது கண்டு மறைதல், ஒரே பக்கத்துத் தலைவலி, தொடைநோய், முதலிய பல வியாதிகளையும் குணப்படுத்தும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3. தபாற் சார்ஜ் ரூ. 1—12 nP.

## வாத கெஜாங்குசம்

மேகவாயு, அண்டவாயு, சரீரம் முழுதும் பரவி உபத்திரவிக்கும் வாயு முடக்கு வாயு, பார்ஸ வாயு, முழங்கால் வாயு, முட்டுக் களில் நீர் தங்கி உபத்திரவிக்கும் வாயு முதலிய எவ்விதமான வாயு ரோகங்களையும் கண்டிக்க இது சிறந்த ஔஷதம். கை கால் சந்துகளில் காணும் வலி, குதிக்கால் நோய், முட்டு வீக்கம், ஆனைக்கால், மலபந்தம், மலச்சிக்கல், தொடைகளில் உண்டாகின்ற வலி, தொடை நரம்புகளில் பிகுவு, உடம்பு ஸ்தூலித்தல், அடிக்கடி அபானவாயு பறிதல்; வயிறு ஏம்புதல், மேல் மூச்சு சுவாஸகாசம், மார்பு வலி, குன்மம், ஓடுவாயு முதலாகச் சொல்லப்பட்ட அவரவர்களின் சரீர கூறுக்குத் தக்கபடி உண்டாகும் எல்லாவித வாயு ரோகங்களையும் கண்டித்து மூல மூத்திராதிகளைச் சரிப்படுத்தி தேக ஆரோக்கியத்தை உண்டு பண்ணும். புட்டி 1-க்கு விலை ரூ. 3. தபாற் சார்ஜ் ரூ. 1—12 nP.

## காமதேனு

இது சகலவிதமான மேக நோய்களைக் கண்டித்து திடகாத்திரமான சக்தியை உண்டாக்கும்.

இந்த மருந்தை ஆண், பெண் ஆகிய எவ்வயதினரும் சாப்பிடலாம் உடம்பு மெலிந்து சக்தியற்று எலும்பும் தோலுமாய் இருக்கும் எவரும் இந்த 'காமதேனு'வை சாப்பிட்டு வந்தால் தசை புஷ்டியாகி, நரம்புகளுக்குப் பலமும், முறுக்குமேற்றி, ஜீரண கருவிகளை வலுவுறச் செய்து, உடம்பிற்குப் பலமும், வசீகரத்தையு முண்டாக்கும். பலம், புஷ்டி, ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. புத்துயிரளிக்கவல்ல இளமையைத்தரும். மலையாள முறையில் தயாரிக்கப்பட்ட சிறந்த ஔஷதம்.

டின் 1க்கு விலை ரூ. 3-0-0. தபாற் கூலி ரூ. 1—12 nP.

தீராத மேஹரணங்களுக்கு **சஞ்சீவி களிம்பு** விலை அணா 12.

தபாற் கூலி ரூ. 1-2-0. 2-புட்டிகளுக்கும் தபால் செலவு ரூ. 1-2-0 தான்.

---

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1376

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

## தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்

ஆரணி-குப்புசாமி முதலியார், இயற்றியவை

| | ரூ.ந.பை. |
|---|---|
| ரத்தினபுரி ரகசியம் 9-பாகம் | 19=87 |
| ஞானசெல்வாம்பாள் 5-பாகம் | 9=62 |
| கற்பகச் சோலையின் அற்புதக் கொலை | 2=00 |
| கடற்கொள்ளைக்காரர் 2-பாகம் | 4=00 |
| மதனம்பாள் 2-பாகம் | 4=00 |
| லோகநாயகி | 1=00 |
| விளையாட்டுச் சாமான் | 1=75 |
| பவளத்தீவு 2-பாகங்கள் | 3=75 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 1=00 |
| அமராவதி 2-பாகங்கள் | 5=00 |
| மஞ்சள் அறையின் மர்மம் | 2=00 |
| கற்கோட்டை | 2=50 |
| பூங்கோதை | 0=75 |
| வீரநாதன் | 0=75 |
| கனகபூஷணம் 2-பாகமும் | 1=00 |
| கற்பக சுந்தரி | 3=00 |
| ...சேகரன் | 2=50 |
| கிருஷ்ணவேணி | 2=50 |
| தினகரசுந்தரி | 1=50 |
| சந்திராபாய் | 2=50 |
| இராஜாமணி | 2=50 |
| இரத்தினபாய் | 2=50 |
| மதனபூஷணி | 2=00 |
| சுவர்ணாம்பாள் | 0=75 |
| தேவசுந்தரி | 2=00 |
| குணசுந்தரன் | 1=00 |
| பத்மாஸனி | 1=00 |
| ஆனந்தலிங் | 2=00 |
| மின்சார மாயவன் | 2=00 |
| ஆனந்தசிங்கினஷ்டஜயங்கள் | 2=00 |
| அரசூர் இலக்ஷ்மணன் | 3=00 |
| கைவல்லிய நவநீத வசனம் | 2=25 |
| சகோதரவாஞ்சை | 0=31 |
| கம்பராமாயண வசனம் | 4=00 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 3=50 |
| விவேகானந்தர் சரித்திரம் | 5=00 |
| தமிழ் மெடீரியா மெடிகா | 3=50 |
| மலையாள பகவதி | 1=25 |
| அற்புத நவநீத ரம்பை | 2=00 |
| அகட விகட விலாச விநோதம் | 0=62 |
| சிமாட்டி கார்த்தியாயினி | 0=87 |

| | ரூ.ந.பை |
|---|---|
| தாசி ரமணி | 1=50 |
| உயிரோவியம் | 1=50 |
| யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் | 2=00 |
| இவ்வுலகை திரும்பிப்பாரேன் | 1=70 |
| சிலப்பதிகார ஆராய்ச்சி | 2=00 |
| ஆரிய மத சித்தாந்தம் | 3=00 |
| பூலோக லக்ஷ்மி கதை | 0=37 |
| கனகரத்தினம் | 0=75 |
| கண்டிராஜா நாடகம் | 0=75 |
| குசேலோபாக்கியான வசனம் | 1=00 |
| உதயணன் | 0=37 |
| தசக்கிரீவன் | 0=87 |
| போஜ சரித்திரம் | 0=31 |
| சதானந்தர் | 1=25 |
| கர்ணன் சரிதை | 0=75 |
| பீஷ்ம விஜயம் | 0=62 |
| கீர்த்திசிங்கன் | 0=44 |
| ...ற்பெருந்தாசர் | 0=62 |
| ...ணவாளன் | 0=20 |
| ...சுராமன் | 0=20 |
| ...சுபாலன் | 0=50 |
| ...புங்கதன் | 0=25 |
| தசாவதார மகிமை | 0=50 |
| கிருஷ்ணன் தூது வசனம் | 0=37 |
| சண்டோபாக்யானம் | 0=37 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0=50 |
| சத்தியவசனம் | 0=25 |
| விமலன் | 0=25 |
| கண்ணபிரான் | 0=25 |
| செய்யுட்பாடத்திரட்டு | 0=25 |
| நாலு மந்திரி கதை | 0=25 |
| மங்களேசுவரன் | 0=37 |
| தக்கன் | 0=37 |
| சீமந்தனி | 0=50 |
| நான்குகோடி | 0=25 |
| மதிமோசவிளக்கம் | 1=00 |
| மெய்க்காதலி | 0=75 |
| மேனுமினுக்கி கதை | 0=75 |
| வீணைகானன் ஞானேந்திரி | 0=50 |
| கோமளவல்லி கதை | 0=75 |
| விகடவல்லி கதை | 0=37 |
| தாலிகட்ட மறந்த கதை | 0=44 |
| ஞானசவுந்தரி (நாடகம்) | 0=37 |
| சத்தியவான்சாவித்திரிநாடகம் | 0=37 |

இந்திர கவசமென்றும் சர்வ தேவதா வசியம் விலை ரூபா 1=25 nP.

630 009

**ஆனந்தபோதினி ஆபீஸ்,**
**தபால் பெட்டி நெ. 167, சென்னை—1.**

ஜாதகாமிருத பல விமர்சம் என்னும்

## ஜாதக கணித சாகரம்

(மூன்றும் பதிப்பு)

யாதொரு நக்ஷத்திர பாகத்தில் வருகின்ற எந்த க்ரஹமாவது அந்த நக்ஷத்திர சுபாவத்திற்கு ஒற்றுமை அல்லது வேற்றுமை யுற்றதா யிருக்குமாதலால் நக்ஷத்திரத்தினுடையவும் கிரஹத்தினுடையவும் சுபாவ குணம் தேச கால வர்த்தமானங்கட்குத் தக்கபடி பேதித்து விளங்கும். அதாவது நமது பூமியின் சுழற்சியால் அதைச் சூழ்ந்துகொண்டிருக்கும் பஞ்ச பூதாம்சங்களை நுட்ப நேரந்தோறும் சுவர்ச்சியின் துவாரா நெருங்கி கலைத்து மாறுதலை யுண்டாக்கும். அதனாலேயே பிரபஞ்சத்தில் உலக மாறுதல்களும் பேதங்களும் நேரிடுகின்றன.

இந்த இரகசியத்தை விளக்கிக் காட்டும்பொருட்டே போதி சாஸ்திரம் ஏற்பட்டிருக்கின்றது. ஜோதிடத்தைப் பற்றிய எல்லாவற்றிற்கும் ஆதாரம் மூலமாயிருக்கும் ஜாதகம். அதை மலையாளத்தில் ஹோரை என்பார்கள். இந்த ஜாதக கணித சாகரம் என்னும் புத்தகம் வேதம் எப்படியோ அப்படிப்போல ஜோதிடத்திற்குத் தாயாகும். இதன் விலை ரூபா 2=50 nP.

## ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9-கிரகங்களை 12-இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவைகளைக்கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 1,2,3,4,5,6,7-கிரகங்கள் ஒன்றாகக் கூடியிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறி யிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்லவும் இதனால் தெரிந்து கொள்ளலாம். இதன் விலை 50 nP.

## நிமித்தியசூதி சாஸ்திரம்

இந்த நிமித்தியசூதி சாஸ்திரத்தில் மனிதர்கள் மனதில் நினைத்துக் கொள்ளும் காரியங்களையும் அவற்றின் பலாபலன்களையும் அறிந்து சொல்லும் மார்க்கங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இது சகல மதஸ்தர்களுக்கும் வர்த்தகர்கள், சோதிடர்கள், விவசாயிகள், லௌகீகர், வைத்தியர்கள், பிரயாணிகள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் முதலிய எல்லாருக்கும் அவசியமிருக்கவேண்டியது. இதன் விலை 25 nP.

## கோசார பல நிர்ணயம்

ஸ்ரீமான் என். ஆர். திருவேங்கடாச்சாரியார், பி.ஏ. எழுதியது.

கோசார பலன்கள் நடைபெறுவது பல்வேறு அம்சங்களைப் பொறுத்திருக்கிறது என்ற விஷயத்தை விரிவாக ஆசிரியர் இந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அது மாத்திரமில்லை. கோசார சம்பந்தமாகவுள்ள பல வேறு புராதன கிரந்தங்களில் காணப்படும் எல்லா முக்கிய விசேஷங்களுடன் மாத வார தின பலன்களையும், ஆதாய விரய பலன்களையும், ரோக மேற்பட்ட நக்ஷத்திரத்தைக் கொண்டு ரோகம் நீங்கக்கூடிய காலத்தையும் கண்டறியும் விதமும் முக்கிய பல உபயோகமான விஷயங்களையும் ஆசிரியர் இதில் சேர்த்திருக்கிறார். தமிழ் நாட்டில் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய நூலாகும். இதன் விலை 75 nP.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167. மதராஸ்-1.

Regd. No. M 1190.
Registered as a News Paper in Ceylon



இந்தியா, உள்நாடுகளுக்கு 40 நாள் சாப்பிடக் கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 2-2-0. போஸ்டேஜ் அணா 13. 48-நாள் விலை ரூ. 4. போஸ்டேஜ் ரூ. 1-2-0.

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இந்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20-வகை ரோகங்கள், குலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கை கால் முடக்கு, ஓங்காய்வு, பித்த ஏப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுநஷ்டம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்க முடியாத பாதையைத் தரும் நீர்மேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறெங்குமில்லை.

சம்பாவத்தைத் தருவதேது?

# அமிர்த சஞ்சீவி லேகியம்

## அயக்காந்த செந்தூரமும்

னலட்சுமி கம்பெனி, 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு. சென்னை

Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, at the

1236

# ஆனந்தபோதினி

விளம்பி ஹு மாசி மீ



"ஜீவா" தீட்டிய

## எழுத்து ஓவியங்கள்

**யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?**

விலை ரூ. 2—0—0.

**இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்?**

விலை ரூ. 1=75 nP.

**தாசி ரமணி**

விலை ரூ. 1=50 nP.

**உயிரோவியம்**

விலை ரூ. 1=50 nP.

**காதலனா? காதகனா?**

விலை ரூ. 1=25 nP.

**சீமாட்டி கார்த்தியாயினி**

விலை 87 nP.

ஒவ்வொரு புத்தகத்துக்கும் தபால் செலவு 69 nP.

6 புத்தகங்களுக்கும் தபால் செலவு ரூ. 2=25 nP.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,**

**தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

# ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 44 | விளம்பி ஞு மார்கழி மீ கஉ 1958 ஞு டிசம்பர் மீ 16உ | பகுதி 6

## உள்ளுறை.


| எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | 302 |
| 2. | விலை யுயர்வைக் கட்டுப்படுத்துக! (தலையங்கம்) | 303 |
| 3. | வா! அருகில்! (கவிதை) | 306 |
| 4. | காதல் வழக்கு | 308 |
| 5. | கலை விரோதி | 313 |
| 6. | பஞ்சம் தீர்ந்தது! (கவிதை) | 317 |
| 7. | வடசொற்றிரட்டு | 318 |
| 8. | சாந்தி எங்கே? | 324 |
| 9. | சுவையே சுவை! | 328 |
| 10. | எது குற்றம்?...... | 331 |
| 11. | வாழ்வு | 334 |
| 12. | பொறுமை | 344 |
| 13. | மக்கள் யார்? | 349 |
| 14. | ஞாலம் (தொடர் கதை) | 352 |
| 15. | பஞ்சாங்கம் | 360 |

# ஆனந்த போதினி

சென்னை-600 008

## கடவுள் வணக்கம்

அருளே உணர்த்த அறிந்து கொண்டேன்
அடுத்த தருணம் இதுஎன்றே
இருளே தொலைந்தது இடர்அனைத்தும்
எனைவிட்டு அகன்றே ஒழிந்தனவால்
தெருளே சிற்றம் பலத்தாடும்
சிவமே எல்லாம் செயவல்ல
பொருளே இனிநான் வீண்போது
போக்க மாட்டேன் கண்டாயே. (1)

கண்டே களிக்கும் பின்பாட்டுக்
காலை இதுஎன்று அருள்உணர்த்தக்
கொண்டே அறிந்து கொண்டேன்நற்
குறிகள் பலவும் கூடுகின்ற
தொண்டே புரிவார்க் கருளுமருட்
ஜோதிக் கருணைப் பெருமானே
உண்டேன் அமுதம் உண்கின்றேன்
உண்பேன் துன்பை ஒழித்தேனே. (2)

தேனே கன்னற் செழும்பாகே
என்ன மிகவும் தித்தித்துஎன்
ஊனே புகுந்துஎன் உளத்தில் அமர்ந்து
உயிரில் கலந்த ஒருபொருளை
வானே நிறைந்த பெருங்கருணை
வாழ்வை மணிமன்று உடையானை
நானே பாடிக் களிக்கின்றேன்
நாட்டார் வாழ்த்த நானிலத்தே. (3)

நிலத்தே அடைந்த இடர்அனைத்தும்
நிமிடத்து ஒழித்தேன் நிலைபெற்றேன்
வலத்தே அழியா வரம்பெற்றேன்
மணிமன்று ஏத்தும் வாழ்வடைந்தேன்
குலத்தே சமயக் குழியிடத்தே
விழுந்துஇவ் வுலகம் குமையாதே
நலத்தே சுத்த சன்மார்க்க(ம்)
நாட்டா நின்றேன் நாட்டகத்தே. (4)

# விலையுயர்வைக் கட்டுப்படுத்துக!

உணவுப் பொருள்களின் விலை சிறிது காலமாக விஷம் போல ஒவ்வொரு நாளும் ஏறிக்கொண்டே போகின்றன. அரிசி முதலிய தானியங்களிலிருந்து பருப்பு, புளி, மிளகு; மிளகாய் முதலிய அநேகமாக எல்லா உணவுப் பொருள்களுமே அக விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. ஏழைகள் சாப்பிட்டு வரும் புழுங்கலரிசி சிறிது நல்ல ரகமாக வாங்க வேண்டுமானால், படியொன்றுக்கு ஒன்றேகால் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதுபோலவே, மற்ற உணவுப் பொருள்களும் அதிகமாக விலை யுயர்ந்து வருகிறது. இந்த அவல நிலை ஏழைகளை மட்டுமல்லாமல், நடுத்தர வகுப்பு மக்களையும் பெரிதும் பாதித்து வருகிறது.

இவ்விதம் உணவுப் பொருள்களின் விலை ஒரு கட்டுக்கடங்காமல் உயர்ந்து வருவதை உடனடியாகக் கட்டுப்படுத்தாமல் அரசாங்கம் மெத்தனமாக இருந்து வந்தது. விலைவாசி யுயர்வைத் தாங்கமாட்டாது, நாலாபக்கமும் நாட்டு மக்களின் கூக்குரல் எழத் தொடங்கிய பின்னர்தான் இந்தியப் பிரதமர் பண்டித நேரு எதிரொலி கிளப்பியிருக்கிறார். அவர் கொடுத்த குறிப்பைக் கொண்டு மத்திய அரசாங்கம் விலையேற்றத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிக்கை செய்திருக்கிறது. அத்துடன் நில்லாமல், மத்திய சர்க்கார், உணவுத் தானியங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்வதும், விநியோகம் செய்வதும் சம்பந்தமாக அரசாங்கமே நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என, ராஜ்யச் சர்க்கார்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது.

மத்திய சர்க்காரின் ஆணைப்படி, ராஜ்ய சர்க்கார்கள் மேற்குறித்தவாறு நடவடிக்கையெடுப்பதற்கு முன்பே, வியாபாரிகள்—முக்கியமாக மொத்த வியாபாரிகள்—பெருங் கூச்சல் போடத் தொடங்கிவிட்டனர். சர்க்கார் இவ்விதம் நடவடிக்கை யெடுக்கப் போவதாகச் சொல்வது தேசத்தின் வியாபார முறையைப் பெரிதும் பாதிக்கும் என அவர்கள் கூக்குரலிட்டு வருகின்றனர். உத்திரப் பிரதேச ராஜ்யத்தைச் சேர்ந்த பெரிய உணவு தானிய வியாபாரிகள் அரசாங்க முடிவைக் கண்டித்து ஹர்த்தால் செய்யப்போவதாக மருட்டியிருக்கின்றனர். பிரதமர் பண்டித நேரு இவர்களுக்குப் பதில் அளிக்கும் முறையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில், "பெரிய வியாபாரிகளின் எவ்விதமான மருட்டலையும் கண்டு இந்திய அரசாங்கம் பயந்து உணவு தானியங்கள் கொள்முதல் செய்வது பற்றிய கொள்கையைத் திருப்பி வாங்கிக்கொள்ளப் போவதில்லை" எனத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், "உணவு தானியங்களை அரசாங்கமே கொள்முதல் செய்ய வேண்டுமென்று செய்துள்ள முடிவைக் கண்டு மொத்த வியாபாரிகள் ஆத்திரமுற்றிருக்கிறார்கள். அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படுத்துவதற்காக, உத்திர பிரதேச ராஜ்ய உணவு தானிய மொத்த வியாபாரிகள் ஹர்த்தால் நடத்தப் போவதாக மருட்டி யிருக்கிறார்கள். அவர்கள் இவ்விதம் செய்வதானது தாங்கள் இதுவரை கொள்ளை லாபம் அடித்து வந்ததுபோல் இனியும் அனுமதிக்க அரசாங்கத்தையும் பொதுமக்களையும் கட்டாயப்படுத்துவதாகும். இது முற்றிலும் தவறான காரியமாகும்.

அரசாங்கமே இந்த வியாபாரத்தை நடத்துமானால் தனிப்பட்ட மொத்த வியாபாரிகள் தங்கள் விருப்பம்போல் கொள்ளை லாபம் அடிக்க முடியாது என்பது உண்மையே. ஆனால், மொத்த வியாபாரிகள் நியாயமான லாபத்தைப் பெறுவதிலிருந்து தடுக்கப்பட மாட்டார்கள். அதை நிறுத்த நாங்கள் விரும்பவில்லை. ஆனால், இவ்வாறு மருட்டத் தொடங்குவார்களானால், அவர்களுடைய நோக்கம் அரசாங்கத்தையும் மக்களையும் நெருக்கிப் பிடித்து எப்படியாவது லாபக் கொள்ளை யடிக்க வேண்டுமென்பதுதான் என்பது தெளிவாகும். இதை எந்த அரசாங்கமும் அனுமதிக்காது.

மொத்த வியாபாரிகளின் நியாயமான லாபத்தை மறுக்கவோ அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தவோ விரும்பவில்லை. அநியாயமான முறையில் லாபம் சம்பாதிக்க அனுமதிக்க முடியாது. கொள்ளை லாபக்காரர்களும் சூதாடிகளும் உணவு விலை வாசிகள் மீது விளையாட இடம் தர முடியாது. உணவு தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்துவதையே இப்போதுள்ள முக்கிய பிரச்னையாகக் கொண்டு அரசாங்கம் இந்த வியாபாரத்தை நடத்த முடிவு செய்தது. ஆரம்பத்தில் சிறிது கஷ்டங்கள் ஏற்பட்டாலும் இந்த முடிவை அரசாங்கம் மாற்றப்போவதில்லை" என்று வற்புறுத்திச் சொன்னார்.

பிரதமர் நேரு மேலும் விளக்கமாகத் தெரிவித்துள்ளபடி, அரசாங்கம் சில யோக்கியமான மொத்த வியாபாரிகளைத் தேர்ந்தெடுத்து சர்க்கார் சார்பில் கொள்முதல் செய்ய லைசென்ஸ் வழங்கும். அரசாங்கம் நிர்ணயிக்கும் விலைக்கு அவர்கள் கொள்முதல் செய்வார்கள். அவர்களுக்கு கமிஷன் அளிக்கப்படும். அது அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கும் லாபத்துக்கு ஈடாக இருக்கும். இதை அரசாங்கம் இருப்பு வைத்துச் சில்லறை வியாபாரிகளுக்கு வினியோகம் செய்யும். 20 லட்சம் டன் உணவு தானியம் கொள்முதல் செய்ய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம். விலை வீழ்ச்சியுற்றால் விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கொள்முதல் செய்யும். விலை ஏறினால் கொள்முதல் செய்ததை அரசாங்கம் விற்கும்; ஆதலால், விலை சீராக இருந்துவரும். இதனால் விவசாயிகளும் வாங்குவோரும் பயன் அடைவார்கள்.



மத்திய அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தை அனுசரித்து, சென்னை சர்க்கார் உணவு தானிய விலைக் கட்டுப்பாட்டுக்கு ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. இத் திட்டம் இந்திய சர்க்காருக்கும் மற்ற ராஜ்ய சர்க்கார்களுக்கும் அனுப்பி வைக்கப்படுமாம். உணவுதானிய விலைக்கட்டுப்பாடு அகில இந்திய அடிப்படையிலேயே அமைய வேண்டுமென்பது சென்னை சர்க்காரின் கருத்து. திட்டத்தைத் தேசீய அடிப்படையில் அமல்படுத்துவதில் சிரம மிருந்தால் மண்டல அடிப்படையிலாவது அமலாக்கவேண்டும் எனச் சென்னை சர்க்கார் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது.

10-12-58ந்தேதி யன்று சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் நடந்த அமைச்சர்கள் அதிகாரிகள் மகாநாட்டில், விஷம்போல ஏறிவரும் உணவு தானியங்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்த வழிவகைகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. முதல் அமைச்சர், உணவு மந்திரி, நிதிமந்திரி ஆகியோர் விவாதத்தில் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் உணவு தானிய மொத்த வியாபாரத்தைச் சர்க்காரே மேற்கொள்ளும் உத்தேசத் திட்டமும் விவாதிக்கப்பட்டது. இவ் விஷயத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கு முன் மத்திய சர்க்காரிட மிருந்து விவரங்களுக்குக் காத்திருப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

உணவு தானிய வியாபாரிகள் லைசென்ஸ் முறை முன் யோசனைப்படி அமலாக்கப்படும். லைசென்ஸிங் முறையைக் கடுமையாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படும்.

ஊதியத்தையும் விலைவாசியையும் இணைத்த விரிவான ஒரு திட்டம் வகுத்தால் இன்றைய பிரச்னைக்கு நிரந்தரமான பரிகாரம் தேடுவதாகும் என மந்திரி யொருவர் தம் கருத்தைத் தெரிவித்தாராம்.

இவ்விதமாக இப்போது மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்காரும் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முற்பட்டிருப்பதைச் சிறிது முன்னதாக எடுத்திருந்தால், உணவுதானியங்களின் விலைவாசி விஷம்போல ஏறி யிருப்பதைத் தடுத்திருக்கலாம். காலங் கடந்தேனும் உணவுத் தானியங்களின் விலையைக்கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முற்பட்டிருப்பது நாட்டு மக்களுக்கு ஆறுதலைத் தரும்.

பிரதமர் நேரு கூறியுள்ளபடி உணவு தானியங்களைச் சர்க்கார் சார்பில் கொள்முதல் செய்வதற்காக மொத்த வியாபாரிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கும் விஷயத்திலும் இருப்பு வைத்துச் சில்லறை வியாபாரிகளுக்கு வினியோகம் செய்யும் விஷயத்திலும் ஊழல் ஏற்படாதபடி, அரசாங்க அதிகாரிகள் விழிப்பாக இருந்து செயலாற்றி நாட்டு மக்களின் கஷ்டத்தைப் போக்க முயல வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

# வா! அருகில்!

மு. உலகநாதன்

★

என்னாசைக் காதலியே!
எழிலுருவே! தண்மதியே!
உன்மீது நான்கொண்ட
உயிரொன்றும் காதலினால்
பொன்வேண்டேன் பொருள்வேண்டேன்
புத்தமுதே நீயிருப்பின்
அன்புக்கே ஈடெதுசொல்?
அனைத்துலகும் ஒப்பாமோ? 1

தென்னகத்துப் பைங்கிளியே!
தீந்தமிழைப் பழவுதட்டால்
இன்னிசையாய் மிழற்றுகின்றாய்
இன்பமடி! ஈடில்லை!
அன்றொருநாள் இளங்கோவின்
அழகான சிலம்பெடுத்தே
என்னுள்ளம் குளிர்விக்க
இசைத்ததைநான் நினைத்திட்டேன். 2

பொங்கிவரும் கடலலைபோல்
புதுவின்பம் அதைநினைத்தால்
எங்கிருந்தோ தோன்றுதடி
என்செய்வேன்? என்னன்பே!
எங்கேநீ எனக்காக
இன்னுமொரு முறையந்தத்
திங்களைப் போற்றுகின்ற
தீம்பாட்டைப் பாடிடுவாய். 3

உலகத்தின் இன்பமெல்லாம்
உண்டெனக்கே நீயிருப்பின்
கலகலக்கும் சிலம்பிசையும்
கவினினிமை மேகலையும்
இலங்குபுகழ்க் குண்டலமும்
ஈடில்லாக் கவிச்சுவையும்
மலர்மணமே! மாத்தமிழே!
மங்கையுன்னால் பெறுகின்றேன். 4



சிறுபார்வை ஒன்றென்மேல்
செலுத்திப்பின் சென்றுவிட்டாய்
அறுத்தொழிக்கும் கூர்வாளாய்
அப்பார்வை அமைந்ததையோ?
வெறுப்பதனால் செய்தாயோ?
விருப்பதனால் செய்தாயோ?
அறிந்ததனை என்னபயன்?
அப்பார்வை கொடுங்கூற்றே! 5

கலிங்கத்துப் பரணியதன்
கவிச்சுவையே! சொற்றொடரே!
புலியொத்த வீரனடி
பொற்றமிழே! உனதன்பன்.
இலைநீதான் எனச்சொன்னால்
இங்கெனக்கு வாழ்வேது?
நிலைக்குமுயிர் உன்னாலே
நீள்வாழ்வும் உன்னிடத்தே! 6

அடடா! வோ! சிலம்பிசைக்க
ஆடியஉன் ஆட்டத்தால்
திடங்கொண்ட என்நெஞ்சம்
தீமுன்னால் மெழுகினைப்போல்
அடிபெயர்ந்தே உருகியதே
யாரடிசொல் பொறுப்பதற்கு?
அடிபெண்ணே! இனிப்பொறுத்தால்
ஆவியது பிரிந்துவிடும். 7

ஊடலினை விட்டுவிடு
உனக்காகக் காத்துள்ளேன்.
பேடையளே! பெண்ணரசே!
பெரும்பிழைதான் ஏதுசெய்தேன்?
பாடுபடும் பாட்டாளி
பலனின்றி வாடுதல்போல்
ஏடி! எனை வதைக்கின்றாய்
எனக்காக வா! அருகில். 8

# காதல் வழக்கு

**'கார்முகிலன்'**

*

உலகத்தின் அன்றாட நிகழ்ச்சிகளைத் திறம்பட எழுதி தன் சொல் வன்மையாலும், கற்பனை திறத்தாலும் எழுத்துக் கோர்வைகளை அழகுபடுத்தி, படிப்போரின் உள்ளம் கவர் கள்வன் தான் எழுத்தாளன். இருந்தாலும் அவனுக்கும் குடும்பம், பந்தம், பாசம் எல்லாம் இருக்கத்தானே வேண்டும்? நான் மட்டும் அதற்கு விதிவிலக்காக முடியுமா?

"தாமரை" இலக்கிய இதழிலிருந்து, சிறு கதை ஒன்று எழுதி அனுப்புமாறு அதன் ஆசிரியர் என்னை வேண்டியிருந்தார். எண்ணியதை எழுதித்தள்ளும் திறமை என்னிடம் இருப்பதாக வாசக நண்பர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த தெம்போடு எழுத உட்கார்ந்தேன். குற்றாலத்து அருவி போல் ஓடிக் கொண்டிருந்த என் சிந்தனை தடைப்பட்டது. இல்லை! அன்றைய நாளிதழின் முதல் பக்கத்தில் இருந்த அந்த விசித்திர செய்திகளை என் எண்ணங்கள் வட்டமிட்டன. என் கற்பனை நீரோட்டத்திற்கு வாய்க்காலாக வழி அமைத்த அந்தச் செய்தி இதோ!

"பருவ மங்கையை கடத்தியதாக இளைஞர்மீது வழக்கு!!"

சரி, படியுங்களேன்!

திரண்ட தோளுடையானின் வருகைக்காக மருண்ட பார்வையுடையாள், வழிபார்த்திருந்தாள். காத்திருந்தாள். உருண்டை விழியான் வந்தான். வண்டு நிகர் விழிகள் வரவேற்றன. சுருண்ட அவள் கூந்தலை கோதித் தடவி நின்றான், கோதை அவள் நாணத்தால், பெண்மையின் நற்பயிர்ப்பால், மயிர் சிலிர்த்து, மன்னவனின் மார்பதனில் முகம் புதைத்தாள். உந்திவிட்ட உள்ள உணர்ச்சியால் ஏந்திழையின் உதடுகள் துடிதுடித்தன. கண்ணிமைகள் கபடமில்லாமல் படபடத்தன. உரிமை உள்ளவன் உன்னிப்பாகக் கவனித்தான். அவள் அழகு விழிகளில் தன் உருவத்தைக் காணத் துடித்தான். துணிந்தான், குமுதத்தின் நினைவு வந்தது அவனுக்கு. தேனூறும் கொவ்வைச் செவ்விதழ் குறுநகை புரிந்து நின்றது. இதழ் ஓரத்தில் ஊறுவது தேனோ? அன்றி கனிச்சாறோ? தேனூறும் வண்டானான்; இன்பத்தால் துவண்டாள், மதுவுண்ட மந்தியின் நினைவு வந்தது அவனுக்கு! அள்ளி அணைத்தான் அக்கிள்ளை மொழியாளை. இன்பமோ, கொள்ளை! கொள்ளை!!

"போதும் அத்தான் போதை ஏறிவிடப் போகிறது" என்றாள் பேதை குறும்பாக, அரும்பு மீசையை தடவி நின்ற அவன் கரும்பைக் கடித்து நிற்கும் எறும்பானான். உறுதிவாய்ந்த அவன் உள்ளம் 'பேசு' 'செந்தமிழில் பேசு' என்று உந்தியது. அவன் பேசவில்லை. அவன் உணர்ச்சி உள்ள உதடுகள் பேசின 'இச்' என்ற ஒலி எழுப்பி, அவள் தடுக்கவில்லை. அவள் உதடுகள் தடுத்தன



'இச்' என்ற எதிரொலி எழுப்பி, அவள் அழகுக் கூந்தலை, காளை அரைகுறையாக அள்ளி முடித்து விட்டான்.

"இத்தோடு முடியட்டும் இவ்விளையாட்டு அத்தான், நாளை தொடர்ந்து தொடங்குவோம்" என்றெழுந்தாள் அந்த எழிலி.

சுடுநீரில் குளிர் நீர்விட்டு சூடாற்றி, "குளியுங்கள்" என்றாள். குளித்தான். வேற்று உடை மாற்றிக் கொண்டான், மாலைவந்தது. மஞ்சள் வெயிலையும் கொணர்ந்தது. சோலை சென்றான் மணம் பரப்பும் மலர் கொணர்ந்தான். 'கயல்விழி' என்று விளித்தான். இளம் புள்ளி மானைப் போல அவள் துள்ளி ஓடிவந்தாள். "அழைத்த தேன் அன்பே?" என்றாள். அள்ளி முடித்திருந்த கூந்தலில், கிள்ளி எடுத்து வந்த மலர் சூட்டி மனம் மகிழ்ந்தான். உணவு உண்டான். இரவும் வந்தது. ஆனால் உறக்கம் கொண்டானில்லை. சோலை வழியே சோர்ந்து நடந்தானில்லை. அவளோடு கை கோர்த்து நடந்தான்.

வான் நிலவின் ஒளியினிலே மாந்தளிர் மேனியினைக் கண்டான். வாய் மூடி மோனியானான். விழிகளிலே விண்மீன்கள் களி நடனமாடின. நிலவுப் பெண்ணை துரத்தித் துரத்தி அணைத்தான் கார் முகிலன். முடிவில் முழு நிலவையே மூடி மறைத்துக் கொண்டான். இருள் சூழ்ந்தது. ஆனால் இவ்விருவருக்கும் துன்பம் அழிந்தது. இன்பம் முளைத்தது. இரவு முடிந்தது. பிரிய மனமின்றி பிரிந்தனர் அவ்விருவரும்.

முல்லைக் காட்டோரம் குடில் அமைத்து, மரம் வெட்டிப் பிழைக்கும் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன்தான் அவன். இளவயதிலேயே பெற்றோரை இழந்தான். அவளும் முறைப் பெண்தான். ஆனால் மனித இருதயத்தில் மகத்தான இடம்பெறும் பணம், அவர்களிடையே ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தியது. ஊரறியாமல், ஊரணியோரத்தில் ஊருறங்கும் நேரத்தில் உணர்ச்சி ஒத்த இருவரும் உள்ளத்தின் கருத்துக்களைப் பறிமாறிக் கொண்டனர். ஊர் அறிந்தது ஒருநாள். உத்தரவு பிறந்தது வெளியேறக் கூடாது என்று. அவளுக்கு நாட்கள் சில நகர்ந்தன. பிரிந்த உள்ளங்கள் பெரிதும் வருந்தின. மற்றும் ஒரு முறை சந்தித்தான்.

"கையில் காசில்லாவிட்டாலும் மனத்தில் மாசில்லாமல் வாழலாம் வா!" என்றழைத்தான். ஏந்திழை முதலில் தயங்கினாளேயாயினும் இறுதியில் ஒப்பினாள். தடைபல கடந்தான், கடத்திச் சென்றான். மருதமலை ஓரத்தில் மண் குடிசை கட்டி தனி வாழ்வு தொடங்கி விட்டான். மரம் வெட்டுவான், விற்பான். காலையில் செல்பவன் மாலைதான் திரும்புவான். கிடைத்த தொகையை கொணர்ந்து கோதையிடம் கொடுத்து விடுவான். மனம் ஒத்த மங்கையோடு மனம் குளிர வாழ்ந்தான்.

நாட்கள், நகர்ந்தன, மாதங்கள் மறைந்தோடின.

"அத்தான்," என்றாள் ஒரு நாள்.

"என்ன? என் முத்தாரமே?" என்று பதில் குரல் கொடுத்து நின்றான்.

"நம் இன்பத்திற்கு இடையிலே இன்னொருவன் வருகிறான் அத்தான்" என்றாள் குறும்பாக.

"யார் அவன் சொல்?" தாபத்தால் சோர்ந்திருந்த அவன் உதடுகள் கோபத்தால் துடித்தன.

"கொன்று குவிக்கிறேன் கும்பலாக வந்தாலும், மரம் வெட்டி உறம் பெற்ற தோள்கள் இவை, என் கயல்விழிக்கு இடையூறு செய்ய வந்தவன் யார்? சொல்லு கயல்விழி அந்த கயவனை? சொல்" கோபத்தால் துடித்த அவன் உதடுகளை கோதை தன் காந்த விரல்களால் அழுத்தி மூடினாள்.

"தங்கள் மகன்!" என்றாள். துள்ளி ஓடிவிட்டாள், இருந்தால் எங்கே எள்ளி நகையாடி விடுவானோ? என்ற ஐயத்தால். விட்டு விடுவானா அவன்? விரட்டிப் பிடித்தான்! மடியிலேக்கிடத்திக் கொண்டு அப்புல்தரையில் அமர்ந்தான்.

"ஆமாம் அன்பே, செவ்விய உன் இதழ்களை நான் கவ்வியிருக்கும் நேரத்தில் கத்தி காதைத் துளைப்பான்! இன்பமாய் இருவரும் இரவில் இருக்கும்போது இன்னல் விளைவிப்பான்! இடையூறு செய்திடுவான்! நான் உன்னைத் தொட்டு மகிழும் நேரத்தில் தொல்லை பல தந்திடுவான்! இல்லையா என் இன்பமே, சொல், ஏன் மௌனம்?

"......................"

"இப்போதே மௌனம் சாதிக்க ஆரம்பித்து விட்டாய், இன்னும் அவன் பிறந்து வளர்ந்து, 'அம்மா' என்று அழைத்து விட்டால் போதும், என்னை அடியோடு மறந்து விடுவாய். கொஞ்சி மகிழலாம் வா, என் அஞ்சுகமே என்று நான் உன்னை கெஞ்சி அழைத்தாலும் பிஞ்சு உயிருக்கு பால் தரவேண்டுமென்று கூறி தட்டிக் கழித்து விட்டுச் சென்றுவிடுவாய் அல்லவா?

"..........................."

பிள்ளைக்கனியமுதின் கொள்ளை அழகைக்கண்டு அம் மாம்பழக் கன்னத்தில் கிள்ளி மகிழத்தான் உனக்கு நேரம் இருக்குமே தவிர, இந்த அத்தானை கவனிக்க நேரமேது? என்று பொய்க் கோபத்தோடு சிணுங்கி நின்றான்.

"இல்லை அத்தான், இன்ப வாழ்வின் ஆரம்பமே, பிள்ளைக் கனியமுது தானே?" நீங்கள் மட்டும் என்ன, அவன் மழலை மொழிகளைக் கேட்க ஆரம்பித்துவிட்டால், என் கொஞ்சு மொழிகளும் கெஞ்சும் விழிகளும் உங்களுக்கெங்கே புரியப் போகின்றன? அவன் பிஞ்சு விரல்களைத் தொட்டு அனுபவிக்கும் சுகத்தில், உங்களையே தஞ்சம் என்று வந்தவளையும் மறந்துவிடுவீர்கள் இல்லையா?" என்றாள் குழைவாக அவளும் ஊடல் எண்ணத்தை உள்ளத்தில் வைத்து.

"பிறப்பது ஆண்தான் என்று எப்படித் தெரியும் உனக்கு? பெண்ணாகவும் இருக்கலாம் அல்லவா?"

"எதுவாயினும் குழந்தை தானே அத்தான்"!



"பார்த்த உடனே பரவசமளிக்கும் பார்வை, தொட்டவுடனே உள்ளம் சிலிர்க்கும் மென்மை, அத்தனையும் கொண்டே நீ எனக்குக் கிட்டியது என் பாக்கியமே"

"பள்ளியில் படிக்காமல் எப்படி அத்தான் இத்தனை சத்தான மொழிகளை முத்தாகப் பேசுகிறீர்கள்?"

"எத்துணைதான் படித்தாலும் அனுபவப்பள்ளியில் பயிலும் ஆழ்ந்த அறிவைப்போல் இப்புவியில் இல்லை அன்பே!"

"அப்படியென்றால்"?

"உள்ளம் ஒன்றுபட்டால் உயர்வேது தாழ்வேது என்று முதிர்ந்த நம் முத்தமிழ் மூதோர்கள் மொழிந்திருக்கிறார்கள்"

"ஆம்...அதுதான் நம்மை ஊர்விட்டுத்துரத்தி வாழவைத்திருக்கிறது"

"காதலின் முழுச்சுவையும் அதில்தான் பருக முடியும் கண்ணே!"

"ஆனால் வாழ்க்கைக்கு வேண்டிய வருவாய் வேண்டுமே அத்தான்"

"அனுபவ அறிவு இருக்கிறது. அதோடு பொருள்தேட நம்மிருவரிடமும் ஊக்கமிருக்கிறது. எது வேண்டும் நமக்கு இனி?"

அவள் கண்கள் நீரைச் சொறிந்தன. அதைப் புரிந்துகொண்டவன் போல் அவளைப் பார்த்தான்.

"ஆமாம்...கயல்விழி, எத்துணைதான் இருந்தாலும் தாயற்ற உன்னை உன் தந்தை, தாயைவிட மேலான அன்பு செலுத்தி ஆசையோடு வளர்த்தார். கண் முன்னால் ஒருவனுக்கு மண முடித்து வைத்து மனம் மகிழ, மகள் வாழ்வதைக் கண்டு தானும் மகிழ வேண்டும் என்று எண்ணியிருந்தார். ஆனால் நான் அவர் ஆசைகளை யெல்லாம் நிராசைகளாக்கி விட்டேன்" ஊம்.....காலம் வரும் காலைப் பிடித்தாவது மன்னிப்பு பெற வேண்டியதுதான் இம் மாணிக்கப் பெட்டகத்தைத் திருடியதற்குப் பதிலாக.'

"போதும் அத்தான், போனதை எண்ணி என்ன பயன்? இனி நடப்பதைச் சிந்தியுங்கள்."

காலை மலர்ந்தது, இருள் அகன்றது. காலைக்கடன்களை முடித்துக் கொண்ட காளை காடு நோக்கிப் புறப்பட்டான்.

"சரி வருகிறேன் கயல்விழி, சென்று சமையலைக் கவனி, யாரும் ஒரு வேளை நம்மைத் தேடி வந்தாலும் வரலாம், வந்தால் உபசரித்து உணவளித்துப் பேசிக்கொண்டிரு, மாலை சீக்கிரமே திரும்புகிறேன். சரி வரட்டுமா?"

பாவை அவள் பார்வைதான் விடைகொடுத்தது. தலைதான் சற்றே தாழ்ந்தது 'சரி' என்று,

சென்றான், மாலை திரும்பினான். கூலியாகக் கிடைத்த இரண்டு ரூபாய் நாணயங்களைக் கொண்டு, தந்தான் கையில், உழைப்பின் பெருமிதம் அவன் உள்ளத்தில் எழுந்து முகத்தில் பிரதிபலித்தது.

கயல்விழியைப் பெற்றவன் ஊர் ஊராக தேடி அலைந்தான். முடிவில் அரசாங்க அதிகாரிகளிடம் முறையிட்டான். புகார் கொடுத்

தான். வலை போட்டுத் தேடினர் காவலர். இறுதியில் அவர்கள் இருக்கும் இடமும் தெரிந்தது.

மாலை மங்கியது, இரவும் இருட்டோடு வந்தது. போலீஸார் இருவர் திடீரென்று அவன் குடிலுக்குள் நுழைந்தனர்.

"தாளமுத்து என்பது நீதானே?" என்றான் ஒருவன். "ஆம் நான்தான். என்ன வேண்டும் உங்களுக்கு? இவ்விரவு வேளையில் இத்தனிமையான குடிசையில் என்னைத் தேடி வந்தது.......!!

"போதும் நிறுத்தடா, பெண்ணைக் கடத்தி வந்து தனியாக ஒளிந்து வாழ்வதுமில்லாமல் வாய் வேறு பேசுகிறான். சரி, சரி, நட ஸ்டேஷனுக்கு, கோர்ட்டில் வந்து பதில் சொல்லிக்கொள்...... ஒரு வருடமாக தேடிக்கொண்டிருக்கிறோம் உன்னை...உம்...நட"

பேதை பதறினாள். புலம்பினாள், துக்கத்தால் துடிதுடித்தாள். "நான்தான் அத்தானோடு வந்தேன், அவர்மேல் குற்றமில்லை. விட்டு விடுங்கள் அவரை," என்று மன்றாடினாள். துவண்டாள். அவளைத் தேற்றுவார் யாருமே இல்லை.

அவன் உளம் உருகினான், மனம் மருகினான். அவள் கண்ணீர் துடைக்க ஆளில்லை அங்கே. ஆனால் அவள் வார்த்தைக்கு செவி சாய்க்கவில்லை அக்கடமை வீரர்கள்.

கூண்டிலே ஏற்றி நிறுத்தினர். அவனை ஒருவாரம் வரை காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார் நீதிபதி. விசாரணைக்குமுன். அவன் நீட்டிவிட்ட கரங்களில் மாட்டிவிட்டனர் விலங்கை,

பத்து மாதம் நிறைந்த கர்ப்பிணி அவள் பெற்றெடுத்தாள், பக்கத்திலே இருந்த பெரு நரைக்கிழவி ஒருவளின் உதவியால்.

மணாளன் சிறையிலிருக்கும் நேரத்தில் மகன் பிறந்தான், கொடுமை, கொடுமையிலும் கொடுமை.

ஒருவாரம் ஒழிந்து மறைந்து மீண்டும் கூண்டில் ஏற்றப்பட்டான். விசாரணை நடந்தது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி.

"இனி இவர்களைப் பிரிப்பது நல்லதல்ல, வயது பரிசோதனையில் பெண்ணுக்கு இப்போதுதான் பதினெட்டு வயது ஆகிறது என்றாலும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து விட்டாள். இருதரப்பாரும் ஒத்துப் போவதே நலம்," என்றார்.

மாமனார் ஒப்பினார், மருமகன் தலை அசைத்தான், நீதிபதியின் வார்த்தைக்கு இருவரும் பணிந்தனர். பின்........

மாமனார் கைகூப்பி வணக்கம் செலுத்திவிட்டு நீதி மன்றத்தை விட்டு அகன்றார். வெளி வந்தார். மகளைக் கண்டார். மனம் பொறுக்கவில்லை. அவர் நீட்டிய கையில் அவர் பேரன்தான் வந்து மாட்டினான். உச்சி மோந்தார். ஆசிகூறி அகலப் பார்த்தார். விடுவானா பேரன், "குவ்வா, குவ்வா," என்று குரல் கொடுத்தான். நீதிமன்றம் ஏறியதைப்பற்றியும் பொருட்படுத்தவில்லை, நீர்மல்கும் கண்களுடன் நோக்கி நின்றார்கள் அந்த இளந்தம்பதிகள்.

"என்னங்க இன்னும் உங்களுக்குப் பசிக்கவில்லையா?" என் இல்லத்தரசியின் குரல் என் சிந்தனையைத் தடைபடுத்தியது.

அதோடு தினத்தாளின் செய்தியும் முடிந்தது. இனி உங்கள் கற்பனையோடு கலந்து கொள்ளுங்கள்.

# கலை விரோதி

ச. சங்கரநாராயணன்

ஔரங்கசீப் மன்னரின் பிறந்த நாள் விழா, இன்னும் ஒரு வாரத்தில் நடைபெற விருந்தது. தன் பிறந்த நாள் விழாவின் பொருட்டு, பௌர்ணமியன்று கலைவிழா வொன்றும் நடத்தத் திட்டமிட்டிருந்தார். அக் கலை விழாவில் கலந்து கொள்வதற்காகப் பல்வேறு நாடுகளின் கலைஞர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தன. வெளிநாடுகளிலிருந்து கலைஞர்களும், வேடிக்கைப் பார்க்கக் கூடினர். அலங்கரிக்கப்பட்டிருந்த டில்லிமா நகரின் சந்து பொந்துகளெல்லாம், போக்குவரத்து நிறைந்து பொலிவுடன் காணப்பட்டன.

ஔரங்கசீப் மன்னர் ஒரு சிறந்த கலைஞர். ஆடல் பாடல்களில் பெரிதும் விருப்புடையவர். அதற்காகத்தான் தன் பிறந்தநாள் விழாவில் கலைவிழாவொன்று நடத்தி, வெற்றி பெறும் கலைஞர்கட்குப் பரிசு வழங்கவும் தீர்மானித்திருந்தார்.

அந்த ஆண்டு, ஆடல் போட்டியிலே ஔரங்கசீப் மன்னரின் அன்பிற்குப் பாத்திரமான ஆயிஷா கலந்து கொள்ளவிருந்தாள். ஆயிஷா அரும்புப் பருவத்திலேயே அனாதையாகி, ஔரங்கசீப்பின் ஆதரவில் அரண்மனையிலேயே வளர்ந்து வந்தாள். சிறுவயதிலேயே ஓரிடத்தில் நில்லாமல் ஓடியாடித் திரிந்த அவள் என்றாவதொருநாள் ஆடற்கலைக்கு அழகுதேடித் தருவாள் என்றெண்ணிய மன்னர், ஆயிஷாவிற்கு ஆடற்கலையைப் பாண்டித்யம் பெற்ற ஒருவர் மூலம் பயிற்றுவித்தார். அவளும் நாளொருமேனியும் பொழுதொரு ஆட்டமுமாக ஆடற்கலையின் அங்கங்கள் யாவற்றையும் பங்கமறக் கற்றுத் தேர்ந்தாள்.

அரும்புப் பருவத்தினளாயிருந்த ஆயிஷா, இன்று மலர்ந்து மணம் பரப்பும் மங்கையாக விளங்கினாள். இளமையும் அழகுமுடைய அவள் ஆடற்கலையில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லையெனும் நிலையடைந்தாள். உலகத்து அழகையெல்லாம் தனது தங்க நிற அங்கங்களில் தேக்கி வைத்திருந்த அவள், இரக்கமில்லா அரக்கர்களைக்கூடத் தன் ஆட்டத்தால் ஆடவைத்து விடுவாள். கண்டவர் காமுறும் கட்டழகியும் கலையரசியுமான அவளிடம், கலைப்பிரியரான ஔரங்கசீப் மன்னர் தன் உயிரையே ஒப்படைத்திருந்ததில் வியப்பென்ன? ஆடற்கலைப் போட்டியில் ஆயிஷாவே முதற்பரிசு பெறுவாளென்று ஔரங்கசீப் மன்னரென்ன?—எல்லோருமே எண்ணியிருந்தனர்.

பாரசீக நாட்டிலிருந்து உமார்கய்யாம் என்றோர் கவிஞன் கலை விழாவில் கலந்துகொள்ள வந்திருந்தான். இளமையும் அழகும் இனிய குரலுமுடையவன் அவன். பண்ணிசைத்து அவன் பாடுவதைக் கேட்பவர்கள் பாரிலுள்ள துயரெல்லாம் மறந்து ஆடுவார்கள்! வாய்திறந்து அவன் பாட ஆரம்பித்தால், கேட்பவர் காது

களிலே தேனாறு பாயும்! பாரசீகத்திலே பரிசுகள் பல பெற்ற அவன், ஔரங்கசீப் மன்னரின் அழைப்பின்பேரில் டில்லிக்கு வந்திருந்தான். அவனளித்த இசையமுதை வேண்டிய மட்டும் பருகிக் களித்தார் மன்னர்.

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த மன்னர்களையும், மக்களையும் மகிழ்விக்கும் எண்ணத்தால், உமாரின் பாட்டிற்கேற்ப ஆயிஷா ஆடுவதற்கும் ஏற்பாடு செய்திருந்தார். ஆயிஷாவைப் பிறருடன் பேசுவதற்கோ, பழகுவதற்கோ அனுமதிக்காத மன்னர் தன் பிறந்த நாள் விழாவைச் சிறந்த முறையில் கொண்டாடுவதற்காக, உமாரும் ஆயிஷாவும் ஒன்று சேர்ந்து ஒத்திகை நடத்திப் பார்க்க அனுமதித்திருந்தார். அதோடு மட்டுமல்ல. அவர்களுக்கெனத் தனி மாளிகையொன்றையும் ஒதுக்கித் தந்திருந்தார். அத்தனி மாளிகையிலே உமாரும் ஆயிஷாவும் வேண்டிய நேரத்தில் கூடி ஒத்திகை நடத்திப் பார்த்தனர்.

சிலநாட்களிலேயே உமாரின் இசையிலே ஆயிஷாவும், அவளின் ஆட்டத்திலே உமாரும் மயங்கினர். கலைவல்ல அவர்களின் பழக்கம் காதலாகக் கனிய அதிக நாட்கள் தேவைப்படவில்லை. இரவு பகலென்ற வித்தியாசமின்றி, எந்நேரமும் அவர்கள் கூடி ஆடிப்பாடி அகமகிழ்ந்திருந்தனர்.

பௌர்ணமிக்கு முதல் நாள் இரவு. நீலவான வீதியிலே நிலவுப் பெண்ணாள் தனியாகப் பவனி வந்து கொண்டிருந்தாள். அவளது அழகையும் அந்தஸ்தையும் கண்டு பொருமை கொண்ட தாரகைப் பெண்களெல்லாம், கூட்டங் கூட்டமாகக் கூடிக் 'குசு குசு' வென்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்களது கிண்டல் பேச்சையும்;பொருமைப் பார்வையினையும் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளாமல், தன் வழியே சென்று கொண்டிருந்தாள். குளிர் தென்றல் மெல்லென வீசித் தளிர்க் கொடிகளின் மலர்களிலே மதுவருந்தி மயங்கிக் கிடக்கும் வண்டுகளைத் தாலாட்டித் தூங்கச் செய்து கொண்டிருந்தன.

அந்த நேரத்திலே உமார்—ஆயிஷா தங்கியிருந்த மாளிகையிலிருந்து இனிய கீதமொன்றும் 'ஜல் ஜல்' என்ற சதங்கையொலியும் மெல்லென எங்கும் மிதந்து வந்தது.

உமார் காதல் கீதமொன்றைக் களிவுடன் பாடிக்கொண்டிருந்தான். அதற்கவன் கைகளின் ஆட்டம், கால்களின் ஓட்டம், முகங்களில் உணர்ச்சி, அங்கங்களின் அசைவு, கண்ணின் வீச்சு, கரும்புப் பேச்சு, குறும்புப் பார்வை, அரும்புப் புன்னகை இவற்றால் விளக்கம் காட்டி ஆடிக் கொண்டிருந்தாள்.

காதல் கீதமெனும் மதுவைக் காதாலே பருகிக்கொண்டு, அதன் கருத்திற்கேற்ப ஆடிக்கொண்டிருந்தாள் ஆயிஷா. அவளது தங்கநிற அங்கங்களின் அசைவு நெளிவு கண்ட உமாரின் உள்ளம் பேதலித்தது. ஆயிஷாவோ இசையிலும் இசை மன்னனின் இளமைப் பொலிவிலும் மயங்கி, நிலைமறந்து, சோர்ந்து ஆடிக்



கொண்டிருந்தாள். புள்ளிமானைப் போல் துள்ளியாடும் அவளின் மேனியழகு கண்டு மெய் மறந்தான் உமார். அதனால் அவன் எண்ணம் சிதற, பாடிக்கொண்டிருந்த பாட்டும் நின்றது. ஆட்டத்திலேயே ஒன்றியிருந்த ஆயிஷா பாட்டு நின்றதும் ஆட்டத்தை நிறுத்த முயன்று முடியாமல் போகவே, நிலை தடுமாறிக் கீழே விழுந்தாள்.

பாட்டு நின்ற சிறிது நேரத்திலேயே தன்னுணர்வு பெற்ற உமார், ஆயிஷாவின் நிலையை உணர்ந்து கொண்டான். நிலை தடுமாறிக் கீழே விழுந்த அவளை ஓடிச்சென்று தன்னிரு கரங்களாலும் தாங்கிக் கொண்டான். கீழே உட்கார்ந்து அவள் தலையைத் தன் மடிமேல் தூக்கி வைத்துத் தன்மேல் துண்டின் நுனியால் மெதுவாக விசிறினான்.

'ஜில்'லெனக் காற்று தன்மேல் வீசவே தன்னுணர்வு பெற்றாள் தையல். உமாரின் மடிமேல்தான் தலைவைத்துப் படுத்திருப்பதறிந்த அவளது அழகு முகம் நாணத்தால் சிவந்தது. எழுந்திருக்க முயன்றவளைத் தன்னிரு கரங்களால் ஏந்தித் தன் மார்போடணைத்துக் கொண்டான். என்றைக்குமில்லாப் புத்துணர்வேற்பட்டது அவளுக்கு. அவனது அணைப்பிலே ஆனந்தங் கண்ட ஆயிஷா விடுபடும் விருப்பமின்றி, மகுடியின் நாதத்திலே மயங்கிய நாகம் போல அசைவற்றிருந்தாள்.

மயங்கிக் கிடந்த அவளின் கண்ணாடிக் கன்னத்திலே, உமார் தன் உதட்டால் ஓவியம் தீட்டுவதற்கும், ஔரங்கசீப் மன்னர் அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது. "துரோகிகள்!" என்ற இடிமுழக்கம் கேட்டுத்தான் இருவரும் தன்னிலையடைந்து பிரிந்தனர். விலகிய இருவரும் எழுந்து, நாணத்தாலும் பயத்தாலும் நிலம் நோக்கி நின்றனர்.

'புஸ்'ஸென்ற பெருமூச்சொன்று ஔரங்கசீப் மன்னரின் மூக்கிலிருந்து வந்தது. "மன்னா! எங்களை மன்னித்தருள வேண்டும்! எங்கள் காதலை ஏற்று, எங்கள் திருமணத்தைத் தாங்களே நடத்தித் தரவேண்டும்!" என்று நடுங்கும் குரலிலே நயத்தோடு வேண்டினான் உமார்.

"சீ!...துரோகிகளே!...நன்றிகெட்ட உங்களையா மன்னிப்பது? ஒருக்காலுமில்லை! அனாதையாகக் கிடந்தவளை எடுத்து ஆதரவோடு வளர்த்தேன்; ஆடற்கலையில் வல்லவளாக்கினேன். வேண்டிய பொருட்களை வேண்டியபொழுது கொடுத்தேன். இதெல்லாம் எதற்காக? மொட்டு மலரும்! என்றாவதொருநாள், அது மலர்ந்து மணம் பரப்பும்! அந்த மணத்தை வேண்டியமட்டும் நன்கு நுகரலாம் என்றெண்ணிக் காத்திருந்தேன்! மொட்டு மலர்ந்தது; ஆனால் நான் நுகரவேண்டிய மணத்தை நீ நுகர முயன்றாய்! என் உப்பைத் தின்று, என்னிடத்திலேயே வளர்ந்த இச்சிறுக்கி, எனக்கே துரோகம் செய்துவிட்டாள்! அதற்கு நீயும் உடந்தையானாய்! செய்ததையெல்லாம் செய்துவிட்டு மன்னிப்பு வேறு கேட்டு மன்றாடுகிறாய்!

உன்னை மன்னிப்பது இவ்வுலகத்திற்கே தீங்காகும்! உன்னையும் இவனையும் எமனுலகிற்கே அனுப்பிவிடுகிறேன் பார்! யார் அங்கே?" என்று இடிமுழக்கம் செய்து தன் கைகளைப் பலமாகத் தட்டினர். நான்கு வேல்பிடித்த வீரர்கள் ஓடோடியும் வந்தனர்.

"இவர்கள் இருவரையும் கொண்டுபோய்ப் பாதாளச் சிறையிலடையுங்கள்!" எனக் கட்டளையிட்டார். வீரர்கள் அவ்விருவரையும் சிறைச்சாலைக்கு இழுத்துச் சென்றனர்.

மறுநாள் பொழுது வெகுசீக்கிரமே புலர்ந்தது. அன்று நடைபெறவிருந்த கலைவிழா நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. கலைஞர்களெல்லாம் தத்தம் நாடு நோக்கி ஓடலாயினர். கலைப்பிரியரான ஔரங்கசீப் மன்னர் கலை விரோதியானர்! ஆடல் பாடல் போன்ற கலைகளுக்கெல்லாம் அன்றுமுதல் தடை விதிக்கப்பட்டது. ஆயிஷா-உமார் இவர்களின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. ஆம்! கலைவிழா நடைபெறவிருந்த அன்றைக்குக் 'கொலை விழா'வே நடந்துவிட்டது! பாவம்! ஆடலும் பாடலுமே ஆயிஷா-உமார் மூலம் தனக்குத் துரோகம் செய்துவிட்டதாக எண்ணி விட்டார்.


பிரபல எழுத்தாளர்

ஜெயராஜ்

எழுதும்

"தாடிக்காரன்"

என்ற

சமூக நாடகம்

அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து

வெளிவரும்


# பஞ்சம் தீர்ந்தது!

நல்லை—அ. இளங்கோவன்

*

பஞ்சம் தீர்ந்து விட்டது—நாட்டுப்
பஞ்சம் தீர்ந்து விட்டது!
மிஞ்சும் வறுமைப் பிணியெலாம்—நம்மை
விட்டுப் பறந்து போனது! 1

வானம் மெய்த்து விட்டது—நல்ல
மாரி பெய்து விட்டது!
போன வளமை மீண்டது—புத்தம்
புதிய வாழ்வு வந்தது! 2

காடு கழனி விளைச்சலால்—நமது
கட்டுக் கவலை விலகிடும்!
மாடு கன்று பல்கியே—நாட்டு
வளம் பெருக்கி நின்றிடும்! 3

இயற்கை யன்னை தன்னருள்—பாலித்
தின்ப மாரி யூற்றினள்!
செயற்கை யாலே தொழில்பல—செய்து
செழித்து வாழ்ந்து மகிழ்குவோம்! 4

செய்யுந் தொழில்கள் அனைத்தையும்—கூடிச்
செய்து சிறந்த பலனெய்தி
உய்யுந் துறைகள் காண்குவோம்—நல்ல
உறவு பெருக்கி வாழ்குவோம்! 5

தேவை யெதிலு மில்லாமல்—மக்கள்
திருப்தி யாக வாழ்ந்திட
ஆவ தெல்லாம் செய்துநாம்—இங்கே
அமர ராக வாழ்குவோம்! 6

தமிழர் நாட்டின் எல்லையை—வகுத்துத்
தமிழின் ஆட்சி செய்குவோம்!
அமிழ்தில் இனிய தாய்மொழி—வளர்ச்சி
அடையத் தொண்டு செய்குவோம்! 7

கலைகள் யாவுந் தமிழிலே—கற்றுக்
கலைஞ ராக வாழ்குவோம்!
மலையில் உயர்ந்த இமயம்போல்—உயர்ந்த
மக்க ளாக வாழ்குவோம்! 8

உலக மெல்லாம் வியந்திட—அறிவின்
உயர்ச்சி கண்டு நின்றுநாம்
கலக மொன்று மின்றியே—உலகம்
கலந்து வாழச் செய்குவோம்! 9

பண்டு தமிழர் வாழ்விலே—கொண்ட
பரந்த புகழை மீண்டும்நாம்
கொண்டு வந்து நிறுத்துவோம்—நமது
குறைகள் எல்லாம் திருத்தியே! 10

# வடசொற்றிரட்டு

ஆர். எஸ். நாவலர்

★

கீழ் வருவன பெரும்பாலும் பிற்காலத்து வழங்குவன அவற்றிற்கு நேரான தமிழ்ச்சொற்கள் வலப்பால் எழுதப் பட்டுள்ளன. முதலில் நிற்பன வடசொற்கள் என்றறிக. அவற்றுள் சிலவற்றைத் தமிழ்ச்சொற்கள் என்பாரும் உளர்.

## உயிர்

### அ

அகசு—பகல், பொழுது.
அகாதம்—ஆழம், தாழ்ச்சி.
அகாலம்—பொழுதன்மை, அல்பொழுது.
அகாரியம்—வினையன்மை, அல்வினை.
அங்கம்—உறுப்பு, உடம்பு.
அங்கராகம்—செங்கலவை, செம்பஞ்சுக்குழம்பு.
அங்காரகன்—ஆரல், செவ்வாய்.
அங்கிசம், அமிசம்—பால், பகுதி, கூறு.
அங்கீகரணம்—ஏற்றல், உடன்படல், உடன்பாடு.
அங்குசம்—குத்துக்கோல், முனைக்கோல்.
அங்குரம்—கால், முளை, நாறு.
அங்குலம்—விரல், விரலளவை.
அஞ்சலி—வணக்கம், கைகூப்பல்.
அஞ்சனம்—மை, கார், கருமை.
அஞ்ஞாதம்—அறிமறை, அறியப்படாதது.
அஞ்ஞாமை—பேதைமை, மடமை, அறிவின்மை.
அட்டகாசம்—பெருநகை, கடுநகை, வன்னகை, வன்சிரி.
அண்டம்—முட்டை, உலகு, வட்டம், ஆழி, விரை.
அத்தாணி மண்டபம்—கொலுவிருக்கை மன்றம், அரவிருக்கை மன்றம் அத்தாணி என்பது ஆஸ்தானம் என்பவன் திரிபு.
அதருமம்—வரம்பின்மை, கடப்பு, இறப்பு, கதுவிலி, அளவிறப்பு,
அதுலம்—ஒப்பிலி, நிகரிலி, ஒப்பன்மை.
அலட்சியம்—கருத்தின்மை, நோக்கிலி, பொருளன்மை, அல்குறி.
அலங்காரம்—பேரழகு, புனைவு, அலங்கரித்தல்—புனைதல்.
அலாதம்—நெருப்புக்கொள்ளி, கொள்ளி.
அவி—இறையுணா, வேள்வியளவு.
அண்பர்—புல்லியர், கயவர், அற்பம்—புன்மை, கீழ்மை.
அனங்கன்—உருவிலி, வடிவிலி.
அநாதரவு—விருப்பின்மை.
அனுசரித்தல்—கடைப்பிடித்தல், பின்பற்றல்,



அனுவாதம்—எடுத்தாட்சி, (கூறியது கூற்று). உடன்பாடு.
அனுபவித்தல்—நுகர்தல், துய்த்தல், படுதல், பயிலல் தோய்தல்.
அனுபானம்—துணைக்குடிநீர், துணையுறை, துணைமருந்து.
அனுபோகம்—துணை நுகர்ச்சி, இன்பத்துய்ப்பு, இன்னுகர்ச்சி

### ஆ

ஆகருடணம்—கவர்ச்சி, ஈர்ப்பு, கவர்பாடு.
ஆகாரம்—வடிவு, தோற்றம், செயற்பண்பு, செயல்வடிவு.
ஆகுலம்—வருத்தல், பேரொலி.
ஆசாரம்—ஒழுக்கம், நெறி.
ஆசி—வாழ்த்து, பரவி, வழுத்து.
ஆத்திகம்—உண்மைக்கோள், கடவுண்மை, கடவுட்கொள்கை.
ஆதனம்—இருக்கை, சேக்கை.
ஆதாரம்—அடிப்படை, அடி, சான்று.
ஆதீனம்—ஆட்சிப்பாடு.
ஆபணம்—கடைத்தெரு, கடைமறுகு.
ஆபாசம்—போல், (இழுக்கு, இழிவு, வழு.)
ஆமோகம்—(வியாமோகம்)—மயக்கம், மால்.
ஆமோதம்—பெருமகிழ்ச்சி, கழிமகிழ்.
ஆய்த்தம்—ஒழுக்கம், ஒருப்பாடு.
ஆயம்—வரவு, வருமானம், வாரி.
ஆயாசம்—தளர்ச்சி, களைப்பு.
ஆயுள்—வாழ்நாள், (அகவை) நாள், வாழ்வு.
ஆரம்பம்—தொடக்கம், எழுவாய், தோறுவாய், முதல்.
ஆராதனை—வழிபாடு
ஆராமம்—பொழில், சோலை, மலர்ப்பொதும்பர், பூங்கா.
ஆரோபம்—சார், சார்ச்சி
ஆவசியம்—வேண்டுகை, விருப்பம், அமைதி,
ஆவம்பம்—பற்றுக்கோடு, சார்பு.
ஆவாக(ன)ம்—உய்த்தல், அளித்தல், புணர்த்துதல், சேர்தல், ஈடுறுத்தல், ஈதல், செல்லித்தல்.

### இ

இங்கிதம்—குறிப்பு, குறி, கருத்து, உட்கிடை.
இச்சை—விருப்பு, விழைவு, ஆர்வம்.
இடா—இடை (இடப்பக்கம் ஆடும் உயிர்ப்பு.)
இமயம்—பனிமலை, பனிவரை, கடவுள் வரை, பனிமால்வரை.
இராகம்—இசை, பண்.
இராத்திரி—இரவு, அல்.
இராமன்—அழகன்.
இலக்கம்—எண், குறி, அளவை.
இலக்கணம்—இயல். [நூல், குறி.
இலட்சியம்—குறி, நோக்கம், கருத்து, இலக்கியம்—பனுவத்,

இலாகவம்—எளிமை.
இலேக(க)ம்—எழுத்து, வரைநல், கட்டுரை, உரை.
இளா—ஞாலம், படி (உலகு.)

ஈ

ஈசன்—இறைவன், தலைவன், கடவுள், (இவை ஈசுவரனுக்குமாம்.)
ஈசானியம்—வடகிழக்கு, வடகுணக்கு.
ஈசுவரன்—ஈசன் பார்க்க.
ஈநம் (ஈனம்)—இழிவு, இளவு, கீழ்மை.

உ

உகம்—ஊழி.
உசிதம்—தகுதி, கதவு, பொருத்தம், இயைபு.
உசீரம்—விரைவேர் (இராமிச்சு.)
உத்தரம்—மாற்றம், விடை.
உதாரணம்—எடுத்துக்காட்டு, மேற்கோள், சான்று.
உதாரம்—ஈகை, கொடை, அருண்மை, வண்மை.
உபகரணம்—கருவி, கரு.
உபகாரம்—உதவி, துணை, துணைசெயல், செய்துணை.
உபசாரம்—முகமன், நல்லொழுக்கம் நன்செயல்.
உபசுருதி—விரிச்சி, உபதேசம்—வாய்மை, அறிவுரை.
உபயோகம்—பயன். பயன்பாடு.
உபாக்கியானம்—கிளைக்கதை.
உபாகமம்—கிளைநூல்.
உபாயம்—சூழ்ச்சி, வழி, உய்வு.
உபோற்காதம்—முன்னுரை, தோற்றுவாய்.
உய்யானம் (உத்தியானம்)—பூம்பொழில், சோலை.

ஊ

ஊகம்—உத்தி—பொருந்துமாறு, பொருத்தம், ஆராய்ச்சி, ஓர்ச்சி.

எ

எக்ஞியம்—வேள்வி.
எசமானன்—தலைவன், வேள்வித்தலைவன்.
எந்திரம்—பொறி.
எமன்—கூற்று, காலன், மறலி.

ஏ

ஏகம்—ஒருமை, தனிமை, ஒன்று.
ஏகாந்தம்—தனிமை.
ஏமம்—பொன்.



ஐ

ஐக்கியம்—ஒற்றுமை, ஒருமை.
ஐசுவரியம்—திரு.
ஐந்திரம்—வானவம்.

ஓ

ஓசனை—சேண்மை. சேய்வழி, கூவிளி, விளிப்பாடு.
ஓதனம்—உணவு.

ஔ

ஔகம்—குழு, கூட்டம்.
ஔதாரியம்—வண்மை, கொடைமை.

## வல்லினம்

க

ககனம்—விசும்பு, விண்.
கணம்—நொடி, இறை.
கதம—சிமை, வெகுளி, கறுவு.
கதை—வரலாறு, நிகழ்ச்சி, நிகழ்ச்சி வரலாறு.
கர்ம்—ஐ, கோழை.
கபோலம்—கவுள்.
கரி—கைம்மா (யானை.)
கருவம்—செருக்கு, தருக்கு.
கலாபம்—தோகை.
கவந்தம்—இறையுடல், உடற்குறை, குறைத்தலை.

கா

காசம்—ஈளை, ஈழை, இருமல்,
காரியம்—வினை, செயல், பொருள்.
காருகத்தும்—மனையறம், இல்லறம், இல்வாழ்க்கை.

கி

கிரணம்—கதிர், ஒளி.
கிருகம்—மனை, வீடு.
கிருட்டின சர்ப்பம்—கரும்பாந்தள், 'கறுத்தவாளரவு' என்பர் கம்பர்.

கீ

கீடம்—புழு.
கீதம்—பாடல், இசை, இசைப்பாடல், பண்.

கு

குகிதம்—மறை.
குகை—முழை, முழைஞ்சு.
குந்தம்—எறிபடை; எஃகு.
குதம்—அடி, பின்னடி, (புழை.)
குலம்—மரபு,

### கூ

கூபம்—கிணறு, கேணி.
கூலம்—கரை, ஓரம்.

### கே

கேகை—மயில்.
கேசம்—ஓதி, கூழை.
கேசரம்—பூம்பொழி, மலர்ப்பொடி, கேந்துகள்.
கேதம்—துன்பம்.
கேவலம்—தனிமை; இழிவு. இழிவு என்பது வழக்காற்றால் வேறுபட்ட பொருள்.

### கை

கைங்கரியம்—செயல், நிகழ்ச்சி.
கைவல்லியம்—தனிமை, வீடு பேறு.

### கோ

கோசம்—மறைவு; நூல், அடக்கியல், அடங்கல் (நூல்); குறி.
கோபம்—சினம்.
கோரம்—கொடுமை, மறல்.

### ச

சக்கரம்—ஆழி, கறங்கு.
சக்கியம்—நட்பு, தோழமை.
சகலம்—முழுதும், அனைத்தும், எல்லாம்.
சகடம்—வண்டி, பண்டிசாடு என்பது சகடத்தின் திரிபு எனலாம்.
சகோரம்—நிலப்புள்.
சத்தியம்—வாய்மை, உண்மை, மெய்ம்மை.
சத்தியம் செய்தல்—சூளுறல்.
சந்தனம்—குறடு.
சந்திரன்—திங்கள், மதி, தண்கதிர் (இன்னும் பல தமிழ்ப் பெயர்கள் உள.)
சம்மதம்—உடன்பாடு, ஈடுபாடு.
சரண்—சுணைகண், புகல், அடைக்கலம், கால்.
சரித்திரம் (சரிதம்)—வரலாறு, வரலாற்று நூல்.
சன்மானம்—பரிசு.

### சா

சாக்கிரம்—விழிப்பு, உணர்ச்சி, நனவு.
சாகம்—கொப்பு, கிளை.
சாகசம்—முயற்சி; விடாப்பிடி என்பது வழக்காற்றால் வந்த பொருள்.
சாசனை, சாதனை—பயிற்சி, பயிற்று.
சாத்திரம்—நூல், பனுவல்.
சாதகம்—பிறப்பு, பிறப்பு வரலாறு, பிறப்பு ஓலை.
சாதாரணம்—பொதுமை, வழக்கம், இயல்பு.



சாதித்தல்—அடைக்கூட்டல், முடித்தல்.
சாமம்—வறல், வறற்காலை, வற்கடம்.
சாயை—நிழல்; ஒளி.
சாரம்—உள்ளிய, அகவை.
சாலம்—வலை; மயக்கம், மால்.

### சி

சிக்கை—பயிற்சி; ஒறுப்பு.
சிகை—முடி.
சித்தம்—நெஞ்சம்.
சித்திரம்—ஓவம், ஓவியம்.
சின்னபின்னம்—சிதர்சிதர்தல், சிதறுபடல், பொடிபடல்

### சீ

சீக்கிரம்—விரைவு, விசை.
சீகரம்—துளி, துமி, துள்ளி, பிசிர்.
சீதம்—குளிர்மை, தண்மை.
சீரம்—கல்லாடை.
சீலம்—ஒழுக்கம் நெறி.

### சு

சுகம்—நலம், இன்பம்.
சுத்தம்—தூய்மை.
சுரம்—ஒலி, இசை, பண்.
சுருதி—இசை. பண்; மறை, எழுதாக்கிளவி; கேள்வி.
சுருதிகூட்டல்—பண்ணுறுத்தல்.

### சூ

சூக்குமம்—நுட்பம்.
சூகரம்—பன்றி.
சூத்திரம்—நூல், பனுவல், நூற்பா, கயிறு.
சூலம்—முத்தலைவேல், வேல்.

### சே

சேடம்—எச்சம், மிகுதி (மீதி); வழிபாட்டுப் பொருள்.
சேடன்—ஆயிரந் தலைப்பாந்தள்.
சேதம்—கேடு.

### சோ

சோகம்—வருத்தம், துன்பம்.
சோத்தம்—வணக்கம்.

### சௌ

சௌக்கிம்—நன்மை, இன்பம்.
சௌலப்பியம்—எளிமை; நல்லியல்பு.
சௌரியம்—மீளிமை, திறல்.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

# சாந்தி எங்கே?

**ஆர். காளிதாசன்.**

*

தமிழ் ஆட்சியின் காலம். தமிழ் மன்னர்களின் வெற்றிக்கொடி கம்பீரமாக பறந்து கொண்டிருந்தது. தமிழ் மன்னன் தான் மறைந்த பின்னும் தான் பெற்ற வெற்றி மறையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இமயத்தின் எல்லைக்கோட்டில் தனது சின்னத்தை பொரித்திருந்தான்.

வாள் வீரன் மூர்த்தியை தெரியாதவர்கள் அந்நாட்டில் ஒருவரும் இல்லை. அவன் ஒரு சிறந்த போர் வீரன். ஒரு நாள் அவன் மந்திரியின் மகள் சாந்தி என்ற அழகு நங்கையைக் கண்டான். அவளும் மூர்த்தியின் அழகில் மயங்கினாள். அவர்களின் நட்பு காதலாக மாறியது.

அந்தி மயங்கும் நேரம். அஸ்தமன சூரியன், மிதந்து கொண்டிருந்த மேகங்கள் மீது செந்நிறத்தைப்பூசி வேடிக்கை செய்து கொண்டிருந்தான். எதிர்பாராதவிதமாக தனிமையில் ஒரு வாலிபனைச் சந்தித்த நாணமுள்ள ஒரு பெண்ணின் அழகு முகம் போல் அடிவானம் செக்கச் செவேலென்று சிவந்திருந்தது. குளு குளு வென்று காற்று வீசிக்கொண்டிருந்தது.

மலைச்சரிவின் மறைவான ஓரிடத்தில் உட்கார்ந்து யாரையோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் மூர்த்தி. ஆம்! அவளைத்தான். தன் காதலி சாந்தி இன்னும் வரவில்லை; ஆசை பொங்கும் அவன் பார்வை சாந்தியை நோக்கி நாற்புறமும் சுழன்றது. அருகிலிருந்த பாறை ஒன்றின் மீது அமர்ந்தான். ஏதேதோ சிந்தித்தான். அவன் மனதில் பல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. தன்னை சாந்தி கைவிட்டு விட்டாளா?...ஹும்! இருக்காது! என் சாந்தி என்னை என்றுமே மோசம் செய்யமாட்டாள் என்று எண்ணினான். 'மூர்த்தி!' என்னும் இமையான குரல் அவனது சிந்தனை கயிற்றை அறுத்தது. திரும்பினான்—

சாந்தி நின்று கொண்டிருந்தாள். "சாந்தி! உனக்காக எவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருக்கிறேன் தெரியுமா," என்று கேட்டான் மூர்த்தி "ம்"...என்று புன்னகை பூத்தாள். "சாந்தி! நமது விஷயம் காயா...பழமா..." என்றான் மூர்த்தி.

"பழமில்லை."

"காயா?" என்று அதர்ச்சியுடன் கேட்டான் மூர்த்தி.

"காயுமில்லை" என்று ஈனக்குரலில் கூறினாள் சாந்தி.

"அப்படியானால்"

"பிஞ்சிலே வெம்பியது போல்."

"சாந்தி! எல்லாவற்றையும் விளக்கமாக்ச் சொல்" என்றுகூறியவாறே அவளை தன்னருகில் அமர்த்தினான்.



"நேற்றிரவு நான் என் தாயிடம் அந்த விஷயத்தைச் சொல்லி மெதுவாகத் தந்தையிடம் சொல்லும்படி, சொல்லச் செய்தேன்," என்றாள் அவள்.

"என்னவென்று சொல்லச் செய்தாய்?"

"மணந்தால் உங்களைத்தான் மணப்பேன் இல்லையெனில் திருமணமே வேண்டாமென்று." என்றாள் சாந்தி.

"உன் தந்தை என்ன சொன்னார்?"|

"ஒரு மந்திரியின் மகள் ஒரு சாதாரண போர்வீரனுக்கு மனைவி யானால் என்பதைவிட அவள் இறந்துவிட்டாள் என்ற செய்தி எனக்கு மகிழ்ச்சிதரும்" என்றார். சாந்தி சோகத்துடன் கூறினாள்.

சாந்தி சொன்ன செய்தியைக் கேட்ட மூர்த்தியின் மனம் தெறித்துவிட்டது. உலகமே இருண்டுபோய் விட்டதுபோன்ற பிரமை! சாந்திக்கும் இதைப்போன்ற நிலைதான். சாதாரண போர் வீரனான மூர்த்தி ஒரு தளபதி பதவியில் இருந்தால் சாந்தியைக் கொடுக்க அவள் தந்தை முன் வந்திருப்பார். எதற்கும் பணமும் பதவியும் தானே காரணம்!

அன்றைக்கு மாலை மூர்த்தி அணிவகுப்பிற்கு வேறு செல்ல வேண்டும். மூர்த்தியின் மனம் எதிலும் லயிக்கவில்லை. தனிமையில் இருக்க விரும்பினான். ஆகையால் விடுமுறை பெறுவதற்காக தளபதி ராஜய்யாவிடம் சென்றான்.

"தளபதியாரே! வணக்கம்" என்றான் மூர்த்தி பணிவோடு.

"மூர்த்தியா? என்ன வேண்டும்?" என்றான் ராஜய்யா அதிகார குரலுடன்.

"எனக்கு இரு நாட்களுக்கு விடுமுறை வேண்டும்," என்றான்.

"காரணம்?"

"தாங்கள் அதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்காதென நம்புகிறேன்.

"மூர்த்தி.........உனக்கு விடுமுறைதர இயலாமைக்கு வருந்துகிறேன்."

"காரணம்?"

"தளபதியின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியதுதான் போர்வீரனின் கடமையேதவிர; காரணம் கேட்பதல்ல."

"கடமை என்பதைக்காட்டி ஒரு போர் வீரனுக்கு நியாயமான உரிமையை மறுப்பது தர்மமாகாது!" என்றான் மூர்த்தி.

"இப்போது போர்வீரர் எவருக்கும் விடுமுறை கொடுப்பதற்கில்லை. மேலும் எல்லைப்புறத்தில் எதிரிகளின் படை குவிந்து கொண்டிருக்கிறது. எச்சமயத்திலும் போர் மூளலாம். ஆகையால் விடுமுறை கொடுக்க முடியாது." என்றான் தளபதி ராஜய்யா.

"நான் கேட்கும் விடுமுறை இரண்டு நாட்களுக்குத்தானே, மேலும் யுத்தகாலத்திய கட்டாய போர்ச் சட்டத்தை நான் என்றும் புறக்கணித்தவனல்லன்."

"நாளைக்கு உனக்குக் கோட்டைகாவல் முறை இருக்கிறதே!"

"எனக்கா!.. கோட்டை காவல் முறையா!"

"ஆம். அதிர்சியடைகின்றான்யே, ஏன்?"

ஒவ்வொருவருக்கும் ஒரு மாதத்திற்கு ஒரு முறைதானே கோட்டைக் காவல் முறை! நான் நேற்றுக்கு முன் தினம் கோட்டைக் காவலில் இருந்தேனே! மீண்டும் அந்த முறை நாளைக்கு எப்படி வரும்? என்றான் மூர்த்தி சினத்துடன்.

"படைத் தலைவனின் கட்டளை!"

"எனக்கிழைக்கப்பட்ட அநீதியின் பெயர் படைத் தலைவனின் கட்டளைபோலும்! நான் இந்த அநீதியை எதிர்த்து மேலதிகாரியிடம் முறையிடப்போகிறேன்," என்று சினத்துடன் சொல்லிவிட்டுச் சென்றான் மூர்த்தி.

"மூர்த்தி!...நில்...ஒரு எச்சரிக்கையுடன் உனக்கு விடுமுறை தருகிறேன். இனி நீ விடுமுறை கேட்கக்கூடாது." என்றான் ராஜய்யா.

"காரணமின்றி நான் ஏன் கேட்கப் போகின்றேன்," என்றான் மூர்த்தி.

"உனக்கு இரு நாட்களுக்கு விடுமுறை, நீ போகலாம்" என்றான் தளபதி.

மூர்த்தி. "நன்றி. நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அகன்றான் மூர்த்தி.

மூர்த்தி எதற்காக விடுமுறை கேட்கிறான் என்று ராஜய்யாவுக்குத் தெரியாவிடினும், அதில் ஏதோ முக்கியத்துவம் இருப்பதாக நினைத்தான். தீர்க்கமான ஆலோசனைக்குப் பின்தான் மூர்த்தி செயலில் இறங்குவான் என்று ராஜய்யாவுக்குத் 'தெரியும். ராஜய்யாவுக்கும் மூர்த்திக்கும் ஏற்கெனவே மனதிற்குள் பகைமை! சாந்தியின்மேல் ராஜய்யாவுக்கும் ஒரு கண். என்ன செய்வது? சாந்தி ராஜய்யாவை விரும்பினால்தானே!

தளபதியிடமிருந்து திரும்பிய மூர்த்தி மனித சஞ்சாரமற்ற தனியிடம் நோக்கிச் சென்றான். அவன் மனம் ஒரு நிலையில் இல்லை. இன்றைக்கில்லாவிடினும் என்றைக்காவது ஒரு நாள், தன்னுடையவள் என்று அவன் நினைத்துக்கொண்டிருந்த சாந்தி, வேறொருவனுக்கு மாலையிடப்போகிறாள். அவ்விதம் நடக்கவிடக் கூடாதென்பது அவனது எண்ணம். அப்படியானால் என்ன செய்வது? இருவரும் எங்காவது ஓடிவிடலாமா என்று நினைத்தான். அது இழுக்கு என்ற எண்ணம் குறுக்கிட்டது. ஒன்று சேரமுடியாத காதலர்கள் கண்ட துயர முடிவை, அவன் எத்தனையோ கதைகளில் படித்திருக்கின்றான். சிந்தனை செய்தவாறே வீடு நோக்கிச் சென்றான்.

மறுநாள் நள்ளிரவு வர்ணிக்கமுடியாத அழகுடன், வானத்தில் நிலவு பிரகாசித்துக்கொண்டிருந்தது. மூர்த்தி மலைச்சரிவின் மறைவான ஓரிடத்தில் அமர்ந்திருந்தான். அவன் அன்று மாலை சாந்தியைச் சந்தித்து நடுநிசி நேரத்திற்கு வரச்சொல்லியிருந்தான். எதற்கு என்று அவளிடம் அவன் கூறவில்லை. "தானும் அவளும் ஒரே சமயத்தில் வாழ்வை முடித்துக் கொள்வது." என்பது அவன் தீர்மானம். ஆனால் அதை அவன் அவளிடம் சொல்லவில்லை.



ரணம், அவள் பெண். பின் வாங்கி விட்டால்...! சாந்தியின் ரவை எதிர்பார்த்து அங்கு மிங்கும் உலவிக்கொண்டிருந்தான் மூர்த்தி.

சாந்தி தூரத்தில் வந்துகொண்டிருந்தாள். அவளைப் பின்பற்றி மரமறைவில் பதுங்கிக்கொண்டே ஒரு உருவம் வந்தது. ஆனால் சாந்தி அவ்வுருவத்தைக் கவனிக்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு சாந்தி தன் பின்னால் ஏதோ சலசலப்பு சப்தத்தைக் கேட்டுத் திரும்பினாள். அங்கு மறைவில் நின்று கொண்டிருந்த உருவத்தைத் தன் காதலன் மூர்த்தி என்று நினைத்து "மூர்த்தி" என்றாள்.

அவ்வுருவம் "இவர் மூர்த்தியைவிட உயர்ந்தவர்" என்றது.

"யார் நீ?" என்றாள் சாந்தி.

"உன்னை அடைவதற்கென்றே இவ்வுலகில் பிறந்தவன்" என்றது அந்த உருவம்.

"அது வீண் கதை! யார் நீ?"

"இன்னுமா தெரியவில்லை. நான் தான் தளபதி ராஜய்யா." என்று அவளை நெருங்கினான்.

"நெருங்காதே! விலகி நில்!" என்று அச்சத்துடன் நகர்ந்தாள் சாந்தி.

"நீ வலையில் சிக்கிய மான். என்னிடமிருந்து தப்பமுடியாது" என்று அவளைத் தாவிப்பிடிக்க முயன்றான்.

சாந்தி அவனிடமிருந்து தப்புவதற்கு ஓடினாள். மானைத் தொடரும் வேங்கையைப் போன்று அவன் அவளைப் பின் தொடர்ந்தான். அவனால் அவளைப் பிடிக்க முடியவில்லை. ஒரு கணம் நின்று தன் இடையிலிருந்த கட்டாரியை எடுத்து வீசினான். அது குறிதவறாமல் அவள் முதுகில் தாக்கியது. சாந்தி அருகிலிருந்த பாறையில் விழுந்தாள். அவள் விழுந்த அந்த பாறை மேடு பக்கத்திலிருந்ததால் சரசரவென்று கீழே உருண்டு வந்தது. ராஜய்யா சற்று விலகுவதற்குள் உருண்டு வந்தபாறை அவனை நசுக்கியது. கற்பாறைக்கடியில் சிக்கிய ராஜய்யாவின் உயிரும் கட்டாரியினால் தாக்கப்பட்ட சாந்தியின் உயிரும் உடலை விட்டுப் பிரிந்தன.

சாந்தியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து உட்கார்ந்திருந்த மூர்த்தி அவள் வராதது கண்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான்.

மறுநாள் காலை. நகரம் முழுவதும் ஒரே பரபரப்பு. மந்திரி மகள் சாந்தியும் தளபதி ராஜய்யாவும் முதல்நாள் இரவிலிருந்து காணவில்லை. இச்செய்தி கேட்ட மூர்த்தி நிலைகலங்கி நின்றான். என்ன சாந்தியையும் ராஜய்யாவையும் காணவில்லையா? இரண்டுபேருக்கும் ஏதோ நெருங்கிய சம்பந்தம் இருப்பதாக மூர்த்தி தவறாக எண்ணினான். உயிருக்குயிராய் நேசித்த தன் சாந்தியே தனக்குத் துரோகம் செய்து விட்டபோது, எதற்காக, யாருக்காக நான் உயிர் வாழவேண்டும் என்று தனக்குள்ளே கேட்டுக் கொண்டு நடந்தான் சாந்தியைத் தேடி. ஆம். சாந்தியைத்தான் — மனச் சாந்தியை.

# சுவையே சுவை!

புலவர்க்கினியன்

*

இடைக்காலப் புலவர்கள் கருத்தாழத்தை மட்டும் போற்றுவதோடு அமையாது சொல்லமைப்புகளில் மிகவும் மெருகேற்றுவதைச் சிறப்பாகக் கொண்டார்கள். சில கவிதைத் திறனாய்வாளர்கள் இத்தகைய கவிஞர்களின் படைப்புகளைக் கவிதையன்று என ஒதுக்குகின்றமை மடமையே யன்றி வேறன்று. சொல்லாட்சிகளிலும், மொழியமைப்பிலும் நுணுக்கமான ஆக்கங்களைப் படைப்பது அம்மொழியின் மென்மை வன்மையை, நுண்மை ஒண்மையை ஓங்கி உலகுக்குரைக்கும் ஒப்பற்ற தொண்டாகும்.

அத்தகைய பாடல்கள் சிலவற்றின் சுவையை ஆராய்வோம்.

ஒரு கிழமைக்கு ஏழுநாட்கள். அந்நாட்களை முறையே அடுக்கி ஒரு புலவர் பாடியுள்ளார்!

கதிரவன் மறைந்து விட்டான். மாலையின் இருளைப் போக்க நிலவு சிரித்தது. அந்நிலவு செந்நிற நெருப்பைத் தூவுகிறது. காமனோ வெப்பமுண்டாக்குகிறான் உடலில். பெண் வந்து சேரவும், வெண்மையான சேலை நழுவும்படி புணர்வும் முயலும்போது காதலியின் தாய் வந்து சனியன் போலக் குறுக்கிட்டுவிட்டாள் காதலர்களுக்கிடையில்!

இந்தச் சுவைமிக்க கருத்தை நயமிக்க சொல்லாட்சிகளோடு பல்வகை உணர்ச்சிச் சாயல்களோடு பாட்டு மிளிர்கிறது:

**ஞாயிறு** போய்விழத் **திங்கள்**வந் தெய்திட நண்ணிய **செவ்**
**வாய**னல் தூவப் **புத**னம்பு காயநல **வியாழம்**வர
மேயிரு **வெள்ளி**க் கலைசோர நானுன்னை மேவுதற்குத்
தாய் **சனி** யாயினளே ரகுநாத தளசிங்கமே.

பொற்கொல்லரைத் திருமாலோடு ஒப்பிட்டு இருபொருட்பட அழகிய கவிதை ஒன்று பாடியுள்ளார் கவிஞர் ஒருவர்:

பொற்கொல்லர் பொன்னோடு நாள்தோறும் பழகுகிறார்கள். ஊதுகுழலை வாயிலில் பொருத்தி நெருப்பை ஊதுகிறார் பலவகை மணிகளோடு உருகின்ற பொன்னைச் சேர்த்து கட்டளைப்படிக் கல்லை வைத்து, மின்னுகின்ற பெரிய பொன்னை எடைபோட்டு நிறுத்து, பொன் மச்சமெடுத்து வேலைக்கு அளவெடுத்துப் பொருத்த மிகச் செய்து, மோதிரம், சங்க வளையல் முதலியவற்றைச் செய்து காட்டி நிலைபேறானதும், விருப்பமூட்டக் கூடியதாகவும் செய்கிறார். சேதாரம் காட்டியும், அழகிய சிற்றிடை மங்கையர் நகையை விரும்பிச் சூழ்வதால் அணி செய்யும் பொற்கொல்லன் திருமாலே ஆவான்.

திருமால், திருமகளோடு நாள்தோறும் பயில்கிறார். புல்லாங்குழலை வாயில் வைத்து ஊதுகிறார். உருக்குமணியை மனைவியாகச்



சேர்த்துக் கொள்கிறார். உலகை வயிற்றினுள் கொண்டு, யானையை காப்பாற்றி, கடலிலே மின்னும் மச்சமாகப் பிறக்கிறார். கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப் பிடிக்கிறார். விருப்பத்தோடு சங்கு, சக்கரம், அம்பு, வளைதடி ஆகியவற்றைக் கைகளில் ஏந்திக் காட்டுகிறார். அழகிய சிற்றிடைச்சிகளைத் தன் கைகளினால் அணைக்கிறார். ஆகவே அவரைப் பொற்கொல்லர் எனக் கூறுதல் பொருந்தும்!

இவ்விருவகைப் பொருளும் அமையப் பாடப்பட்ட அழகிய கவிதையின் சுவையே சுவை!

"பொன்னுடனே தினம் பழகிக் குழல் வா யூதிப்
போந்துருக்கு மணி சேர்த்துப் படியுங் கொண்டு
மின்னுமா தங்கமதை நிறுத்து மச்ச
வேளையிலே வரைஎடுத்து விரும்பி நானும்
மன்னுகணை யாழி சங்கு வட்டங் காட்டி
வடிவுள சிற்றிடைச்சிகளை வணக்கையாலே
அன்னசத்ர சோமனக ரழகன் றன்னை
அலங்காரப் பொற்கொல்ல னென்னலாமே!

கணவனுக்காக ஒரு பணியைச் செய்வதென்றாலே காதலியாருக்கு ஒரு தனி இன்பம். ஒரு தனித் துடிப்பு! துள்ளல்! ஆர்வம்! ஒரு பெண் அந்தியிலே பூக்கும் அரும்பு முல்லை பறித்து வந்தாள் தன் காதலருக்கும் செண்டு கட்ட வேண்டுமென்று. வீட்டிலிருந்த திருவிளக்கிலே திரி சிறியதாகிவிடவே ஒளி மங்கியது. அதுகண்டு துணுக்குற்ற தலைவி தோழியை விளித்து "விளக்கிலே திரியைக் கொண்டு வந்து போட்டுக் கொளுத்து" என்கிறாள். குடும்பத்திலே நடக்கும் மிகச் சிறிய இந் நிகழ்ச்சியை அழியா ஓவியமாகப் பாடிவிட்டார் மதுரகவியார்!

"அந்திவெடி முல்லை அரும்பெடுத்து நான்வந்தேன்
விந்தையதா நாயகற்கு மெல்லியலே!—சுந்தரஞ்சேர்
செண்டு கட்ட வேண்டுந் திருவிளக்கிலே திரியைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து" *

சொல்லாட்சிகளின் வேகமும், துடிப்பும் மிக வியக்கத்தக்க சுவை பயக்கிறதைக் கற்போர் அறியலாம்.

நந்திக் கலம்பகத்தில் நகைச்சுவையின் கொடுமுடியை எட்டிய ஒரு பாட்டு—அரிய சுவைப்பாட்டு—ஒன்றுள்ளது. தலைவன்; தலைவியைப் பிரிந்து பரத்தையரை அணுகி அங்கேயே தங்கிவிட்டான். பின் தன் புதல்வனைக் காண வேண்டுமென்ற ஆவல் மீதுறவே தன் வீடு போக எண்ணம் கொண்டான்—ஆனால் தலைவி தன் தாழ்ந்த ஒழுக்கத்துக்கு என்ன மதிப்பு தருவாள் என்று அறிந்தவனுதலால் தன் பாணனைத் தூதாக அனுப்பினான். அவன் தலைவியிடம் சென்று தலைவனின் புகழையும், அருமை பெருமைகளையும் யாழிசையில் பாடினான். அது கேட்டு வெகுண்ட தலைவி; பாணனை நோக்கிக் கூறுகிறாள்: "பாணனே, நீ என் தங்கைமாரான பரத்தையர் வீட்டி

* 'கொண்டுவந்து போட்டுக் கொளுத்து' என்ற ஈற்றடி கொடுத்து ஒருவர் பாடச் சொன்ன போது பாடியது.

பிருந்து இரவெல்லாம் பாடினுயே அதைக் கேட்டு என் தாய், "காட்டிலே பேய் அழும் குரல்" என்றாள். மற்றவர்கள், "நரியின் ஊளை ஓசை" என்றனர். என் தோழி, "நாய் குரைத்துக் கொண்டு அழுகிறது" என்றாள். ஆனால்; நான் என்ன சொன்னேன் தெரியுமா? "நீ பாடுகின்ற பாட்டின் ஓசை" என்றேன்.

எப்படி இருக்கும் பாணனுக்கு! ஆகா! என்ன சுவை கனிந்த இனிய பாட்டு இஃது!

"சுட்டு புகழ்நந்தி பாணா! நீ எங்கையர்தம்
வீடிருந்து பாடவிடியளவும்—காட்டிலழும்
பேய் என்றாள் அன்னை பிறர்நரி என்றார் தோழி
நாய் என்றாள் நீஎன்றேன் நான்! (நந்திக் கலம்பகம், 106)

இதேபோல காளமேகப் புலவரும் வாகான தேவடியாள் பாடிய பாட்டினை இகழ்ந்து சுவைமலியப் பாடியுள்ளார்!

நாகப்பட்டினத்தில் அவ்விலைமகள் தன்வீட்டில் பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள். அப்போது முன்னாள் தன் கழுதை இழந்துவிட்ட வண்ணான் "ஆ! ஆ! கண்டேன் கழுதையை! கேட்டேன் அதன் குரலை! எனக் கூவிக்கொண்டு அவளிருக்கும் இடத்திற்கு ஓடிவந்தான்!

என்ன அழகான நகைச்சுவை!

"வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்றுக்
கழுதை கட்ட வண்ணான் கண்டேன் கண்டேனென்று
பழுதைஎடுத் தோடிவந்தான் பார்!"

உணர்ச்சி வேகம் மிகுந்தவர்கள் எதையுமே அளவுக்கும் மிகுதியாகக் கூறுவது இயல்பு. காதலன் பிரிவால் ஏங்கித் துடிக்கும் காதலி வானில் நிலவு தோன்றிடக் கண்டாள். காதலுணர்வு அவளைத் தீய்த்தது. அப்போது நிலவைப் பழிக்கிறாள். அதில் எத்தனை சுவை!!

"இதோ தோன்றியிருக்கிறதே நிலவு; இது குளிர் ஒளி வீசத் தோன்றியதல்ல. பின் எதற்குத் தோன்றியது என்கிறீர்களா? ஊரை சுடுமோ? உலகத்தைச் சுடுமோ? யாரைச் சுடுமோ? எனக்குத் தெரியவில்லை. வட்டமான முலையுடைய தோழியரே! நெருப்பு வட்டமாக விளங்கும் இந்நிலா என்ன செய்யுமோ?" என்கிறாள்.

என்ன உணர்ச்சி வேகம் பாட்டில் மிளிர்கிறது!

"ஊரைச் சுடுமோ? உலகந்தனைச் சுடுமோ?
யாரைச் சுடுமோ? அறிகிலேன்—நேரே
பொருப்பு வட்டமான முலைப் பூவையரே இந்த
நெருப்பு வட்டமான நிலா!

இத்தகைய நற்சுவை கனிந்த எழிற் பாடல்களைக் கவிதையன்று என்பது எவ்வாறு அடுக்கும்? உயரிய கவிதை உள்ளத்தைப் பிணித்து, உணர்ச்சியைத் தூண்டித் தன்னை மறக்கச் செய்தல் வேண்டும். அத்தன்மைகள் உள்ள பாடல்கள் ஏன் கவிதை ஆகாது? ஆகும். ஆகும். ஆகும்.

# ஏது குற்றம்?......

'சாரதி'

*

கோபாலன் கோவை நகரையடுத்த கிராமமாகிய குப்பக்கோனான் புதூரில் குடியிருந்து வந்தான். குமரன் மில்லில் காவலாளியாகக் கடந்த பத்து வருட காலமாக வேலை பார்த்து வந்தான். வயது முப்பது முடிந்து மூன்று மாதங்களும் ஆயின. முதுமைக் குறிகள் முகத்தில் படர்ந்து வந்ததை பலரும் கண்டனர்; கண்டதைக் கூறிக் காரணமும் கேட்டனர். அந்தக் கேள்விகளுக்கு கோபாலன் நேரான பதில் கொடுத்ததே இல்லை.

கோபாலன் வேலை தேட ஆரம்பித்த ஆறாவது மாதமே அவனது அத்தை மகள் மங்கர்த்தாளைக் கைப்பிடித்தான் கல்யாணம் விமரிசையாக நடந்தது. அதற்கு அவனுகவோ அவனது அத்தை மகளோ முயற்சி யெடுக்கவில்லை. எல்லாம் அவன் தந்தை தம்பிக் கோனாரின் முயற்சியால் தான் முடிந்தது. வயோதிகத் தந்தை தன் மகன் குடியும் குடித்தனமுமாக சீரும் சிறப்புடன் வாழவேண்டுமென்பதற்காகவே நிர்ப்பந்தப்படுத்தி கல்யாணத்தை நடத்தி வைத்தார்.

கல்யாணம் முடிந்து இரண்டு வருடங்கள் ஓடி மறைந்தன. அதற்குள் கோபாலனின் தாயும் தந்தையும் ஒருவர் பின் ஒருவராக விண்ணுலகு எய்தினர். அவர்கள் விரும்பிய வண்ணம் தமது வயதான காலத்தில் பேரக் குழந்தையைக்கண்டு கொஞ்ச முடியாத ஏக்கத்தில் வருந்தி, ஆசை பூர்த்தியாகாமலே இறந்து விட்டனர்.

பெற்றோர் பிரிவிற்குப் பின் கோபாலனுக்கு அனேக நண்பர்கள் கிடைத்தனர். அவன் வாழ்வின் எதிர்காலம் எப்படி அமையும் என்று தெரிந்துகொள்ளாமலே சிறு குழந்தைபோலவே வளர்ந்து வந்தான். ஆனால் அவனுடைய மனைவி மங்காத்தாளுக்கு ஒரு குழந்தை பிறக்கவில்லை—அவள் மலடி என்ற பெயர் எடுத்து விட்டாள் என்பது எப்போதும் அவன் மனக்கண் முன்வந்து அலைக்கழித்து வருவதுபோல உணர்ந்து உள்ளூர மனம் புழுங்கி நடைப்பிணமாக நடக்கத் தலைப்பட்டான்.

அவனுடைய நண்பர்கள் எல்லோரும் மணமானவர்களே. இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தகப்பன்மார்களாகி வாழ்க்கையின் இன்ப எல்லையை அடைந்து விட்டவர்கள்! ஏன்? ராமசாமி ஆசாரிக்குப் பதினேரு குழந்தைகள். என்ன உல்லாசமான குடும்பம்! தான் மட்டும் ஓர் பிள்ளைக்குத் தகப்பன் ஆக வில்லையே என்று எண்ணி எண்ணி வருந்தினான். அதற்கு தன் மனைவி மீது தான் குற்றம் என்று முடிவு கட்டிவிட்டான். தன் மனத்திலுள்ளதைத் தன் நண்பர்கள் அத்தனை பேருக்கும் எடுத்துக்கூறி அவர்கள் ஏதாவது ஆறுதல் கூறுவார்கள் என்று ஏங்கினான்.

முன் காலமாக இருந்தால் பிள்ளைவரம் கேட்டு ஸ்தல யாத்திரை போகும்படி பலர் ஆலோசனை கூறி இருப்பார்கள். ஆனால் இது யந்திர யுகமாயிற்றே. அதுவும் கோபாலனின் நண்பர்களோ, பழமையிலும் தெய்வச் செயலிலும் நம்பிக்கைவைத்திருந்தாலும், நம்பாதவர்களாக இருந்தாலும் கோபாலனை ஸ்தல யாத்திரை செய்யும்படி தூண்டவில்லை.

என்றாலும் கூட மங்காத்தாளுக்கும் உள்ளூரத் தாய்மையடையாக்குறை வாட்டி வதைத்தது. அடுத்தவீட்டு ஆச்சியிடம் ஆலோசனை கேட்டாள். அவள் இரண்டு மூன்று கோவில்களுக்குச் சென்று பிரார்த்தனை செலுத்தவும், காணிக்கை செலுத்தவும் கூறினாள். மங்காத்தாளும் பயபக்தியோடு அப்படியே பலமுறை செய்தாள். ஆனாலும் அவள் விரும்பிய வண்ணம் வாழ்வின் இன்பத்தைக் காணவில்லை. குழந்தை பிறக்கவில்லை. குற்றம் அவளுடையதல்ல என்று மட்டும் அவள் உள்ளூர உணர்ந்தாளே தவிர, அதை யாரிடமும் சொல்லத் துணியவில்லை. எப்படியோ இரு ஜீவன்களும் ஒரே இடத்தில் ஒன்றாய் வாழ்ந்து வந்தாலும் மக்கட்பேறு இல்லாமைக்கு மற்றவர் மீது தான் குற்றமுளது என இரண்டுபேருமே கருதினர். இந்த சமயம் கோபாலனுக்கு கோவிந்தசாமியின் நட்புக் கிடைத்தது. கோவிந்தசாமி அந்த வட்டாரத்திலேயே பிரபலமான ஒரு 'புள்ளி'. அவனை எதிர்த்துப்பேச அந்த பிரதேசத்தில் ஆளே கிடையாது. அவன் ஆணைக்கு அடிபணிய அனேகர் காத்து நின்றனர். அப்படிப்பட்டவன் மில்லிலே ஒரு தொழிலாளிதான் என்றாலும் அவனது குடும்ப நிலையும், பணவசதியும், சுற்றுச்சார்பும் அவனை அவ்வாறு 'பிரபல' மாக்கிவிட்டது. அதோடு 'சாராய' வியாபாரத்தில் ஏராளமாகப் பணம் குவித்துவிட்டான். இது விஷயம் போலீசுக்கு எட்டியிருந்தபோதிலும் கோவிந்தசாமிக்கு இருந்த புகழும், செல்வாக்கும் போலீசுக்குப் பாதகமாகவே அமைந்தது. சரியான துப்புக் கிடைக்கவே இல்லை.

கோபாலன் கோவிந்தசாமியிடம் தொடர்பு வைத்தது பலருக்கு ஒரு புதிராகவே இருந்தது. யதார்த்தவாதியாகத் திகழ்ந்த கோபாலனை போலீசு பொன்னப்பன் 'டிபார்ட்மென்டுக்கு' சாதகமாக உபயோகிக்க எண்ணி கோவிந்தசாமியிடம் தொடர்பு கொள்ளத் தூண்டி வந்தான் இந்த விபரம் எப்படியோ கோவிந்தசாமிக்கு விளக்கமாகிவிட்டது. அதனால் கோபாலனைத் தன் ஆளாக மாற்றிக்கொள்ள ஏதும் பிரயாசைப்படவேயில்லை. கோபாலன் ஏதாவது துப்புத் தெரிவிக்கத் துணிந்தால் மங்காத்தாள் மானமிழக்கவோ அல்லது மாங்கல்யத்தை இழக்கவோ நேரிடும் என்று ரத்னச் சுருக்கமாக எச்சரித்தான்.

பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்தது என்பார்களே அதுபோலாயிற்று கோபாலன் கோவிந்தசாமியிடம் போனது. இதனால் பொன்னப்பன் வேறு இடம் மாற்றப்பட்டதோடல்லாமல் குடிப்பழக்க மில்லாமலிருந்த கோபாலனும் தீவிரக் குடிகாரனாக மாறிவிட்டான்.




மங்காத்தாள் மருண்டாள். தன் வாழ்வு சூன்யமாகிவிட்டது
என்பதைக் கண்டாள். தனக்கு ஆறுதல் கூறவும் ஆதரவளிக்க
வும் யாரும் கிடையாது என்பதையும் கண்டாள். இந்த நிலை வந்த
தற்கு தன் கணவனும், தன் சுற்றமும், சமூகமும், இந்த சமூகத்தை
இப்படியே பாதுகாத்துவரும் அரசாங்கமும் காரணம்—குற்றம்
நிறைந்து கொடுமை மலிந்துவிட்டது என்று எண்ணத் தொடங்
கினாள்.

கோவிந்தசாமி முன்னின்று செய்த ஏற்பாட்டின் பேரிலும்
ஆலோசனையின் பேரிலும் கோபாலன் பிள்ளை இல்லாக் குறையைத்
தீர்த்துக்கொள்ள இரண்டாவது கல்யாணம் செய்துகொள்ள
முடிவு செய்துவிட்டான். கோவிந்தசாமியின் பெரியப்பாவின்
பேத்தி பேச்சியம்மாளை கோபாலனுக்கு இளையகுடி கட்ட தேதி
யும் குறித்து ஆவணிமாதம் ஆறுந்தேதி பேரூரில் நடத்த ஆயத்
தங்கள் நடைபெறலாயின.

கோவிந்தசாமி சம்பந்தப்பட்டுள்ளதால் எந்த வேலையும் பாக்கி
யில்லாமல் அவனது 'சகபாடி'கள் செய்து முடித்தனர். கோபால
னின் ஆனந்தம் எல்லையிலடங்காதிருந்தது. அவன் வாழ்விலே
அன்று இருந்ததுபோல என்றுமே இருந்ததில்லை. கல்யாணத்
திற்கு முதல்நாள் மாலை தன் நண்பர்களுக்குப் பெரும் விருந்து
வைத்தான். தானும் குடித்து மகிழ்ந்தான். நாலைந்து பேர் குடிக்
கக்கூடிய 'பட்டைச் சாராயத்தை' தனக்கு ஏற்பட்ட ஆனந்தத்தில்
வெறி கொண்டு குடித்தான். 'விருந்து' வந்தவர்களில் ஒருவன்
கொடுத்த அபினியையும் கொஞ்சம் தின்றான். சுவர்க்கத்தின்
எல்லையைக் கண்டான். மற்றவர்களெல்லாம் போய் விட்டனர்.

பொழுது புலரும் வேளை. பேரூருக்குச் செல்ல எல்லோரும்
தயாராகிக் கொண்டிருந்தனர் வெகுநேரம் கோபாலனை யாரும்
காணவில்லை. தேடினார்கள் தேடியபின்னர் கண்டனர். வாயினா
லும் மூக்கினாலும் ரத்தம் கக்கி மாண்டு கிடந்தான் கோபாலன்.
மங்காத்தாள் விதவையானாள்.



# வாழ்வு ★

கே. எஸ். கந்தசாமி

*

வாழ்வில் வளமாக வாழ்ந்து வந்த வைத்தியநாதனின் செல்வங்கள் குறைந்து தாழ்வுற்று தரித்திரநாராயணனானான். இந்த நிலையில் பல ஆண்டுகளாக மக்கட் பேரடையாத அவன் மனைவி முத்துலட்சுமி ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள். தாயான முத்துலட்சுமிக்கு குழந்தையுடனே நோயும் பிறந்துவிட்டது. அவளது நிலை மிகவும் கவலைக்கிடமாகயிருந்தது. டாக்டர்களும் பார்த்துக் கைவிட்டனர். மெய்சோர்ந்த வைத்தியநாதன் சித்தப்பிரமை பிடித்த பைத்தியக்காரன் போலானான். தம்பதிகள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்ததால் அவனால் இந்த சோகக்காட்சியை சகிக்க முடியவில்லை.

ஆறாண்டுகளாகத் திரும்பிப் பாராத முத்துலட்சுமியின் தந்தை தர்மலிங்க பிள்ளைக்கு விலகிய பாசம் மீண்டும் கூடுவது போல மகளின் மீது சிறிது நீர்க்குமிழி போன்ற அன்பு உண்டாயிற்று. மூத்தமகள் பாக்கியலட்சுமியுடனும் இளையமகள் திருமணமாகாத தனலட்சுமியுடனும் காரில் வந்தார். கண்ணை மூடிக் கொண்டு தனது வாழ்க்கையை மனக்கண்முன்னால் பார்த்துக் கொண்டிருந்த முத்துலட்சுமியிடம் அவள் அப்பா வந்திருப்பதாக வைத்தியநாதன் கூறினான். ஆறாண்டுகளாகப் பாராத அப்பாவைப் பார்க்க அவள் கண்கள் மறுத்தன. ஆனாலும் சாகப் போகுமுன் அப்பாவிடம் சில வார்த்தைகள் பேசலாமென்ற எண்ணத்துடன் கண்ணை விழித்து சுற்று முற்றும் பார்த்தாள். தமக்கை, தங்கை இவர்களின் முகத்தையும் அப்பாவின் முகத்தையும் அரைநிமிடம் உற்று நோக்கினாள். அவள் பார்த்த பார்வை நீங்களும் என்னுடன் பிறந்த சகோதரிகளா? அல்லது மாற்றாந்தாயின் வயிற்றில் பிறந்தவர்களா? உங்களுக்கு ரத்தபாசமும் சகோதரிவாஞ்சையுமில்லையா? என்று கேட்பதுபோலிருந்தது. பணமில்லை என்ற காரணத்தால் பெற்ற மகளிடம் இரக்கமில்லாமலிருக்கிறாயே நீ அப்பாவா? அல்லது மனித உருவத்தில் வந்த மிருகமா? என்று கேட்பதுபோலிருந்தது. "அப்பா! நான் இன்னும் சிறிது நேரத்தில் இறந்து விடப்போகிறேன். என்னை நினைத்து வருந்தாதீர்கள் மறந்து விடுங்கள். இவ்வுலகில் நான் தோன்றியதற்கு அடையாளமாக இந்தக் குழந்தையை விட்டுச் செல்லுகிறேன். நான் இறப்பதற்காக மனம் வருந்தவில்லை. தவத்தினால் பெற்றெடுத்த சிசுவை தவிக்கவிட்டு மரணம் எய்துவதை நினைத்தால் மட்டும் மனம் அடையும் வேதனை இப்பொழுது படும் மரண வேதனையைவிட கோடிமடங்கு அதிகமாகிறது. எனக்குப் பின் எனது நாதருக்கு வாழ்க்கை துணைவியாக இருக்க தங்கை தனலட்சுமியை அவருக்கே திருமணம் செய்து கொடுத்துவிடுங்கள். குழந்தையைக் காப்பதற்கும் இழந்த என்னை மறப்பதற்கும் ஏதுவாகயிருக்கும் என்று சொல்லிக்கொண்டு தங்கையின் கையைப் பிடித்தாள். தங்கை தனலட்சுமி உதட்டைப் பிதுக்கிக்கொண்டு சட்டென அரவம் தீண்டியதுபோல் கையை இழுத்துக்கொண்டாள்.



இதைக்கேட்ட தர்மலிங்கம் பிள்ளையின் முகத்தில் கோபக் கனல் கக்கிற்று. மீசை படபடவென்று துடித்தது. எட்டிப்பழம் போல் கண்கள் சிவந்தன. நீ செத்தாலென்ன? பிழைத்தாலென்ன? தங்கவிக்கிரகம் போன்ற தனலட்சுமியை இந்த தரித்திரத்துக்குக் கொடுப்பது கிளியை வளர்த்துப் பூனைகையில் கொடுப்பதுபோலாகும். அவளணியும் பூவுக்கும் பொட்டுக்கும் கூட இவனால் சம்பாதிக்க முடியாதே. இவனுக்குக் கொடுத்து எதற்கு பயன்? தனலட்சுமியை அடைய பெரிய பெரிய தனவான்களெல்லாம் தவம் செய்கிறார்கள். அவர்களின் கால் தூசுக்கும் கூட இவன் அருகனாக மாட்டான், உன்னுடனே போகட்டும் ஓட்டாண்டியின் உறவு என்று கோபாவேசத்துடன் கொக்கரித்தார். அண்மையிலிருந்த தமக்கை பாக்கியலட்சுமி ஏதோ சொல்ல வாயெடுத்தாள், இடைமறித்து பிள்ளை அவர்கள் வாயை மூடிக்கொண்டு பேசாமலிரு என்று சொல்லி எனக்கு வேலையிருக்கிறது வாருங்கள் போகலாமென்று இரு கண்மணிகளையும் அழைத்துக்கொண்டு கார் ஏறி சொர்ணபுரிக்குக் கார்வேகத்தில் புறப்பட்டார்.

பிள்ளை அவர்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றதுதான் தாமதம். முத்துலட்சுமியின் உயிரும் உடலை விட்டுச் சென்றது. அருகிலிருந்தவர்கள் வெளியில் வந்து பிள்ளை அவர்களைப் பார்த்தார்கள். கார்வேகமாகச் சென்று கொண்டிருந்தது. கைதட்டிக் கூப்பிட்டுப் பார்த்தார்கள். காரின் இரைச்சலுடனும் மன எரிச்சலுடனும் செல்பவருக்கு எப்படி காது கேட்கும்? அணைந்துபோன வாழ்க்கை தீபத்தை நினைந்து ஆறாத்துயரடைந்தான் வைத்தியநாதன். முத்துலட்சுமியை மணந்து கொண்ட வைத்தியநாதன் தனது சொந்த ஊராகிய மத்தகிரியில் பெரிய ஆஸ்தியுடைய சீமானாக இருந்தான். அவன் தகப்பனார் இவன் சிறுவனாக இருந்தபோதே இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலையடைந்தார். கணவனை இழந்த காமாட்சிக்கு வைத்தியநாதனும் மஞ்சரியும் ஆறுதலளித்து வந்ததால் அவள் மனம் ஒருவாறு நிம்மதியடைந்திருந்தது. முத்துலட்சுமியின் கணவன் வைத்தியநாதன் சூது வாது ஒன்றும் தெரியாத அபலை. அவனுடன் நேசமாகயிருந்த துன்மார்க்கர்கள் அவனது சோற்றைத் தின்றுவிட்டு சூழ்ச்சியால் அவனது பொருள்களையும் கவர்ந்து கொண்டார்கள். இந்த நிலையில் மனைவியை இழந்த அவன் கதி மிகவும் மோசமாகிவிட்டது. ஏழையாக இருந்தால் உலகிலுள்ள எந்த உறவினர்கள் நண்பர்கள்தான் உதவுவார்கள்? மனைவியைப் பிரிந்த வைத்தியநாதன் குழந்தையின் மதிமுகத்தில் மனைவியின் சாயல் கண்டு அழுவான். என்னருமைச் செல்வமே அன்று செல்வம் நிறைந்திருந்தபோது நீ பிறந்திருந்தால் உனக்குத் தாதியர்கள் பொற்கிண்ணத்தில் பாலூட்டுவார்கள். தங்கத் தொட்டிலில் ஏற்றி மங்களம் பாடித் தாலாட்டுவார்கள். உனது கனிவாயில் முத்தமிட அநேக வனிதையர்கள் மனதோடு காத்திருப்பார்கள். நீ அழுதால் உனது கண்ணிலிருந்து முத்து சிந்திவிடுமென்றஞ்சி அன்னை உன்னை அன்புடன் அணைத்துக் கொள்வாளே. இதற்கெல்லாம் நீ கொடுத்து வைக்காத பாவியாகிவிட்

டாயே என்று கதருவான். தோட்டவேலை செய்துவந்த அவனுக்கு அதில் நாட்டம் செல்லவில்லை. அன்று தாயாரும் தங்கையும் தானும் குழந்தையும் பட்டினி. அவனால் எழுந்து நடக்கவும் சக்தியில்லை. தாயாரின் ஆலோசனையின் பேரில் அவனது பழைய நண்பர்களாகிய நம்பிக்கைத் துரோகிகளிடம் சென்று ஏதாவது வாங்கி வரலாமென்று சென்ற அவனை நீ யாரோ? உன்னைக் கண்டதேயில்லை, போ நிற்காதே என்று விரட்டிவிட்டார்கள். அவனது கால்கள் சோர்ந்தன. அங்கமெலாம் படபடவென துடித்தன. தள்ளாடிக்கொண்டு நடைபிணம்போல் வீடுவந்து சேர்ந்தான். தாயிடமும் தங்கையிடமும் வாய்திறந்தும் பேசாமல் அப்படியே குழந்தையுடன் படுத்துவிட்டான்.

அந்நிலையில் தங்கை மஞ்சரி வைத்தியநாதனை எழுப்பி அண்ணா! இவ்வூரில் சாதியில் தாழ்ந்தவரும் நிறைந்த பணத்துடன் வாழ்பவருமாகிய வயது முதிர்ந்த சங்கரனை மூன்றாந்தாரமாக மணக்கும் பெண்ணுக்கு 3000 ரூபாய் தருவதாகச் சொல்லுகிறார்கள். நான் அவரை மணந்து கொள்ளுகிறேன். என்றால் வரும் பணத்தைக்கொண்டு நீங்கள் சுகமாக வாழுங்கள், எனக்கு இதில் வருத்தம் கொஞ்சமும் இல்லை. ஒருவர் உதவியால் ஒருவர் வாழ்வதுதானே மனித தர்மம் என்றுரைத்தாள் மஞ்சரி. என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? யானை தன் தலையில் மண்ணைவாரிப் போட்டுக் கொள்வதுபோல் உன் இன்பவாழ்க்கையை ஏன் கெடுத்துக் கொள்ளுகிறாய். எங்களுக்காக உனது வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளவேண்டாம். பாழும் பணத்துக்காக உன்னைப் பாதாளத்தில் தள்ளுவதா? நாங்கள் இன்பமடைய நீ துன்பக்கேணியில் துடிப்பதா? நீ சுகமாகவும் இன்பமாகவும் வாழவேண்டுமென்பதே எனது நெடுநாளைய ஆசை. நான் பிச்சையெடுத்தாலும் கூட எனக்கு வருத்தமில்லை. நீ நல்ல அழகும் குணமும் செல்வமும் இளமையும் உள்ள கணவனுடன் வாழ்ந்தாலே போதும். அதுவே எனக்குப் பெரும்பாக்கியம். ஆதலால் இந்த எண்ணத்தை விட்டுவிடு மஞ்சரி என்று கெஞ்சினான்.

தங்கையின் தியாக எண்ணத்தை நினைத்து நினைத்து அவன் மனது ஆயிரம் சுக்காகச் சிதறிவிட்டது. பொழுதுவிடியு முன் வைத்தியநாதன் அழுது ஓய்ந்த தனது குழந்தையை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டுவிட்டான்.

கதிரவன் உதித்ததும் தாயும் மகளும் குலக்கதிராகிய வைத்தியநாதனையும் குழந்தையையும் காணாமல் தேடிப்பார்த்தார்கள் எங்கும் காணாமல் வாடித் தவித்தார்கள். கன்றிழந்த பசுவைப்போல் கலங்கினாள் காமாட்சி.

குழந்தையை எடுத்துச் சென்ற வைத்தியநாதன் ஒரு பிச்சைப் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு வீடுவீடாய் பிச்சையெடுத்து ஜீவித்து வந்தான். அவனது விதியையும் கஷ்டகாலத்தையும் நினைத்து நினைத்து கண்ணீர் உகுப்பான். அன்னையும் தங்கையும்



இன்று உண்டார்களோ? அல்லது பட்டினியைத்தான் கண்டார்களோ? என்று வருந்துவான்.

கண்ணை இழந்ததுபோல மகனை இழந்த காமாட்சி கடனுக்காக வீட்டை விட்டுவிட்டு மஞ்சரியுடன் வெளியூருக்குப் புறப்பட்டாள். அனாதைகளுக்கு அதைவிட வேறுவழி என்ன தெரியப்போகிறது.

டிக்கெட்டில்லாமல் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த காமாட்சிக்கும் மஞ்சரிக்கும் ஆபத்சகாயனைப்போல தில்லையம்பல நட்டுவனார் என்ற ஒருவர் அகப்பட்டார். ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த அவருக்கு இவ்விருவர்களின்மேல் இரக்கம் உண்டாயிற்று. இருவரையும் தமது ஊராகிய நட்டுவமங்கலத்துக்கு அழைத்துச் சென்று மஞ்சரிக்கு நாட்டியம் கற்றுக்கொடுத்து வந்தார். காமாட்சியம்மாள் வீட்டுக்காரியங்களைச் செய்யும் வேலைக்காரியானாள். இதற்குள் ஆண்டு ஒன்று கடந்து விட்டது.

தர்மலிங்கம்பிள்ளை தனது மகள் தனலட்சுமியை மிகவும் பணக்காரனான மகாதேவனுக்குக் கொடுக்க இசைந்தார். திருமண ஏற்பாடுகள் ஆடம்பரமாக நடைபெற்றது. வைத்தியநாதன் ஊர்ஊராய்ப் பிச்சை எடுத்துவரும் நாளில் அன்று திருமணம் நடைபெறும் திருமாலூர் வந்து சேர்ந்தான். அவ்வூர் முழுதும் சுற்றியும் சோறு கிடைக்காததால் திருமண வீட்டுக்கு ஒரு மனதுடன் வந்து சேர்ந்தான். அங்கு நடைபெற்ற விருந்தில் பல செல்வமிக்க சீமான்கள் கலந்துகொண்டார்கள். ஆனால் அருந்தி பல நாட்களான ஏழைகளைத் துரத்திவிட்டார்கள், வைத்தியநாதன் அங்குள்ள மனிதப் பெருச்சாளிகளின் அதட்டலுக்குப் பயந்து உள்ளே தள்ளமாட்டாமல் இலைநிறைய வெளியில் தள்ளிய எச்சல் சோற்றுக்குப் பின்புறம் சென்றான். அங்கு எச்சல் சோற்றைக்கண்டு பிச்சை கிடைத்ததென்ற மனமகிழ்ச்சியால் ஒரு கை எடுத்து வாயில் போட்டான். பல நாய்கள் அவனைச் சூழ்ந்துகொண்டது. விட்டால் போதுமென்று ஓட்டமெடுத்தான் வைத்தியநாதன். தொடர்ந்து ஓடி வந்தது தொல்லைதரும் நாய்கள். இனத்தைக் கண்டே குரைக்கும் நாய்க்கு இனமில்லாத மனிதனைக் கண்டால் எப்படியிருக்கும்.

அன்றிரவு பலத்த மழையும் இடியுமாகயிருந்தது. அவ்வூர் சாவடியில் படுத்திருந்த வைத்தியநாதன் அப்பொழுதுதான் கண்ணயர்ந்தான். அதற்குள் குழந்தை தாவிக்குதித்து 5 அடிதூரம் சென்றுவிட்டது. திடீரென்று இடித்த இடிக்கு குழந்தை பலியாகிவிட்டது. திடீரென்று கண் விழித்த வைத்தியநாதனின் கண் ஒன்று சிதறிப் போய்விட்டது. வைத்தியநாதனின் தலையில் பேரிடி விழுந்தது போலாகிவிட்டது. கண்ணே நீ உனது தாய் சென்ற விண்ணகத்துக்கே சென்று விட்டாயா? தந்தையே சோற்றுக்குத் தவிக்கும்போது நமக்காக அவர் ஏன் நொந்து வாட வேண்டுமென்று சென்றுவிட்டாயா? துன்பம் நிறைந்த உலக வாழ்க்கையிலிருந்து விடுதலை யடையவேண்டுமென விரைந்துவிட்டாயா? இன்

பம் நல்கிய அன்பு மனைவியைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தேனே அது கூட உனக்குப்பிடிக்கவில்லையா? ஈஸ்வரா! நான் யாருக்கும் ஒரு துன்பமும் செய்யவில்லையே, இதுவும் உனது சோதனையா? என்று அழுதான். முன்னிருந்த துக்கத்தைவிட பன்மடங்கு அதிகரித்து விட்டது அவனது துக்கம். திருமண வீட்டில் திருடிச்சென்ற கள்வர் கோஷ்டியார் இவனது அழுகுரலைக் கேட்டுக்கேட்டு தங்களுடன் வரும்படியாக அழைத்தனர். முதலில் மறுத்த வைத்தியநாதன் அவர்களின் வற்புறுத்தலால் பிறகு இணங்கினான்.

தில்லையம்பல நட்டுவனாரிடம் மஞ்சரி நன்றாக நாட்டியம் கற்றுக்கொண்டாள். அவளையே மனைவியாக்கிக்கொள்ளத் திட்டமிட்ட நட்டுவனாரிடம் அண்ணனைக் காணாமல் மணம் செய்து கொள்ள மாட்டேன் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். மஞ்சரிக்கு இப்பொழுது நாட்டியராணி குமாரி மேனகா என்று பெயரிட்டு அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது.

தனலட்சுமியை மணந்து கொண்ட மகாதேவன் ஒரு காமாந்தகாரன். நாடகக்கம்பெனி வைத்து அங்குவரும் நடிகை மங்கையர்களைக் கற்பழிக்கும் கயவன். அன்று தனலட்சுமிக்கு சாந்தி முகூர்த்தம். அதைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் புதுநடன மாதாகிய குமாரி மேனகாவின் நாட்டியக் கச்சேரிக்குச் சென்றுவிட்டான் அன்றைய நடனக்கச்சேரிக்கு நல்ல வசூல். ஆனால் நடனராணி இவனது சொக்குப் பொடிக்கு மயங்கவில்லையாதலால் ஆசாபங்கத்தினால் வீடு வந்தான் மகாதேவன். வந்தவன் வாடிய முகத்துடன் தனியறையொன்றைத் தேடி அதில் படுத்துக்கொண்டான். இந்நிலையில் தனலட்சுமியின் மனநிலை எப்படியிருக்குமென்பதை வாசகர்களே சிந்தித்துப் பார்க்கட்டும். மாதம் தவறாமல் மாஜி மஞ்சரியின் நடனக் கச்சேரி அந்தர் சபாவில் நடந்து வந்தது.

கள்ளர் கோஷ்டியில் சேர்ந்த வைத்தியநாதன் மனம் நெருப்பிடை சிக்கிய புழுவைப் போல் துடித்தது. இதுவும் இறைவனின் திருவருள் என்று நினைத்து தேறுதல் அடைந்தான். வைத்தியநாதன் நன்றாகப் படித்தவனாக இருந்ததால் கொள்ளையிட்டு வரும் பணத்தை நல்ல முறையில் பிரிக்கும் கணக்குப் பிள்ளையானான். நம்பிக்கையும் நாணயமும் உள்ள மனிதனாக இருந்ததால் பொக்கிஷங்களை இவன் வசமே ஒப்புவித்துவிட்டு இரவில் திருடச் செல்வார்கள். ஒருநாள் பெரிய முதலாளி லேவாதேவியின் வீட்டில் திருடிக்கொண்டு வந்த பணத்தில் ஏற்பட்ட பெரிய சச்சரவை வைத்தியநாதன் சீரிய முறையில் தீர்த்து வைத்ததால் இவனுக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது.

குணமில்லாத பணக்காரனை மணந்து கொண்ட தனலட்சுமிக்கு வாழ்வில் சுகமில்லை. அற்ப விஷயத்துக்கெல்லாம் கடிந்து கொள்ளும் புருஷனுடன் இதமாகப் பேசியும் பயன் படுவதில்லை. நாள்



முழுதும் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிப்பாள். அவளது வாழ்க்கை எட்டிக்காயைப்போல் கசந்தது. அப்பா வீட்டுக்குப் போய் ஓரிரு மாதங்களானாலும் மகாதேவன் மனைவியை வந்து கூப்பிட மாட்டான். அங்குள்ளவர்களின் வற்புறுத்தலுக்கும் கடு மொழிக்கும் ஆற்றாது தனலட்சுமி தானாகவே புருஷன் வீட்டுக்கு வருவாள். அவள் கண்டு கொண்டிருந்த இன்பக் கனவுகளெல்லாம் வெறும் பகற் கனவாகவே முடிந்துவிட்டது.

நடன மாது குமாரி மேனகாவின் தாயார் காமாட்சியம்மாள் சிறிது நாட்கள் நோய்வாய்ப்பட்டு திடீரென்று காலமானாள். தாயைப் பிரிந்த மாது நட்டுவனாரின் பாதுகாவலுடன் கச்சேரிக்குப் போய் வந்தாள். மகாதேவன் குமாரி மேனகாவை நடனத்துக்கென்று அழைத்துச் சென்று கற்பழிக்கத் திட்டமிட்டான். அன்று அமாவாசை. நடனத்துக்கு வந்த மேனகாவையும், நட்டுவனாரையும் தான் கற்பழிப்பதற்காகவே தனியாகக் கட்டியிருக்கும் மகாதேவ விலாஸ் பங்களாவுக்குத் தனது காரில் அழைத்துச் சென்றான். அங்கு வந்தவுடன் நட்டுவனாருக்கு மட்டும் ஊமத்தை கலந்த காபியை கொடுத்து தனக்கும் நாட்டியக்காரிக்குமட்டும் ஊமத்தை கலக்காத காபியாக கொடுக்க ஏற்பாடு செய்திருந்தான். காபியை வாங்கி அருந்திய நட்டுவனாருக்கு மயக்கம் வந்து விட்டது. அவரை ஒரு அறையில் பூட்டிவிட்டு குமாரி மேனகாவை வேறு அறைக்கு இழுத்துச் சென்றான். காம மயக்கத்தில் அங்கு அவளை இணங்கும்படி வேண்டினான். கண்ணே நீ ஏன் இப்படி கண்ட இடங்களெல்லாம் கால் வலிக்க நடனமாடிக்கொண்டிருக்கிறாய். என் உள்ளத்தில் நடனமாடும் பசுங்கிளியே! என்னுடன் வந்து இன்பக் கடலில் மூழ்குவதற்கு ஏன் உனக்கு மனம் வரவில்லை. இதைவிட உலகில் என்ன இன்பமிருக்கிறது. நான்முகன் நல்கிய நாரி மணியே! நீ தினமும் இப்படி ஆடிக்கொண்டிருந்தால் உனது பாதங்கள் சிவந்து விடாதா? கண்ணின் கருமணியே! நீ வேகமாக சுழன்று ஆடும்போது உன் நுண்ணிடை ஒடிந்து விட்டால் என்ன செய்வதென்று என்னகம் படும்பாடு உனக்கு என்ன தெரியப் போகிறது. அன்று தேவர்கள் உண்ட அமிழ்தம் அவர்கள் வாய் மட்டும்தான் இனித்ததாம். ஆனால் நான் உன்னிடம் அடையப் போகும் இன்பம் எனது பஞ்ச பூதங்களும் இன்ப நுகர்ச்சியால் பரவசமடையும் என்று பலவிதமாகப் பிதற்றினான். அவளும் அவன் இச்சைக்கு இசைந்தது போல் பாசாங்கு செய்து தனது பெண்ணுடையை அவனுக்கும் அவனது ஆண் உடையைத் தனக்கும் வேண்டுமென்று கேட்க மோகாந்தகாரனும் அப்படியே செய்தான். அப்பொழுது மணி 10 அடித்தது. இன்னும் சிறிது நேரத்தில் உனக்கும் சாவு மணி அடிக்கப் போகிறது என்று சொல்வது போலிருந்தது அந்த ஒலி. காமவெறி கொண்ட கயவன் அக்கயல் விழியாளின் ஆதனப்படி பம்பரம் போல் சுழன்றான். பின்னர் அவ்வேல் விழியாளின் வாள் வீச்சுக்கு இலக்காகி தவத்தாற் பெற்ற மானிட யாக்கையைப் பறிகொடுத்தான். ஆண் உடையணிந்து கொண்டிருக்கும் நடன மாது அதே கோலத்துடன் பக்கத்திலிருந்த டெலி

போலிஸ் போலீசுக்குத் தகவல் கொடுத்து விட்டு வெளியிலிருந்த காரில் புறப்பட்டாள் மேனகா. சில மைல்கள் சென்ற பின் காரை ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டு அவ்வழியாகச் சென்ற லாரியின் பின்புறம் ஏறிக் கொண்டது ஆண் உருவம்.

தலைமை இடத்தில் வைத்தியநாதனை மட்டும் விட்டுவிட்டு திருடச் சென்ற திருடர் கோஷ்டியார் மகாதேவ விலாஸ் பங்களாவுக்குத் திருட வந்தார்கள். திருடர்கள் ஒவ்வொரு அறையும் புகுந்து பார்த்துக் கிடைத்தவைகளைச் சுருட்டினார்கள். ஆண் வேஷம் போன் செய்தபடி போலீஸ் கோஷ்டியார் அவ்விடம் வந்து கள்வர்கள் கோஷ்டியாரைக் கைது செய்து அழைத்துச் சென்றார்கள். பின்னர் திருடர்களுக்கு, நீங்கள் திருடிச் செல்வதற்காக ஒரு மனிதனையே கொன்றிருக்கிறீர்கள் என்று நீதிபதி அவர்களுக்கு மரண தண்டனை விதித்தார். திருட்டுத் தொழிலினால் உயிரையே விட வேண்டியதாயிற்றென்று அவர்கள் வருத்தத்துடன் கயிறு ஏறினார்கள்.

தான் சேகரித்த தேனை தான் உண்ணாமல் பிறிதொருவனுக்குக் கொடுத்து தான் உயிரை விடும் தேனீ போன்ற திருடர் கோஷ்டியார் ஒரு மாதம் வரை வராததைக் கண்ட வைத்தியநாதன் அங்குள்ள பணத்தையெல்லாம் வாரிக் கொண்டு சிவமலை என்ற ஊருக்கு வந்து மாடமாளிகையொன்றில் குடியேறினான்.

சிவமலைக்கு வந்த வைத்தியநாதன் ஒரு நூல் மில்லை விலைக்கு வாங்கி அதற்கு காமாட்சி மில் என்று பெயரிட்டு நடாத்தி வந்தான். பல இடங்களில் அலைந்து திரிந்த ஆண் வேஷதாரி மில் கூலியாகச் சேர்ந்து கொள்ளுவதற்கு காமாட்சி மில்லுக்கு வந்து வேலை கேட்டது. வேலை காலி இல்லை என்று மறுமொழி வழங்கினான் வைத்தியநாதன். வேஷதாரி கெஞ்சிக் கேட்டும் பயன் படவில்லை. மில்லை விட்டுச் சொல்லாமல் கிளம்பி விட்டது ஆண் வேஷம்.

காமாட்சி மில்லில் வேலை செய்து வந்த கூலியாட்கள் சம்பளத்தை உயர்த்தும்படியும் போனஸ் கொடுக்கவேண்டு ம் ...றும் கிளர்ச்சி செய்தார்கள். தேசத்தின் முதுகெலும்பாகிய ...ழிலாளர்களின் ஐக்கியத்துக்கு முன் வைத்தியநாதனின் ...ம் பலிக்கவில்லை. ஏழை பங்காளனாக இருந்தவனுக்கு ...ல்வம் வரவும் செருக்கு கூடவே வந்து விட்டது. ஆனால் பழைய நினைவுகள் மனக்கண்முன் வந்து வந்து அறிவுறுத்தியதால் தொழிலாளர்கள் அனைவருக்கும் 3 மாத போனசும் ரூ. 10 சம்பள உயர்வும் கொடுக்கச் சம்மதித்தான். உழைப்பாளர்கள் அனைவரும் உளமார வாழ்த்தினார்கள்.

பதியை இழந்து விதவையான தனலட்சுமி புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டுக்கு வெற்றிகரமாக வாபசாகும் சேனையைப் போல் திரும்பி வந்தாள். அங்குள்ளவர்களெல்லாம் வாழா வெட்டி. காலையில் உன் முகத்தில் விழித்தாலே அபசகுனம் என்றும்



அதிர்ஷ்டமில்லாதவள் என்றும் புருஷனை ஒழித்தவளென்றும் பல வாருகத் தூற்ற ஆரம்பித்தார்கள். தகப்பனார் தர்மலிங்கம் பிள்ளையும் அண்ணார் அனந்த நாராயணனையும் தவிர, மற்றவர்களெல்லாம் இதே பல்லவியே பாடி வந்தார்கள். தனலட்சுமியின் மனம் வெந்த புண்ணில் வேல் பாய்ந்து வருவது போலிருந்தது.

ஆண் வேஷத்தைக் கலைத்து விட்டு சுய உருவடைந்த நாட்டியக் காரி அண்ணனையும் குரு நட்டுவனாரையும் தேட ஆரம்பித்தாள். ஒரு நகரத்தையடைந்த நாட்டியக்காரி அங்குள்ள சோதிடர், பட்சி சாஸ்திரி முதலியவர்களைக் கேட்டும் தகுந்த துப்பு தெரியாமல் கடைசியில் ஒரு காட்டை யடைந்தாள். அங்கிருந்த ஒரு போலி சாமியார் அண்ணனையும் குருவையும் காட்டுவதாகச் சொல்லி தனது இருப்பிடத்துக்கு அழைத்துச்சென்றான். அங்கு அநேக பெண்மணிகள் நிறையிழந்து சிறையில் வாடினார்கள். அவர்களெல் லாம் பராசக்தியின் அவதாரமென்று கூறினான் பகல்வேஷதாரி. அவர்களை அழைத்துக்கொண்ட சிறைமாதா இவளையும் அன் புடன் அழைத்துக் கொண்டாள்.

மூர்ச்சை தெளிந்து பல இடங்களில் அலைந்து அவ்தியுற்ற நட்டுவனார் கடைசியில் கூலிக்கு வண்டியோட்டும் வேலையில் அமர்ந் தான். வண்டித் தொழில் அவனுக்குக் கண்டு போல் இனித்தது. மாடுகள் செல்லும் வேகத்துக்கும் நடை போடும் எழிலுக்கும் தகுந்த படி நட்டுவாங்கம் செய்து கொண்டே வண்டியோட்டுவான். இந்த இனிமைக்காக இவன் வண்டியில் ஏறுவதற்கு வனிதையர்களும் பெரிய மனிதர்களும் ஈ போல் மொய்த்துக் கொள்ளுவார்கள். ஒரு பிரமுகர் வீட்டு அம்மாள் தனது மகன் காணமல் போனதைத் தெரிந்து கொள்ளுவதற்காக சுவாமியாரிடம் செல்வதற்கு இவன் வண்டியில் சென்றாள். பேசிக் கொண்டே சென்ற நட்டுவனார் (வண்டிக்காரன்) பையன் காணமல் சென்று விட்டால் பத்திரிகை யிலும் ரேடியோவிலும் விளம்பரப்படுத்தாமல் இந்த போலி சுவாமியாரிடம் சென்றால் என்ன தெரியப் போகிறது என்றான். அப்படிச் சொல்லாதே அவர் மூன்று காலங்களையும் தப்பில்லாமல் சொல்லுவதில் வல்லவர் என்றாள் வண்டியிலுள்ள அம்மையார். உம், பார்க்கலாம். எனது தங்கை ஒருவள் காணமல்போய்விட்டாள். அதையும்தான் கேட்டுப் பார்க்கலாமே என்று நட்டுவாங்கம் சொல்லிக் கொண்டே மனோவேகத்தில் வண்டியைச் செலுத்தினான். வண்டி அடைய வேண்டிய லட்சிய இடத்தை அடைந்தது. பெண் கள் தவிர, மற்றவர்கள் சந்நிதானத்துக்குச் செல்லக்கூடாதென் றுணர்ந்த வண்டிக்காரன் தனது சாய வேஷ்டியால் முக்காடிட்டுக் கொண்டு ஒரு கம்பத்தின் மறைவில் மறைந்திருந்து கொல்லும் மனிதனைப் போல் நின்றான். அங்கு சுவாமியார் பெண்களிடம் கொச்சையாகப் பேசுவதையும் காமநோக்கத்துடன் பார்ப்பதையும் கண்ட வேஷதாரி சுவாமியாரின் மேல் பாய்ந்து அவனை நையப் புடைத்து விட்டு அங்கிருந்த பெண்களை சிறையிலிருந்து மீட்டான். அதில் தனது சிஷ்யை இருப்பதை அறிந்த நட்டுவனாரின் மனம்

மகிழ்ச்சியடைந்தது. பெண்மணிகளெல்லாம் நட்டுவனாரை மனமார வாழ்த்தினார்கள்.

தர்மலிங்கம் பிள்ளை கோவில் ஒன்று கட்டுவதற்காக நிதி வசூலுக்கு காமாட்சி மில்லுக்கு வந்தார். மில்லின் உரிமையாளர் தனது மாப்பிள்ளை என்பது அவருக்குத் தெரியாது. உரிமையாளரின் அந்தரங்க உதவியாளர், மானேஜிங் ஏஜண்ட் ஊரில் இல்லை. வேறு ஒரு நாள் வாருங்களென்று சொல்லி அனுப்பி விட்டார்.

நட்டுவனாரும் நாட்டியக்காரியும் தர்மலிங்கம் பிள்ளை வீட்டில் வேலைக்கமர்ந்தார்கள். மனைவியைப் பிரிந்து பல ஆண்டுகளான பிள்ளை அவர்களுக்கு நாட்டியக்காரியின் மேல் நாட்டம் சென்றது. விட்டிற்பூச்சி விளக்கில் வீழ்வது போல் வேலைக்காரியிடம் இரவில் சென்ற பிள்ளை அவர்கள் பலத்த அடியுடன் திரும்பி வந்தார்.

வீட்டிலும் வெளியிலும் பேசும் கடுமொழிக்கு ஆற்றாது விதவை தனலட்சுமி வீட்டை விட்டு வெளியேறினாள். பிறந்தகத்தை புறக்கணித்து இறந்த பிணம் போல் சென்ற தனலட்சுமி காமாட்சி மில்லில் கூலியாகச் சேர்ந்து விட்டாள். மகளைக் காணாமையாலும் வேலைக்காரியிடம் அடிபட்டதையும் நினைந்து வருந்தினார் பிள்ளை அவர்கள். ஆனாலும் மகளின்மேல் உள்ள அன்பினால் தேடிக் கொண்டு வர தனது காரை அனுப்பினார்.

பிள்ளை அவர்களுக்குத் தொல்லை கொடுத்து விட்டுப் புறப்பட்ட நட்டுவனாரும் நாட்டியக்காரியும் விடியற்காலையில் ஒரு நாள் ரயில் பாதை வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அங்குள்ள ரயில் கேட்டில் காவல் புரிந்து கொண்டிருந்த போலீஸ்காரன் இவர்களை நாச வேலையில் ஈடுபட வந்தவர்களென்று சந்தேகித்து பல கேள்விகள் கேட்டான். கேட் மூடியிருந்ததால் மதராஸ் போய்விட்டு அவ்வழியாக வந்த வைத்தியநாதனின் கார் அவ்விடம் நின்றது. இவர்களின் வினாவிடையைக் கேட்டுக்கொண்டிருந்த வைத்தியநாதன் போலீஸ்காரனின் சந்தேகத்தைப் போக்க கூலி வேலைக்குச் செல்லும் மனிதர்கள் சுத்தியுடனும் மற்ற சாமான்களுடனும் சென்றால் அவர்களை எப்படி நீ நாச வேலைக்காரர் என்று சொல்லலாம் என்றுரைத்து தனது மில்லில் வேலை கொடுப்பதாகச் சொல்லி தனது காரில் ஏற்றிக் கொண்டு சிவமலைக்கு வந்தான். தனலட்சுமியைத் தேடப் புறப்பட்ட கார் பலவிடங்களிலும் தேடியும் அகப்படாமல் காணவில்லை என்ற புகாருடன் திரும்பி வந்தது.

மில் மானேஜிங் ஏஜண்ட்ஸ் அறைக்கு நட்டுவனாரும் நாட்டியக்காரியும் வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் மில் கூலி தனலட்சுமி வயிற்று வலி தாங்கமுடியாமல் மேஸ்திரியைக் கேட்டும் பயன்படாமல் நேரே மானேஜிங் ஏஜண்ட்ஸ் அறைக்கு வந்தாள். தனலட்சுமியைக் கண்ட நாட்டியக்காரி அடையாளம் தெரிந்துகொண்டு மார்புற இருவரும் தழுவிக் கொண்டார்கள். வைத்தியநாதனுக்கு ஒன்றும் புரியாமல் நாட்டியக்காரியை விசாரிக்க, தர்மலிங்கம் பிள்ளை மகள் தனலட்சுமியே இவளென்று சொன்னாள். நீங்கள் யாரென்று



கேட்க நாட்டியக்காரி தனது விருத்தாந்தங்களை ஆதியோடந்த
மாகச் சொன்னாள். தனது தங்கை மஞ்சரியே இவளென்று தெரிந்து
கொண்ட வைத்தியநாதன் மனம் புளகாங்கிதமடைந்தது. அத்தான்
என்னை மன்னித்து விடுங்களென்று வேரற்ற மரம் போல் வீழ்ந்து
வைத்தியநாதனின் காலைப் பிடித்துக்கொண்டாள் தனலட்சுமி.
துப்பியதம்பலம் இப்பொழுது இனிக்கிறது என்று சொல்லிக்
அவளை மன்னித்து விட்டான் வைத்தியநாதன். இது விஷயத்தை
வைத்தியநாதன் தர்மலிங்கம் பிள்ளைக்கு டெலிபோன் செய்தார்.
சாகுந்தருவாயிலிருந்த பிள்ளைக்கு டெலிபோன் புனர்ஜன்ம
மளித்தது. பிள்ளை அவர்கள் சிவமலைக்கு வந்து தன்னை மன்னிக்கும்
படியாக வேண்டிக் கொண்டார். சிறுவயதில் வீட்டை விட்டுச்
சென்ற அத்தை மகன் அன்பழகனே நட்டுவனார் என்று தெரிந்த
மஞ்சரியின் மனம் கொஞ்சி விளையாடியது.

நல்ல சுபதினத்தில் அன்பழகனுக்கும் மஞ்சரிக்கும் திருமணம்
சிறப்பாக நடைபெற்றது. பிச்சையேற்றுத் திரிந்து கொண்டிருந்த
வைத்தியநாதன் தனது அந்தஸ்து உயர்ந்தது என்றெண்ணி
கர்வம் கொள்ளாமல் காமாட்சி மில்லைத் தொழிலாளருக்கே உரிமை
யாக்கிவிட்டான். தன்னைக் கேவலமாக எண்ணியிருந்த தனலட்சு
மிக்கு புத்தி கற்பிப்பது போல அவள் பெயரில் ஒரு கல்லூரி நிறுவி
அவளையும் தனது தங்கை போல் பாவித்து வந்தான் வைத்திய
நாதன். வாழ்க வள்ளல் வைத்தியநாதன்.

ஸ்ரீமத்

# விவேகானந்த சுவாமிகள்

## விரிவான திவ்ய சரித்திரம்

(3-ம் பதிப்பு)

சுவாமிகளின் அதியற்புதமான சரித்திரமும் அரிய உபதேசங்களுடன் அநுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் பூசஞ்சாரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் இதுவரை எவராலும் வெளியிடப்படவில்லை.

கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 5. தபாற் செலவு வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, சென்னை-1

# பொறுமை

**பே. தேனப்பன்**

★

சீமான் நடராஜப் பிள்ளையின் ஏகபுத்திரி-திருவளர் செல்வி-சௌபாக்கியவதியின் திருமணத்தன்று 'திடும் திடும்' மென்று ஊரே இரண்டுபட்டது! ஊரை அடைத்துப் பந்தி வைத்தாரென்றால் சங்கீதக் கச்சேரி, சதுராட்டம் இத்யாதி தட புடல்களைச் சொல்லவா வேண்டும்? அன்று அவரின் தயாள குணத் தைப் பாராட்டிப் பேசாதவர்களே ஊரில் இல்லையெனலாம். எல்லாவற்றிலும் மேலாக நடராஜப் பிள்ளை தன் தாயாரின் விருப் பத்துக்காக தன் பெண்ணுக்கு கற்காலத்திலிருந்து தற்காலத்து நகை வரையிலும் ஒன்றுவிடாது, அதாவது பாசக்கயிறு போன்ற பல வடங்கள், கை கால்களுக்கு முறையே பொன் வெள்ளி விலங்கு கள், புல்லாக்கு, கம்மல், கர்ணப்பூ, கத்தரிப்பாவலி, குருட்டுப் பாவலி, மாங்காய்மாலை, அட்டிகை போன்ற கற்காலத்து நகை முதல் நெக்லஸ், லாங் செயின், ரேடியோ வளையல் போன்ற இன் னும் பல தற்காலத்து நகை வரையிலும் செய்து போட்டு பெண்ணை கிரங்க அடித்தார்!

இது கண்ட ஊரிலுள்ள பெண்கள் சிட்டுக் குருவிகள்போல சின்னச் சின்னக் கூட்டமாக-சிங்காரக் கூட்டமாக ஆங்காங்கே கூடி பெண்ணின் அதிர்ஷ்டத்தை சிலாகித்துப் பேசினார்கள்-இல்லை. தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களைப்போல் சுய விளம்பரம் செய்தார்கள்! போட்டி வலுத்தது. ஜாமீன் இழந்தவர்கள் கொஞ்ச மாக வாக்கு எடுத்தவர்கள் ஒவ்வொருவராகக் கூட்டத்திலிருந்து கலைந்து போய்க்கொண்டிருந்தார்கள். அநேகமாக ஜாமீன் இழந்த பெண்களின் வீடுகள் கோடை இடி முழக்கம்போல் குமுறியிருக்கும் என்று அடுத்துள்ள டிரைவர் பசுபதியின் வீட்டைப் பார்த்தே தெரிந்து கொண்டேன்.

பசுபதியின் வீடு அன்று அல்லோலகல்லோலப்பட்டது. அவன் பத்தினி சீதா சிங்கம்போல் கர்ஜித்தாள்! புலிபோல் உறுமினாள்! "நகை உண்டா, நட்டு உண்டா?" என்ற கேள்விக்குரல் அவள் உள்ளத்து உலகின் பெரும்பாகமாகிய ஆசைக் கடலின் அடித் தளத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டும். இல்லையென்றால் பசு போன்ற சீதா பத்திரகாளியின் தோற்றமளித்திருக்கமாட்டாள்! பௌர்ணமி போன்ற பிரகாசமான அவள் முகம் அமாவாசைபோல கருத்திருக்காது!

சீதா நாகம்போல் சீறினாள்! "பேச்சிலே மட்டும் ஒண்ணும் குறைச்சலே இல்லை. வைரத்தோடு வாங்கித் தாரேன்னு சொல்லி வருஷம் ஒண்ணு ஆச்சி. அண்ணன் வந்தாங்க, அம்மா வந்தாங் கண்ணு செலவழிக்கிறதுக்குமட்டும் இந்த வீட்டிலே பணம் இருக்கு! மூளியாட்டமா இருக்கிற என் முகத்தைப் பார்க்கிறபோது உங்களுக்கு வெட்கமாயில்ல?...அடுத்த வீட்டு பங்கஜத்துக்கு அவ

புருஷன் ஆறு மாதத்துக்கு ஒரு நகை வாங்கிப்போடுறான்...அந்த அறிவு உங்களுக்கு இருந்தா நான் ஏன் இப்படி இருக்கேன்?"

"உனக்குமட்டுமல்ல சீதா, எனக்கும்தான் ஆசையிருக்கிறது. மனைவியின் மார்பிலே தங்க நகைகள் தவழவேண்டும், கழுத்தைச் சுற்றிலும் மணிகளும் முத்துக்களும் ஆய வேண்டும் என்று நான் நினைவு கொள்ளாத நேரமே இல்லை. நம் வரும்படிக்குத் தகுந்தபடி மீத்து வரும் சொற்ப பணத்தையும் உன் ஆடம்பரத்துக்கே செல வழித்து விடுகிறாய். வீட்டில் ஒரு டஜன் சேலை இருக்கும்போது 'பேஷன்' என்ற மூடுமந்திரத்தில் மூழ்கி மேலும் மேலும் சேலைகளை வாங்கிக் கொண்டேயிருக்கிறாய். இதேமாதிரி ஒவ்வொரு விஷயத் திலும்தான் செலவழிக்கிறாய்."

அவளுக்கு மட்டும் அந்த உணர்வு இல்லை என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிடுவது நியாயமாகாது! சீமானின் மனைவி என் யல்ல சீதா. பங்கஜ விலாஸ் சர்வீஸ் பஸ் டிரைவரின் மனைவி என் பதை அவள் மறந்து விட்டாளோ என்னவோ வாழ்க்கைச் செல வுக்கு மேல் மிச்சம் விழும் பணம் அவன் வறட்டு கௌரவத்துக்கே சரியாய்ப் போய்விடும். தகுதிக்கு மீறிய டாம்பீகச் செலவிலும், பகட்டினாலும் 'டிரைவரின் மனைவி' என்ற உலகக் கண்ணோட்டம் மறைந்தா போய்விடும்?

பசுபதி சொன்னதை ஏடாசி பேசுவதாக நினைத்த சீதா நெருப் புத் துண்டை மிதித்தவளின் நிலையடைந்தாள். 'இந்த எழவெடுத்த வீட்டில் என்ன சொன்னாலும் ஏடாசியும் எகத்தாளமுந்தான்! வாங் கறதுக்கு வக்கில்லேன்னு வாயை மூடிக்கிட்டு இருங்கள், தகப்பனார் போட்ட நகையெல்லாம் தவிடுபொடியாப் போச்சு. பதிலுக்கு வாங்கச் சொன்னா பல்லைக் காட்டுறீங்க..."

பசுபதி நிதானமிழக்கவில்லை. அனுதாபமும் பொறுப்பும் நிறைந்த பார்வையுடன் நறநறவென்று பல்லைக் கடித்துக்கொண்டு நாற்காலியிலிருந்து எழுந்து "எல்லாம் உன் சீக்குக்குத்தானே செலவழித்தேன் சீதா" என்றான்.

"தெரியுது! ஏன் சொல்லமாட்டேங்க, வரதக்ஷணையா வந்த பணத்தையெல்லாம் வழிச்சி வாயில் போட்டாச்சில...?

பசுபதி இன்னும் நிதானம் இழக்கவில்லை. சீதாவின் கன்னத் தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தான்.

'அம்மா'வென்று அலறினாள் சீதா. ஒருகணம் அவள் உள்ளத் தில் கோபம் கொந்தளித்தது. மறுகணம் மளமளவென்று கண்ணீர்-துளிகள் அவள் கன்னத்தைக் கடந்து கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் விக்கலும் விம்மலுமாக அழத் தொடங்கி விட்டாள்.

இதைக் கண்ட பசுபதியின் நெஞ்சம் நெகிழ்ந்தது. 'பாபம், அறியாதவள்' என்று அவன் வாய் முணுமுணுத்தது. பேதை, பித் தம் தெளிந்திருப்பாள் என்று அவன் மனம் நினைத்திருந்தது 'ஆண வமும், ஆசையும் இப்பொழுது சிறிது அடங்கியிருக்கும்' என்று

அவன் புத்தியில் பட்டது. அன்பு அவன் உள்ளத்தில் தளிர்க்க மெதுவாக அவள் பக்கத்தில் சென்றான்.

கட்டிலில் குப்புறக் கிடந்தாள் சீதா. அவள் அணிந்திருந்த மெல்லிய ஜம்பர் முதுகிலே ஒட்டிக்கிடந்த பாடியை பகட்டாகக் காட்டியது. பின்னப்பட்ட ஜடையிலே விடுபட்ட கேசம் காற்றிலே ஆடிக்கொண்டிருந்தது.

'சீதா' என்று அன்பொழுகக் கூப்பிட்டான் பசுபதி. அவளது அழுகையொலிதான் அவனுக்குப் பதில் கொடுத்தது. மெள்ள அவனது கரங்கள் அவள் தோளைப்பற்றித் தூக்கியது. கணவனின் கரத்தைத் தட்டிவிட்ட சீதா துள்ளி எழுந்தாள். அதிர்ச்சியில் அடிபட்ட பசுபதி அப்படியே இருந்தான். பரபரப்போடு கடும் பார்வையை வீசிய சீதாவின் முகத்திலே கோபக் குறிகள் குமுறிக் கொண்டிருந்தன. அப்போது அசைந்து ஆடி அணையப் போகும் அமைதியுடன் 'சீதா!' என்று உணர்ச்சி ததும்ப வார்த்தையை உதிர்த்தான் பசுபதி. உருண்டுகொண்டிருந்த அவள் விழியைக் கண்டு அவன் உள்ளம் அதிர்ந்தது. அதையும் சமாளித்துக்கொண்டு தன் கரத்தால் மெதுவாக அவள் கன்னத்தைத் தட்டினான்.

"போதும், போங்கள்! உங்கள் சமாதானம் இங்கே யாருக்கும் வேண்டாம்" என்று வார்த்தைகளை அள்ளிச் சிதறினாள் சீதா.

இந்த வார்த்தைகள் அவன் இதயக் கோட்டையை இடித்துத் தள்ளுவதாகப்படவே அங்கு நிற்க மனம் கொள்ளாமல் நாற்காலியில் கிடந்த துண்டை எடுத்து உதறித் தோளிட்டுக்கொண்டு நடைபோடலானான்.

சுவற்றுக் கடியாரம் 'டாண்' என்று ஒரு முறை ஒலித்து நின்றது. அண்ணாந்து பார்த்த பசுபதி மணி ஒன்று என்பதை ஒரு வினாடியில் தெரிந்துகொண்டான். பசி அவன் வயிற்றைப் பற்ற ஆரம்பித்தது. அப்போதுதான் சாப்பிட வந்தவன்—சாப்பிடாமல் போகிறோம் என்று எண்ணியவாறு வெளியே கிளம்பினான்.

சாப்பிடாமல் செல்லும் கணவனைப் பார்த்து கொஞ்சமும் வருந்தியதாகத் தெரியவில்லை சீதா. பதிலுக்கு ஏதோ முணுமுணுத்தாள்.

வீட்டிலிருந்து புறப்பட்டு வந்துகொண்டிருந்த பசுபதி பாதையைக் கடந்து கொண்டிருந்தான். அரையில் கழன்று வந்து கொண்டிருந்த இடைவாரை இரண்டு துவாரம் உள்ளே தள்ளி மாட்டிக்கொண்டு பஸ் நிலையத்துக்கே வந்துவிட்டான்.

காரின் பக்கத்தில் நின்ற கண்டக்டர் கனகலிங்கம் பசுபதியைப் பார்த்து தன் வெண்மையான பற்களை வெளியே காட்டி மறைத்துக் கொண்டான். "வாருங்கள்!" என்று வரவேற்பளித்தன அவன் மலர்ந்த முகம்.

அன்பு சூழ்ந்த பசுபதியின் முகத்திலே சோகரேகை படர்ந்திருப்பதைக் கவனித்த கனகலிங்கம் ஒரு முறை அவனை ஏற இறங்



கப் பார்த்துவிட்டு "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்" என்று வினவினான்.

'ஒன்றுமில்லை' என்று மழுப்பிய பசுபதி மறுபக்கம் பார்வையைத் திருப்பினான். "முதுகுளத்தூருக்குப்போற பஸ்தானே?" என்ற குரலைக் கேட்டு வந்தவரின் பக்கம் பார்வையைத் திருப்பினான் கனகலிங்கம். அவருக்கு டிக்கட் கொடுத்துவிட்டு ஒருமுறை காரை சரிபார்த்துவிட்டு "ரைட்" என்றான்.

பாதை மேலே பறந்துகொண்டிருந்த பஸ் 'பாம், பாம்' என்று கதறியது. கூட்டம் கூட்டமாக வந்துகொண்டிருந்த ஆடுகள் மூலைக் கொன்றாக ஓடி விலகின. காரை ஓட்டிச்சென்ற பசுபதியின் கண்கள் பறையாடின. வண்டியை நிறுத்தி ஏறிக்கொள்ள வழியிலே ஒரு உருவம் கையை நீட்டியது. அதை அவன் கவனித்தானோ கவனிக்கவில்லையோ பாதை ஓரத்தில நின்றவரை கார் கடந்துகொண்டிருந்தது.

அவன் மனப்புயல் இன்னும் ஓயவில்லை. உடலிலே உருண்டோடிய வியர்வைத் துளிகள் உடுப்புக்களை நனைத்தன. வியர்வைத் துளிகளை விழுங்க முடியாத காற்று திணறிக்கொண்டிருந்தது. கண கணவென்று ஓயாமல் சில நிமிஷம் அடித்துக்கொண்டிருந்த பெல் சப்தம் கேட்கவே அவனுடைய மனப்புயல் அணைந்து பிரேக்கைப் பிடித்திழுத்தான்.

'கிரீச்'சென்ற சப்தத்துடன் வண்டி நின்றது. ஒரு பெண் கீழே இறங்கியவுடன் கார் புறப்பட்டது.

★ ★ ★ ★

அப்பொழுது யாரையோ பார்க்க ஓர் இடத்திற்குச் சென்றிருந்தாள் சீதா.

'சீதா! சீதா!' என்று அலறிக்கொண்டு வந்த குரலைக்கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள். வந்துகொண்டிருந்த பெண் வாயிலிருந்து துடுக்கான வார்த்தைகள் துள்ளிவிழ ஆரம்பித்தன. "அடி பாதகத்தி! இப்படியா உன் வாயில் மண்ணை வாரித்தட்டணும்? யாருக்கு வந்தாலும் வரலாம் உனக்கு வரக்கூடாது. உன் கணவன் ஓட்டிச் சென்ற கார் கவிழ்ந்து போச்சாம்..." மூச்சை விடாமல் விஷயத்தைச் சொல்லி முடித்தாள் ஓடிவந்தவள்.

சீதாவின் இதயம் இரண்டாகப் பிளந்தது! 'ஐயோ!' என்று [illegible]றி முகத்தில் அறைந்து அறைந்து அழுதாள். அவள் கழுத்திலே கிட[illegible] தாலிக்கயிறு கழற்றப்பட்டது. மந்தகாசமான முகத்திலே மஞ்சள் மறைந்தது. குங்குமம் குலைந்தது. விதவிதமான கலரில் விலையுயர்ந்த சேலைகள் அவளுக்கு வேண்டியதில்லை. இனி மலர்கள் கூத்தாட இடமளிக்காது அவள் கேசம். தங்க நகைகளை நினைக்கக்கூட முடியாது. எந்தத் தங்க நகைக்காகத் தன் கணவனை இழந்தாளோ அந்த நகையுடன் தாலிக்கயிறும் சேர்ந்து கொண்டு அவளைப் பார்த்து நகைத்தது! சீதாவின் கண்களிலே ஓடிக்கொண்டிருந்த நீர் ஓயவில்லை. 'அத்தான்!, அத்தான்!' என்று அலறிய

வாறே வீட்டிற்கு ஓடிவந்தாள். அவளை அணைத்துப் பிடித்த ஆத்மா அங்கே இல்லை. அணையா நின்ற தங்க நகை அவளை அணைத்து நின்ற அவள் கணவனை விழுங்கி விட்டது. தன் கண் முன் தோன்றிய கணவனின் போட்டோவை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். அவள் துக்கத்தைத் துடைக்க முடியவில்லை அந்த போட்டோவால்! மேலும் மேலும் துக்கம்தான் அதிகரித்தது. மயக்கம் அவள் தலையைச் சுற்றவே தலைவிரி கோலமாகத் தரையிலே விழுந்தாள்.

★ ★ ★

மயக்கம் தெளிந்தது சீதாவுக்கு! கட்டிலிலிருந்து கீழே விழுந்ததும் 'படா' ரென்று கண் திறந்தாள். அவள் மனதில் நிலவிய பீதி கலந்த அமைதியில் உடல் வலி ஒன்றும் தோன்றவில்லை. 'பகற் கனவுதானே, பலியாது' என்று எண்ணும்போது புலி வாயிலிருந்து வெளி வந்த உணர்ச்சி தோன்றியது அவளுக்கு. 'ஒரு வேளை பலித்துவிட்டால்?' என்றும் அவள் மனம் கேட்கத் தயங்கவில்லை. அப்போது அவளைச் சுற்றிலும் தீ பரவிக்கொண்டு வந்தது! நிதானமாக எழுந்து கொல்லைப் பக்கம் சென்றாள் முகம் கழுவ, அப்பொழுது நடராஜ பிள்ளையின் கல்யாண வீட்டில் கட்டப்பட்டிருந்த 'சத்தக் குழாய்' வழியாக தவழ்ந்து வந்த "பொறுமை யென்னும் நகையணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள்" என்ற கானம் அவள் உள்ளத்தில் பாய்ந்து பொன் எழுத்துக்களாகப் பொறிந்து அங்கேயே தங்கிவிட்டன.


"ஆனந்த போதினி"

(மாதப் பத்திரிகை)

சந்தா விவரம்

| | |
|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலியுள்பட இந்தியா, சிலோன் | ரூ. 2—00 |
| வருடம் 1-க்கு வெளிநாடுகளுக்குச் சந்தா | ரூ. 8—00 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை | ரூ. 0—20 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை | ரூ. 0—25 |

ஜீவிய சந்தா ரூ. 30—00

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

எப்பொழுது சேர்ந்தாலும் ஆடிமீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 107, சென்னை.


# மக்கள் யார்?

பொ. செல்வராசன்

*

ஒருவனைப் பார்த்து நாம் குரங்கே, கழுதையே என்றால்
அவனுக்கு சினம் பொங்கி வந்து விடுகிறது. ஏன் இது?
அவன் விலங்கினும் நாம் ஒருபடி உயர்ந்திருக்கிறோம் என்று
உணர்ந்திருக்கின்றான். அதனால் விலங்கினைத் தன்னைவிடத் தாழ்ந்த
தாக நினைக்கிறான். எப்படி நம்மைவிட மிருகங்கள் தாழ்ந்ததாகும்?
"மக்கள்தாமே ஆரறிவுயிரே" என்று தொல்காப்பியர் சொல்லிப்
போந்த உண்மை. மனிதன் ஆறு அறிவை யுடையவன். விலங்கினங்
களோ ஐந்தே அறிவுடையன. "யாறறி வதுவே அவற்றோடு
மனனே" என்று மேலும் அவர் கூறியதனால் மன உணர்ச்சி
யுடையவனே மனிதன் என்பது தேற்றம். மன உணர்ச்சியற்றவை
தீயவை, நல்லவை என்று அறிந்தொழுகும் தன்மையில்லாது
இயற்கையாய் வந்த வழியே இயைந்து நடக்கும் தன்மை
வாய்ந்தவை.

ஆனால், தொல்காப்பியனார் மக்களாய்ப் பிறந்த யாவரும் மன
உணர்வு இருப்பவராய்க் காணவில்லை. மக்களுள்ளும் விலங்கின்
தன்மை இருப்பதைக் கண்டு இயற்கையின் தன்மையை அறிந்தார்.
எனவே அவர் "மாவும் மாக்களும் ஐயறிவினவே" என்று கூறிச்
சென்றார். மக்களினத்தில் விலங்கின் தன்மையுடைய வரை
மாக்கள் எனச் சொன்னார். இனி எப்படிப்பட்டவர் மாக்களாவர்
என்பதைப் பார்ப்போம்.

நள்ளிருட்டு. காதலன் பலநாள் வரவில்லையே என்று ஏக்க
முற்றவளாய்த் தலைவி தூங்காதிருக்கின்றாள். அப்பொழுது தன்
ஊரிலுள்ள மக்கள் யாவரும் இனிமையாகத் தூங்குவதைக் காண்
கிறாள். தான்மட்டும் ஏனோ இப்படி வாட்டமுற்று ஏங்கித் தவிப்பது?
இந்த ஊர் மக்கள் என் துயரினைப் பற்றி எதற்காக உசாவாது
இன்பமாகத் தூங்குகின்றனர் என்று வயிற்றெரிச்சல் கொள்ளு
கிறாள். என் துன்பந்தனை அறியாத இவர்கள் மக்களாகார்
மாக்களே என்று வன்மையாகக் கூறுகின்றாள். இந்த நிகழ்ச்சி
குறுந்தொகையில் காணப்படுகிறது. ஆம்; ஒரு உயிரின் துன்பந்
தனைக் காண்பதே மன உணர்வாகும். ஒருவன் ஆட்டினை வெட்டும்
போது ஆட்டின் கண்ணில் தோற்றும் இரக்கக் குறிப்பைக் காண
முடிவதில்லை. அதனுடைய 'அம்மா' என்ற அழுகைக் குரலின்
பொருளை அவன் உணரக்கூடிய அளவு அவன் மன உணர்வு பெற
வில்லை. விலங்கினங்களும் இத்தன்மையுடையனவாகவே விளங்கு
கின்றன. சுவரில் போகும் பல்லி தன் நாக்கின் முனையில் சிக்கி
வருத்தும் ஈயின் துன்பத்தினை அது அறிந்து கொள்ளக்கூடிய
அளவு அதற்கு நுண்ணிய மன உணர்வு இல்லை. ஆனால் சிலர்
நுண்ணிய மன உணர்வைப் பெற்றும் அதன் துன்பத்துக்கு
இரங்கும் அளவும் மன உணர்வு பெறுவதில்லை. மீனையும், ஆட்
டினையும் உண்பவர்களில் சிலர் அதன் துன்பத்தை உணர்ந்தும்,

அது ஆண்டவனால் அளிக்கப்பட்டதென்று தங்களது மன உணர் வற்ற தன்மையை மறைத்துக்கொள்ள முயல்வராகின்றனர். இப்படிப்பட்டவர்களே மக்களுள் மாக்கள் எனப்படுவார். மேலும் காதலியைக் கைவிட்டுக் காட்டிலே பொருள் தேடுவதற்காக 'நாடிச் செல்லும் தலைவர்களை அக்காலப் புலவர் 'ஆறுசெல் மாக்கள்' சுரஞ்செல் மாக்கள்'என இழித்துரைக்கின்றனர் அக்காலப் புலவர். இஃது ஏன்? தலைவன் தான் உயர்ச்சியடைவே பொருளீட்ட முயல் கின்றான். ஆனால் தன் மனைவி துன்பம் அடைவாளே என்று வருத்தப்படுவதில்லை. அவர்களும் மாக்கள் எனச் சொல்லப் படுகிறார்கள்.

அடுத்ததாக "முடலை யாக்கை முழுவலி மாக்கள்" "கருந் தொழில் கலி மாக்கள், என்று பெரும் பாணாற்றுப் படையிலும், பட்டினப் பாலையிலும் வலிய மக்களை மாக்கள் என இழித்துரைக் கப்பட்டிருக்கின்றது. என்னை கொல்? உடம்பாலறிவர் உயிரால் அழிவரன்றோ? மக்கள் கட்டுண்ட உடலினராய்த் திகழ்வதன்றோ மக்கட் பிறப்பின் மாண்பாகும். ஆனால் இங்கே கட்டுடைய மக்களும், கொடிய தொழில் புரிகின்ற செருக்குடைய மக்களும் மாக்களாகச் சொல்லப்படுகின்றனர். உடல் மனத்துக்கு மிகத் தொடர்புடையதாகும். உடல் எவ்வளவுக் கெவ்வளவு பருத்தும் கட்டுடையதாகவும் பெருத்தும் இருக்கின்றதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவனுடைய மன உணர்வும் அறிவும் ஒருங்கே குறையும் என்பது தற்கால விஞ்ஞான வல்லுநரின் கூற்றாகும். ஆதலால்தான் வலிமையுடைய மக்கள் கொடுந் தொழில் புரிபவராகவும், அறிவற்றவராகவும் சொல்லப்படுகின்றனர். மேலும் காந்தி, பெர்னாட்ஷா, திரு. வி. க. போன்ற அறிஞர்கள் மெல்லியராக இருப்பதனைக் கண்கூடாக அறிகிறோம். ஆகவே ஒருவன் மன உணர்வு பெற்று மக்களாக வாழவேண்டு மெனில் அவன் நோயற்ற உடல் பெற்றவனாகத் திகழ வேண்டுமே தவிர, வலிய உடலும், பெருத்த உடலும் தேவையல்ல என்பது தெரிகின்றது.

இன்னும் இன்னோரன்ன இலக்கியங்களில் 'தவஞ் செய் மாக்கள்' 'கைவினை மாக்கள்' 'கடனறி மாக்கள்' 'காவிதி மாக்கள்' எனத் துறவியரும், உழவரும், கடமையாளரும், அமைச்சரும் மாக்கள் எனக் கூறப்படுகிறார். இதன் பொருள்தான் என்ன? தானே எல்லா நலங்களை அடைய வேண்டுமென்று மக்கள் உலகி லிருந்து நீங்கி மாக்கள் வாழும் காட்டில் தனியே தவம் செய்தல் மக்கள் பண்பாகுமா? ஆகா! ஆகையால் இவர்களும் (துறவிகளும்) மாக்களே. உழவர்களும், கடமையாளர்களும் தாங்கள் மேற்கொண் டிருந்த தொழிலையே செய்து கொண்டிருப்பதினால் அவர்கள் மன உணர்வின்றி அறிவின்றி வாழ நேரிடுகின்றது. எனவே அவர்கள் மக்கட் பிறப்பின் மாண்பை அடைய வேண்டுமென்றால் அவர்கள் தம் வேலையின்றி ஓய்வு பெற்று மன உணர்வு உடையவராக வாழ்தல் வேண்டும்.

அமைச்சன் ஏன் மாக்கள் என்று பழிக்கப்படுகின்றான். விலங் கும் தன் கடமையை இயற்கையாகச் செய்வதைப் போல இவனும்



நாட்டிற்கு வேண்டும் நல்லனவற்றைச் செய்கின்றான். மக்களுக்கு வேண்டிய பொருள்கள், வசதிகள் அனைத்தும் அறிவியல் துணைக் கொண்டு ஆற்றி வருகின்றான், ஆனால் மக்கள் உள்ளத்தில் மெய் யறிவையும், மன உணர்வையும் விளைவிக்க எந்த பரந்து வளரும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் பயன்படுமா என்று நினைத்துப் பாருங்கள். முடியா. முடியா. எனவே நாட்டுக்கு வேண்டியவைகளை ஓயாமல் செய்து கொண்டிருப்பவன் ஆதலால், மக்கள் உள்ளத்தில் மெய்யறிவு பெருக, மன உணர்வு ஏற்படும்படி இவன் மனஉணர்வு உடையவனாக வாழ முடிவதில்லை. ஆதலால் இவனும் மாக்கள் என அக்காலப் புலவர்களால் கூறப்படுவதில் பிழையொன்றும் இல்லை.

இனி மேலே, சொல்லுவோமானால் புறநானூற்றில் 328, 333 ஆம் பாட்டுக்களில் "இரவன் மாக்கள்" என பிச்சை யெடுப்போர் கூறப்படுகின்றனர். இது தெளிந்த உண்மையே. இரப்பது விலங் கினுக்கும் இல்லாத செயற்கையால் நிகழ்ந்த ஒரு கொடிய நிகழ்ச்சி யாகும். 'கொடு' என்று பிச்சை எடுத்தல் எதனினும் இழிந்த செயலாகும். இதை அறிந்தே வள்ளுவனாரும் "இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக வுலகி யற்றியான்" என்று மக்களினத் தைப் பிறப்பித்த இறைவனே இல்லாது போகட்டும் என்று பறை சாற்றுகிறார். அதாவது இரத்தல் என்று ஒன்று உள்ளதாயின் மக்கள் யாவரும் மாக்களே என்பது அவருடைய உள்ளக் கிடக்கை.

எனவே மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் உடலைப் பற்றி யும், உடலைச் சூழ்ந்துள்ள பொருள்களைப் பற்றியே மனத்தைச் செலவிட்டு மன உணர்வினை அழித்து விடாது; மாக்கள் இயல்பினை அடையாது உயிர் வாழ்தலே ஆறறிவுடைய மக்களினத்தின் உயர்ந்த பெருமையாகும் என்று அக்காலப் புலவர்களின் எண்ணமாகும். மக்கள் யார்? மாக்கள் யார்? என்று அந்தச் சங்ககாலப் புலவர் களின் பொன் மொழிகளாலே நாம் நன்கு தெற்றெனத் தெளிய அறிய முடிகிறது. நாம் இதனை உணர்ந்து, அதன்வழி நடக்க முயலுவதே அறிவு மலர்ச்சிக்கு ஆன்ற துணையாகும். அதுவே மக்களை மாக்கள் நெறியினின்று உய்விக்கும் வழியாகும்.

## அட்டைப்படப் பாடல்

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ளுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை."

என்ற பாடல் வரியை அழகிய ஓவியமாகத் தீட்டியிருக் கிறார் நம் சைத்ரீகர்.

தொடர் கதை:




## 50

அவளால் உணர்வுப் பெருக்கைத் தாள முடியவில்லை. அவன் மலர்க் கைகளைப்பற்றித் தன் கையிறுள் வைத்துக் கொண்டான். அவன் கைகளை அமுத்திப் பிடித்துக் கொண்டாள்.

அன்பொளி எழுந்தான். வெளியே சென்றவன் முல்லைப்பூவை எடுத்து வந்தான். "எழில்!..." என அழைத்து விட்டு, அவள் தலையைத் தூக்கினான். எழுந்து அமர்ந்தாள். அவள் தலைமயிரைக் கோதி விட்டுப் பூவைச் சூட்டினான்.

அவன் அன்புக் கைகளில் அவள் அமைதியாகச் சாய்ந்திருந்தாள். வானத்தில் செம்மஞ்சள் நிறம் பரந்திருந்தது. அந்தக் காட்சி அமைதியில்லாத துன்ப உணர்வு மிகுந்த நெஞ்சம் போலத் தோற்ற மளித்தது.

"தாயின் கையில் தவழும் குழந்தை"யை உணர்ந்தால் அந்தக் காதல் குழந்தைகளின் உணர்வை; நிலையை உணரலாம்.

வானில் நீல வண்ணம் படிப்படியாகக் குறைந்து, வெண்மையாகித் தோன்றியது. மெள்ள எழுந்திருந்தாள் எழில்.

"என்ன எழில்?..." என வினவினான்.

"நாம் தோட்டத்திற்குச் செல்லலாமே!..." என்றாள்.

அவளைப்பற்றி மெல்ல அழைத்துச் சென்றான் அன்பு. அல்லிவிழி அமைதியாகப் பார்த்தார்.

அவர் நெஞ்சம் வைகறைப் பொழுதைப் போல மாறிவிட்டது!

"'உலக இயல்' என்று என்னென்னவோ சொல்கிறார்களே; அவைகள் எல்லாம் என்ன? உண்மையை உணர்ந்து வாழும் உயரிய அறிவாற்றல் பெறாதவர்கள் கண்மூடிப் பண்போடு கடைப்பிடித்தொழுகும் ஒரு சுயமைப் பழக்கம்" என அவர் உணர்ந்தார்.

இயல்பிலேயே தெளிந்த உள்ளமும், பண்பும், அறிவும் உடைய அவர், காலத்திற்கேற்ப வாழ்வில் 'நடிக்க' விரும்பாமல், இயற்கையின் ஆற்றல்களை உணர்ந்து ஒழுகுவதே 'உலக அறம்' - என்ற கொள்கையோடு இயங்கியவர்



அவருடைய மிக உயர்ந்த கொள்கைகள் உலகம் ஏற்காததும் வரவேற்காத வையும் தான்! ஆனால், உலக இயக்கம் இயங்கும் நெறி உணர்பவர்கள் எல்லோரும் எதை 'வருங்கால வாழ்வு' என எண்ணிக் கூறினார்களோ; அதையே அவர் செயலொழுக்கத்தில் கடைப்பிடிக்க விழைந்தார். ஆனால், அதைச் சூழ்நிலை மக்கள் விரும்பவில்லை. இவ்வுண்மையைத் தான் திருக் குறளிலும்,

"உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்." எனக் கூறிற்று போலும்!

இளமையிலேயே எழிலரசிக்கு அன்பொளி மீது உணர்வு நிறைந்த அன்பிருந்தது. ஆனால், நினைவும் நிலையும் அலைந்த தன்மையாலும், இளமையின் புதிரான உணர்ச்சி நிலைகளாலும், போராட்டமான எண்ணங் களிலீடுபட்டு, 'எது சிறந்தது' எனத் தேறும் அறிவுத் தெளிவு இல்லாமை யாலும் காரணமின்றி அன்பொளியை வெறுத்தாள். வாழ்க்கையை வெம்மையாக்கிக் கொண்டாள். அவள் வாழ்வு பாழாகத் தந்தை அழகு முருகனும் ஓர் துணையாக அமைந்தார். 'குடி' என்னும் ஒரு கூட்டுறவுக் கழகத்தில் தெளிவுள்ள பண்பு நெஞ்சங்களின் அமைதியான எண்ணமும், மென்மையாக ஆராய்ந்து, உண்மை கண்டு அதனைத் திண்மையான ஒழுக் கத்தில் கடைப்பிடிக்கும் பண்பும் உள்ள மக்களால் சிறப்பிக்கப்பட வேண் டியது. ஆனால், ஏற்றத்தாழ்வான அறிவும், பண்படாத உணர்வுகளும், தெளிவற்ற உள்ளமும், ஆராய்ச்சி மாண்பில்லாதவர்களும், உயர்ந்த உள்ளம், பண்பாடான உணர்வு, இயற்கையைப் புலன் திறமையால் உணர்ந்தொழு கும் செயலாளர்களும் கலந்து வாழ நேரிட்டால் அந்தக் குடும்பம், முன் னேற்றத்தில் தடைப்படுவதோடல்லாமல்; அமைதியின்றி பாழாகும். துன்பம் கொலை செய்து அழிக்கும்.

இந்த நிலையே எழிலரசியின் குடும்பத்திற்கு அமைந்தது. "தலைவர் தக்க தன்மையுடையவராக இல்லாததால் யாவரும் பாழ்பட்டனர். செல்வ மும் சீரும் மதிப்பும் சிதைந்தது. வாழ்வில் தாழ்வும், வறுமையும் சூழ்ந்தது.

உலகில் என்றும் நின்று வாழும் தன்மை உடையவர்களும், குன்றைப் போன்ற பண்புள்ள பெரியோர்களும் கெட நினைப்பின் தம் குடியோடு அழிந்துபோக வேண்டும்."

"குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து."

என்ற குறள் வாய்மை அந்த நல்ல குடிக்கு அருமையாகப் பொருந்தியது.

அல்லிவிழி அமைதிக்கு வாயிலான உரிமையில் மிக்க கருத்தூன்றியவர். அடக்குமுறையை நம்பாதவர். அந்தப் பண்பு எழிலினிடம் இயற்கையாக அமைந்திருந்தது. மகள் வாழ்வில் ஒளி இல்லை; மகிழ்வில்லை என்ற பெருந் துன்பத்தால் உலகையே மறந்து, அழிந்துபோன அந்தத் தாய் நெஞ்சம் எழிலரசிக்கு அன்பொளியின் பால் தூய காதல் உண்டு என்ற உண்மை உணர்ந்தபோது பெற்ற இன்பம், உணர்ச்சியாலன்றி பிற எந்த முறையிலும், புலனாலும் உணரமுடியாது.

இன்று அறிவுள்ள மூவரும் உள்ளத்தால் வாழ்ந்தனர்.

ஆனால், உலகம் பேசத் தொடங்கி விட்டது!

அதைப்பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை.

தோட்டத்துத் தாழ்வாரத்துத் தூணில் சாய்ந்தபடி அமர்ந்தாள் எழில் அங்கிருந்து பத்தடிக்கு அப்பால் கிணறு இருந்தது. தென்னை மரம் இரண்டு ஓங்கி வளர்ந்திருந்தது. மலர்ச் செடிகள் அங்கே பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன; புறநானூற்றுப் பாடல்கள் போல!

பூச்செடிகளைக் கண்டு அதனருகில் சென்றான் அன்பொளி. முல்லை மலரின் ஒரு கொத்தை ஒடித்துத் தன் சட்டையில் செருகினான். திரும்பி வந்தான்.

"எழில், இந்தச் செடிகளை எல்லாம் அம்மாவா பயிர் செய்தார்கள்?..."

"இல்லை. நான்தான். ஏன்?"

அவளருகில் அமர்ந்த அன்பொளிக்கு வியப்பாக இருந்தது. அவன் விழிகள் விரிந்தன.

"எழில்! நீயா? பயிர்த்தொழில் கூட உனக்குத் தெரியுமா?..."

எழிலரசி சிரித்தாள்.

"அன்பு, உழவுக்கலை உதவியற்ற தென்றெண்ணி விட்டீர்களோ? அல்லது, அக்கலையின் உரிமை எங்களுக்கில்லையோ? கலைஞர், புலவர், மன்னர், சான்றோர், உலகினர் எவருக்கும் உழவர்தான் உயிர்! அவர்களுக்கு இவர்கள் நன்றி செலுத்தவேண்டியவர்கள்!

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

எனத் தமிழ்மறை போற்றும் உழவைப் பற்றி நீங்களே உங்கள் சொற்பொழிவில் எவ்வளவு போற்றி இருக்கிறீர்கள்! "உலகம் பல தொழிலைச் செய்து சுழன்றாலும் கூட, ஏர்த்தொழிலுக்குப் பின்னால் தான் நிற்கிறது. ஆதலால் என்ன துன்புற்றாலும் உழவே தலைமையானது." "உழவு செய்கிறவர்கள் உலகத்து மக்களாகிய வண்டிக்கு அச்சாணி போன்றவர்கள்; ஏன்? உழவு செய்யாமல் மற்றத் தொழில்களைச் செய்பவர் யாவரையும் அது (உழவு) தாங்குகிறது." என்ற கருத்துண்மை உங்களுக்கு தெரியாதா? உழவுக்கலை இயற்கையோடு ஒன்றிய முதற்கலை. அதனால், என்னால் முடிந்த அளவு காய்கறி, கீரை, பூச்செடிகள் வளர்க்கிறேன் இதில்—இத்தொழிலில் இனமறியாத அமைதியைக் காண முடிகிறது, அன்பு."

நோய்வாய்ப் பட்டதிலிருந்து எழிலரசி மிகுதியாகப் பேசவதில் சளைக்கவில்லை. முன்பெல்லாம் மிகுதியாகப் பேசாதவள்; அடக்கமாகப் பேசியவள், பேச நாணியவள் ஏன் மிகுதியாகப் பேசுகிறாள் என அவனுக்கு வியப்பாக இருந்தது.

மக்களின் வாழ்க்கைக்கும் உள்ளத்திற்கும் எவ்வளவு நெருங்கிய உறவு இருக்கிறது! "உணர்ச்சிகளின் தாயான உள்ளம் எந்த ஒரு புலன்செயலையும், புற உலகச் செயலையும் தனக்கு நன்மையாகவோ தீமையாகவோ பயன்படுத்திக் கொள்கிறது."



இந்தக் கொள்கையின் படியே வாழ்க்கையின் துன்ப இருளில் நிலைகுலைந்த எழிலரசியின் இனிய பண்புகள் சிலவும் பாழ்பட்டிருந்தன.

"அன்பு, இன்றெல்லாம் என் நெஞ்சில் ஏதோ சொல்லமுடியாத உணர்ச்சி அலைகள் பொங்கிக் கொண்டே இருக்கின்றது. ஏனென்று எனக்கே தெரியவில்லை......"

அவன் பேசவில்லை. பேச முடியவில்லை.

அன்பொளி பேருணர்வு மிக்கவனாகி, 'நான்–நீ' என்னும் உணர்வற்று நிலைத்த நெஞ்சினனாக இருந்தான். அவளும் அப்படியே அமிழ்த உணர்வில் தன்னை மறந்திருந்தாள்.

வானிலே பரவி நிற்கும் கதிர்களின் மெல்லிய ஒளிப்பரவலின் மென்மையோ, கடலிலே சிரித்தெழும் முத்து அலைகளின் வெள்ளி ஒளிப்பூச்சோ கூட அந்த உள்ளங்களின் ஒளிக்கதிர்களுக்கு இணையாகாது.

"அன்பு, 'சாவு'க்கு நீங்கள் என்ன மதிப்பளிக்கிறீர்கள்?" எனத் திடீரென எதிர்பாராத கேள்வியை எளிமையாகக் கேட்டாள்.

"வாழ்க்கையின் முடிவான சாவு ஓர் இன்றியமையாத நிகழ்ச்சி. 'சாவு உணர்வி'ருக்கிறதே, அது ஆற்றல் மிக்கது. உயிருள்ளவனுக்கிருக்கும் மதிப்புக்கும் நிலைமைக்கும் ஈடு கூற முடியாதபடி செத்த பிறகு தான் மதிப்பு வளருகிறது. ஏன்? வாழ்வின் காட்சிகளை 'எண்ணம்' என்கிற 'பதிவுப் பொறி' மறக்காமலிருக்கலாம்; ஆனால் நுண்மையான காலம் பொருளுடே, இரண்டு ஒன்று என அறிய முடியாதபடி ஒன்றிவிடும் வாழ்வு நிகழ்ச்சிகளை என்னென்று விளக்குவது? வாழ்ந்து, வளர்ந்து, வீழ்ந்து பாழாகும் சிறு முயற்சியே வாழ்க்கை. முடிவற்ற இம் முயற்சி; முயற்சிப் போராட்டம்;—உலகை—வாழ்வை—எதை எதையோ அமைக்கிறது. பொருளிருக்கிறதோ; இல்லையோ உலகியல் இயங்குகிறது. இயக்கப்படுகிறது. உன்னிப் பார்க்கும் போது ஒப்பற்ற ஞாலம் ஒன்று மற்றது போலத் தோன்றச் செய்து விடுகிறது. சாவு தன்னையும் எதையும் அழித்து விடும். சாவும் தானே அழிந்து விடுகிறது. அழிந்து அழியா வாழ்வு பெறுவது சாவு. சாவின் விளையாட்டு ஓர் அரிய விளையாட்டு. நேற்று பேசும் வாய், காணும் கண், கேட்கும் செவி, உணரும் புலன், எண்ணும் உள்ளம், இயங்கும் உடல், இயக்கும் உயிர் எல்லாம் அமைதியாகி விடுகிறது. அசையாத நிலை பெறுகிறது. எவ்வளவு அரியது இச் சாவு!..."

அன்பொளி தன்னை மறந்த அறிவொளியிலே மூழ்கிப் பேசிச் சென்றான். தென்றல் தவழ்ந்தது. ஆடை அசைந்தது. எண்ணம் உறைந்தது. எங்கும் அமைதி.

அவன் கைகளைப் பற்றிய எழிலரசி அவன் மடியில் படுத்துக் கொண்டாள். கண்கள் மூடியிருந்தன. அவள் சுருண்ட குழலை அசைக்கும் காற்றுக்கு என்ன மகிழ்ச்சியோ?

எங்கோ வெறித்த பார்வையி லாழ்ந்திருந்த அன்பொளி அவளைப் பார்த்தான். குழந்தை தாயின் மடியில் படுத்துறங்குவது போன்றிருந்த அவளைக் கண்டு நெஞ்ச வளர்ந்து, கண்ணீர் மல்கத் தலை கவிழ்ந்தான்.

அவன் தூய கண்ணீர் முத்துக்கள் அவள் கன்னங்களில் வீழ்ந்தன. அவள் திடுக்கிட்டு கண் விழித்தாள். அவள் இளஞ் செம்மைக் கன்னங்களை அன்

போடு பற்றினான். அந்தப் புலவனின் பேரருள் உணர்வுகள் பெருகிப் பொங்கின. அவன் இதழில் உணர்வுப் புன்முறுவல் மலர்ந்தது!

அவள் கண் விழித்தது. பிரிந்த செந்தாமரை மலரிதழ் போன்றிருந்த அந்தக் காட்சி காலத்தை நோக்கிச் சிரித்தது.

"கண்ணே!......................"

ஓர் இளநகை அவளிதழில் மலர்ந்தது.

"..................................."

"..................................."

"அன்பு, எனக்கு ஒரு குழந்தை!..." அவளுக்கு நாணமாக இருந்தது. தன் அழகு முகத்தை மூடிக்கொண்டாள்.

ஆ! அவன் வாழ்வு முழுமை பெற்று விட்டது! அதுதான் வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்வு! காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க...ஒரு காதலனைப் பெற்று விட்டாள்! ஆ! அந்தக் கண்ணீரின் முத்தம்!.....அம்மா! என்ன இன்பம்! என்ன இன்பம்!..."

அன்பொளி சிரித்தான்.

"எழில், சொல்லம்மா. சொல்லு. என்ன?......"

சற்றுநேரம் அவள் பேசவில்லை. பின்னர் துணிந்து சொல்லி விட்டாள்.

"...அன்பு,...எனக்கொரு அரிய குழந்தை...பி...ற...க்...கி...ற...து...! பிறக்க வேண்டும்! பிறந்தால்; நான் 'இயற்கை'யை உள்ளவாறு அதற்குக் கற்பித்து விடுவேன்! அக்குழந்தைக்கு 'ஞாலம்' என்று பெயரிடுவேன், அன்பு! அது நம் குழந்தை!...வானத்திலே மண்டிலங்க ளிருக்கின்றன; ஞாலத்திலே மக்கள்—உயிர்கள் உள்ளனர்; உணர்விலே அறிவு ஒளி பிறக்கிறது; எண்ணத்திலே இன்பம் பொங்குகிறது; இயற்கையிலே சிரிப்பு சிலிர்க்கிறது; எங்கும் ஒளியும் புதுமையும் சுடர் விடுகிறது; எல்லாம்... இன்றும், நேற்றும், நாளையுமாக விளக்கி விடுகிறது! ஆம்!...... நம் குழந்தை!.....அது, இவைகளை நன்கு உணரும். அந்தக் குழந்தை தான் உயரிய புலமை உணர்வோடு பொலியும்! இல்லையா அன்பு!.. ?..."

அவள் முழு உணர்வோடு பேசுகிறாளா, இல்லையா என்பதை அறிய முடியவில்லை.

எளிதில் எட்ட முடியாத எவ்வளவோ பொருள்களையும் எண்ணங்கள் எட்டி விடுகின்றன.

பஞ்சிலே நூலின் இழைகள் தோன்றுகின்றன; நிலத்திலே உப்பின் அணுக்கள் அடைகின்றன; அணுக்களிலே ஆற்றலின் ஒளிச்சுடர் சுழல்கின்றன; பாலிலே வெண்ணெயின் திவியம் பொலிகின்றது;...எல்லாம் இயற்கையின் இணையற்ற கருவிலே வளர்கின்றன!... ஞாலமென்றும், உலகமென்றும் பெயர் பெற்று இயங்குகின்றன.

எண்ணிலே அடங்கும் இயற்கையின் கூறுகளையெல்லாம் இன்னும் எண்ணம் எட்டவில்லை. ஆனால், அதன் முயற்சியோ பல்கி வளர்கிறது...

அவனும் அவளும் தங்களை மறந்திருந்தனர்.



"அன்பு, எனக்கு ஏதோ போலிருக்கிறதே!..." எனக் கூறி அவன் கையை வலிய அழுத்திப் பற்றிக் கொண்டாள். விழிப்புணர்வடைந்த அன்பொளி அவளை அழைத்துச் சென்று படுக்க வைத்தான்.

கலைக் கழகத்திலே மாலை இசை பாடலானார்கள்.

"ஒளியும் இசையும் உணர்வும் அணுவும்
களியும் துயரும் கலரும் உலகில்
அளியும் அருளும் அறிவும் அன்பும்
ஒளிரும் உயிரும் உறையும் நிலமே....."

பாடல் வளர்ந்தது பண்ணிசையோடு. அன்பொளி நெட்டுயிர்த்தான். அவனுடைய அந்தப் பாடல் அவனுக்கே விளங்க வில்லை! 'அந்தப் பாட்டின் பொருள் என்ன?' என்று அவன் அறிவு அவனை வினவியது!....

அமைதியாக வைகறையின் வெண்ணொளி போலப் படுத்திருந்தாள் எழிலரசி. அவளைப் பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர் பொங்கி நிறைந்து வழிந்தது.

"இந்த அமைதியான அருள் உயிரும், அன்பும், அழகும், ஓவிய உடலும், உயரிய பண்பகமும், சீரிய உணர்வும் இறந்து விட்டால் என்ன ஆகும்?....." என எண்ணினான். அவன் நெஞ்சிலே வஞ்சனையுருவான மாயமலை ஒன்று அழுத்தியது.

உலையிலே உருகும் செம்பொன் போல நிலையிலாது கொந்தளித்தது அன்பொளியின் நெஞ்சம். உணர்வறியாது ஒளி காலும் மின் விளக்கின் ஆற்றலால் அறை தெளிவாகத் தெரிந்தது.

வெளியே வானிலே செவ்விய புலவரின் நெஞ்சைப் போல மேற்கு விண்ணகம் செம்மையாக விளங்கிற்று. வானம்பாடிகளின் இன்னிசையால் ஞாலம் ஆறுதலுற்றது.

"என்றென அறிய முடியாத காலத்தே தோன்றி, அன்றிருந்து இன்று வரை கடல் 'ஓயாது, மாயாது, ஓங்காரப் பேரிசையோடு அலை பாய்ந்து வாழ்கின்றது....."

அன்பொளியின் கண்களிலே அலைகடலும், அதன் முழக்கமும், விரி ஞாலமும், வியன் வானகமும் தெளிவான ஓவியமாகத் தோன்றின.

அந்தியின் சந்திப்பை வழி பார்க்கும் அல்லிருளின் கருநீலக் கண்கள் விரைந்து ஞாலத்தை நோக்கின.

எழிலரசி ஏதோ முணுமுணுத்தாள். அவளருகில் சென்றான் அன்பொளி; படுக்கையில் அமர்ந்தான்.

அவள் மெல்ல எழுந்து அவனைப் பற்றினாள். அவளைத் தாங்கி அணைத்துக் கொண்டான். அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த எழிலரசி சிரித்தாள்.

"அன்பு, "குற்றம் இலனாய்க் குடி செய்து வாழ்வானைச் சுற்றமாய்ச் சுற்றும் உலகு." என்ற குறளை உணர்ந்திருக்கிறீர்களா?"

அவள் கன்னங்களிலே தன் எண்ணங்களைக் கண்ட அன்பொளி அமைதியாகத் தலையசைத்தான். எழில் கண்களை மூடிக்கொண்டு அவன் தோள் மீது சாய்ந்து கொண்டாள்.

"......அன்பு, என் எண்ணத்தில் ஏதோ ஒளி படருகிறது...ஆ!... என்றால் அதை...உணரவே முடியவில்லையே! ஒளியும் இருளும் ஒன்று தான்!...ஆம்; இரண்டும் கண்ணைக் குருடாக்கி விடுகின்றனவே! அப்பா!... எவ்வளவு பேரொளி?...!..."

"எழில்! என்னம்மா?...என்ன சொல்கிறாய்?...எழில்!..."

"ஆ!...அதோ!...ஓடி வருகிறது 'ஞாலம்!...' பாருங்கள்! ஆ!...ஆ!... அதோ!...அதன் ஆற்றல்...ஆ! ஒரே ஒளி வெள்ளமாக இருக்கிறதே!... அம்மா!"

"எழில், இது என்ன?...இங்கே பார்...எழில்!..."

அன்பொளி ஆற்றாமையோடு கூவினான். விழித்தாள். அவனை உற்று நோக்கினாள். சிரித்தாள்.

"அன்பு,...அன்பு, ஐயோ...நான் ஒதுக்கப்பட்டவளா? நான் வாழ முடியாதா?...அன்பு, ஐயோ! எனக்கு வாழ்வு இல்லையா? சொல்லுங்கள்! ...சொல்லுங்கள் அன்பு! அன்பு!...ஆ!...அன்பு!..."

அவள் பிதற்றினாள். உணர்விழந்து விட்டாள். மலர்கள் பிணைவது போல அவ்விளங் காதலர்களின் கன்னங்கள் ஒட்டிக் கிடந்தன. கண்ணீரின் களிக்கூத்து விளையாடியது! உடனே உணர்வு பெற்றாள் எழில். அவனுடைய மெல்லிய 'சில்'லிட்ட குளிர்ந்த இதழ்களின் உணர்ச்சியில் உணர்வு கிளர்ந்தெழலானாள்.

"அன்பு!...ஆ! அம்மா!...உ...ங்...க...ள்...எழில்...ஆ!...அம்மா!"

எழிலரசியின் மார்பகம் ஒரு முறை விம்மியது. அவள் கண்கள் மூடின.

அமைதி. 'அமைதி. அமைதி.

"ஐயோ! எழில்!..." எனக் கதறி அவள் மார்பில் தன் முகத்தைப் பதித்துக் கதறினான் அன்பொளி.

உலகம் சுழன்றது, கடல் பொங்கியது. இருள்! இருள்! பேரிருள்! காலம் கழிந்தது.

எழுந்தான் அன்பொளி. அமைதியாக ஓர் எழில் ஓவியம் படுத்துத் தவம் செய்வது போல எழிலரசி தோற்ற மளித்தாள். எழிலரசியின் அழியாத அழகு அழியா வாழ்வு பெற்றதுபோல் அமைதி பொலிய நிலவியது.

"!அமைதியிலே பூத்த எழில் மலர்; அதன் மணமோ எங்கேயோ சென்று விட்டது. மலர்-இருக்கும் இடம் தெரியவில்லை.

ஆம்.

அதுவும் ஞாலத்தில் தான் இருக்கிறது." என முணு முணுத்தான் அன்பொளி.

அன்பொளியின் பார்வை உலகைக் கடந்து சென்று கொண்டே இருந்தது. 'ஓ'வென்ற ஓசை ஐம்பேரியற்கையின் இன்னிசை விருந்தாக இயங்குகிறது.

ஒரே இன்ப இசை வெள்ளம் ஒலித்துக் கொண்டிருக்கிறது.



ஞாயிறு மறைந்தது.

ஞாலம் ஒரு முறை சுழன்றது. மறுமுறை சுழலத் துவங்கியது ஞாலம்.

"ஆற்றுதல் என்பதொன் றலர்ந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்"

—கலித்தொகை.

முற்றும்.

---

## சந்தா நேயர்களுக்கு

ஆனந்த போதினிக்கு ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சந்தாத்தொகை எப்பொழுது செலுத்தப் பட்டாலும், நடைமுறை ஆண்டின் ஆடி முதற்கொண்டே கணக்கு வைக்கப்பட்டு, இதழ்கள் அனுப்பப்படும் மாத நடுவே அனுப்பப்படும் சந்தாத் தொகைகளுக்கு அடுத்து வரும் தமிழ் மாதத்தின் முதல் தேதி அன்றுதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்; தபால் கட்டணச் சலுகை சம்பந்தமான புது விதிகள் காரணமாக பத்திரிகை வெளி வரும் தேதியைத் தவிர, இதர நாட்களில் இதழ்களை அனுப்ப இயலாதவர்களாய் இருக்கிறோம் என்பதை நம் பத்திரிகை அன்பர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

சந்தா நேயர்கள் நமது காரியாலயத்திற்கு எழுதும் கடிதங்களில் அவரவர் சந்தா இலக்கத்தைத் தவறாது குறிப்பிட்டு எழுத வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

மானேஜர்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

விளம்பி௵ மார்கழி௴ கலியுகாதி 5060. சாலிவாகனம் 1881.
பசலி 1368, ஹிஜ்ரா 1378, கொல்லமாண்டு 1134.
இங்கிலீஷ் 1958 டிசம்பர்௴—1959 ஜனவரி௴

| மார்கழி | டிசம்பர் | வாரம். | திதி. | நட்சத்ரம். | அமிர்தாதி யோகம். | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | செவ் | சஷ்21-15 | சத56-10 | ம60 | தனுர் பூஜாரம்பம், தேய்மழை, சர்பா சஷ்டி |
| 2 | 17 | புத | சப்31-50 | பூ60-00 | அ60 | த்ரிதின ஸ்ப்ருக் |
| 3 | 18 | வியா | அ30-03 | ,, 1-50 | சி60 | வ்யதீபாத சிராத்தம் |
| 4 | 19 | வெ | நவ36-25 | உட்8-55 | சி60 | ப்ரளய கல்பாதி |
| 5 | 20 | சனி | தச43-15 | ரே16-40 | ம16-40சி | சத்பதி தீர்த்தம் |
| 6 | 21 | ஞா | ஏ50-00 | அசு21-33 | சி21-33ம | சர்வ வைகுண்ட ஏகாதசி, |
| 7 | 22 | திங் | து56-03 | பர31-55 | சி31-55ம | சர்வ மத்வ ஏகா, கரிநா மகராயணம் (சாயன உத்தராயணம்) நா19-08 |
| 8 | 23 | செய் | திர60-00 | கி38-25 | சி38-25அ | கிருத்திகை விரதம் |
| 9 | 24 | புத | ,, 1-00 | ரோ43-18 | சி60 | பாஷாண சதுர்தசி |
| 10 | 25 | வியா | ○ச4-13 | மிரு47-55 | ம60 | பௌர்ணமி பூஜா, ஆருத்ரா அபிஷேகம் (இரவில்) |
| 11 | 26 | வெ | ப7-08 | திரு50-48 | சி60 | ஆருத்ரா தரிசனம் |
| 12 | 27 | சனி | பிர8 20 | புன52-38 | சி60 | |
| 13 | 28 | ஞா | த்ரி8-23 | பூச53-28 | சி60 | |
| 14 | 29 | திங் | திரு7-33 | ஆ53-30 | சி53-30ம | |
| 15 | 30 | செவ் | ச்து5-50 | மக52-45 | சி60 | |
| 16 | 31 | புத | பஞ்3-25 | பூர51-20 | அ60 | |
| 17 | 1 | வியா | சஷ்0-18 சப்58-33 | உத்49-18 | ம49-18சி | |
| 18 | 2 | வெ | அ52-03 | அ46-33 | அ46-33சி | |
| 19 | 3 | சனி | நவ46-58 | சித்43-13 | ம43-13சி | |
| 20 | 4 | ஞா | தச41-18 | சு39-18 | சி39-18ம | நாற்கால் பிரவணி யாகம் |
| 21 | 5 | திங் | ஏ35-08 | வி34-53 | ம34-53சி | சர்வமத்வஏகா, சபலாஏகா |
| 22 | 6 | செ | து28-45 | அ30-18 | சி30-18ம | ப்ரதோஷம், எருவிட |
| 23 | 7 | புத | திர22-23 | கே25-38 | சி25-38ம | மாத சிவராத்திரி |
| 24 | 8 | வியா | ●ச16-23 | மூ21-25 | சி60 | சர்வ அமாவாசை, அனுமத் ஜெயந்தி |
| 25 | 9 | வெ | அ11-05 | பூ17-55 | ம17-55சி | இஷ்டி |
| 26 | 10 | சனி | பிர6-50 | உத்15-33 | சி60 | பௌஷ சுக்லம், சந்.தரி |
| 27 | 11 | ஞா | த்ரி4-03 | தி14-38 | அ14-37ம | மாசி வாங்க, விதை விதைக்க (காலையில்) |
| 28 | 12 | திங் | சது3-00 | அ15-28 | சி60 | மாத சதுர்த்தி விரதம் |
| 29 | 13 | செவ் | பஞ்3-58 | சத18-10 | ம60 | போகிப் பண்டிகை |

(1959 ஜனவரி)

| | | | |
|---|---|---|---|
| கே | அங் (வ) | | |
| —— | 5-பு-வெ-சி<br>5-அ-வ-சி<br>12-சிரு-குரு<br>17-மக-சுக்<br>21-தநு-புத | | புசே (வ) |
| சனி சூரி | புதன் (வ) | செவ் குரு | ராகு |


## சர்வமேக நிவாரணத் தைலம்




இந்தப் பிரசித்திபெற்ற இராஜ சஞ்சீவி திராவகத்தை, காலே மாலே இரண்டு வேளை களிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாயு, தனுர்வாதம், முழங் கால் வாதம், குதிக்கால் வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரை யோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கை கால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், தொடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டு பண்ணி வந்திருக்கிறது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப் பிடக்கூடியதும், தேக இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் வியாதி களைக் கண்டித்துச் சுகப்படுத்தக் கூடியது மாகிய உண்மையான மருந்து.

இதன் விலை ரூபா 1—8—0 தபாற் கூலி ரூ. 1—2—0

## சீதபேதி (டிசென்டரி) பவுடர்




இரத்தபேதி, சீதபேதி சீதமும் இரத்தமும் கலந்த பேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக் கடுப்பு அடி வயிற்று நோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இம் மருந்து தப்பாமல் குணப்படுத்தும்.

ஒரு புட்டியின் விலை அணு 8. தபாற் கூலி ரூ. 1-2-0
6-புட்டி வரை தபால் செலவு ரூ. 1—2—0 தான்.

## கூந்தல் வளரும் துளி

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் கலந்து பிரதி தினம் மயிருக்குப் பூசி வந்தால் கூந்தலானது ஆலம் விழுதுபோல் நன்றாக வளரும். தலையில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது. வழுக்கை விழுந்த இடத்தி லும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு விலை அணு 12.
தபாற் கூலி ரூ. 1-2-0 2-புட்டிகளுக்கும் தபால் செலவு ரூ. 1—2—0 தான்

## கார்டோலின் - ஆஸ்தமா நிவாரணி

ஈளை இருமல், சுவாச காசம் முதலிய பிரான்கியல் ஆஸ்தமா நோய்கள் 10 நாளில் தீரும். ஆஸ்மா இருமல் எந்த நிலையில் இருந்தாலும் குணத்திற்கு உத்திரவாதம். பத்தியம் இல்லை. 50 மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 12. தபாற் கூலி ரூ. 1-2 இம்மருந்துக்கு எப்போதும் ரூ. 5/-அட்வான்ஸ் அனுப்பிவிட வேண்டும்.


**தனலட்சுமி கம்பெனி**, தபால் பெட்டி நெ. 1376
நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

மலையாள அஷ்டாங்க ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது.

# "எலிக்ஸ்ஸார்"

## மேகரோக நிவாரணி!

(பத்தியம் கிடையாது; ருசிகரமானது)



இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் தாது விருத்திக்கும், தாது பலத்துக்கும் இது ஒரு அமிர்த சஞ்சீவியாகும். நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மேகவியாதி, சுக்கீர், மூலச்சூடு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, லிங்கப் புண், லிங்கப் புற்று, மேகப்படைகள், உடம்பு எரிச்சல், அஜீரணம், மலச்சிக்கல், கைகால் சோர்வு, மயக்கம், இடுப்பு வலி, மூத்திரநோய், மூத்திரத்துடன் இந்திரியம் கலந்து போகுதல் முதலிய எல்லாவிதமான மேக வியாதிகளைப் போக்கி, இந்திரியத்தை இறுகச் செய்து மனோ உற்சாகம் மேனிப் பிரகாசம், குழிவிழுந்த கண்களையும் ஒட்டி உலர்ந்துபோன கன்னங்களையும் வசீகரமாக்கி புத்துயிர் அளித்து, யௌவனத்தைத் தரும். ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்.

20-நாள் மருந்து 40-வேளைக்கு ரூபா 2—26 nP.

தபாற் கூலி ரூ. 1—13 nP.



## காசா

காசம், இருமல், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கு சிறந்த ஔஷதமாகும். (இம் மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி தயார் செய்தது.) இருமல், காசம், இளைப்பு, சளி, கபம் குரலடைப்பு, தொண்டைக் கம்மல், தொண்டை வலி, மார் துடிப்பு; மார்பிலும், தொண்டையிலும், சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலைத் தணியச் செய்து கபத்தை அறவே ஒழித்து, வியாதியைக் குணப்படுத்தும்.

30-நாள் 60-வேளை மருந்து விலை ரூ. 2—50. தபாற் கூலி ரூ. 1—13 nP


## (காட்லிவர் ஆயில்) மீன் எண்ணெய்

இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர, இருமலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும்; இரத்தத்தைச் சுத்தி செய்யும். சுவாசங்களின் ரோகத்தை குணப்படுத்தும், சரீரத்திலுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு ரூ. 1-4. ஹைபோ பாஸ்பெட் சேர்ந்தது. ரூ. 1=50 nP. தபாற் கூலி ரூ. 1—13 nP.

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1370

நெ. 6 லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

## காப் கியூர் என்னும் க்ஷய அரி



கப இருமல், இரைப்பு அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி, இருமல், கக்குவாய் இருமல் பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாச காசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈளை இருமல், தொண்டை எரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை கண்டித்து நன்ருகக் கோழையை வெளியில் தள்ளி நோயாளி நன்ருகத் தூங்கச் செய்யும்.
புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபாற் கூலி ரூ. 1-2-0.

## ஜி. கியூர் இது 3-தினத்தில் குணப்படுத்தும்

மேக உஷ்ணத்தால் தாது கெட்ட, மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் கள்ளநோய், நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பு, குத்தலும் எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக் கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.
புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற் கூலி ரூ. 1—2—0.

**கக்குவாய் இருமலுக்கு** சிங்கமுகி ரசாயனம். இரண்டு மூன்று வேளை மருந்தில் கேவல், இரைறல் நீங்கி குணத்தை அளிக்கும். புட்டி 1-க்கு வி. ரூ. 2. தபால்கூலி ரூ. 1/2

## காஸ்டோலின்

கீழ்க்குறித்த சரும வியாதிகளுக்கு காஸ்டோலின், ஓர் இணையற்ற "சஞ்சீவி"—அரிப்பு, மண்டைக் கரப்பான், தாமரைப்படை கண்டமாலை, மேகப்பத்து, அரையாப்புக்கட்டி, கரப்பான், அழுக்குத் தேமல், கன்னப்புற்று, குழிப்புண், மார்ச்சிலந்தி, முகப்பரு, முகச்சொறி, பித்தவெடிப்பு, தினவு, சேற்றுப்புண், சொறி, சிரங்கு, நாரைப்புண், நாப்புச் சிலந்தி, விஷக்கடிகள், வெட்டுக் காயம், வெண் குட்டம், தேள் கடி, ஆருத ரணங்கள், புரை புண் முதலிய எந்த நோயையும் குணப்படுத்தி நலம் செய்வதாகும்.
டப்பி 1-க்கு விலை ரூ. 0—8—0. 3 டப்பி வரையில் தபாற் கூலி ரூ. 1-2-0.
3-டப்பிகளுக்கு குறையாமல் ஆர்டர் கிடைத்தால் மருந்து அனுப்புவோம்.

## கோல்டனல்

இரத்தமின்மை, பலவீனம், பித்தசோகை, காமாலை முதலியவைகளுக்கு சிறந்த மருந்து. சாப்பிட்ட 10 நாட்களில் இரத்தம் பெருகும்; நரை கருக்கும், பலம் உண்டாகும். புளியேப்பம், குடல் புண் வயிற்றுவலி, குன்மம் முதலிய வயிற்றுக் கோளாறுகள் அறவே ஒழியும். பத்தியம் இல்லாதது 4 மாதம் உபயோக மருந்தின் விலை ரூ. 2—0—0 தபாற் கூலி ரூ. 1—2—0

**காலாணி மருந்து:** காலில் விழும் ஆணிகளுக்கு சிறந்த மருந்து. புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபால் கூலி ரூ. 1-2.

**தனலட்சுமி கம்பெனி,** தபால் பெட்டி நெ. 1376

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

# தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்

| ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை | ரூ.ந.பை. | | ரூ.ந.பை. |
|---|---|---|---|
| நந்தினபுரி ரகசியம் 9-பாகம் | 10=87 | தாசி ரமணி | 1=50 |
| ஞானசெல்வாம்பாள் 5-பாகம் | 9=62 | உயிரோவியம் | 1=50 |
| கற்பகச் சோலையின் அற்புதக் கொலை | 2=00 | யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் | 2=00 |
| கடற்கொள்ளைக்காரர் 2-பாகம் | 4=00 | இவ்வுலகை திரும்பிப்பாரேன் | 1=70 |
| மதனாம்பாள் 2-பாகம் | 4=00 | சிலப்பதிகார ஆராய்ச்சி | 2=00 |
| லோகநாயகி | 1=00 | ஆர்ய மத சித்தாந்தம் | 3=00 |
| விளையாட்டுச் சாமான் | 1=75 | பூலோக லக்ஷ்மி கதை | 0=87 |
| பயனற்ற தீவு 2-பாகங்கள் | 3=75 | கனகரத்தினம் | 0=75 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 1=00 | கண்டிராஜா நாடகம் | 0=75 |
| அமராவதி 2-பாகங்கள் | 5=00 | குசேலோபாக்யான வசனம் | 1=00 |
| மஞ்சள் அறையின் மர்மம் | 2=00 | உதயணன் | 0=37 |
| கற்கோட்டை | 2=50 | தசக்ரீவன் | 0=87 |
| பூங்கோதை | 0=75 | போஜ சரித்திரம் | 0=31 |
| வீரநாதன் | 0=75 | சதானந்தர் | 1=25 |
| கனகபூஷணம் 2-பாகமும் | 4=00 | கர்ணன் சரிதை | 0=75 |
| கற்பக சுந்தரி | [illegible]=00 | பீஷ்ம விஜயம் | 0=62 |
| கமலசே[illegible] | [illegible]=50 | கீர்த்திசிங்கன் | 0=44 |
| கிருஷ்[illegible] | 2=50 | [illegible]பெருந்தாசர் | 0=62 |
| இ[illegible]சுந்தரி | 1=50 | [illegible]ஸ்வானன் | 0=20 |
| சந்திர[illegible]பாய் | 2=50 | [illegible]ரஜன் | 0=20 |
| இரா[illegible]மணி | 2=50 | சி[illegible]பாலர் | 0=50 |
| இரத்ன[illegible]பாய் | 2=50 | அ[illegible]தம் | 0=25 |
| மதனபூ[illegible]ணம் | 2=00 | தசாவதார மகிமை | 0=50 |
| சுவர்ணாம்பா[illegible] | [illegible] | கிருஷ்ணன் தூது வசனம் | 0=37 |
| தேவசுந்தரி | [illegible]=00 | ச[illegible]பாக்யானம் | 0=37 |
| குணசுந்தரன் | 1=00 | [illegible]நாரும் சத்தியசீலரும் | 0=50 |
| பத்மாஸனி | 1=00 | சத்தியவசனம் | 0=25 |
| ஆனந்தவல்லி | 2=00 | விமலன் | 0=25 |
| மின்சார மாயவன் | 2=00 | கல்யாணீரன் | 0=25 |
| ஆனந்தசிங்கனஷ்டஜயங்கள் | 2=00 | செய்யுட்பாடத்திரட்டு | 0=25 |
| அரசூர் இலக்ஷ்மணன் | 3=00 | காதல் மந்திரி கதை | 0=25 |
| கைவல்ய நவநீத வசனம் | 2=25 | மங்களேசுவரன் | 0=37 |
| சகோதரயாஞ்சை | 0=31 | தக்கன் | 0=37 |
| | | சீமந்தனி | 0=50 |
| | | நான்குகோடி | 0=25 |
| கம்பராமாயண வசனம் | 4=00 | மதிமோசவிளக்கம் | 1=00 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய | | மெய்க்காதலி | 0=75 |
| சரித்திரமும் உபதேசங்களும் | 3=50 | மேருமிருக்கி கதை | 0=75 |
| விவேகானந்தர் சரித்திரம் | 5=00 | விஜயநாதன் ஞானேந்திரி | 0=50 |
| தமிழ் மெடீரியா மெடிகா | 3=50 | கோமளவல்லி கதை | 0=75 |
| மலையாள பகவதி | 1=25 | விகடவல்லி கதை | 0=37 |
| அற்புத நவநீத ரம்பை | 2=00 | தாலிகட்ட மறந்த கதை | 0=44 |
| அகட விகட விலாச விநோதம் | 0=62 | ஞானசவுந்தரி (நாடகம்) | 0=37 |
| மோட்டி கார்த்தியாயினி | 0=87 | சத்தியவான்சாவித்திரிநாடகம் | 0=37 |

இந்திர கவசமென்றும் சர்வ தேவதா வசியம் விலை ரூபா 1=25 nP.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 107, சென்னை—1.

# ஆரூட பாரம்

(பிரச்ன நாரதீயத்தின் மொழி பெயர்ப்பு.)

...உலகில் ஜோதிஷ சாஸ்திரத்தில் எத்தனையோ பேதங்கள் இருக்கின்றன.
அதில் இந்த பிரச்ன சாஸ்திரமும் ஒன்றாகும். பிரச்னைகள் பலதிறப்பட்டிருப்
பினும் அவற்றிற்கெல்லாம் பலனும் கூறப்பட்டிருக்கிறது. இது நஷ்ட
பிரச்னை என்பதைக்கொண்டே சகலத்தையும் கண்டறிந்து கொள்ளக்கூடும்.
இந்த ஆரூட சாஸ்திரமானது உடனேயே சீக்கிரமாகப் பலனைத் தெரிந்து
கொள்வதற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் விலை 25 nP.

# விவாஹம்

விவாஹம் என்னும் இந்த ஜோதிஷ புத்தகத்தில் தாரா பலன் என்பதும்
...மான ஜன்ம திரிஜன்மங்களும், ராசிப் பொருத்தம், கணப் பொருத்
...ஜ்ஜு, மகேந்திர வர்க்கம், ஸ்திரீ தீர்க்கம், கிரக மைத்திரம், வே...
...பொருத்தம், விவாஹத்தில் மாங்கலிய தாரணஞ் செய்கிற முகூர்த்த க...
...வக்கிரக பலன்கள், இன்னும் அநேக பொருத்தங்களையும் விளக்கமாகவு...
...எளிதாகவும் தெரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை 50 nP.

# யோக மஞ்சரி

"கோசாரபல நிர்ணயம்," நூலுக்கு ஆசிரியரான

N. R. திருவேங்கடாசாரியார், B.A., அவர்கள் இயற்றியது.

...வினைப்பயனை அறியவும், அறிந்தபின் அவைகளால் ஏற்படு...
...துக்கத்தை நீக்குவதற்கோ குறைத்துக் கொள்ளுவதற்கோ சாஸ்திரங்கள்
...தேசித்துள்ள சாந்தி மார்க்கங்களைத் தெரிந்துகொள்வதற்கும் ஜோதி...
...திர ஞானம் அவசியமெனப் பராசரர், ஜைமினியார், பிருகு...
...சியர், கர்க்கர், அத்திரி முதலான மஹரிஷிகள் பல நூல்களைச்...
...யிருக்கிறார்கள். இதிலும் 1. யோகாத்தியாயம், 2. பாவாத்தியா...
...காத்தியாயம், 4. கோசாரத்தியாயம், 5. அஷ்டவர்க்கத்தியாய...
...பு இவ்வைந்து பிரிவுகளையும் செவ்வையாய்ப் படித்து அவைகளில்...
...த்துள்ள ரகசியங்களை அறிந்துகொண்டு இஷ்ட தேவதாத் தியான...
...தனக்கோ மற்றவர்களுக்கோ ஒரு குறிப்பிட்ட பாவத்திலுடைய கு...
...ன்மையை அறிந்துகொண்டு சுகத்தைப் பெருக்கிக் கொள்ளவே...
...தை ஜெபஹோம தானத்தினால் நீக்கவோ அல்லது குறைத்த...
...வோ முயலவேண்டும்.

இதன் விலை 75 nP.

...ந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 107, மதராஸ்-1

Regd. No. [illegible]
Registered as a News Paper in C[illegible]



இந்த அபூர்வ மருந்து [illegible] ஆச்சரியமாக [illegible] [illegible] காரணத்தினால் [illegible] போயிருக்கும் [illegible] தைப் புஷ்டியாக்கி பல விருத்தி தருவதில் [illegible] மருந்[illegible] கும். [illegible] அவ்வளவு பலவீனர்கள் இதை உட்கொண்டால் இரண்டே [illegible] ஆச்சரியமான [illegible] அடைவார்கள்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப் [illegible] டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். [illegible] போன தேக [illegible] அடைவதற்கு இதைவிட மருந்தே கிடையாது. [illegible] 40 நாள் மருந்தை உட்கொ[illegible] [illegible] தேகம் [illegible] யாம். [illegible] கிடையாது.

**20-நாள் மருந்து விலை ரு. 1. 40-நாள் மருந்து விலை ரு 1-12.**

போஸ்டேஜ் 20-நாள் மருந்துக்கு [illegible] 40-நாள் மருந்துக்கு [illegible]

# அயத்தங்கத் திராவ[illegible]

[illegible]லட்சுமி கம்பெனி, ८. லாயர் சின்னதம்பி முதலி தெரு, [illegible]

[illegible] Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, [illegible]